
# அலைகள் ஓய்வதில்லை



லா.ச.ராமாமிருதம்

வானதி பதிப்பகம்

**உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )**

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

✱✱✱

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

**Universal (CC0 1.0) Public Domain Dedication**

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

✱✱✱

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# அலைகள் ஓய்வதில்லை

( சிறுகதைகள் )

லா. ச. ராமாமிர்தம்

வானதி பதிப்பகம்
13. தீனதயாளு தெரு
தி.நகர், சென்னை-17.

முதற் பதிப்பு : டிசம்பர், 2001
உரிமை : ஆசிரியருக்கு

திருநாவுக்கரசு தயாரிப்பு

---

**விலை : ரூ. 55 - 00**

| | | |
|---|---|---|
| TITLE | : | **ALAIGAL OAIVATHILLAI** |
| AUTHOR | : | L. S. RAMAMIRTHAM |
| SUBJECT | : | Short Stories |
| LANGUAGE | : | TAMIL |
| EDITION | : | FIRST EDITION, December, 2001 |
| PAGES | : | x + 266 = 276 |
| PUBLICATION | : | **VANATHI PATHIPPAKAM**<br>13, Deenadayalu Street,<br>Thyagaraya Nagar,<br>CHENNAI - 600 017 |
| PRICE | : | **Rs. 55 - 00** |

---

*Laser Typeset at:*
**SPM Graphics,** CHENNAI-600 071

*Printed at:* Malar Printers, Chennai - 600 034. © 822 4803

# உங்களுடன்

வெகுநாட்களுக்குப் பிறகு—

எனக்கு முன்னுரை எழுதவே பிடிக்கும். இப்படித் தானே உங்களுடன் நேரிடைப்பாவனையில் உரையாட முடியும்.

இந்தத் தொகுப்புடன் எழுத்துடன், என் அறுபத்து ஐந்து ஆண்டுகளுக்கு மேலான ஈடுபாட்டில் என் நினைவு தெரிந்த வரை, என்னிலிருந்து பிறந்த எல்லாச் சிறுகதை களும் வெளியாகிவிட்டன. ஓரிரு மாதங்களுக்கு முன் உத்தேச எண்ணிக்கையில் இருநூறு கூடத் தேறவில்லை. ஆனால் ஏமாற்றத்தினின்று உடனே தேறிவிட்டேன். ஏனெனில் ஐம்பத்து ஐந்து, அறுபது ஆண்டுகளுக்கு முன் எழுதப்பட்ட கதைகள் இன்னும் பேசப்படுகின்றன. குறிப்பிடப்படுகின்றன. தொகுப்புகளில் சேர்க்கப்படு கின்றன. 'மண்' எழுதி அறுபது ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் சமீபத்தில் இரண்டாம்முறை ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டுப் பிரபல ஆங்கில சஞ்சிகையில் வெளிவந்திருக்கிறது. முதன்முறை லண்டனில் வெளி வந்தது. இப்போது ஸ்பானிஷ் மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. ஏனிந்த மார்த் தட்டல்? இது ஒரு தகவல் தெரிவிப்பு என்று கொள்ள வேண்டுமேயன்றி என்னைப் பொறுத்தவரையில் எண்பத்து ஐந்து வயதில் என்னால் வேறு என்ன சொல்ல முடியும். எழுத்தின் வீச்சுக்குக் காலவரையேயில்லை என்று தெரிகிறது.

கதை எழுதி முடிக்கும் வரை எனக்கு சிரத்தை. அதற்குப்பின் எனக்குத் தொடருவதில்லை. ஆனால் வாசகர்கள் கடிதம் எழுதியோ நேரில் வந்தோ அதன் மூலம் அவர்களுக்கு நேர்ந்த பாதிப்பைத் தெரிவிக்கையில் மகிழ்ச்சியாகத்தானிருக்கிறது. அம்மா சொல்லுவாள் வாயுள்ள குழந்தையானால் பிழைத்துக் கொள்ளட்டும். இதில் எவ்வளவு அர்த்தங்கள் அடங்கியிருக்கின்றன என்று இப்பத்தானே தெரிகிறது. ஆகவே நீங்கள்தான் என் கலையைப் போஷித்தீர்கள். விருட்சம் ஆக்கினீர்கள்.

இந்தத் தொகுதிக்கான சரக்கை ஒன்று சேர்க்க கண்ணன் ரொம்பவே சிரமப்பட்டு விட்டான். அவன் எனக்குத் தார்க்குச்சிப் போட்டுக் கொண்டேயிராவிட் டால் இந்தத் தொகுதி வெளிச்சம் கண்டிருக்காது.

ஆனால் இதில் கண்ணனுடைய கைங்கர்யம் மட்டு மில்லை. பலபேரின் அன்புப் பணியின் 'உரு'தான் இது. திருமதி வாசந்தி, திரு வானதி திருநாவுக்கரசு அவர்கள், திரு வானதி ராமு அவர்கள், என் மருமகன் திவாகரன் (என்ன அழகான கையெழுத்து) கண்ணன் என்கிற சப்தரிஷி (எனக்கு மகனானாலும் நன்றிக் கடன் எனக் கில்லையா?).

இப்போது இதைப் படிக்கப் போகும் நீங்களும் இவர்களுடன் சேர்ந்துவிட்டீர்கள். இதைக் காட்டிலும் என்ன பெருமை நிறைவு வேண்டும்? என் பெற்றோர்கள் என்னை வளர்த்த முறைக்கும் என் மேல் வர்ஷித்த பாசத் திற்கும் சற்றேனும் தகுதியாயிருப்பேன் என்று நினைக் கிறேன்—இது கூடப் பெரிய வார்த்தைதான்—ஆசைப் படுகிறேன்.

கடைசியில் என் வாழ்க்கைக் குறிப்பைக் கட்டுரை யாகக் காண்பீர்கள். இதற்குக் காரணம் உண்டு. ஒரு புத்தக வெளியீட்டு விழாவில் அந்தப் புத்தக சம்பந்தப்பட்ட பதிப்பகத்தார் சுருக்கமாக என் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்பைக் கேட்டிருந்தார்கள். அதை வெறும் தகவல் அட்டவணையாகக் கொடுப்பதற்குப் பதிலாக கோர்வை யாக ஒரு மினி வரலாறாய் எழுதினேன். ஆனால் உடல் நிலை காரணமாக அந்த விழாவிற்குப் போக முடிய வில்லை. அவ்வளவு சிரமப்பட்டு எழுதிய அந்தக் கட்டுரையும் என்னுடன் தங்கிவிட்டது. ஆனால் எந்த எழுத்தும் வீணாகப் போகக் கூடாது. வீண் போகாது. இந்தத் தொகுப்பில் சேர்ப்பதற்கு வாய்ப்புக் கிடைத்து விட்டது.

ராமகிருஷ்ண விஜயத்துக்கு எழுதிய கட்டுரையையும் சேர்த்து விட்டேன். ஏன் அதைத் தனியாக விட்டு வைக்க வேண்டும்? ஆகவே சுயசரிதை, கட்டுரை, கதை என ஒரு கலவையாக இந்தத் தொகுப்பு அமைந்துவிட்டது.

இந்தத் தொகுப்பே என் கடைசி வெளியீடாக இருக்குமோ என்கிற எண்ணம் தோன்றாமலில்லை. கற்பனைக்கும் ஊற்று வற்றாதா? உடலுக்கும் அசதி கண்டு விட்டதே. என் பிள்ளைகள் சிரிக்கிறார்கள். பத்து வருடங்களாக இப்படித்தான் சொல்லிக் கொண்டிருக் கிறீர்கள். தொகுதிகள் வந்து கொண்டுதான் இருக்கின்றன. கதைகள் எழுதிக் கொண்டுதானிருக்கிறீர்கள். அவர்கள் சொல்வதற்கு ஏற்றாற்போல் ‘ராசாத்தி கிணறு’ ‘அலைகள் ஓய்வதில்லை’ இரண்டு கதைகளும் இந்த வருடம் எழுதியவைதான். ராசாத்தி கிணறு கரு நாற்பது வருடங்களுக்கு முன்னால் தோன்றிவிட்டது. ஆனால்

அதை உருவாக்க அப்போது வழி தெரியவில்லை. ஆனால் இப்போது திடீரென பற்றிக் கொண்டு எழுதி முடித்து விட்டேன். அடுத்தாற் போல ஐம்பது வருடங் களுக்கு முன்னால் தோன்றிய ஒரு வித்து இப்பொழுது துளிர்விட ஆரம்பித்துவிட்டது. மனத்தினுள் தேள் கொட்டிக் கொண்டே இருக்கிறது. கண்ணன் மற்றொரு தேளாய் பிடுங்கி எடுத்துக் கொண்டேயிருக்கிறான். ஆகவே ஒரு எழுத்தின் விதைக்கும் அதன் வளர்ச்சிக்கும் விதமோ வரையோ வகுக்க முடியவில்லை.

எழுத்து இரக்கமற்ற எசமானி.

மீண்டும் சந்திப்போமா?

சந்திக்கும்வரை
**லா. ச. ராமாமிர்தம்**

F2, Jai Krishna Apartments
18, Old Township Road
Ambattur
சென்னை-600 053
தொலைபேசி: 6574840

கோட்டி என்கிற
**அருணாசலம்,**

பூஜா என்கிற
**ஹேமா,**

**ஸ்ரீகாந்த்**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | ராசாத்தி கிணறு | 1 |
| 2. | உறவு | 27 |
| 3. | அலைகள் ஓய்வதில்லை | 36 |
| 4. | ஸ்ருதி பேதம் | 54 |
| 5. | பாப்பூ | 80 |
| 6. | கொலு | 102 |
| 7. | கமலி | 117 |
| 8. | வேண்டப்படாதவர்கள் | 132 |
| 9. | சூரசம்ஹாரம் | 152 |
| 10. | திலோ | 164 |
| 11. | மெத்தென்று ஒரு முத்தம் | 176 |
| 12. | மந்திரஸ்தாயி | 190 |
| 13. | ஆத்மன் | 213 |
| 14. | ? | 231 |
| 15. | நான் | 244 |

## 1

# ராசாத்தி கிணறு

மலையிலிருந்து இறங்கி வீட்டு வாசற்படி ஏறும்போதே இன்னிக்கு விபரீதம் நிச்சயம்னு தெரிஞ்சு போச்சு. ஆனா மத்தநாள் ஒரு மாதிரியா வவுறு கதிகலங்கும். இன்னிக்கு அப்படியில்லே. ஒரு மாதிரியா சுறுசுறுப்பா உற்சாகமாகவே யிருந்தது. புரியல்லே.

அவள் புருஷன் சின்னத் திண்ணையில் குந்தியிருந் தான். நெடுநெடுன்னு சாட்டை உருவம். வயது எழுபது. அதுக்கு மேலே எத்தனியாச்சோ யார் கண்டது அவனுக்கே வெளிச்சம் இல்லே. அவனுக்கே வெளிச்சமிருக்காது. கிராமத் திலே அதெல்லாம் அப்பிடி எடைக்கணக்கிலே கண்டுக்க மாட்டாங்க. தெரியாது. ஏதோ குத்துமதிப்பிலிருக்கும். "ஐயா போய் சேர்ந்துட்டாரு. எல்லாம் கணக்கிலேதான் போயிருப் பாரு. அவனுக்குத் தெரியாதது நமக்கென்ன? என்று மறைவைக் கண்டுகிட்டு வயதை மறந்து விடுவாங்க. ஆளும் நாளடைவில் அவ்வளவுதான். போன வருடம் ஏர்ப்பிடிக்க ஒரு ஆள் இருந்தது. இன்னிக்கு இல்லே. அதனால் என்ன? பையன்தான் தயாராயிட்டானே இடத்தை நிரப்ப. ஆள் வந்தாச்சு. தட்டுப்படாம வேலை நடக்குதா பாரு. "பையா அப்பன் பேரை விளங்கப்பாரு. உன் அப்பன் சித்துளி யாட்டம் இருப்பான். ஆனால் மத்தவங்களைக் காட்டிலும் இரண்டங்குலம் ஆழம் கூடத்தான் இருக்குமே ஒழிய குறையாது."

அவர்கள் வழி உயர்ந்தது. விவேகம் கொண்டது. உழப்பல் இல்லாதது. மேல்காரியத்துக்கு அடுத்தாற்போல் பிள்ளை வீட்டார் பெண் கேட்க வரும்போதுதான் விழித்துக் கொள்வார்கள். 'ஏலே நீ சோலைமலைப் புள்ளேயில்லே? அஞ்சு தலைமுறையா ஒரே மவன்லேதானேயிருக்கே. என் மவளை உங்க வீட்டிலே கொடுத்தால் ஒத்தைக்காச்சியா வச்சுப்புடுவேயேன்னு கவலையாயிருக்குது. ஆனால் உனக்கும் கலியாணம் ஆவணும். தப்புத்தண்ட்டா இல்லாத நிலம், நல்ல பூமி. என்னிக்குமே தோத்ததில்லே. எங்கியோ யார் கண்ணுக்கும் அறியாமே பூமிக்கடியிலே ஊத்து பாயுது.

"நல்லா நிறைய மக்களைப் பெத்துக்கோப்பா. அப்பத் தான் பயிர் பெருகும். நமக்குப் பயிர் பரம்பரைத் தொழி லாப் போச்சு பாரு. இதுக்கு எத்தினி பேரு இருந்தாலும்— விதைக்கு நெல் வீசறப்போ, தண்ணி பாய்ச்சறதுலே, நாத்து நடறதுலே, அறுப்புலே களத்து மேட்டுலே, நெல்லு தூத்தறத் துல எத்தினிபேர் இருந்தாலும் காணாது. பெண்ணை சரியா காப்பாத்துவே இல்லே? சரி, நாள் குறிச்சுடலாம்."

'இந்தா விபூதி குங்குமம் தரிச்சுக்கோ' என்று பூ வெத்திலை பழத்துடன் தட்டை நீட்டியபோது, அவனும் சாதுவாத்தான் இரண்டையும் இட்டுக் கொண்டான்.

"இன்னும் குகையில், அந்த ஆளோட ஜல்ஸா பண்ணிட்டுத்தானே வரே? இன்னிக்கு என்ன படையல்?"

"வாயிலே வந்தபடி பேசாதே. நாக்கு அழுகிப் போயிடும்—"

"அடசட் வாயை மூடு பிள்ளே. எத்தினிவாட்டி சொல்லியிருக்கிறேன். அந்த ஆளோடு சகவாசம் வெச்சுக் காதே. என் மானம் போவுது. கோவணம் கூட கட்டாதே. பிறந்த மேனியோடு திரியறானே!"

"அவர் குகையைவிட்டு வெளியிலே வரதில்லியே!"

"வராட்டி என்ன? ஒருநாள் வெளியிலே நிக்கறதைப் பார்த்தேனே. பத்தாதா? அந்தக் கோலத்தைப் பார்க்க ஆயிரம் கண் வேணுமா? ஊர்லே நாலு ஆளைக்கூட்டி ஊரைவிட்டே விரட்டி அடிக்கணும்னு நெனச்சிட்டிருக் கேன். இன்னும் வேளை கூடல்லே. நிச்சயம் ஒருநாள் நடக்கத் தான் போவுது. ஆனால் நிச்சயம் நீ அவன்கிட்டக் கூடப் போவக் கூடாது. எத்தினிவாட்டி சொல்றேனோ எனக்குக் கணக்கு மறந்து போச்சு. ஆனால் அதுதான் உனக்கு ஆவத்து. தெரிஞ்சுக்க! இன்னிக்கு ஆளுக்கு என்ன படையல்?"

"மிளகுப் பொங்கல் கொஞ்சம் ஆக்கிக்கொண்டு போனேன். பாத்தா பாவமாயிருக்குது."

"இருக்கும்! இருக்கும்!"

"ஒண்ணுமே துண்ணமாட்டேன்றாரே. தானாவும் கேக்க மாட்டாரு. கொடுத்தாலும் இரை எடுக்க மாட்டேன்னாரு. அப்புறம் நொம்ப கஸ்டப்பட்டு ஏதோ நம் கஸ்டத்துக்காகக் கொஞ்சம் லேசா சிரிச்சுகிட்டே. காத்தையே உண்டுகிட்டு சிலபேர் தவங்கிடப்பாங்களாம்."

"நீ சொல்றே! ஆள் குகை இருட்டிலே எந்தக் கோழியை ரக்கையைக்கூடப் பிய்க்காமே உள்ளே தள்ளறானோ?"

அவளுக்குக் கண்கள் பெருகின. "உன் பேச்சை இத்தினி கேட்டதனாலேயே எந்தப் பாவத்துலே போறேனோ?"

"நிறுத்தும்மே!" சீறினான். "நானும் பாத்துட்டேன். எங்கே நாலு பொட்டச்சி சேர்ந்துட்டாங்களோ இந்த சாமி யார் பாடுங்க கொண்டாட்டந்தான். அதுவும் சடையும் முடி யும் தொப்புள்வரை தாடியுமாச்சுன்னா இன்னும் மஜாக்கு தான். ஏதோ இந்தக் கிராமம் சின்னதா மலையடிவாரத்துல யார் வம்பும் தும்புமில்லாமே தன் பயிர் தன் மக்களுண்

டுன்னு இருந்தோம்னா—ஆனால் மலை வழியா எப்படித் தான் காலரா வாந்திபேதி பெரியம்மை மாதிரி வந்து சேர்ந் தாங்களே தெரியவில்லையே. ஊர் நிம்மதியே கெட்டுப் போச்சே!"

அவன் விழிகள் ஏற்கனவே மேடு. கோவைப் பழமாகச் சிவந்துவிட்டன. கோபம் தானே முறுக்கேறிக் கொண்டு விட்டது.

"உனக்கு நல்லவங்களுக்கும் மத்தவங்களுக்கும் வித்யாசம் தெரியாது. நீ இப்படித்தான் புலம்பிட்டிருப்பே."

"சத்தே வழிவிடறயா. மருமக அடுப்பண்டே ஒண்டியாத் திண்டாடிக்கிட்டிருப்பா. இன்னிக்கு அஞ்சு மரக்காப் புழுக்கி யாவணும்."

அவனுக்கு கோபம் தலைக்கேறி மண்டை 'கிர்ர்'ரிட்டது. அப்புறம் நேர்ந்தவை ஏதோ கனாவில் அழிந்த கோடுகள் போலத் தெரிந்துமில்லை, தெரியாதுமில்லை. அவள் அவனைத் தாண்டுகையில் அவள் இடுப்பில் தன் முழங்கை யால் தன் முழு பலத்துடன் ஒரு இடி இடித்தான்.

"அம்மாடி!" அந்தக் குரல் கேட்டு அத்தேன்னு எதிர் குரல் கொடுத்துக்கொண்டு உள்ளிருந்து மருமகள் ஓடி வந்தாள். அத்தை குமுங்கிய பஸ்பமாய் உட்கார்ந்து காலை நீட்டி, அடுத்து உடம்பையும் நீட்டியவள்தான். பிறகு அசையவே இல்லை. உஸ் என்று ஒரு மூச்சு அவளிட மிருந்து கழன்றது. எத்தனை நாள் காத்திருந்த மூச்சோ! அத்துடன் சரி.

"என்ன மாமா! என்னத்தைச் செய்துட்டிங்க!" அலறிக் கொண்டே அத்தையண்டை உட்கார்ந்தாள். "இன்னிக்கு இத்தோடு நிக்கல்லே மவளே. இன்னும் ஒண்ணு பாக்கி நிக்குதே!" கூரையிலிருந்து அரிவாளைப் பிடுங்கிக்கொண்டு மலையை நோக்கி நடந்தான். அவனைத் தடுப்பார் யாரு

மில்லை. தைரியம் யாருக்குமில்லை. கும்பலும் கூச்சலும் வாசலைச் சுற்றிக் கூடிவிட்டன. இன்னமும் கூடிக் கொண் டிருந்தன.

குகை வாசலினின்று கூவினான்.

“பேய் ஒன் சாதிக்குப் பிறக்காதவனே. வாடா வெளியே. காட்டிக்கிட்டு திரியறயே. இன்னிக்கு உன் குஞ்சை மிளகாய்த் தூள்ல் தோய்ச்சு உன் தலையைச் சீவ வந்திருக்கேன்.”

“ஒரு பாவமும் அறியாத ஒரு பெண் பிள்ளையைக் கொலை வாங்கிட்டே!”

“யாராலேடா, வாடா வெளியே.”

“தாராளமா வரேன். ஆனால் நீ என்னை ஒண்ணும் செய்ய முடியாது. உன் கையை எனக்கெதிரே தூக்கிப் பார். தூக்காது.”

அந்த ஆள் சொன்னபடியே வெளிப்பட்டான். கிழவன் திகைப்பாகி விட்டான். கையைத் தூக்க முடியவில்லை. அரிவாள் கை நழுவி விழுந்து பாறாங்கல்லில் தடுக்கி இரண்டு மூன்று தடவை குதித்து அடிவாரத்தை அடைந்து அங்கு பரிதாபமாய் கிடந்தது. காலை வெய்யலில் கூர் பளபளத்தது.

“என் பெண்சாதி சாவ யாருடா காரணம்?”

“நானும் இருக்கலாம். இல்லைன்னு சொல்ல, எல்லாந் தெரிஞ்சவனாலும் சொல்ல முடியாது. ஒருத்தருக்கொருத்தர் முகாந்தரமானாலே நல்லது பொல்லாதது ரெண்டுத்துக்குமே சம்பந்தப்பட்டவங்க எல்லாருமே காரணம்தான்.”

“உன் பாசையைப் போட்டுக் குழப்பாதே. அது ஒண்ணு தான் பாக்கி. ஆனால் அந்த சாமர்த்தியமெல்லாம் என் னண்டை செல்லாது. தெரிஞ்சுக்க. அரிவாள் போச்சுன்னா

*நீ தப்பிச்சுட மாட்டே. இந்த ரெண்டு கை இருக்குதே பார்த்தியா? ஏர் பிடிச்ச கை. மாட்டுக் கொம்பை கொம் போடு புடுங்கின கை. தெரிஞ்சுக்க ஆமா. இது சும்மா சவால் இல்லே. என்னைப் பாத்தவங்க சாட்சி இருக்காங்க. உனக்கென்னடா நானு சாட்சி சம்மன் வெக்கறது. ஏண்டா சோமாரி. மொதல்லே ஏண்டா இங்கே வந்தே? எங்க நிம்மதியை சாவடிக்க. இன்னும் பொந்துக்குள்ளே வௌவ்வாலாட்டம் எத்தினிபேர் குகைக்குள்ளே ஒளிஞ்சிட் டிருக்கீங்க? வௌவ்வால் கடி பெரிய விசக்கடியாச்சே. ஊரே கூட்டியாந்து இன்னிக்குள்ளே உன்னை வெரட்டி யாகணும். எத்தினி பேருடா இருக்கீங்க?"*

*"நானே இங்கே வரவேண்டியவன் இல்லே தம்பி. என்னவோ வழி தப்பி இந்தப் பாறையில் ஒரு சந்துலேருந்து மீள வெளிச்சம் தெரியாமே இங்கேயே சுத்திகிட்டு கிடக்கேன்."*

*"ஏன் உன் பில்லி சூனியம் எல்லாம் வேவலியா?"*

*"இது நீ நெனைக்கற மாதிரியில்லே தம்பி."*

*"நீ முறைபோட்டு அழைக்க வேணாம்!" கிழவன் சீறினான்.*

*"நமக்குத் தெரிஞ்சாலும் தெரியாட்டியும் எல்லாரும் முறைதான்—சரி உனக்கு வேணாம்னா விடு. அது உன் கிட்டே நான் பேசவல்லே. நான் இங்கே மாட்டிக்கிட்டு இருக்கறது என் விதி. வேளை வந்தால் விதி தானே பிரிஞ்சுடும். நான் போயிடுவேன்."*

*"இப்போ என் பெண்சாதி அநியாயமா செத்துப் போனதுக்கு என்ன பதில் சொல்றே?"*

*"நீ கொன்னுட்டு என்னை பதில் கேட்டா நான் என்ன சொல்ல முடியும்? ஆனால் ஒண்ணு சொல்லலாம்."*

"அப்படின்னா விளங்கச் சொல்லுடா. பட்டி மவனே."

"ஒரு காரியம் என்னை நிறுத்தி வெச்சிருக்குன்னு சொன்னேனே. அதுக்கு அவளும் காரணமாயிருக்கலாம். ஒரு காரியம் கூடணும்னு அது ஒருத்தராலே மட்டுமில்லே. முன்னது பின்னது நமக்குத் தெரியாதது எல்லாமே சம்பந்தப் பட்டுத்தான் உரு ஆவுது."

"என்னடா சொல்றே தா—ழி. மண்டை கொதிக்குது."

"வேளை வந்துட்டுது. நீயே என்னிடம் வருவே. அப்போ சொல்றேன்" உள்ளே போய் இருளோடு கரைந்து போய் விட்டான்.

கிழவனுக்கு வாயில் நுரை கக்கிற்று. நெற்றியைத் தட்டிக் கொண்டு கீழே போனான்.

அதற்குள் வாசல் பெருந்திண்ணையில் அவன் பெண் சாதியை வளர்த்தாச்சு. குளிப்பாட்டி புதுசு உடுத்தி, நெத்தி யில் பலாகாயாட்டம் குங்குமமிட்டு முவத்திலும் வாயிலும் அப்படி மஞ்சள் பத்தி முந்தானையிலே மஞ்சளும் தேங்கா யும் முடிச்சு சுத்தி குந்திக்கிட்டு பாட்டு வெச்சு அழுவாளுங்க. வாசல்லே ஜேஜேன்னு பொம்பளைங்களும் ஆம்பளைங் களும். துண்டை உதறிப் போட்டுக் கொண்டு திண்ணையில் உட்கார்ந்தான்.

அவனைக் கண்டதும் அழுபவர் பொட்டென அடங்கிப் போயினர். கையிலே கத்தியைக் காணோம். இன்னும் என்ன பண்ணிகிட்டு வந்திருக்கானோ தெரியல்லையே! பார்த் தாலே பயம்மாயிருக்கே. ஒவ்வொருத்தராய் நழுவத் தொடங் கினர். கடைசியில் சில்லறையாக ஒரு சிலரே தங்கினர்.

அந்த முகத்தில் இடிபட்ட நோவு தெரியவில்லை. அமைதியே தெரிந்தது. எதையோ கண்டுவிட்ட அமைதி. ஏ புள்ளே இதுவரை எத்தினிவாட்டி ஒன்னை மொத்தி

யிருப்பேன். அப்போல்லாம் ஒண்ணுமில்லே. இப்போ இடுப்பிலே மொத்தினதா உனக்கு யமனா வாய்ச்சுட்டுது! எனக்கு விளங்கவேயில்லையே!

கண்கள் மிளகாய்ப் பழமாக எரிந்தன. ஆனா ஒரு சொட்டுக் கண்ணீர் கூட வல்லே. வர மறுத்துவிட்டது. அத்தினியும் வரண்டு போச்சு. உடம்பு திகுதிகுவென எரிந்தது. ம்ஹூம் கண்ணீரைக் காணோம். உடல் பூரா எரிச்சல் தாங்க முடியவில்லை.

அவளைத் தூக்கிக் கொண்டு போய் விட்டார்கள். அவனும் மகனும் மருமகளும் கூடப் போனார்கள். அதிக மாக அழுகை கூட இல்லே. அழுவதற்கு ஆளில்லை. அவனால் அங்கு சூழ்ந்து கொண்ட பயம். கழனிக் காட்டின் நடுவே பொரியும் மண்ணில் சிதை எரிவதைப் பார்க்கக்கூட ஆட்கள் நிற்கவில்லை. நழுவி விட்டார்கள்.

அவனும் மகளும் மருமகளும் மாத்ரம். அவள் பஸ்ப மாவதைப் பார்த்துக் கொண்டு நின்றனர்.

அங்கெல்லாம் இம்மாதிரி விஷயங்களைப் பெரிசு படுத்தமாட்டார்கள். முதலில் மலையடிவாரத்தில் குக் கிராமம். இப்படி நேர்வதெல்லாம் அபூர்வம். போலிஸ் விசாரணை இம்மாதிரி வந்து அடிக்கடி துன்புறுத்தலுக்குப் பழக்கப்படாதவர்கள். பயம். பொதுவாகவே கிழவன் மேல் யாருக்குமே ஆத்திரம், குரோதம் கிடையாது. அவன் சுபாவத்துலே நல்லவன்தான். முன்கோபம் கொஞ்சம் ஜாஸ்தி ஒப்புக்க வேண்டியது. ஆனால் இதுவரை பெரிய தப்புத்தண்டா நடந்ததில்லை. இப்படி நடந்தது அவனுடைய போறாத வேளைன்னுதான் சொல்லணும். அதுக்கு அவனே அனுபவிக்கப் போறான். நாம் ஏன் வம்பு சேர்க்கணும். மகன் தங்கமான பையன். மருமகள் அதுக்கு மேலே நல்லவள். ரெண்டு பேருமே நல்லாப் பாத்துக்குவாங்க.

இருந்தாலும் சாயந்திரம் உழுதுட்டுக் கழனிக்கட்டுலேருந்து வந்ததும் வெந்நீரை எதவா விளாவி முதுகைச் சுரண்டித் தேய்க்கப் பெண்சாதி மாதிரி ஆவுமா? அவனே கண்டுக்கப் போறான். ஆனால் மொத்தத்தில் இந்த சந்நியாசிங்க வந்து ஊரே கெட்டுப் போச்சு. கிழவனையும் முழுக்கக் குத்தம் சொல்லறதுக்கில்லே.

இப்படி அவர்களே சமாதானம் சொல்லிக்கொண்டு விஷயத்தை ஆரவாரமில்லாமல் அமுக்கி விடுவதே அவர்களுக்குச் சுளுவாயிருந்தது பாந்தமாயிருந்தது. அதில் எல்லோருடைய ஒத்துழைப்புமிருந்தது. ஏதோ நியாயம் கூட இருந்தது.

கிழவன் நீளத்திண்ணையில் படுத்துப்புரண்டு கொண்டிருந்தவன் என்ன தோன்றிற்றோ, எழுந்து, மலையேறி குகைக்கெதிரே நின்றான்.

"அண்ணாத்தே!"

உள் அடர்ந்த கருமையிலிருந்து நிர்வாணப்பரதேசி உருவானான்.

"தூக்கமில்லாட்டாப் போவுது. இமை மூட மாட்டேன் குது. நீதான் வழி சொல்லணும். இப்பவே பைத்தியம் பிடிக்கிறமாதிரிதான் இருக்குது. இன்னும் காலத்துக்கும் என்ன செய்யப் போறேனோ தெரியல்லியே!" பரதேசி குகை வாசலில் அமர்ந்து கிழவனையும் பக்கத்தில் குந்தச் சொன்னான். இருவரும் மௌனத்திலிருந்தனர். சூழ்ந்த பாறைகள் அவர்களுடன் ஏதோ பேச முயன்றன. ஆனால் கிழவனுக்கு அவைகளின் பேச்சு கேட்கவில்லை.

'கண்ணீர் வறண்டு போச்சி. இன்னும் எத்தினி நாளைக்கு இப்படியிருக்கும்?'

"அந்தப் பெண் பிள்ளை ஒரு தப்பும் செய்யாமலே

நல்ல மாதிரியிலேயே மாண்டுட்டா. உன் செய்கையினாலே அவள் சாவுக்குச் சேரவேண்டிய துக்கமும் அழுகையும் போய்ச் சேரல்லே. நாளாவட்டத்துல நீயா உன் தவறை உணர்ற வேளைவருமே. இந்தக் காலத் தவணை எல்லாம் சேர்த்து ஒரு வழியா உத்தேசமா தீருமே அதுவரைக்கும் உனக்குத் தூக்கம் கிடையாது. கண்ணீர் கிடையாது. எல்லாம் புதுசா ஊறணும்."

"என்னய்யா உன்னைப் பரிகாரம் கேட்க வந்தால் சாபம் உடறயே!" கிழவனுக்கு வயிற்றில் புளியைக் கரைத்தது.

"பரிகாரமா? பரிகாரமே கிடையாது மகனே! அது மாதிரி ஒண்ணு இந்த வாழ்க்கையிலே இல்லை. மக்கள் தாங்களே தங்களை ஏமாத்திக்க கற்பிச்சுகிட்ட பொய். யாரும் காரியத்தின் விளைவிலிருந்து தப்பவே முடியாது. கடவுளே தப்பிக்க முடியாது. எல்லாக் காரியத்தோடயும் எல்லாரும் சம்பந்தப்பட்டவங்கதான். அதனாலேயே காரியத்தின் விளை விலிருந்து யாருமே தப்ப முடியாது. நானும் தப்ப முடியாது. என்னைக் காரணம் காட்டித்தானே அவளைக் கொலை வாங்கியிருக்குது. அதனாலேயே அந்தத் துக்கம் பாதிக்குது. இது மாதிரி அறிஞ்சும் அறியாமயும் யார் யார் கஸ்டமோ நாங்கள் படறோம். எங்கள் ஜாதி தனி ஜாதி. உங்களுக்குச் சொன்னால் புரியாது. அதோ தெரியுதே அது என்ன சிதையா?"

"ஆமா, அவளுடையதுதான். ஆனால் எரிஞ்சு போயிருக் கும். தெரியுதே அதன் கணகணப்புத்தான். அதுகூட பாதிக்கு மேல் சாம்பராயிருக்கும். மிச்சம் தணல். அதுவே அப்படி ஜொலிக்குது." அவன் குரலில் அவனுடைய வியப்பு தெரிந்தது.

"மலைச்சரிவிலே ஊர் இருக்குதுன்னு பேரே தவிர

நான் பார்த்தவரை ஊரு சூடுதான்" என்றான் பரதேசி. மழை பேஞ்சால் தண்ணி நிக்கற மாதிரியில்லை. சரிஞ்சு ஓடிடுது. தேக்கம் ஒண்ணும் பெரிசாக் காணோம். ஆனால் மக்கள் இங்கேயும் வாழத்தான் செய்யறாங்க. விவசாயம் செய்யறாங்க. எங்கேயிருந்தாலும் வாழ்ந்துதானே ஆவணும். தலைமுறைங்க ஆரம்ப நாளில் கண்ட சௌகரியத்துலே இல்லாட்டி புதுமையில இங்கே தங்கிட்டா அப்புறம் இங்கிருந்து தப்பிச்சுப் போவ அவர்களுக்குத் தோணாது. கஸ்டமோ நிஸ்டூரமோ மக்கள் வாழாத இடம் இல்லை."

"ஏன்? உங்கமாதிரி ஆளுங்க வாழறப்ப மத்தவங்க வாழ மாட்டாங்களா?"

"எங்கள் வாழ்க்கை, வாழ்க்கையா இது? ஒரு இடத்துலே தங்க மாட்டோம். தங்கக்கூடாது. பசிக்குதுன்னு வாய் திறந்து யாரையும் கேட்கக்கூடாது. கேட்கமாட்டோம். எங்களுக்குக் கட்டுப்பாடு எத்தினியோ இருக்குது. எங்களுக்கும் குருநாத ருங்க இருக்குறாங்க. அவர்களுடைய பலத்துல நாங்க பசியை துன்னுட்டோம். காத்துதான் எங்க உணவு."

"அண்ணாத்தே, நீ சொல்றது நம்பும்படியா இருக்குதா?"

"அதனாலதான் அதைப்பத்தி நான் உங்ககிட்டப் பேச வும் கூடாது. அந்தக் காரணத்துனாலேயே உன் பெண் சாதி கொடுத்த பொங்கலை வேணாமின்னு தள்ளவும் முடியல்லே. ஏத்துக்கவும் முடியல்லே. அதுலே எல்லாம் உண்மையில் எங்களுக்கு நாட்டமும் இல்லே!"

"ஆச்சரியமா இருக்குதே, எப்படி ஐயா?"

"இது ஓயாத கதை. நாளா வட்டத்துல, அவள் கொண்டு வந்த படையல்லே கொஞ்சம் கொஞ்சமா காரணமில்லாத சந்தேகம் நீ பட்டு, அந்த சந்தேகம் முத்திப் போய், அவள் கொலையிலே முடிஞ்சுபோய், நான் காரணமேயில்லாமல்

காரணமாயிட்டேன். அந்த வினையும் என்னை விடாது. உன் கேள்விக்கு பதிலோ சமாதானமோ, சொல்றதுக்கு நான் இங்கே இல்லை. நான் சொல்றதைக் கேட்கறதுக்குத்தான் இந்த நடுராத்திரியிலே வந்திருக்கே. ஆமா, நீ ஏன் இங்கு ஒரு கிணறு தோண்டக்கூடாது?"

"கிணறா? நடக்கிற காரியமா?"

"நடக்கிற காரியமா இல்லாட்டி இந்த வாயிலே வராது. ஆ எனக்குப் புரிஞ்சுப் போச்சு. உன்னிடத்தில் இந்த சேதி தெரிவிக்கத்தான் இந்தக் குகையிலே மாட்டிட்டிருக்கேன். இந்த காரியம் முடிஞ்சவொடனே எனக்கு இங்கிருந்து விடுதலை கிடைச்சுடும் மகனே. பரம்பொருளின் சேதி எப்படி இருந்தாலும் சரி. அதை வெளியிடுவதற்கு நம் அங்கங்களை————————அது எப்படியேனும் பயன்படுத்தும். அதில் யார், எது? எப்போன்னு ஆளும் சமயமும் ஏன்னு தேர்ந்தெடுக்கறதெல்லாம் நமக்குத் தெரியாது. அதுக்குத்தான் தெரியும். இந்தக் கிணறு தோண்டற விஷயத்துல மூணுபேர் சம்பந்தப்பட்டிருக்கோம். நீ, உன் பெண்சாதி, தபால்காரன் மாதிரி நான்."

கிழவன் வசியம் கண்டவனாய் கேட்டுக் கொண்டிருந்தான்.

"உன் பெண்சாதியை மசானம் வெச்சிருக்கே அந்த இடத்துலே தோண்டறே. ஒண்ணு உனக்கு முக்கியமா சொல்லணும். மறக்காம எப்பவும் நினைப்பிலேயே வெச்சுக்க. ஆமா, கிணறைத் தோண்டிட்டதனாலேயே உன் பெண்சாதியைக் கொன்ன பாவத்தைக் கழுவிட்டதாக் கனவு காணாதே. அதுக்கும் இதுக்கும் சம்பந்தம் காணாதே. கிணத்தைக் கிணத்துக்காகவே தோண்டறதா நினைச்சுக்க. தண்ணியில்லாம கஸ்டப்படறாங்களே மக்கள். அவங்களுக்காகத் தோண்டறதா நெனைச்சுக்க. இல்லே அவள் பேரை

யும் நெனைச்சுக்கலாம். அதுல ஒண்ணும் தப்பில்லே. தண்ணி காணுவோமா இல்லையான்னு சந்தேகம் படக் கூடாது. சந்தேகமே பாதி பலத்தை வாங்கிடும். தண்ணி காணுவே நிச்சயம். அது எனக்குத் தெரியும். அதுக்கெல்லாம் கவுளி எனக்கு அடிக்க வேணாம்" ஆவேசம் கண்டவனாய் பரதேசி பேசினான். "என்னிக்கு எப்போன்னு சோசியம் எல்லாம் கேக்காதே. தோண்டியே செத்துப்போ. ஒருத்தரும் அறியாமல் உன் பெண்சாதி உன் கையாலேயே மாளல்லயா? அதை நெனைச்சுக்கோ. அதுதான் இப்போ உன்னுடைய பலம். காரியத்தை ஆரம்பிச்சுட்டு பாதியிலே விட்டேன்னா, உன் பாவம் உனக்குக் கூடுது. வேறென்னத்தை நான் சொல்ல? இந்த மாதிரி கோழைங்களாலேதான் உலகத்துலே பாவம் கூடுது. உலகம் இயங்கிக்கிட்டே போவுது. எத்தனை நல்லவங்க உலகத்தின் நல்லத்துக்காகவே பிறந்து பாடுபட்டு உழைத்து செத்தாலும் என்ன பிரயோசனம்?"

கிழவனுக்கு எல்லாமே புரிந்ததோ இல்லையோ. பரதேசியின் 'வேகம் தன்னுள் புகுந்து பரவுவதை உணர்ந்தான். நிமிர்ந்து பார்க்கையில், பரதேசியைக் காணோம். இருளில் கரைந்து போய்விட்டான்.

மறுநாள் காலை, சோறும் தண்ணியும் உண்ணுட்டு ஒரு தோளில் கடப்பாறையும் மறுகையில் மம்முட்டியும், அக்குளில் கோடாரியையும் அடக்கிவிட்டு கிளம்பினான். மருமகளும், மகனும் சற்று எட்டக் கவலையுடன் பின் தொடர்ந்தனர். 'மாமா இப்போ என்ன செய்யப் போறாரு தெரியல்லையே! மாமா நேத்தியிலேருந்து பேசவே இல்லை. பேச்சுக் கொடுக்கவும் பயம்மாயிருந்தது. மாமா மாறிட்டாரு. மருமகள் தன் கையிலே சின்னச் சொம்பில் பாலு வெச்சிருந்தா. பால் கிடைக்கறது சுலபமாயில்லை. நிறைய பச்சைத் தண்ணி இருந்தாலும் இன்னிக்குப் பாலாச்சே! ஊத்தியாவணுமில்லே!

இந்தக் கோடாரியை எங்கேருந்து பிடிச்சாரு? இந்தப் பக்கத்துலே நான் பார்த்ததில்லே. புது மோஸ்த்தரா ரெண்டு பக்கமும் கூரிலே வளைஞ்சு. நம்பள்ளாம் மரம் வெட்டற கோடரி ஒரு பக்கம் கூரோடு கனமாதான் பார்த்திருக்கோம். இது நமக்கேன் பாடு.

ஆயுதங்களைக் கீழே எறிந்துவிட்டு கிழவன் சிதை எதிரே குந்திட்டு உட்கார்ந்து அதைச் சிந்தித்தபடி இருந்தான்.

சற்று நேரம் பொறுத்து அவள் அவனருகே சென்று சொம்பை நீட்டினாள். அவனும் சட்டென ஞாபகம் வந்தவனாய் பாலை சிதைமேல் ஊற்றினான். சாம்பர் கொஞ்சம் பறந்தது. ஆனால் நெருப்பு பூரா அவிந்துவிட்டது.

“மாமா என்ன காரியமா ஆயுதங்களுடன் வந்திருக் கீங்க? இனிமேல் செய்யறதுக்கு என்ன இருக்கு? என்ன செய்ய முடியும்? போனவங்க போயிட்டாங்க. அத்தை பூவாடையிலே பூந்துட்டாங்க. வீட்டு அரிசிச்சாலுல இருந்து கிட்டு நம்மைக் காப்பாத்துவாங்க. நீங்க கவலைப்படாதீங்க. உங்க புள்ளையும் மருமகப் பொண்ணும் நல்லா கவனிச்சுப் போம். இந்த வூட்டுல என்ன குறைவாயிருக்குது. நீங்க திண்ணையில குந்திகிட்டு நிம்மதியாயிருங்க.”

“இல்லை மவளே இனிமேல்தான் நான் செய்ய வேண்டியதெல்லாம் இருக்குது. நான் இங்கே ஒரு கிணறு தோண்டப் போறேன். உன் அத்தையை எரிச்ச இடத்துலே.”

“கிணறா? என்ன அவசியம்? நம் பங்குக்கு வர்ற தண்ணி நமக்குத்தான் பத்துமே. அப்படியே குறைஞ்சாலும் என் அப்பன் கொடுப்பாரே!”

“இது வயல்காட்டுக்கில்லே மவளே. ஊர்மக்களுக்கு. அவங்க தாகம் தணியறதுக்கு.”

“ஓ அதுவும் நல்ல ரோசனைதான். அத்தை பேருல

கிணறு கேக்க சந்தோசமாயிருக்குது. நல்ல ரோசனை. அதுக்கு நீ மம்முட்டியும் கட்டப்பாறையும் தூக்கியாந்தால் எப்படி? வெடி வெச்சுத் தண்ணியை வரவழைச்சாப் போச்சு. துட்டுக்குப் பாக்காதீங்க மாமா. அப்பாரு ஒரு வடம் அஞ்சு பவுனுலே கல்யாணத்துக்குப் போட்டிருக்காரே, இந்த மாதிரி சமயத்துக்கு, விவசாயிக்கு உதவறத்துக்குத்தான்."

"அதெல்லாம் நல்ல பேச்சுத்தானம்மா. ஆனால் இந்தக் காரியத்தை நான் என் கையாலேயே எந்தக்கை அவளைக் கொன்னுச்சோ, அத்தாலேயேதான் செய்தாக வேண்டும்."

"மாமா இந்த வயசுலே இந்த சவாலெல்லாம் உங்களுக்கு வேணாம்—ஏ பக்கத்துலே கல்லாட்டம் நின்னுட்டிருக்கையே. வாயைத் திறந்து நீயும் எதாச்சும் சொல்லேன்."

"ஏ பொண்ணே, அவன் மேலே ஏன் அனாவசியமா பாயறே. அவன் தாயை இழந்துட்டு தவிச்சுட்டு இருக்கான். இதை நான் இப்படி என் கையாலேயேதான் செய்தாவணும். என்னக்கப்படி உத்தரவு ஆயிருக்குது."

"உங்களுக்கு யாரு உத்தரவு கொடுத்தது?"

"உனக்கேன் அந்தக் கவலையெல்லாம்? தவிர வெடி வெச்சால் இருக்கற தண்ணியையும் இளுத்துகிட்டுப் போயிடும். சரி அதெல்லாம் உனக்கெதுக்கு?"

கிழவன் அஸ்தியிலிருந்து சற்று நீளமாய்க் கிடைத்த எலும்புத்துண்டு ஒன்றைப் பொறுக்கி ஆச்சர்யத்துடன் பார்த்துவிட்டு அதை சிதை நடுவில் சாம்பரை ஒதுக்கிவிட்டு அங்கு கிடைத்த தரையில் அதன் கழுத்து தெரியும் வரை நட்டான். பிறகு அவன் கணக்கிலே ஏதோ சதுரமும் வட்டமுமாய்ச் சேர்ந்து ஏதோ ஒரு கணக்கு கோடரியின் கூரில் ஒரு பெரிய சுற்றளவை வரைந்தான். அவன் ஏற்படுத்திக்

கொண்ட உருவ எல்லையைச் சற்று நேரம் சிந்தித்துப் பார்த்துவிட்டு ஏதோ திருப்தியில் பெருமூச்செறிந்தான்.

அவன் காரியத்தில் முனைந்துவிட, இனி அவனைக் கலைக்க முடியாதென்பது தெரிந்துவிட்ட மருமகள் ஓடி வந்து அவன் காலில் விழுந்தாள். அவள் குரலில் அழுகை வந்தது.

"மாமா மாமா நீங்கள் எங்களுக்கு வேணும் மாமா. என் வவுத்துலே மூணு மாசமா வளந்துட்டிருக்கிற பூச்சிக்கு பாட்டா வேணும். அது மேலே இரக்கம் பாருங்க. வீட்டுக்குப் பெரியவங்க உங்களைத் தோத்துட்டு நாங்க எப்படி இருப்போம்?"

வவுத்துல பூச்சியா? முதலில் புரியாமல் கிழவன் பின்னடைந்து, அடுத்து புரிவு உள்விடிந்ததும் அவன் நெற்றி அதன் பிரகாசத்தில் உயர்ந்து விசாலித்தது.

"அடிமவளே!" மருமகளை ஆதரவுடன் தூக்கிவிட்டான். "அப்படியா சமாச்சாரம்? ஒரு நல்ல காரியம் துவக்குமுன்னால் நீ சொன்ன சேதியைவிட நல்ல ஐகுனம் வேண்டாம். என் ராஜாத்தி தெய்வம்தான். இப்படித்தான் நடக்கப் போவுதுன்னு முன்னாலேயே தெரிஞ்சுகிட்டு, இந்த வீட்டை விட்டு போவக்கூடாதுன்னுட்டு உன் வவுத்துல பூந்துட்டாளா? கிட்ட வா. உன் வவுத்தைத் தொட்டு பாக்குறேன். எனக்கு அப்புறம் நேரம் இருக்காது. ஆமா. நிச்சயமா அவளே தான். உனக்கு ராசாத்தித்தான் பிறக்கப் போவுறா. அதனாலேதான் இந்தக் கிணத்தைத் தோண்டியாவணும். நான்தான் தோண்டணும். சேதி நிச்சயமாயுட்டுது. சரி நீங்க ரெண்டு பேரும் போங்க. வூட்டுலே எவ்வளவோ வேலை காத்துக்கிடக்கும் ராஜாத்தி வேலையும் சேர்த்து. இனிமே நீ சொன்னா, யார் சொன்னாலும் கேக்க மாட்டேன். இனி நான் வேறே கிணறு வேறே இல்லை."

கிழவன் கோடரியால் பூமிமேல் போட்ட முதல் வெட்டில், அது பாறாங்கல்லில் பட்டு, அந்த அதிர்ச்சியின் வேகத்தில் அவன் ஒரு பக்கம், கோடரி ஒரு பக்கம் என வீழ்ந்தான். ஆசை தப்பித்தது. ஒரு கண்ணிலேனும் கல் சிதர்த் தெறித்துக் கண் போயிருக்கும்—கோடரியையும் தன்னையும் கிழவன் பொறுக்கிக் கொண்டு அப்புறம் எச்சரிக்கையாய் கொத்திக் கொத்திப் பள்ளத்தை அகலமாக்க ஆரம்பித்தான்.

பரதேசி, குகையிலிருந்து வெளியே வந்து கிழவன் படும் பாட்டை சற்று நேரம் பார்த்துவிட்டு உள்ளே சென்று விட்டான்.

தம்மை அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல...

குறளையும் குட்டையும் கிழவனுக்குத் தெரியாது. அவனுக்குத் தேவையுமில்லை. இந்தக் கதையும் சொல்லும் எனக்குத் தெரிஞ்ச பாசையையும் சொருகிவிட்டால் பெரிய வனாய் விடுவேனா? இங்கே என்ன நடக்குது தெரியு மில்லே. இல்லே உங்களுக்குத் தெரியப் போவதுமில்லே. எனக்கும் அதன் பெரிசு தெரியப் போவதில்லே இங்கே நடக்கறது தவம்.

தண்ணி பேரில தோண்டறேன். தண்ணி வருமோ வராதோ தெரியாது. ஆனால் தோண்டியாவணும். அப்படிப் போற உசிர் போவணும்னா போவட்டும். தோண்டியே போவட்டும்—பரதேசி சொன்னது கொஞ்சம் புரியறாப்பல இருக்குது. தண்ணி முக்கியமில்லே. தோண்டறதுதான் பெரிசு. நான் தோண்டியிருக்கறது பூமியின் வவுறா ராசாத்தி யின் வவுறா? போகப் போகத்தான் தெரியணும்.

வழிப்போக்கர், தெரிஞ்வங்க, தெரியாதவங்க, வேணைய பேர் எட்டிப் பார்த்தனர். அவன் மறுத்ததனால் அவன் கோபத்தை சம்பாதித்துக் கொண்டனர். ஏளனத்தையும்

ஏற்றுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஐயா கிணறு வெட்டி ஓயறத்துக்குள்ளே அவருக்கு உள்ளேயே வழி தப்பிப் போயிடப் போறாரு. கிணறு வெட்டற நேரம், வயசைப் பாரு! வேறு சமயமாயிருந்தால் அவர்களுடைய ஏளனச் சிரிப்புக்கும் கைகலப்பு நேர்ந்திருக்கும். இப்போ வாயடைச்சுப்போய், காதடைச்சுப்போய், காரியம், நம் உண்மையான காரியத்தைக் கவனிக்க வேண்டியதைத் தவிர நான் வேறேதும் கவனிக்கக் கூடாது.

அவ்வப்போது மனத்தைத் திடம் பண்ணிக்கொண்டு காரியத்தில் முனைந்தான்.

ஏ புள்ளே, எனக்கு நெனைப்பு தெரிஞ்சு உன்னை மொத்தினதைத் தவிர வேற மொத்தமா எனக்கு கியாபகம் இல்லை. நம்ம உறவே இப்படித்தான் வளர்ந்திருக்கோன்னு எனக்குக் குழப்பம். அப்போல்லாம் இல்லாத ரோஷம் உனக்கு இப்போ செத்துப்போம்படி என்னடி வந்தது? ஒரு தடவை உன்னை அடிச்சதுக்கு உன் புள்ளே என்னைக் கண்டிக்க வந்தபோது, நீ அவனோடு சண்டைக்குப் போயிட்டே. "என் புருசன் என்னை அடிக்கிறான். அதைக் கேட்க நீ யாருன்னு". நான் செய்தது தப்பு. எனக்குத் தெரியுது. உனக்குத் தெரியல்லையா?

அப்படியில்லை மச்சான்—நீ அடிக்காட்டி உனக்கு என் மேல இருக்கற அக்கறையின் ஆத்திரம் எப்படி விளங்கறது? எங்களை அப்பப்போ அடிக்க வேண்டியதுதான். நீ என்ன குடிச்சுட்டு வந்து அடிக்கற புருசனா? உனக்குக் குடி, பீடி, கூத்தி இந்தப் பழக்கமெல்லாம் கிடையாதே. இல்லாதவரை நீ அடிக்கறத்துல என்ன தப்பு. எனக்கும் அப்போ தாங்கிக்கற வயசுதானே? ஒங்க நியாயமெல்லாம் ஒரே மாதிரி இருக்கற தில்லே. அதனால நுகத்தடி சரியாப் பிடிக்க முடியல்லே.

பின்னோக்கில் அவனுக்குச் சற்று வியப்பாகவே

இருந்தது. அவள் மேல் ஆத்திரமும், அவளைப்பற்றிய பொறாமையும் அவனுக்கு அளவுக்கு மீறி இருந்தாலும் அவர்கள் உடல் உறவு அப்படி நெருக்கமாகவும் அடிக்கடி யாகவும் வாய்க்கவில்லை. அடிப்பதிலும் அவளை வசை பேசுவதிலும் உறவு திரும்பி விட்டது என்று நினைக்கும்படி இருந்தது.

மதியம் சோறை மகன் எடுத்தாருவான். அப்போ வேலையின் மேல் கருத்தாயிருந்தால் உண்ண மறந்துடுவான். அதை விறைப்பாய் வூட்டுக்கு கொணர்ந்து விடுவதைவிட வேறு வழி? அப்புறம் மருமகள் புதுஸ்ஸா வடிச்சுக் குளம்பு விட்டுப் பிசைஞ்சு, ஒக்காத்தி வெச்சு உண்டை உண்டையா உள்ளங்கையிலே வெச்சு, அதை முழுங்கறப்ப, அப்பவும் நெனைப்பு எங்கேயோ இருந்தாலும் நல்ல பொருள் உள்ளே போகுதுங்கற வரை தெரிஞ்சுது. மருமகளுக்கும் கால் பதியறச்சே பூமியிலே கனத்துப் போச்சு. இடுப்பு அகண்டு கிட்டே வருது. ராசாத்தி உள்ளேயிருந்து சிரிக்கறயா? அது குழந்தை; முதலா சுமக்குது. அவமேலே லேசாயிரு தெரியுதா? நீ கனமில்லே. இருந்தாலும்—

ஒருநாள் திடீரெனப் புதுஸ்ஸா முளிச்சுகிட்டாப்போல, தான் தோண்டின பள்ளம்—இவ்வளவு அகலம் ஆழமா? அவனுக்கு வெகு ஆச்சர்யமாயிருந்தது. அகலம் ஆழம் மட்டு மல்ல வட்டம் சுத்தமாயிருந்தது. நாளை எண்ண மறந்து போச்சி. அதனால் என்ன ஆரம்பத்துல கஸ்டமாய்த் தானிருந்தது. கண்ணு நொம்ப ஏடாகூடம் பண்ணிச்சு. ஆனால் போவப் போவ பூமி மசிஞ்சு கொடுத்திருக்குது. எப்படின்னா ஒரு மட்டம் ஒரே பாறாங்கல். அடுத்த மட்டம் முழு மண் இல்லை. ஆனால் அவ்வளவு கஸ்டமாயில்லை. அதன் கீழே மறுபடி மோட்டா. இப்படி மாறி மாறி ஒரு வாய்ப்பு. நானும் என் நினைப்பு நாளுலேயிருந்து ஏர்

பிடிச்சுத்தான் வரேன். ஆனால் இதுமாதிரி ஒரு திட்டம் பார்க்கல்லே. பரதேசி என்னவோ தெரிஞ்சு வெச்சுக்கிட்டுத் தான் இங்கே தோண்டச் சொல்லியிருக்கான். ஆனால் கல்லையும் மண்ணையும் மூங்கில் தட்டுல வாரியாந்து மேலே வந்து கொட்டறதுதான் கஸ்டமாயிருக்குது. ஆழம் கூடக் கூட கஸ்டமும் கூடுது. மேலே ஒரு ஆளை வெச்சு, தட்டை கவுத்துலே கட்டி வெச்சு மேலே அனுப்பலாமுன்னு பாத்தா அது அப்பிடி செஞ்சா தப்பு நேர்ந்துடுமோன்னு பயம்மாயிருக்குதே! எல்லாமே உன் கையாலேதான் ஆவணும்னு பரதேசி திட்டம் போட்டுட்டானே. அவன் கிட்டே போய் சலுகை கேட்க ரோசமாயிருக்குது. அத்தோட அந்த ஆளுக்கு திட்டம் சொல்லத்தான் அதிகாரம், மாத்த அதிகாரம் கிடையாதுன்னு தோணுது. அவனே அவனுக்கு வந்த உத்தரவைத்தான் எனக்குத் தெரியப்படுத்தறான். அடி ராசாத்தி நீ பண்ற கூத்தைப் பாத்தியா?

நான் பண்ணற கூத்தா? நீ பண்ணிக்கிட்ட கூத்துன்னு திருத்திக்கோ. உன்னாலே முடியலைன்னா இப்படியே நின்னுக்கோ. உன்னை யாரு கையைப் பிடிக்கறாங்க.

ஆ. ஆரம்பிச்சுட்டையா? உன் சோளப்பட்டாணி குதிப்புக்கு. மகளே உன்னைக் கையால் பிடிக்க முடிஞ்சா உன்னை—உன்னை—

அவன் உள்ளே அவள் சிரிப்புக் கேட்டது.

கொஞ்ச நாளாகவே தன்னுள் ஏதோ மாறுதல் நடந்து கொண்டிருப்பதாகவே அவனுக்கு தோன்றிற்று. இல்லை தெரிந்தது. பல் விளக்குவது, குளிப்பது, துணி மாத்துவது போன்ற கடன்களில் அக்கறையில்லை. ஆமாம் எந்த விவசாயி காலை நேரத்துல பல் விளக்குறான். தோப்புக்கு போறப்ப பல்லுலே வேப்பங்குச்சியை மாட்டிக்கிட்டா

*அப்புறம் கழனிக்கட்டிலிருந்து வீடு திரும்பி காலைப் பழயதுக்கு முன்னாலே கால் அலம்பறப்போ துப்பறதோடு சரி.*

*பல் விளக்கறது கிடக்கட்டும். அவனுக்கு வயிற்றுப் பசிமேல் அக்கறையில்லை. வயிற்றுப்பசி தெரியவில்லை. ஆனால் அதனால் உடம்பில் களைப்போ பலகீனமோ இல்லை. தூக்கம் இல்லை. சோறு இல்லை. என்ன இது வியப்பாயிருக்குதே. குளிக்கல்லே. ஆனால் உடலில் நாற்ற மில்லை. எப்போ இதெல்லாமில்லையோ வூட்டுக்குப்போய் படுத்திட்டிருக்க என்ன தேவை?*

*அவன் வெளியிட்டுவிட்ட நிலைமையை அனுசரிப்பது போல், அன்றிலிருந்து கல்லோ மண்ணோ அதிகம் உதிர்வ தில்லை. ஆழமும் வேகமாக ஏற்படவில்லை. அதைப்பத்தி எனக்கென்ன? தோண்டிக்கிட்டேயிருக்க வேண்டியதுதான். தேய்ச்ச பித்தளை தேவுசா போல, கிணற்றின் உள்சுவர் அடியிலிருந்து அண்ணாந்து பார்க்கையில், சுரண்டியெடுத் தாப்பிலே அத்தனை சுத்தமான ப்ரமை தட்டிற்று. இத்தனை சுத்தமாத் தோண்ட முடியுமா? கண்ணைக் கசக்கிக் கொண் டான். இனி தோண்டறதுக்கு ஆழம் இல்லியோ என்னவோ? இங்கிருந்து பார்த்தா அம்பது அடிக்குக் குறையாதுன்னு தோணுதே! கவுறு உள்ளேவிட்டுத்தான் நான் வெளியில் வரமுடியும் போலத் தோணுதே!*

*கேள்வி தோன்றிற்றே ஒழிய கவலை தோன்றவில்லை.*

*நேரம் போனது தெரியாமல் எத்தினி நேரமிருந்தானோ?*

*நக்ஷத்ர வேடு கலைஞ்சு சத்தே இருண்ட மாதிரியில்லே?*

*சற்றுக் கறுக்கல் கண்டதே காட்டி உடனே தெளிஞ்சு போச்சு. வித்தை காட்டறியா? காட்டு, காட்டு எனக்கென்ன வந்தது! இவ்ளோ ஆழம் தோண்டினதே அன்னி, கல்லில்*

கடுகு கூட ஈரம் இல்லே. மண்ணில் கசிவேயில்லே. புத்து மண்ணாட்டம் பிசுபிசுன்னு உதிருது. இங்கிருந்து பார்த்தா கிணறு ஒரு பெரிய கல் ஜாடியாட்டமில்லே! அந்த உவமைக்கு அவனுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. கிணற்றின் பக்கவாட்டை அன்போடு தடவினான். விரலில் 'சுருக்'—

இது ஒண்ணுதான் பாக்கி. விரலை வாயுள் வைத்துச் சப்பினான். உப்புக் கரித்தது. ரத்தமே புறப்பட்டுடுச்சா? ஆனால் மயக்கம் இல்லை. அப்போது நல்லா விடிஞ்சுட்டுது. ஆள் நடமாட்ட, பேச்சு சத்தம் நல்லா கேக்குது.

தன்னைக் குத்தின இடத்தில் விரலைவிட்டுப் பெரி சாக்கிச் சற்று ஆழமாவே தோண்டினான். என்னவோ பளபளன்னு, கைக்குக் கணிசமா, பிடிப்புக்குக் கெட்டியா—அதான என்னடா சீறல்லையேன்னு பார்த்தேன்! வெடுக் குன்னு வேகமாகவே பிடுங்கினான். அங்கிருந்து 'சர்ர்'னு பீச்சியடித்தது மூஞ்சியில், வாயில் கல்கண்டா இனிக்குது. கண்ணில் பாஞ்சதுமே குளுமை—அம்மாடி! இதனால்தான் இதுக்கு இத்தினி நாள் காத்திருந்தேனா?

கையில் இருப்பதையே கண்ணின் புதுப் பளிச்சுடன் அப்பத்தான் பார்க்க முடிஞ்சுது.

சிலை. அம்மன் சிலை. கைப்பிடியில், மேல் பிடியில் இடுப்புவரை, பிடியின் கீழ், பீடமும் தெரிந்தது. வலது கால் கட்டை விரலை, ஊசிமுனை மேல் அழுந்தப் பதித்த வண்ணம் ஆத்தா தவத்திலிருக்கா. அந்த இளஞ்சிரிப்பு—அம்மாடி—கண் கூசுது. இதுக்குள் வெள்ளம் பிதுபிதுன்னு பொங்கிடுச்சு. நுரை கக்கிக்கிட்டு ஒரு பக்கமா வெளியே வளிஞ்சு ஓடுது. கிழவனையும் ஏந்திக்கிட்டு மேலே கொண்டு வருவது போல் வந்து, மறுபடியும் கீழே இழுத்துக்கிட்டுப் போயிட்டுது.

கிணத்துலே தண்ணி பொங்குது. அக்கம் பக்கத்துலே நிமிஷமா பத்திக்கிச்சி. கிணத்தைச் சுத்தி ஒரே கும்பல். கொல்! கீழே சரிஞ்ச தண்ணியை அள்ளிக் குடிச்சுட்டு; "அடே தேனுபோய். இதுமாதிரி எங்கனாச்சும் கிடைக்குமா? நொம்ப புண்ணியம், நொம்ப புண்ணியம்!!" தண்ணியும் குடிக்கறவங்களுக்கு வஞ்சனையில்லாமல் வழிவிடுது.

அப்போது பார்த்தவங்க பின்னாலே சொன்னாங்க. அப்பிடி சொல்றவங்க எப்பிடியும் ஒவ்வொருத்தர் ஒவ் வொரு மாதிரியாத்தானிருக்கும். பாக்கற கோணம்.

தனி வட்டத்துலே பருந்தாட்டம், றெக்கையாட்டம் ரெண்டு கையையும் விரிச்சிக்கிட்டு காத்துலே நீஞ்சி வந்து, நேரே கிணத்துள்ளே விழுந்தான் பாரு, குஹையிலிருந்தே நேரே வந்தானா, இல்லே நடுவுலே பாறையிலே ரெண்டா வது 'தம்' பிடிச்சானா. எப்படியிருந்தாலும் சரி, வெறும் பழக்கத்தாலே அந்த மாதிரி கிணத்துலே நேரே 'டைவ்' அடிக்க முடியாது. வேறு சித்தியெல்லாம் தெரிஞ்சு வெச்சிட் டிருக்கணும்.

பாத்தவங்க பின்னாலே சொன்னாங்க. கிழவனைக் காப்பாத்தத்தான, மீன் கொத்தியாட்டம் பறந்து கிணத்துக் குள் பாய்ஞ்சிருக்கதா நெனச்சோம். ஆனால் அப்படியில்லே. நேரே கிழவன் கைச்சிலையைப் பிடுங்கத்தான் முயற்சி செய்தான். ஆனால் கிழவன் பிடி சாவுப்பிடியாச்சே, விட்டுடுமா? அதுக்குள்ளே ஒரு அலை கிளம்பி சுவராட்டம் அவங்க ரெண்டு பேர் மேலேயும் இடிஞ்சி விழுந்து, தன் சுழியிலே ரெண்டு பேரையும் உள்ளே இழுத்துக்கிட்டுப் போயிட்டுது.

கிணத்தைச் சுத்தித் தேர்த்திருவிழாவாட்டம் கும்பலும் கூப்பாடும் தெரியுது. தண்ணி கிணறும் கோவம் தணியாமே சீறிக்கிட்டு இருக்கறத்துலேயே, உள்ளே மாட்டிண்டிருக்கற

வங்க விதி இன்னும் தெரியாமல் இருக்கறத்துலேயே, குடமும் தாம்புக்கயிறுமா வந்துட்டவங்க எத்தினி பேர்! கிடச்ச மட்டும் ஆதாயம்!

ஒரு வழியா பொங்கலும் சீறலும் அடங்கி, தண்ணி தன் மட்டம் காண ஆரம்பிச்சுட்டுது. கண்டுதானே ஆவணும்!

ஒரு சின்ன அலை எழும்பி ரெண்டு பொணங்களையும் தானே கக்கிட்டுது.

கிழவன் முகம் சாந்தமா, எத்தினீயோ நாளா காத்திருந்த எதையோ கண்டுவிட்ட சந்தோஷம். சாவறதுக்கு முன்னா லேயே கிழவன் உள்ளுக்குக் குளிர்ந்து போயிருந்தான்.

பரதேசி முகத்துலே ஒரு அலக்ஷியம். எதுக்கும் கலங்காமல் "பூ! இவ்வளவுதானா?" என்கிற மாதிரி.

ஆகவே ராசாத்தி கிணறு பிறக்கறத்துலேயே மூணு காவு வாங்கிருக்கு. கிழவிக்கும் கிழவனுக்கும் காரணம் யாருங் கறதும் தெரிஞ்ச விஷயம். ஆனால் இந்தப் பரதேசி? பரதேசிக்கும் கிணத்துக்கும் நிச்சயம் சம்பந்தம் இருக்குது. நான் சொல்றேன். யோசித்துப் பாருங்க. கிழவன் பரதேசி சாதா ஆள் இல்லே. காரணம், காலம், காரியம் மூணுமே தெரிஞ்சு வெச்சிருப்பான்.

கிணறு எங்கே தோண்டனும்னுகூட பரதேசிதான் கிழவனுக்குச் சொல்லியிருப்பான். கிழவனுக்கு அம்மாம் மூளை ஏது? அங்கே தண்ணி இருக்குது தோண்டினால வரும்னு அவனுக்குத் தெரியும். அதுமட்டுமில்லை. அங்கே சிலையிருக்குதுன்னு முன் கூட்டியே அவனுக்குத் தெரியும். அந்த சிலையைத் தான் அடையணும்—இதுதான் பரதேசியின் அடிப்படை சூழ்ச்சி. இல்லாட்டி அவ்வளவு கணக்கா அந்த

சமயத்துக்கு அவன் வருவானேன்? பரதேசி சாதா ஆள் இல்லை.

ரெண்டு பேரையும் ஒரே பள்ளத்தில்தான் புதைச்சாங்க. எரிக்கறதுதான் பழக்கம்னாலும் இவங்களை சாமியார்லே சேர்த்துட்டாங்க போல! மக்களுக்கு மனம் எந்த சமயம் எப்படித் தோணுதுன்னு காண முடியாது!

தண்டல் பண்ணி கட்டடம் கூட எழுப்பிட்டாங்க. சமாதி மேலே கோவில். கோவில்லே ஒரு வயசான பெண்பிள்ளை சிலை நினைப்பிலே அமைச்சிருக்காங்க. ராசாத்தி அடையாளமேயில்லை. எல்லாம் நெனைப்புத் தானே!

சின்ன ராசாத்தியை இடுப்பில் தூக்கிட்டு, மருமகள் மாலைமாலை விளக்கேத்த எண்ணெயுடன் கோயிலுக்கு வரும். அந்த முதல் பெண் குழந்தைக்கப்புறம், இன் னொரு குட்டி ராசாத்தி, அப்புறம் ரெண்டு ஆம்புளப் பசங்க—குடும்பத்துக்கு எந்தக் குறையுமில்லை. எப்படி வரும்? ஊருக்கே கிணறு வெட்டிக் கொடுத்தவங் களாச்சே! ராசாத்தி, உன் குடும்பம் என்னிக்கும் நல்லா யிருக்கணும்.

முதல்லே ஒரு வாரம், பத்து நாளைக்குக் கிணத்தண்டை யாரும் போவல்லே. ஆவிங்க சுத்துமோன்னு பயம். ஆனால் எத்தினி நாள் முடியும்? தண்ணி தேவைப்படுதே. கிணறு புழக்கத்துக்கு வர ஆரம்பிச்சாச்சு. ராட்டினம் போட்டாச்சு. எடுக்க எடுக்க அமிர்தம், ஊத்தினுள் கூடுது.

ஆமாம், எல்லாம் சரிதான், அந்த சிலை என்ன வாச்சு?

கேள்வி நல்ல கேள்விதான். ஆனால் அதுக்குப் பதில் இல்லை.

*கிணத்துலேயே, அந்த சொல்ப நேரத்துக்கு, யாருக்குப் பார்க்கக் கொடுத்து வெச்சுதோ, அத்தோடு சரி. ரெண்டு பொணங்களும் மேலே மிதந்தப்போ, யார் கிட்டேயும் விசாரத்துக்கு இடம் இல்லை. எப்பிடி நழுவிடுச்சோ. உள்ளேயே எந்த சந்து பொந்துலே—பாறைக் கிணத்துலே, அதுக்கா குறைவு? எந்த பொந்திலோ தங்கி, யார் கண்ணுக்கும் படாமல் தண்ணிலே தன் தவத்தில் இருந்துகிட்டு—ஜகத்துக்கே ஆத்தாளாச்சே! தன் குழந்தைகளுக்கு அருள் புரிஞ்சுகிட்டிருக்காளோ?*

*ஆத்தா, நீ வாழ்க!*

# 2

## உறவு

அவள் விரைந்து நடந்து கொண்டிருந்தாள்.

அடிக்கு அடி, நடையில் வேகம் கூடிற்று.

அப்புறம், நடையும் ஓட்டமுமாக நடந்தாள்.

இன்னேரமே என்ன ஆயிருக்குமோ?

"குழந்தே! குழந்தே!!"

திடுக்கிட்டுக் குரல் திக்கில் நோக்கினாள்.

"உன்னைத்தான். கொஞ்சம் இங்கே வாயேன்!"

சாலையோரமாய் சற்று உள்தள்ளி ஒரு பூவரச அடி மரத்தின் மேல் சாய்ந்தபடி, கால்களை நீட்டி ஒரு கிழவர் உட்கார்ந்திருந்தார்.

அருகே வந்தாள்.

"ஐயா, என்ன வேணும்?"

"உட்காரு."

"ஐயா, என் நயினாவுக்கு உடம்பு நல்லாயில்லேன்னு சேதி வந்து, அவசரமாப் போயிட்டிருக்கேன்."

"எங்கேயிருக்கார்?"

"பக்கத்து ஊரு. இன்னும் ரெண்டு கல் நடக்கணும்."

அவருடைய கீழுதடு புன்னகையில் லேசாய்ப் பிதுங்கிற்று. கசந்த புன்னகை.

"பரவாயில்லை, உட்காரு. உன்னை ரொம்ப நேரம் நிறுத்தி வெக்க மாட்டேன். உக்காரு."

மனமில்லாமல் அருகே உட்கார்ந்தாள். பெரியவர் சொல்றாரு. சுற்றுமுற்றும் பார்த்தாள். ஒரு ஆள் கூட நடமாட்டமில்லை. இந்த ரோட்டே சத்தே அடக்கம்தான். குறுக்கு ரோடு. ஆனால் இந்தப் பக்கம் வந்து நாளாச்சு.

கிழவர் பக்கம் திரும்பினாள். அந்த மாதிரி நிறம் பார்த்ததேயில்லை. சுண்ணாம்பாட்டம் வெள்ளை வெளேர்னு. அதிலும் வெள்ளை முடி. கோராப்பட்டு நூலாட்டம் பளபளன்னு, அடர்த்தியா, தூக்கி அழுந்த பின்னுக்கு வாரி கழுத்தா மட்டையிலே குஞ்சம் குஞ்சமாத் தொங்குது. முகத்துலே எலும்புச் சதை என்ன இம்மா பிகித்தம்—தொட்டால் ரத்தம் பிச்சுக்குமாம் போல்!

"ஐயா, என்ன வேணும்?"

"நான் செத்துப் போகப் போறேன்."

தூக்கிவாரிப் போட்டது. "என்ன ஐயா சொல்றீங்க?"

"ஆமாம், உன்னை ரொம்ப நேரம் காக்க வைக்க மாட்டேன்."

"ஐயா, விசம்கிசம் குடிச்சிட்டீங்களா?"

"சே!" கையை அலக்ஷியமாக வீசினார். "இந்த வயசிலா? வயசாயிட்டுது. வேளை வந்துட்டுது, போறேன்."

"எனக்குப் பயமாயிருக்கய்யா!" கையைப் பிசைந்தாள்.

"பயப்படாதே. பயப்படும்படியாவா இருக்கேன்? உயிர் போனப்பறம்கூட, பயப்படும்படி இருக்க மாட்டேன். அந்த மட்டும் நான் கிடக்காமல், நாறாமல் போறேன். ஆனால்

கொஞ்சம் பயமாய்த்தானிருக்கு, போற இடம் எப்படி யிருக்கும்னு தெரியாதில்லே! அதனால்தான் உன்னைத் துணையிருக்கச் சொல்றேன்.

"ஐயா, எப்பிடி அவ்வளவு தீர்மானமாச் சொல்றீங்க? பார்த்தால் அப்படித் தெரியல்லீங்களே! சோஸ்யக்காரன் சொன்னானா?"

"சோஸ்யம் ஏதுமில்லை. எனக்குக் கொஞ்சம் நாடி பார்க்கத் தெரியும். ஆனால் நான் இவ்வளவு சீக்கிரம் எதிர்பார்க்கல்லே. காலையிலே எழுந்திரிச்சபோதே, கால் கொஞ்சம் விறுவிறுன்னது. நடந்தால் சரியாப் போயிடும்னு உலாத்த இந்தப் பக்கமா வந்தேன். திடீர்னு இடுப்புக்குக் கீழே விளுந்துட்டுது. எப்பிடியோ நகர்ந்து நகர்ந்து இந்த மரத்தடிக்கு வந்து சேர்ந்துட்டேன். உடனே கையைப் பிடிச்சுப் பார்த்தேன். நேரமில்லேன்னு தெரிஞ்சு போச்சு. இதுவரை ஒத்தரும் வல்லே. நீதான் வந்தே."

"வீடு எங்கே சொல்லுங்க ஐயா. ஓடிப் போய் யாரை யேனும் இட்டாறேன்."

"உஷ். அதுக்கெல்லாம் நேரமில்லே. நீ வரதுக்குள்ளே போயிடுவேன். இப்பவே கால் செத்துப் போச்சு. சில்லிப்பு மேலே ஏறுது. உன்னை ரொம்பக் கேக்கல்லே. கொஞ்ச நேரம்தான். பக்கத்தில் இரு, போதும். ஆனால் இதுவே அதிகம்தான். என்னைப் பார்த்தால் அனாதைப் பிண மாட்டமா இருக்கு? எனக்கு எல்லாம் இருக்கு."

"அப்பிடி நான் ஒண்ணும் சொல்லல்லியே ஐயா!" அவள் குரலில் அழுகை நடுங்கிற்று.

"மூணு பசங்க இருக்காங்க. நல்லப் பசங்க. மூத்தவன் வெளியூரிலே வேலை பாக்கறான். அடுத்தவன் ஒரு வேலைக்கு இன்னிக்குப் பேட்டிக்குப் போயிருக்கான்.

பேட்டின்னா தெரியுமா? தெரியாட்டி பரவாயில்லே. இப்ப உனக்குத் தெரிஞ்சுதான் என்ன ஆவணும்?"

சிரித்தாள்.

"நிறையப் படிச்சுட்டு வேலை கிடைக்காமே ஒரு வருசமா உள்ளேயே குமுங்கிட்டிருக்கான். அவன் கஷ்டம் அவனை நேரிடையா நான் கேட்டுக்க முடியாது. ஆண்ட வனே, நான் இப்போ போற ராசி, அவனுக்கு விடியணும்."

"கடைசி பையனுக்கு இன்னிக்கு முடிவுப் பரீக்ஷை. என்னாலே நின்னுட்டான்னா, ஒரு வருஷம் வீணாப் போயிடும். செத்தும் கெடுத்தான்னு பேரிருக்கக் கூடாதம்மா. இதெல்லாம் உன்கிட்டே ஏன் சொல்லிக்கறேன்னு எனக்கே தெரியல்லே. போறப்போ எங்கானும் சுமையிறக்கிட்டுப் போவணுங்கறாங்களே, அதுதானோ என்னவோ?"

"இந்த சமயத்துலே உங்களுக்குச் சிரிக்கத் தோணுதே, எப்பிடி ஐயா? இப்போ வீட்டிலே அம்மா இருப்பாங்களே, அவங்க மனசு என்ன பாடுபடும்?"

"அவளும் இப்போ இங்கே இல்லை. வேடிக்கையா யில்லே? அவளுக்கு இன்னும் பிறந்த வீட்டு மவுசு இருக்கு. உடன் பிறந்தாமாருங்க தாங்கறாங்க. இருக்க வேண்டியது தானே! நேற்று ராத்திரிதான் பெங்களூருக்கு ரயிலேறிப் போனா. இருக்க வேண்டியதுதானே! எப்பவுமா போறா, என்னிக்கோ ஒரு நாள் அவள் வீட்டிலிருந்து ஸ்டேஷனுக்கு வந்திருப்பாங்க. கார் வெச்சிருக்காங்க. ஹூம் அந்த சைடுலே யும் ஒண்ணும் குறைச்சலில்லே" பெருமூச்செறிந்தார்.

அதுவரை லேசாய் மப்பாயிருந்த வேளையில், வெய் யிலும் வெளிச்சமும் வந்து புகுந்து லேசாய் சூடும் கண்டது. இலைகளின் சந்து வழி சூரியனின் கதிர் லேசாய்க் கண் கூசிற்று.

உயரக் கிளையில், இரு சிட்டுக் குருவிகள் கொஞ்சிக் 'கிறீச்'சிட்டு உடனே பறந்து ஒன்றையொன்று துரத்திக் கொண்டு சென்றன.

"ஐயா, மார் நோவுதுங்களா?" அவர் நெற்றி நடுவில் பச்சை நரம்பு மின்னல் புடைக்கக் கண்டாள்.

"தெரியல்லே. நாக்கை வரட்டுது."

"சுத்துமுத்து வீடு காணோமே!" சுற்றுமுற்றும் பார்த் தாள். "தோப்புத்தான் தெரியுது"

"எனக்கு இந்த இடம் தெரியும். இந்தத் தோப்புத் தாண்டி வாய்க்கால் ஓடுது."

"நல்ல தண்ணியா இருக்குமா?"

"இருக்கிறவரைக்கும்தான்."

"என் கையில் ஏனம் ஏதுமில்லையே!" தெரிந்தும் அந்தக் கவலையில் தன் கைப்பையைக் குடைந்தாள்.

"பரவாயில்லே. இரண்டு கையிலும் ஏந்திண்டு வா."

"வரவரைக்கும் என்ன நிக்கும்?"

"நின்னவரைக்கும்தான். உதட்டில் ஈரம் பட்டால் சரி."

அவள் எழுந்து ஓடோடிப் போய்க் கொண்டு வந்து அவர் வாயில் ஊற்றுகையில், பரவாயில்லே, ஒரு முழுங்கே கிடைத்தது. அவர் வாயுள் அவள் கைத்தண்ணீரை ஊட்டுகையில், அவள் வாயும் மொக்கு திறந்து கொண்டது.

"அம்மாடி! நீ நல்லாயிருக்கணும். நல்லாயிருப்பே. கடைசி மூச்சுப் பேச்சு எப்பவும் பலிக்கும். உன் பேர்— இல்லை வேண்டாம். இப்படியே இருந்துவிட்டுப் போகட்டும். உனக்கு ஊதாக் கலர் பொருத்தமாயிருக்கு."

தன்னை இறங்கப் பார்த்துக் கொண்டாள். தலைப்பை

நெருடிக் கொண்டே, "இது பளசுங்க. வாங்கி ரெண்டு வருசமாவுது."

"என் பேத்திகூட ஊதா உடுத்துவாள். நீ நடந்து போவதைப் பார்த்தப்போ அசப்பில் அவள் மாதிரியிருந்தது. அதனால்தான் கூப்பிட்டேன்."

"அவங்க எங்கேயிருக்காங்க?"

"தெரியாது." கையை விரித்தார். "பார்த்துப் பத்து வருசமாச்சு."

அவளுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரிய வில்லை. அவர் தொடர்ந்தார். "தாய் தகப்பனில்லை. ஒரு வயசில் என்கிட்ட வந்து சேர்ந்துட்டா. நான் பெத்தாக்கூட அத்தனை அருமையாயிருக்காது. அருமையா வளர்த்து நல்ல இடத்தில்தான் கட்டிக் கொடுத்தேன்."

"தண்ணி தாண்டியிருக்குதா? புருசன் புளைக்க வெளி நாடு போயிட்டாரா?"

அவர் தன் உள்ளங்கையைப் பார்த்துக்கொண்டு, "அதெல்லாம் ஒண்ணுமில்லை. சண்டை"

ஒரு அணில் அவரை உராய்ந்து கொண்டு இன்னொரு மரம் ஏறிற்று.

"பிள்ளை வீட்டாருடன் மனஸ்தாபத்துக்குக் காரணமும் வேணுமா? அவங்ககிட்ட நியாயம் இல்லாட்டியும், புள்ளை வீட்டாருடன் சண்டை போட முடியுமா? நம்ம பெண் வாழ வேண்டாமா? ஆனால் என் பேத்தி சமத்து. எங்கே எப்படி நடந்துக்கணும்னு சொல்லாமலே அவளுக்குத் தெரியும். தாய் தகப்பன் இல்லாத புள்ளையில்லே! அவங்களுக்கு ஆரம்பத்திலேயே அந்த புத்தி சொல்லாமலே வந்துடுது. அதனாலே நான் போவல்லே. பார்க்கல்லே. அவங்களும் இத்தனை நாளுலே எங்கோ போயிட்டாங்க."

“நீங்க ரொம்ப பாவமுங்க”

“பாவமா? அதெல்லாம் ஒண்ணுமில்லே.” ரோசம் தொனித்தது. “யார் யாருக்கு என்னென்ன செய்யணுமோ, என்னால் முடிஞ்ச வரைக்கும் செஞ்சாச்சு. அதுக்கென்ன, வாங்கிக்கிறவங்களுக்கும், கொடுக்கறவங்களுக்கு திருப் தின்னு காணப்போமா? எல்லாம் முடிஞ்சவரைக்கும்தான். அவங்களையெல்லாம் விட்டுட்டுப் போறோமேன்னு பெரிய வருத்தமுமில்லே. பாவம், அப்பாவுக்கு உடம்பு சரியில் லேன்னு போயிட்டிருப்பவளை என் சுயநலத்துலே நிறுத்தி வெச்சேன். ஆச்சு, இன்னும் கொஞ்ச நேரம்தான்.”

“பரவாயில்லேங்க. எனக்கு அப்பிடியொண்ணும் அங்கே பிடிப்பில்லேங்க. ஆள் வந்து சொல்லிச்சேன்னு போறேன். நயினா அப்பிடி ஒண்ணும் ஒழுங்கா நடந்துக் கலே. அம்மா செத்து கருமம் முடியல்லே. ஒரு சித்தாத் தாளைக் கட்டி வீட்டுக்குக் கூட்டியாந்துட்டாரு. அப்பிடி யென்ன அவசரமோ நடுமுத்தத் தாலிக்கு!”

“அப்படின்னா?”

“ஒரு தாலி கட்டி இழந்தவ, இல்லே தள்ளி வெச்சவ, மறுதாலி கட்டினால், நடுமுத்தத் தாலின்னு சொல்லுவாங்க. எங்க சாதிப் பழக்கம், நடுமுற்றத்துலே வெச்சுத் தாலி கட்டு வாங்க. நடுமுத்தத் தாலிக்காரி சபையிலே வந்து குத்து விளக்கு ஏத்த முடியாது. குங்குமம் வெச்சிப்பா. ஆனால் மத்தவங்க கொடுக்க மாட்டாங்க. அதெல்லாம் சாதிக் கட்டுப்பாடு. ஆனால் அப்படியும் அவளுக்கு ஒரு வாழ்வு வேணுமேன்னு நடுமுத்தத் தாலி ஒரு அனுமதி.”

“கஷ்டப் பேச்சு இப்போ ஏன்? உன்னைப் பத்திச் சொல்லு.”

“உங்க புண்ணியத்துலே நல்லாயிருக்கேணுங்க. அவங்க

எல்லாருமே நல்லவங்க. மாமியாரு தங்கமானவங்க. அவங்க தான் என்னை அனுப்பிவச்சவங்க. "என்ன இருந்தாலும் பெத்தவரு. உன்னைப் பாக்கணும்னு இருக்காதா? நீ போய் வா"ன்னாங்க. மூணு வயசுலே ஒரு பையன் இருக்கான். வீட்டுலேயே விட்டுட்டு வந்திருக்கேன். இந்தக் களேபரத்தில் அவன் ஏன்?—என்ன செய்யது மூச்சு முரண்டுதா? இதோ பாருங்க, என் தோளுலே சாஞ்சுக்கங்க. வெக்கப்படாதீங்க—அப்பிடித்தான்...இப்ப தேவலியா?"

"பெண்ணே உன் பேரென்ன?—இல்லை வேண்டாம் இப்படியே இருந்துட்டுப் போகட்டும். இப்போ இந்த நிமிஷத்துலே ஒரு உண்மை தெரிஞ்சது. உலகத்தில் எல்லாருமே நல்லவங்கதான். இந்த சமயத்துக்கு நீதான் பெண்—இல்லை, பேத்தி. யாராவானாலும் சரி. சமயம் தான் கணக்கு. ஆள், பேர் இல்லை. கமலி—திடீர்னு என்ன இப்படி இருட்டிப் போச்சு—கமலி எங்கேடி இருக்கே?" திணறினார்.

"பயப்படாதீங்க. இதோ என் கையைக் கெட்டியாய்ப் பிடிச்சுக்கங்க—முருகா! முருகா!!" அவளுக்கு முகம் எரிந்தது. ரவிக்கை திடீரென்று நனைவதை உணர்ந்தாள். பயங்கர மான தாய்மையில் பரிதவித்தாள்.

அவர் கண்கள் முழுக்க விழிக்க மிகவும் முயன்றன. பார்வை, அரைக் கண்ணில் அவள் மேல் தோய்ந்து அலர்ந்தது. அவள் கையுள் அவர் பிடி தளர்ந்து துவண்டது.

திடீரெனக் காற்று கிளம்பி, இலைகள் சலசலத்துத் தரையிலிருந்து குப்பைகள் எழுந்து சுழன்று பறந்தன. அழுந்த வாரிய அவர் கேசத்தில் தடியாக இரண்டு பிரிகள் பிரிந்து நெற்றி மேடில் விளையாடின. புன்னகையில் உதட்டோரக் குழிகள் இளகின.

உடனே காற்றும் ஓய்ந்தது. சூரியன் மேகங்களைக் கிழித்துக் கொண்டு புறப்பட்டான்.

சொல்லி வைத்தாற்போல் குரல்கள், கும்மாளம், கூக்குரல், சிரிப்பில், திருப்பத்தில் கிளம்பி, சீக்கிரமே நெருங்க, திடுக்கிட்டுச் சட்டென்று நின்றன.

"அடடே என்ன இது? என்ன ஆச்சு? யாரு, உங்க அப்பாரா?"

அவளுக்கு வாயடைத்துவிட்டது. அவர் முகத்தை முந்தானையால் ஒற்றிக் கொண்டு, "ஆம்" என்று தலையை ஆட்டினாள். எரிச்சொட்டுக்கள் இரண்டு விழியோரங்களில் புறப்பட்டு, கன்னங்களில் அவைகளின் பாதையை தீய்த்துக் கொண்டு மோவாயினின்று பூமியில் உதிர்ந்தன.

# 3

# அலைகள் ஓய்வதில்லை

அதோ கறுப்பிலிருந்து கறுப்பு பிரிஞ்சு—இருளுக்கும் நிழல் உண்டோ—நிழல் மாதிரி இந்தப் பக்கம் வராப்போல இல்லை? ஆமாம் வரது, ஆமாம் அவள்தான். அவளேதான். நடையில் தள்ளாட்டம்; ஆனால் அவள் நடைதான். அம்மாடி! வயிற்றுள் கோக்கோகோலா 'ஜில்'

வந்து வாசற்படிக்கட்டில் அவர் அருகே அமர்ந்தாள். அவர் உடனே உள்ளே சென்று சொம்புடன் வந்து அவளிடம் கொடுத்துவிட்டுத் தன்னிடத்தில் உட்கார்ந்து கொண்டார். அவள் முகத்தைத் துடைத்துக் கொண்டு குடித்த ஆவலில் கழுத்தில் வழிந்து மார்த்துணி நனைந்தது.

தெரு அடங்கிப் போச்சு. இங்கேயே இப்படித்தான். வீடுகள் ஒட்டியில்லை. தனித்தனி காம்பவுண்டுகள். அவர்களுடைய வீடு மட்டும் இந்த posh areaவில் ஒட்டாமல், சற்று அந்தக் காலத்து வீடு. ஓரிரண்டு காம்பவுண்டுகளுள் கார்கள் நின்றன. மனுஷாளும் அவர்கள் வீடு மாதிரி. எப்படியும் இவர்கள் அவர்களுடன் 'டச்' வைத்துக் கொள்ள வில்லை. விரோதம் இல்லை. ஆனால் தேவையில்லை. அப்படி அமைஞ்சு போச்சு.

"காப்பி குடிச்சாச்சா?" ஜாடையில்.

"இல்லை. நான் வீடு திரும்பவே எட்டாயிடுத்து. நீ?"

உதட்டைப் பிதுக்கினாள்.

"ஏதேனும் ஆகாரம் பண்ணினையா? ஹோட்டல்?—"

கையை விரித்தாள்.

வினாவில் அவர் புருவங்கள் உயர்ந்தன.

"பணம் எடுத்துண்டு போனால்தானே!"

"ஏன்?"

"தெரியல்லே."

"என்ன அர்த்தம்?"

"தோணல்லே."

கோபத்தில் அவருக்குக் கன்னம் குறுகுறுத்தது.

"அப்போ வழியில் மாரடைச்சால், கால் வலிச்சா, ஒரு சோடாவுக்கு, பஸ் சார்ஜுக்கு வழியில்லே?"

"அப்படித்தான் தோணறது."

"நீ பேசறது சரியாயிருக்கா?"

"இல்லை."

"அப்போ ஏன் அப்படி?"

"என்னவோ தோணித்து, அப்படியே கிளம்பிட்டேன்."

"சாப்பிடக்கூட இல்லே!"

மடியில் கைகளைக் கோர்த்துக் கொண்டாள். அதுதான் பதில்போல்.

"எங்கே போனாய்?னு கேட்க மாட்டேன். ஆனால் இப்படிப் போய், அப்படி என்ன பார்க்கப் போகணும்?"

"சரி."

Oh, God, இவள் வம்புக்கு இழுக்கிறாள். ஆனால் நான் இழுபடப் போவதில்லை.

தெருவில் ஒரு உருவம் அவர்கள் பக்கமாக வந்து சற்றுத் தயங்கி, தாண்டிச் சென்றது. Night watchman. முதல் ரவுண்டு.

கூடத்தில் சுவர்க் கடியாரம் ½ மணி அடித்தது 10.30.!

தானாகவே:

"நான் லேட்டுனு தெரியும்."

அடங்கினாள்.

காத்திருந்தார்.

சற்றுப் பொறுத்து, தானாகவே:

"ஏன் போனேன், ஏன் அப்படிப் போனேன் எனக்கே இன்னும் நிச்சயம் ஆகல்லே. உங்களை ஆபீசுக்கு அனுப்பிச் சுட்டு, என்னவோ கிளம்பிட்டேன்."

"கதவைக் கூட தாளிடல்லே. நான் வரும் வரை யாரும் உள்ளே புகாதது ஆச்சர்யந்தான்."

"ஓ! அப்படியா? அது கூட நினைப்பில்லை என்னவோ கால் இழுத்துண்டு போன வழி போயிட்டேன். எலியட்ஸ் பீச்சு"

இங்கிருந்து எலியட்ஸ் பீச்சா? பேஷ்! இவளுக்கு என்னவோ பிடிச்சிருக்கு.

"மணல் சூடு உள்ளங்கால் பொரிஞ்சது. இருந்தாலும் நடந்து ஒரு ஓடத்து நிழலில் உட்கார்ந்தேன். அலைகளைப் பார்த்துண்டிருந்தேன். நாம் சமுத்ரம் பார்த்து எத்தனை நாளாச்சு!"

"அலைகளைப் பார்க்க சுவாரஸ்யமாத்தானிருக்கு. ஒவ்வொரு தடவையும் தூரத்திலே ஒரு ஒரு உரு எடுத்துண்டு சரிஞ்சு நுரை கக்கிண்டு கரை நெருங்கினதும் உடைஞ்சு பரவி, முத்துக் கொப்புளிச்சுண்டு சிதறி வந்த வழியே

மீளறதைப் பார்த்துண்டேயிருக்கலாம். என்ன கோபம்! அத்தனையும் வியர்த்தம். ஏனால் அந்த ஓயாத கோபம்? இப்படித்தானே ஸேதுராமன் பாதங்களை எத்தனை முறை கழுவியிருக்கும்!

“ஓ, பக்தி பண்ண சமுத்ரம் போனாயாக்கும்!”

“அப்படியில்லை. ஆனால் இல்லேன்னும் சொல்ல முடியாது. ஒண்ணைத் தொட்டுத்தான் ஒண்ணு. அதில் பக்தி இருந்தாலும் தப்பில்லே.”

“ராமன் காலத்திலிருந்துதானா? அவனுக்கு முன்னா லும் மனுஷாள் இல்லையா?”

“வாஸ்தவம் தான். பல்லாயிர வருஷக் கணக்கில் எத்தனை பாதங்களைக் கழுவியிருக்கும்.”

“வாரித் தன்னோடு இழுத்துண்டும் போயிருக்கும்.”

“என் வாயிலிருந்து வார்த்தைகளைப் பிடுங்கற மாதிரிப் பேசறேளே! ஆச்சரியமாயிருக்கு.”

“என் இளமையில் அலைகளில் குளிச்சிருக்கேன். காலை ஒன்பது மணிக்கே வந்துடுவேன். இதுகளுக்கு ஒரு தனி ஆகர்ஷணம் உண்டு. அலைகளில் குட்டிக்கரணம் போடுவேன் சுகமாயிருக்கும். உடம்புக்கு ஒத்தடம் கொடுத்த மாதிரி இதமாயிருக்கும். அப்புறம் ஒரு சமயம் குட்டிக்கரணம் போட்டுக் கீழே காலிறங்குகையில் பாதம் மணலில் பதிய வில்லை. பயந்து போனேன். அப்படியே இழுத்துண்டு போயிட்டால்? அன்றிலிருந்து அலைகள் பக்கம் போவ தில்லை. அம்மாவுக்கு மிஞ்சினேன். ஏற்கெனவே அவள் நிறையப் பறிகொடுத்தவள்.”

“எனக்கும்தான் மிஞ்சினேள். நம் கலியாணம் நடக்கு முன்னாலேயே—”

"Thank you. ஆனால் அலைகள் ஓய்வதில்லை."

சற்றுப் பொறுத்து, அவள்: "சேகர் அலை தாண்டியே போய்விட்டான்."

"ஓ, யோசனை அப்படியும் போக முடியுமோ?"

"ஏன் போகாது? ஒண்ணைத் தொட்டுத்தானே ஒண்ணு!"

"அவனை சிங்கப்பூருக்கே இழந்துட்டோம்."

"இதோ பார் கோமதி, நாம் பெற்றதனால் மட்டும் நம் குழந்தைகள் நமக்குச் சொந்தமாகி விடாது. அதுஅது தன் விதியைத் தான் நூத்துக் கொள்ளத்தான். பிறவி என்பதே அதுதானே! பிரிவு சுலபமல்ல. ஒப்புக்கறேன். அவனுக்கும் இருக்காதா? ஒண்ணு வேணும்னா, ஒண்ணை இழந்தாகணும். வாழ்க்கையில் எதுவுமே இலவசமில்லை. அவன் வெளிநாடு போனதால் நமக்கு என்ன குறைவா வெச்சிருக்கான்? இன்னும் அமோகம். நம்ம வயசில் நமக்கு இது தேவையில்லாத அமோகம். ஆனால் அமோகம்."

"ஆமாம்."

"எப்பவோ ஒரு தடவை சொன்னேனாம். ஒரு குடும்பத்தில் ஒருவன் முன்னேறிவிட்டால் குடும்பமே உருப்பட்டு விடும்னு அதைக் கெட்டியாய் பிடிச்சுண்டுட்டான். அதை நடத்திக் காட்றான். முடியறது காட்டறான்."

"அது சரிதான். ஒரு பக்கம் சொல்லிக்கப் பெருமையாத் தானிருக்கு."

"அவன் சிங்கப்பூர் போகாட்டா, நீ வாரம் இருமுறையேனும் உன் அலமாரியைத் திறந்து மூடி, திறந்து உள்ளே இருப்பதைக் கீழே போட்டு, மறுபடியும் அடுக்கி அழகு பார்த்துண்டிருக்க முடியுமா?"

"இந்த எடக்குப் பேச்சில் குறைவில்லை. உங்களை என்ன பண்றேனாம்?"

"Correct. அது உன் சந்தோஷம். ஆனால் என் தாய் என்னத்தைக் கண்டாள்?" அவருக்கு மூச்சு லேசாகத் திணறிற்று. "காண, கண்டு மகிழ அவளிடம் என்ன இருந்தது? ஆனாலும் அவள் தன் வாழ்க்கையில் கசந்து கொண்டு நான் பார்த்ததாக எனக்கு ஒரு நாளும் நினைப் பில்லை. எப்பவும் சிரிச்ச முகம். சுறுசுறுப்பா எப்பவும் ஏதேனும் காரியமா, தோட்டம் போட்டுண்டு பசு மாடைப் பார்த்துண்டு வளைய வருவாள். காய்கறிக் கூடைக்காரி போணிக்கு அவளிடம்தான் வருவாள். 'நான் இப்படி ஆனப் புறமும் என்னிடம் என்னடி போணி?' என்று கேட்டால், 'அப்படியில்லேம்மா, நீ வாங்காட்டாப் போறே, சும்மா உன் கையை, காய்கறி மேல்வை போதும். உன் அம்ஷம் உனக்குத் தெரியாது, எங்களுக்குத் தெரியும்' என்பார்கள்."

"உங்கள் அம்மா கைராசி எனக்கும் தெரியும்."

"ஒவ்வொருத்தர் அப்படி அம்சத்துடன் பிறக்கறா. ஆனால் நானும் பார்த்தாச்சு, இந்த அசாதாரிணிகள் பிறருக்குப் பயனாயிருப்பார்கள். ஆனால் தாங்கள் சுகப் பட்டதில்லை. அவர்களுக்குப் பெரிய பலம் அவா மனசு தான்." பெருமூச்செறிந்தார். எங்கேயோ போயிண்டிருக் கேன். சேகரைப் பத்திப் பேசிண்டிருந்தோம். நம் பெண்ணைப்பத்தி நினைச்சையா?"

"நினைக்காமல் என்ன, பேசினால் தான் உண்டா?"

"ஒரு சமயம், சுமார் அஞ்சு வருஷத்துக்கு முன்னால், அவளுக்குக் கலியாணம் நேரும் முன்னால் காத்தி, நீ இப்போ உக்காந்திருக்கையே இதே இடத்தில்—ஆமாம் அது இப்போ நினைவுக்கு வருவானேன்? ஒரு ஆச்சரியம், கோமதி

நினைவுகள் அல்ல, எண்ணங்கள் ஒருநாளும் அழிவதில்லை. ஒரு தடவை தோன்றினவுடன், வீணாவதேயில்லை. சதா ஈதரில் நீந்திக் கொண்டேயிருக்கின்றன. மறுபடியும் ப்ரஸன்னமாக, இன்னொரு அர்த்தமாக முகூர்த்தத்துக்கு காத்திருக்கின்றன. மனுஷ ஜன்மத்தின் பெருமையே இது தான். எண்ணத்தின் மூலம் நாம் பிரும்மாக்கள், சிரஞ்சீவி கள். நாம் வாழ்க; எனக்கு உடம்பு சிலிர்க்கிறது."

"உங்களையே வாழ்த்திக்கறேள்." இருட்டில் அவள் புன்னகை தெரியவில்லை.

"இருக்கலாம். ஆனால் ஒரு பொதுவான உண்மையை வெளிப்படுத்துவதன் மூலம் வாழ்க்கைக்கு நன்றி சொல்வ தாகத்தான் எண்ணம், பார்த்தையா மறுபடியும் வருவது எண்ணம்தான். எண்ணத்தின் உருவத்தில் நன்றி. அன்று இரவு அப்படித்தான் அமைஞ்சிருந்தது.

இங்கே நம் வீட்டுக்கெதிரே கொஞ்சம் மைதானமாயிருக் கறத்தினாலே, வானம் நிறைய இருக்கு. அன்னிக்கு நக்ஷதரம் ஒரேயடியா பூத்துக் கொட்டிக் கிடந்தது. நிலா இல்லை. இருட்டோடு சேர்ந்த மர்ம வெளிச்சம். நீ உள்ளே வேலையா யிருந்தே. பசங்க வெளியே போயிருந்தாங்க."

"அப்பா!"

"Yes?"

"நன்னாயிருக்கப்பா!"

அமைதியில் மனமே முழுத் துல்லியத்தில் ஸ்னானம் செய்த ஒரு தனி லேசு, ஒரு விடுதலை. முள் வேலியுள் அவர்கள் வீட்டெதிரே பசும் புல்தரை உண்டு Chlorophyll இன் குளுமை. தென்றல் அவர்களை ஒத்திற்று. கிழக்கே பார்த்த வீடு. நாம் கொடுத்து வைத்தவர்கள். காரணமே தெரியாத, தெரியத் தேவையற்ற ஒரு மன நிறைவு.

"அப்பா எனக்கு இப்போ ஒண்ணு தோணித்து."

"சொல்லு."

"இந்த சமயத்துக்கு மௌனம் தான் பாஷை. ஆனால் தோணினதைச் சொல்லித்தான் ஆகணும். தோணிடுத்து. இதுவே மௌனத்திலிருந்து தோணினதுதானேப்பா!"

"Beautiful. சொல்லு."

"அப்பா! அப்பா அம்மா நீங்க ரெண்டு பேர். நான், சேகர், கண்ணன், ஸ்ரீகாந்து நாங்கள் நாலு பேர். நாம் சேர்ந்து எப்பவுமே ஒண்ணு."

"ஒண்ணாத்தானேயிருக்கோம்! ஏன், மூத்தவனை மறந்துட்டியா?"

"மறக்கல்லே. ஆனால் நான், நம்மோடு அவனை சேர்க்கல்லே."

"..........?"

"அவன் தனியாப் போயிட்டான். அவனுக்குக் கலியாண மான ஒரு வாரத்துள் நீங்களே அவனைத் தனிக்குடித்தனம் வெச்சுட்டேளே!"

"அதுதான் அவனை நீ சேர்த்துக் கொள்ளாத காரணமா?" அவர் புன்னகையில் கேலி அரும்பிற்று.

"இல்லை அவன் நம் இனத்தில் சேர்ந்தவன் இல்லை. நல்லவன்தான். ஆனால் நம்மோடு ஒட்டாமல் எப்பவுமே தன் சுபாவத்தில், தன் காரணம், தன் வழின்னு வாழறான்."

"அது தப்பா? யாருமே அப்படித்தானே!"

"அது சரிதான். அவனுக்கு எங்களைப் பிடிக்கும். எங்களுக்கும் அவனைப் பிடிக்கும். பேச்சில், செயலில் correct. வாக்குத் தவறாதவன்னு பேர் வேறே வாங்கிட்டான்.

ஆனால் அவன் நம் இனத்தில் இல்லை. எனக்குச் சொல்லத் தெரியல்லே அப்பா!" அவர் கைமேல் தன் கையைப் பொத்தி, "அப்பா, நாம் 2+4=1" அவள் உள்ளங்கை சுட்டது. அவள் முகத்தை இருளில் பார்க்க முடியவில்லை. ஆனால் தகதகத்தாள். நக்ஷத்ர வெளிச்சம்? வானினின்று ஒரு மீன் சீறி விழுந்தது—ஏதோ சபதம் பிறந்தாற்போல்.

எங்கோ ஏதோ மொக்கவிழ்ந்து சமயம் கமகமத்தது.

அவளுடைய மூர்க்கம் தன்னையும் தொற்றிக் கொண்ட புல்லரிப்பில், கூடவே அச்சத்தில் தன் சுழலில் இழுத்துக் கொண்டு போய் விடாதபடி, தன்னைத் தன்னுடன் இருத்திக் கொண்டார்.

"Beautifull idea. ஆனால் நடப்புக்கு வராதேம்மா!"

"ஏன்?"

"உனக்கே கலியாணம் ஆனால், உன் புருஷனுக்கு இந்த அவையில் இடம் கிடையாதா?"

"கிடையாது. ஆளைப் பார்த்து, study பண்ணி அப்புறம் யோசிக்க வேண்டிய விஷயம். No. இதை யோசிக்க வேண்டியதே இல்லை, இந்த equation சொன்னது சொன்னதுதான் 2+4=1, 2+4=1" ஜபித்தாள்.

'இது நடக்கற காரியமா காத்யாயினி?' அவர்தான் முழுப்பெயரிட்டு அழைப்பார்.

'உன் கலியாணம் நடந்து, நீ புக்ககம் போக மாட்டையா? பசங்கள் வேலையில் மாற்றலாகி வெளியூர் போகமாட்டார் களா? அவர்களுக்குப் பெண்டாட்டிமார் உரிய காலத்தில் வரமாட்டார்களா? குழந்தைகள் பிறக்காதா? எங்களுக்கு வயசேறிண்டே போகாதா?'

'இருக்கட்டுமே! சந்தர்ப்பவசங்களால் பிரிந்து போனா

லும் ஒன்று என்பது பிளந்து போகணுமா? யார் எங்கிருந்தாலும் 2+4=1. வேறு எப்படி எனக்குச் சொல்லத் தெரியல்லே."

"எனக்குப் புரியறதம்மா. 4+2=1. இது ஒரு லக்ஷியம். ஒரு அழகிய எண்ணம். இந்த வேளையின் விளைவு. ஆனால் அதில் நடப்பு இல்லை. நீதியில்லை. உன் பாசத்தின் சுயநலம் இருக்கிறது. ஆனால் குழந்தை, உன் எண்ணத்துக்கு நீ எங்கிருந்தாலும் சௌக்யமாயிருக்கணும். உன் நல்லெண்ணம் உன்னைக் காப்பாத்தட்டும்." அவர் குரல் தழுதழுத்தது. அவள் தலையை இழுத்துத் தன் கழுத்து வளைவில் அணைத்துக் கொண்டார்.

இருவரும் அவரவர் யோசனைகளில் ஆழ்ந்திருந்தனர். எத்தனை நேரமோ, பின் அவள்,

"ஆமாம் அப்படிச் சொன்ன காத்தியைத்தான் வருஷக் கணக்கில் பார்க்க முடிவதில்லை. இத்தனைக்கும் கோவை தான். காண முடியாதவரை சிங்கப்பூரில் இருந்தால் என்ன, கோவையில் இருந்தால் என்ன?"

"ஏன் உன் தம்பி இங்கே திருவான்மியூரில் தானே இருக்கான்! அவனைப் பார்க்கப் போறையா?"

"அதெப்படி? அவளவாளுக்கு வீடுன்னு அமைஞ்சப் பறம் அங்கென்ன எனக்கு அனாவசிய வேலை?"

"இதன் பேர்தான் பெண்டுகள் நியாயம். இதனுள் நான் புகுந்து புறப்படப் போவதில்லை. இதுக்கு முடிவே கிடையாது. நம் பேச்சிலே நாம் திசை தப்பி, எங்கோ போயிட்டோம்."

"ஆமாம், அலைகளைப் பார்த்துண்டு குருட்டு யோசனை பண்ணிண்டிருந்தேனா, திடீர்னு பசி நெனைப் பெடுத்துடுத்து. அதென்ன வரபோதே அப்படிக் கொழுந்து விட்டுண்டு—!"

மனசை மாத்திக்க எழுந்து நடந்தேன். அலையோரமா நடந்தேனோ நடந்தேன், இன்னொரு ஓடம் கண்ணுக்குத் தட்டுப்படற வரைக்கும். ஆனால் நெருங்க நெருங்க ஓடத்தடி காலியாயில்லை. ஏற்கெனவே ஒரு ஜோடி பிடிச்சுண்டிருந்தது. வெள்ளைத் தோல்கள்! ஹிப்பிகள் என்கிறோமே அவா போல இருந்தா. ஆண் ஒரு காதுலே மட்டும் வளையம் போட்டிருந்தான். ரெண்டு பேருமே அழுக்குன்னா அப்படி ஒரு அழுக்கு அந்த சிக்குப் பிடிச்ச தலை. சரைக்காத தாடியும் ஊத்தை ஊறிப் போன மஞ்சள் காவிப் பல்லும்— இந்த வெய்யில்லே எப்படி அவாளால் குளிக்காமல் இருக்க முடியறதோ! ரெண்டு பேருமே சின்ன வயசுதான். ஆனால் முறுக்கு விட்டுப் போன உடம்பு. அவர்கள் உடைகள் நெருப்பில் போட்டால் கூடப் பத்திக்காது அப்படி ஒரு அழுக்கு.

அதென்ன அழுக்கையே வழிபாடாய்க் கொண்டு இப்படி ஒரு வர்க்கமா? அவர்களிடமிருந்து காற்று வாடையே—பாதி என் அருவருப்பும் கலந்திருக்கலாம்— அவாளைத் தாண்டுகையில் என்னை விரட்டி அடிச்சது. மூக்கைப் பிடிச்சுண்டு ஓடினேன். அவா சிரிப்பு என்னைத் துரத்தித்து. எனக்குக் காலே விட்டுப் போம் போல் ஆயிடுத்து! இன்னொரு ஓடம் வரும் வரையில—

ஆனால் அங்கேயும் இடம் காலியாயில்லை. ஒருத்தி முழங்காலைக் கட்டிண்டு உட்கார்ந்திருந்தா. அலையைப் பார்த்துண்டு. அவளுக்கு எட்ட, ஓடம் தந்த நிழலோரமா உட்கார்ந்தேன். அவள் வயது நாற்பதுகளில் இருக்கலாம். குறிப்பா அவள் கூந்தல் அடர்த்தியா, முரடா சாம்பல் விட்டுண்டு, அது அவிழ்ந்து, தடுமனா முதுகில் சரிஞ்சிருப்பது கூடத் தெரியாமல், அலையைப் பார்த்துண்டு இருந்தாள்.

எனக்கு முதுகு கெஞ்சித்து. ஆனால் இவள் உட்கார்ந் திருக்க நான் எப்படிப் படுக்கறது? காலை நீட்ட இட மில்லை.

ரெண்டு பேரும் அலையைப் பார்த்துண்டிருந்தோம்.

மெதுவாக அவள் முகம் என் பக்கம் திரும்பிற்று. விழி யோரங்களிலிருந்து இரண்டு ஸ்படிகங்கள் புறப்பட்டுக் கன்னத்தில் வழிஞ்சு மோவாயிலிருந்து உதிர்ந்தது. அருண்டு போயிட்டேன். 'திக்'கெனு ஆயிடுத்து.

'அலைகள் ஓய்வதில்லை' என்றாள்.

அவளுடைய கண்ணீருடன், அவளுடைய அந்தப் பொதுவான வாக்கும் சேர்ந்து கொண்டு அவள் திடீர்னு களையாயிட்டா. "நீங்கள் தான் சொல்லணும். துக்கத்துக்குத் தெய்வம் உண்டோ?"

"இதென்ன கேள்வி? துக்கத்தைத் தெய்வமாய்க் கொண்டாடணுமா?"

"அப்படிச் சொல்லல்லேன்னா, அந்தத் துக்கத்தின் வெறி, காரணம் எல்லாம் நாளடைவில் அடங்கி, ஒரு படர்ச்சி காலத்துக்கும் மனசில் தங்கிப் போயிடறதே, அவரைப் பந்தலடியில் நிழல் மாதிரி, வைரத்தில் ஓட்டம் தெரியறது என்கிறாளே, கானல் நடுங்கற மாதிரி, அப்புறம் சமுத்திரத்தில், ஏரியிலோ அலை தாண்டின அமைதியில் ஒரு ஓடம் கவிழ்ந்து மிதந்தால் நெஞ்சில் அடைக்கும் அது மாதிரி..."

"கோமதி நீயா பேசறே?"

"பின்னே யாராம்? அவள் முகத்தில் களைமாறினதைப் பார்த்தேன். துக்க தேவதையாத் தோணித்து. தோணினதைச் சொல்றேன். அப்புறம்தான் குண்டைத் தூக்கிப் போட்டாள்:

"போன வருஷம் இதே அலைகளுக்குத்தான் என் பிள்ளையைப் பறிகொடுத்தேன்."

தூக்கிவாரிப் போட்டது.

"கரையில் உட்கார்ந்திருந்தேன். அலையில் போய் நின்னுட்டு வரேன்னான். என்னையும் எனக்குக் கைப் புத்தகத்தில் ஸ்வராஸ்யம் போகல்லே. அவன் போனான். எனக்குப் புத்தகத்தில் கவனம். திடீர்னு 'அம்மா'ன்னு ஒரு அலறல். நிமிர்ந்தால், அலையோடு போயிண்டிருந்தான். அந்த அலறலும் சேர்ந்து, உடல் பூரா வெலவெலத்துப் போயிட்டேன். வாயடைச்சுப் போச்சு. இது ஆள் நடமாட்டம் தள்ளிப் போன இடம். ஒத்தரும் கண்ணிலும் படல்லே. அவ்வளவுதான். போயே போயிட்டான். பிணம்கூடக் கிடைக்கல்லே.

என்னென்னவோ கேக்கணும், ஏதேனும் ஆறுதல் சொல்லணும்னு தோணித்து. ஆனால் குரல் தோத்துடுத்தே!

என் கேளாத கேள்விக்குப் பதில் சொல்வதுபோல்.

பையன் பதினாலு வயஸுக்கு வாட்ட சாட்டமா கட்டு மஸ்தாயிருப்பான். நல்ல வளர்த்தி. நான் பெத்திருந்தால்கூட எனக்கு அப்படிக் கிடைக்கமாட்டான். 'அம்மா, அம்மா'ன்னு அப்படி உசிரை விடுவான்."

'என்ன சொல்றா?' குழம்பிப் போனேன்.

"நான் இரண்டாந்தாரம். என் மூத்தாள், அஞ்சு வருஷத்துக்கு முன்னால் gas ஸ்டோவ் வெடிச்சுப் போயிட்டா. மாமா சீக்காளி. என்னைவிட ரொம்பப் பெரியவர். தன் உடம்பையும் பையனையும் சேர்த்து அவரால் பார்த்துக்க முடியல்லே. என் வீட்டிலும் வழியில்லை. அங்கேயும் அப்படி ஒண்ணும் வளமில்லை. ஆனால் விதின்னு ஒண்ணு இருக்கே மாமி, எப்படி சேர்க்கறது பாருங்கோ! இல்லாட்டா எனக்கு

முப்பத்தி அஞ்சு வயசுலே ஒரு கல்யாணமா?" குலுங்கிக் குலுங்கி அழுதாள். இப்போது தனக்கும் சேர்த்து.

"மாமா எப்படி இருக்கார்?" அசட்டுக் கேள்வி.

"இருக்கார். யார்தான் என்ன பண்ண முடியும்? ஆனால் நான் அவர் எதிரே நடமாட நேரும் போதெல்லாம் அவர் கண்கள் மௌனமாய்க் குற்றச்சாட்டுடன் என்னைப் பின் தொடருவதாக எனக்குத் தோணும். எப்படியும் எனக்குக் குத்தமுள்ள நெஞ்சுதானே! அவன் அழைச்ச போதே, நானும் அவனோடு அலையில் நின்னிருந்தால் நானும் அவனோடு போயிருப்பேனோன்னோ! இப்படி இங்கே வந்து ஒக்கார்ர போதெல்லாம் பிராயச்சித்தம் பண்ணிக்கறதா நெனச்சுக்கறேன். ஆனால் இது பிராயச் சித்தம் ஆகுமா? இப்போ நானும் விழுந்துட்டாலென்ன? ஒரொரு சமயம் தோணறது. ஆனால் உசிர் வெல்லமா யிருக்கே! மானம் ஆறிப் போச்சு. ஊசிப் போன பண்டம். பொய் மறுபடியும் கவிஞ்சுண்டுடுத்து. அலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கறதுடன் சரி."

சொல்லிக் கொண்டே எழுந்தாள். நானும் எழுந்தேன். மணல் கடந்து செல்கையில், ஏன், அப்புறமே நாங்கள் பேசவில்லை. ரோடு வந்ததும் சொல்லி வெச்சாப்போல, அவளுடைய பஸ்ஸும் வந்தது. ஏறிப் போயிட்டாள்.

அப்போதிலிருந்து நடந்து வரேன் பசி ஓய்ஞ்சு வெறும் வயிறு இழுத்துப் பிடிச்சுண்டு வலிக்க ஆரம்பிச்சுடுத்து. சேர்ந்தாப் போல் நடக்க முடியல்லே. அங்கங்கே உட்காந்து— என்ன இவ்வளவு தூரமா? வீடு போய்ச் சேர்வேனா?

வழியில் எத்தனை கார், லாரி பறந்தது. lift கேட்டிருக் கலாமோ? முதல்லே பழக்கமில்லை—அதுக்கெல்லாம் ஒரு தனி சாமர்த்தியம் வேணும். இப்பத்தான் தோணறது.

ஒண்டிக் கட்டைப் பொம்மனாட்டியே அது சின்னவளோ, பெரியவளோ, என்னிக்குமே தனக்கு ஆபத்துத்தான். நான் பெரிய தப்புப் பண்ணிட்டேன்."

இருவரும் அப்பறம் பேசவில்லை.

மேலே, நக்ஷத்ர மயானக் கொள்ளையிலிருந்து ஒரு நக்ஷத்ரம் திடீரெனத் தனிப்பிதுக்கிறது. என்னைப் பார்! இருவர் கவனத்தையும் பற்றி இழுத்தது. பெரிய கற்கண்டுக் கட்டி. இல்லை, ஸ்படிகம். நான் இவ்வளவு பெரிசு ஆனால் நான் அநாமி. என் ஸ்படிகம் என் தனிக் கண்ணீர். எனக்காக இரங்குவோர் யார் இருக்கா?

அவர் குரல் அந்த அமைதியின் மந்தரத்தில் கண கணத்துக் கொண்டு வந்தது.

மஹா சோகம் மஹா யாகம்.
அதில் ஆத்மா தன்னையே ஆஹுதியாகச்
சொரிந்து கொள்கிறது.
ஆத்மாவுக்கு அழிவில்லை.
யாகத்துக்கும் முடிவில்லை.

பூவரசிலிருந்து ஒரு இலை உதிர்ந்தது.

"எல்லாம் சரி. இத்தனை வேதனைப்பட்டு அவலம் கெட்டு, சீர் அழிஞ்சாவது வெளியே போய் திரும்பி வரணுமா? என்பதற்கு காரணம் தெரியலையே!"

"காரணம் இருக்கிறது." அவள் த்வனி அவருக்குச் சற்று ஆச்சர்யமாயிருந்தது. அது தேவையில்லை.

"ஆம். நான் சொல்லப் போகிறேன். நிச்சயமாய் சொல்லித்தான் ஆகவேண்டும். இத்தனை நேரம் கழித்து வந்து சொல்லாமல் முடியாது."

அவருக்கு லேசாகக் கோபம் படர்ந்தது.

"ஏன் இப்படிப் படபடக்கிறாய்?"

"நேற்று நீங்கள் என் கையைப் பிடித்தீர்கள்."

"பிடித்தேனா? எனக்கு ஞாபகமில்லை. சரி. பிடித்தேன். அதனாலென்ன?"

"எனக்குப் பிடிக்கவில்லை."

அவருக்குத் திடீரென்று ஞாபகத்தில் கருவிழிகள் விரிந்தன. விழுந்து விழுந்து சிரித்தார்.

"ஓஹோ. அப்படியா' கதை!"

அவள் சிணுங்கினாள்.

"எனக்கு இப்போதெல்லாம் அதெல்லாம் பிடிப்ப தில்லை. குழந்தைகள் பெத்தாச்சு. வளந்தாச்சு. அவாளும் பெரியவாளாகி தனித்தனி மரங்களாக ஊணியாச்சு. இனி என்ன வேண்டிக்கிடக்கு?"

அவர் யோசனையாய் "ஆமாம். நீ ஏற்கெனவே சொல்லி யிருக்கிறாய். ஆனால் கோமதி யோசித்துப்பார். நீ ரிஷி பஞ்சமி முழிக்காவிட்டாலும் அந்த விரதம் தாண்டிய வயது அடைஞ்சாச்சு. நானும் சின்ன வயசில்லே. இனி நம்மிடை யில் என்ன எதிர்பார்க்கிறேனாம்?"

"அப்படிச் சொல்லாதீர்கள். டாக்டர் மதுரம் சொன் னாள். மூணு நாளைக்கு முன்னால் B.P. பார்க்கப் போன போது "உடம்பைப் பார்த்துக்கோங்கம்மா. அவரைப் பக்கத்தில் அணுகவிடாதீர்கள்—" எங்களுக்கெல்லாம் வயசாச்சும்மா—நீங்கள் சொன்னதைத்தான் நான் சொன் னேன்—ஆண்களை எத்தனை வயசானாலும் நம்ப முடியாது—"

"டாக்டர் மதுரம் என் பெண்ணாயிருக்கலாம். ஏன் பேத்தியாகக் கூட இருக்கலாம்."

"ஆனால் அவ டாக்டராச்சே"

இரண்டு கைகளையும் தரையில் ஊன்றிக்கொண்டு பூவரச மரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார்.

"நான் ஏன் உன் கையைப் பிடித்தேன் தெரியுமா?"

"எனக்கெப்படித் தெரியும்?"

"நேற்று இரவு நீ மிளகுக் குழம்பு செய்திருந்தாய். மேஜையில் வாழை இலையில் குவிந்த சாதத்தில் ஆவி பறக்க கமாளித்தது. அதைத் தொடுவதற்கு என் கை கூசிற்று. அப்படி ஒரு கொதி சூடு. என் திண்டாட்டத்தைக் கண்டு நீ என் கையை உதறிவிட்டு சாதத்தைப் பரக்கப் பரக்கப் பிசைந்தாய்."

"ஏனெனில் அதை அப்படி சாப்பிட்டால்தான் வயிற்றில் கவ்வும்."

"உன் கை பொரிந்து போய்விட்டது. பார்க்க கஷ்டமா யிருந்தது. கையைப் பிடித்தேன். எனக்காகத்தானே. சின்ன வயசில் அம்மா எனக்குப் பிசைந்திருக்கலாம். ஆனால் இப்போ இல்லை. உன் கையைப் பிடித்த மாதிரி அவள் கையைப் பிடித்திருக்கத் தோன்றியிருக்காது. என்னமோ தோணித்து பிடித்தேன். நன்றியா? அன்பா? விசுவாசமா? என்னத்தை அறிவேன்?"

"ஆமாம். எங்களுக்குக் கை பொரியறது பெரிசா? எத்தனை தடவை குக்கரில் சுட்டுக் கொண்டிருப்போம். தோசைக்கல்லில். காய்ச்சின பாலில். இதை எல்லாம் யோசிக்கக் கூட நேரம் கிடையாது. பொம்மனாட்டிப் பிழைப் பென்றால் லேசா?"

"அதில்லை கோமதி. தாய் மாதிரி பிசைஞ்சயே? இந்த வயசில் யார் பிசையறா? தாய்க்குப் பின் தாரம்ங்கற

பழமொழி சும்மாவா? ஐ லவ் யூ கோமதி." ஒரு கேவல் அவரிடமிருந்து புறப்பட்டது.

"ஓ. அப்படியா விஷயம். தப்புப் பண்ணிட்டேன்."

"எல்லாப் பெண்களும் எப்படியோ அடிமனசில் விவஸ்தை கெட்டவர்கள். தப்புப் பண்ணிட்டேன்னா."

அவள் கை அவர் மேல் பொத்திற்று.

"நீ என்னைத் தொடுகிறாய் கோமதி."

"உங்களைத் தொடணும்ன்னா. ஒரு கனம் தீர்ந்தது. ரொம்ப நாழியாயிடுத்தே ரசிக்கலையா? சாப்பிட வேண்டாமா? ஹோட்டலுக்குப் போவோமா? த்ரீ ஸ்டார். ஆட்டோ பிடிச்சா போச்சு."

"இத்தனை நாழிக்கு மேலேயா? தனியாய்ப் போவது உசித்தமில்லை. ஹோட்டல் கூட மூடியிருக்கும்."

"போனாப் போவட்டும். நானே சமைச்சுட்டா போச்சு. குக்கர்ல சாதம் வேகறத்துக்குள்ள GHAT ஆ பெருங்காயமும் மிளகும் போட்டு ரசம் நிமிஷமா காய்ஞ்சுடும். ஒரு பருப்புத் துவையலும் அரைச்சுட்டாப் போச்சு."

நைட் வாட்ச்மேன் கம்பிகளைத் தட்டிக் கொண்டு அவனுடைய அடுத்த சுற்றில் வருகையில் அங்கு ஒருவரு மில்லை. வீடு தாளிட்டிருந்தது.

# 4

# ஸ்ருதி பேதம்

*விழிப்பு தன் சுழிப்பிலிருந்து தானே வெளிவருமுன் ஏதோ சத்தத்தில் வெடுக்கெனக் கலைந்து முழுமையில் கூடிக்கொண்டது. பழக்கத்தில் பார்வை சுவர்க் கடியாரத் தின் மீது பதிந்ததும் அடித்துப் புரண்டு எழுந்தாள். ஐயோ ரொம்ப நேரமாச்சே! உடனே நினைப்பு வந்தது. இன்றைக் குப் போலாமா வேண்டாமா? இன்றிலிருந்தே வேண்டாமா?*

*கதவைத் தட்டும் சப்தம். அதுதான் எழுப்பியிருக்கிறது. மெதுவாய், படிப்படியாய், உடனே அவசரமா; கூடவே அதிகாரம்.*

*இடுப்பில் துணியைச் சரிபண்ணிய வண்ணம் போய்த் திறந்தால் வாசலில் போலீஸ். ஒருவன்தான்.*

*“இது யார் பத்மாவதி வீடா? நீங்கதான் பத்மாவதியா? உள்ளே வரலாமா?”*

*கேள்விகளைக் கேட்டுக்கொண்டே, பதிலுக்குக் காத்திரா மலே, உள்ளே வந்துவிட்டான்.*

*இவா வழக்கமே இதுதானே! ஆனால் அவள் கலவர மடையவில்லை. தொண்டையடியில் சிரிப்பு வந்தது.*

*“உங்கள் வீட்டுக்காரர் இல்லையா?”*

*“Campஇலே போயிருக்கார். இன்னி ராத்ரி வரணும்.”*

"அதான் நெனச்சேன். இன்னும் உங்களுக்கு விடியல் லியா? வெயில் முதுகைப் பிளக்குது!"

"குழந்தைக்கு ஜுரம். ராமுழிச்சு, விடிகாலையிலே அசந்துட்டேன்."

கிழிந்த பாயில் படுத்திருக்கும் பையனைப் பார்த்தான். மூணு வயது? அயர்வில் அரைக் கண்ணில் காங்கை அடித்தது.

சுற்றுமுற்றும்—

ஒரே அறை. அதுவே கூடம். கிச்சன், படுக்கை, மூலை யில் ஜலதாரை. சுவருக்குச் சுவர் ஒரு கயிற்றுக் கொடியில், இரண்டு புடவைகள். ஒரு அழுக்கு லுங்கி, குழந்தை நிஜார். சொக்காய்கள் இரண்டு தொங்கின. எற்கனவே அழுக்கும் மழை ஒழுகல் கறைகளும் வழிந்து காய்ந்த சுவர்களில் கரித்துண்டால் கிறுக்கல்கள்.

அப்பா மேல் ஆச்சி

அம்மா மேல் ஆச்சி

ஏழ்மைதான் கூத்தாடிற்று என்றாலும் இவள் இடத்தைப் பெருக்கி ஒழுங்குபடுத்தி, இன்னும் கொஞ்சம் சுத்தமாக வைத்திருக்க முடியும்.

"நீ ஏன் இன்னும் வேலைக்குப் போகல்லே?"

அவளுக்கு விழியோரம் குறுகுறுத்தது.

"கான்ஸ்டேபிள், மரியாதையைக் கோட்டை விடறீங்க."

"மரியாதையா? கான்ஸ்டேபிளா? கான்ஸ்டேபிளுக்கும் இன்ஸ்பெக்டருக்கும் உனக்கு வித்தியாசம் தெரியுமா? நீ இப்படி மரியாதை தவறாப் பேசறதுக்கே உன்னைக் காரணம் சொல்லாமல் உள்ளே தள்ளிட முடியும், அது தெரியுமா?"

"கான்ஸ்டேபிளுக்கும் இன்ஸ்பெக்டருக்கும் எனக்கு வித்தியாசம் தெரியும் கான்ஸ்டேபிள். உங்களோடு எனக் கேன் பேச்சு? வேணும்னா எனக்குக் காவல் வெச்சுட்டு, ஸ்டேஷனுக்குப் போய் DSP தரணீஸ்வரனுக்கு போன் போடுங்கோ—long distance இப்போ MPயிலே இருக்கார்னு நெனக்கிறேன். டிபார்ட்மெண்டுக்குத் தெரியாமல் இருக்காது. அவரிடம் என்னை யார்னு விசாரியுங்க. ஒண்ணும் வேண்டாம் என் பேர் சொன்னால் போதும்."

"இந்த உதார் எல்லாம்..."

"நீங்க இப்படி சொல்விங்கன்னு தெரியும். அதனால் தான் உங்களையே விசாரிக்கச் சொல்றேன். இல்லை என்னை அழைச்சுட்டுப் போங்க. உங்க எதிரே நானே அப்பாவோடு பேசறேன்."

வந்தவன் சட்டெனப் பின்னிடைந்தான். அவனுடைய புதிய குளியல், புதிய ஆடை, புதிய க்ஷவரம், புதிதாய்த் துளிர் வெட்டின மீசை, மிடுக்கு, யாவதிலும் திடீர் அசடு வழிந்தது. திடீர் அசடு எப்பவுமே பரிதாபக் காக்ஷி.

"நீ—நீங்க யார்?"

"அதான் சொன்னேனே, அவர் மகள். ஒரே மகள்."

"உங்கள் வீட்டுக்காரருக்கு என்ன வேலை?"

"Car driver."

திகைத்து நின்றான். அவனுக்கு வாய் அடைத்து விட்டது. சுற்றுமுற்றும் இருக்கும் நிலையைக் காட்டி அவன் கைகள் துழாவித் தவித்தன. அவனுக்குப் புரியவில்லை.

"ஓ இதுவா, பெரியவங்க பேச்சைக் கேக்காமே ஏமாந்த காதல் கல்யாணத்தின் அவலம். என்னால் அவமானம் தாங்காமல் அப்பா வடக்கே மாத்திண்டு போயிட்டார். ஆமா,

*ஏன் உங்ககிட்ட சொல்லிக்கிட்டிருக்கேன்? என் விவரங் களைத் தெரிஞ்சுக்க வந்திருக்கிங்களா, இல்லே நீங்க விசாரிக்க வந்ததுக்கும் இதுக்கும் ஏதேனும் சம்பந்த முண்டா?"*

"இல்லேம்மா நான் வந்தது—"

"ஒரு நிமிஷம். பல் விளக்கிட்டு வந்துடறேன்—"

சாம்பலில்தான் தேய்த்தாள். ஆனால் அவள் தன்னைப் பரிதாபத்துக்குரியவளாய்க் காட்டிக் கொள்ளவில்லை. பற்களும் பளீரிடாமல் இல்லை. அவனுக்குத்தான் இருப்புக் கொள்ளவில்லை. அந்த கீக்கிடத்தில் உழல முயன்று தவித்தான்.

அவள் அடுப்பு மூலைக்குப் போனாள்.

"கொஞ்சம் காப்பி சாப்பிடறிங்களா? இருப்பதில் ஒரு பங்கு—"

"இல்லேம்மா, டூட்டி மேலே—"

"அப்படியா? ரொம்ப சரி."

தன் காப்பியை அனுபவித்துக்கொண்டே மூலையின் இருளிலிருந்து வெளிப்பட்டாள்.

"எது எவ்வளவு மோசமானாலும், என் காப்பியை நான் தரம் குறைச்சுக்கறதில்லே. உசிர்த்தண்ணியாச்சே! சரி, நீங்க வந்த சமாச்சாரம்?"

"பக்கத்துத் தெருவிலே காலையிலிருந்து திமிலோகப் படுதே. உங்களுக்குத் தெரியாதா?"

"எனக்கு எப்படித் தெரியும்? நான்தான் தூங்கிட் டேனே!"

"நீங்க வேலை செய்யற இடத்துலே அந்தப் பெரியவர் இறந்துட்டாரம்மா—"

"என்னது?"

இவள் பிரமிப்பைச் சந்தேகிப்பதற்கில்லை. Geniune Shock.

"ஆமாம். கடைசியா அவரை உயிரோடு பார்த்தது நீங்க தான்னு நினைக்கிறேன். அதனாலே விசாரிச்சு உங்களைத் தேடி வந்திருக்கிறேன்."

"இதில் என்னை விசாரிக்க என்ன இருக்கு? இறந்துட்டாரா? நம்பும் படியாயில்லையே?"

"அதனாலேதான் வந்திருக்கேன்."

"மாரடைப்பாயிருக்கலாமா?"

"தோணல்லே. கட்டிலுக்குப் பக்கத்துலே சின்ன மேஜை மேல் தூக்க மாத்திரை பாட்டில். காலி. உங்கள் பேர் மட்டும் எழுதி ஒரு கவர் ஒட்டல்லே. உள்ளே ரூ. 125. அத்தோடு தனியா ஒரு நூறு ரூபாய் ஒத்தை ரூவாக்கட்டு."

"125 என் சம்பளம். இன்னிக்கு கடைசி தேதில்யோ? 100 புரியல்லே. ஒருவேளை எனக்குப் போனஸ்ஸோ என்னவோ?" புன்னகைக்க முயன்றாள். உடனேயே, "ஆனால் இது சிரிக்கிற விஷயமில்லே. ஆளுக்கு வயசாச்சு. தானாய் சாவு நேர்ந்தால் தடுக்க முடியாது. ஆச்சர்யப் படறதுக்குமில்லை. ஆனால் தற்கொலை ஏன்?"

உடலைப் பரிசோதனைக்கு அனுப்பிச்சால்தான் தெரியும். தற்கொலையா, கொலையான்னு. இவர் இங்க settle ஆகியே இன்னும் அஞ்சு மாஸம் முழுக்க ஆவல்லே. அதுக்குள்ளே இவருக்கு ஆகாதவங்க யாரு இருக்கப் போறாங்க. குழப்பம்தான். நீங்க அங்கேவிட்டு நேத்தி வந்திங்களே. எப்படியிருந்தார்? ஏதேனும் upset—? சத்தே விவரமா சொல்றீங்களா? இல்லை உங்களுக்கு objection இருக்குமா?"

*"எனக்கென்ன* objection? *நடந்ததைச் சொல்லப் போறேன். சொல்லிக்கற மாதிரி ஒண்ணும் நடக்கல்லே. சாதத்தை வடிச்சுட்டு, 'இன்னிக்குக் கொஞ்சம் சுருக்கப் போறேன். நாளைக்கு காலையிலே வந்து பத்துத் தேச்சுக் கறேன் குழந்தைக்கு ஜுரம்'னேன்."*

*"'குழந்தைக்கு ஜுரம்னு ஏன் முன்னாலேயே சொல் லல்லே? அப்பவே போயிருக்கலாமில்லே'ன்னு இரைஞ்சார். 'இல்லே வராமலே இருந்திருக்கலாம். அனேகமா ராத்ரி மோருஞ்சாதம் தானே! இல்லாட்டி* bread *இருக்கு சமாளிச் சுக்கறேன். இல்லே ஒரு ரா பட்டினி கிடந்தால் ஆகாதா? டாக்டரிடம் காண்பிச்சையா? இன்னும் இல்லையா? உடனே போய்க் காண்பி. பணம் இல்லையா? இந்த அம்பது ரூபா வெச்சுக்கோ. இது கடனா? ஒசியான்னு பின்னாலே முடிவு பண்ணலாம். முன்னாலே போ' உடனே வந்துட்டேன் நடந்தது இதுதான்."*

*"அவருக்கு உற்றார் உறவினர் இருக்காங்களாா?"*

*"பிள்ளைங்க இருக்கறதா ஒருதடவை பேச்சுவாக்கிலே சொன்னார். ஆனால் எத்தனை பேர், எங்கேயிருக்காங்கன்னு சொல்லல்லே."*

*"தபால் கிபால்?"*

*"அப்படி வரமாதிரியும் தெரியல்லே. ஆனால் இதுக்கு என் வார்த்தை கெட்டியில்லை. இங்கே நான் தினம் வேலை செய்யற நேரம் காலை 8* to *10. சாயந்திரம் 7* to *8. இடையில் நடப்பது எனக்குத் தெரியாது."*

*ஆழ்ந்த யோசனையில் அவன் வாய் முறுக்கிக் கொண்டது. "எனக்கு இப்போ தோணினது இவ்வளவுதான். நான் வரேன். பின்னாலே உங்களுக்கு ஏதாச்சும் தோணித் துன்னா சொல்லியனுப்புங்க.* No. *285"*

அவன் சென்றபின் கதவைத் தாளிட்டுக்கொண்டு சிந்தனையில் உள்ளே நடந்தாள்.

நேற்று நடந்தது அதுதானா? தன்னை மாய்த்துக் கொள்ளும்படி என்ன ஆயிடுத்து? ஏதோ குற்ற உணர்வு அவளை உறுத்திற்று. இப்போ மட்டுமல்ல. இனி அப்பப்போ நினைப்பு வரும்போதெல்லாம் உறுத்திக்கொண்டிருக்கும். ஐயோ பாவம்! நல்ல மனுஷன்.

ஆகமிச்சம். நாலு மாதத்தோடு பிழைப்பு போச்சா?

ஒருநாள் பிற்பகல்.

அவனுடைய புதிய சட்டை. நிஜாரில் பையன் கையைப் பிடித்துக்கொண்டு முதன்முதலாக அவர் எதிரே நின்ற போது, அவர் அவளைக் கவனிக்கவில்லை. சாய்வு நாற்காலி யில் அமர்ந்து என்னவோ எழுதுவதில் முழுக் கவனமும் முனைந்திருந்தது.

சற்று பொறுத்து, "மாமா!"வென்று மெதுவாய் அவள் அழைத்ததும், திடுக்கிட்டு நிமிர்ந்தவர், சற்றுநேரம் தன்னையே இழந்து அவளையே பார்த்துக்கொண்டிருந்த கண்களில் ஒரு திகைப்பு.

"உன் பேர் என்ன அம்மா?"

"பத்மாவதி. பத்மா."

"என்ன வேண்டும்?"

"சமையலுக்கு ஆள் தேவைப்படுவதாகச் சொல்லக் கேட்டு வந்தேன்."

"ஓ!" அப்பத்தான் அவருக்கு நினைப்பு வந்தது. பேனாவை மூடிப் பக்கத்தில் ஜன்னல் விளிம்பில் வைத்தார்.

"நன்னா சமைப்பையா?"

"அப்படித் தைரியமாச் சொல்லிக்க முடியாது மாமா! ஏதோ ஒரு குழம்பு, ரஸம், கறி அத்தோடு சரி. இதில் ஒண்ணு சரியா வாய்க்கும். நிச்சயமா சாதத்தைக் குழைச்சுடுவேன். வெரைட்டி items தெரியாது. டிபன் கழுதை கெட்டால் குட்டிச்சுவர். ரவா உப்புமாவு, நாலுபேர் விருந்தாளி வந்துட்டா, சேர்த்து சமைக்க உதறல்தான். இந்த சரக்கை வெச்சுண்டு உங்களிடம் வேலை கேட்க எந்த தைரியத்தில் வந்தேன்னு எனக்கே புரியல்லே!"

அவள் கைகொட்டிச் சிரிக்கையில் ஒரு குழந்தைத் தனம் தெரிந்தது.

முறுவலித்தார். "குழைச்ச சாதம்தான் எனக்கு ஒத்துக் கும். ரஸம் must. மற்றபடி எனக்கு அவசியமில்லை. டிபன்-" உதட்டைப் பிதுக்கினார். "டிபன் காரம் ஆசை எல்லாம் தாண்டிப் போயாச்சு. வயிறு நுட்பமாயிடுத்து. வாரம் ஒரு வேளையேனும் இட்டிலி இருந்தால் தேவலை. ஓட்டலில் வாங்கிக்க வேண்டியதுதான்."

"முயற்சி பண்ணறேன்."

"யாரம்மா என்னைப் பார்க்க வரப்போறா? யாரும் வேண்டாம்னுதானே விலகி வந்திருக்கேன். சமையலுக்கு லாயக்கில்லைன்னு நீயே சொல்லிக்கறாய். ஆனால் இந்தப் பத்து நாளில் தேடினதில் உன்னை விட்டால் வேறு கதி யில்லை போலிருக்கு."

"Sorry மாமா. சமையல் நான் கத்துக்கல்லே. பொது வாகவே எனக்கு அதில் interest இல்லே. நான் சமையல்காரி யில்லை. வீட்டுக்கு ஒரே பெண். ஒரே குழந்தை. சின்ன வயசிலே அம்மா போயிட்டா. முழுக்க முழுக்க அப்பா செல்லம். பாதி ஆண்பிள்ளையாகவே வளந்துட்டேன். வசதியா வாழ்ந்துட்டு இப்போ சறுக்கினதும் அவஸ்தைப் படறேன். குடும்பம் நடத்தப் போதல்லே."

"Ok don't worry, we will manage. எனக்கு வேளை தவறி சாப்பாடு ஆகாது. Ulcer. சரியா பத்து மணிக்கு ஒக்காந்துடு வேன். இரவு 7½. அப்புறம் உன் பேர் என்ன—Yes. பத்மா! கடை கண்ணி, மார்க்கெட் வெளிவேலை எல்லாம் நீதான் பார்த்துக்கணும். நான் நடைக்கு லாயக்கில்லை. கால் weak ஆயிடுத்து. இன்னும் ஆயிண்டே இருக்கு. இது ஏதோ தனிக் கோளாறு. But no more doctoring. தீர்மானிச்சுட்டேன். சரி போகட்டும். சமையலில் புளி காரம் nil. பயத்தம்பருப்பு கூடச்சேர். தக்காளி மறக்காதே. வாழையிலை வாங்கு, the only luxury I allow myself. நீ உன் சமையலைத் தனியாக சமைச்சுக்கோ. உனக்கு என் சமையலைச் சாப்பிட வழுங்காது. இந்தா பையனுக்கு சாக்லேட் வாங்கிக் கொடு—ஏண்டா நீ அப்பா கோண்டா, அம்மா கோண்டா? Okay that is all."

இப்படித்தான் ஆரம்பித்தது அவள் உத்யோகம்.

அவள் வருவதற்குள் ஸ்னானம் பண்ணி கட்டுக் கட்டாய் விபூதியிட்டுக் கொண்டு சாய்வு நாற்காலியில் வீற்றிருப்பார். அவள் காப்பி காத்திருக்கும். கலந்து சுடவைத்துக் கொள்ள வேண்டும். A 1. வந்தவளை 'வா'வென்று ஒரு வார்த்தை. ஒரு புன்னகை. அவள் வந்ததை அடையாளம் கண்டு கொண்டதற்கு ஒரு தலையசைப்பு. சைகை—ஊஹூம்.

பளீரென வெள்ளை வேட்டி. முழங்கை பனியன். தானே தோய்த்துக் கொள்வார் போல இருக்கு. அதிகப்படி சம்பளத்துக்கு அவளிடம் தோய்க்கப் போட்டால், முதலில், மாட்டாள். தோய்த்தாலும் இந்த வெளுப்பு வராது.

பொதுவாகவே பெரிய உத்யோகம் பார்த்தவர்கள், பார்த்துக் கொண்டிருப்பவர்கள்—அவள் அப்பாவும் அவர்களில் ஒருவர்தான்—நடை உடை பாவனைகளில் ஒரு ஒழுங்குபாடும் அணுகாத்தன்மையும் ஒரு அம்சமாகக்

கவனிச்சிருக்கேன். செயற்கையாக ஆரம்பித்து அதுவே பழக்கத்தில் படிந்துவிடும் போலும்.

ஒல்லியான உருவத்தில் விறைப்பாய் நிமிர்ந்த முதுகு... முன் மண்டையும் உச்சியும் வழுக்கையில் பளபளக்க, பின்னால் பிடரி வரையிலும் பக்கவாட்டிலும் தும்பை அடர்ந்து ஒழுங்காய்ச் சீவப் பெற்று அதுவே முகத்துக்கு ஒரு தனி அழகையும் கம்பீரத்தையும் தந்தது. இப்பவே இத்தனைச் செவக்க மேனி உற்ற வயதில் எப்படியிருந் திருக்கும்! வயது ஏற ஏற சிலருக்குத்தான் இந்த உள்தன்மை யின் ஒளி.

இந்தத் தோற்றத்தை ஒற்றினாற் போல் அவள் கணவனைப்பற்றி நினைப்பு எழாமல் இருக்குமா? நினைத் தாலே கைக் காரியம் தடைப்பட்டு, கை அந்தரத்தில் நின்றது. மாதத்தில் இருபது நாள் camp. மிச்சம் பத்து நாட்கள் சிதறுண்டு இருந்தாலும், மனிதன் வீட்டில் இருப்பதைவிட வெளியில் இருப்பதே மேல். இனி என்றுமே அவனுடன் புழுக்கத்துக்குப் பழக்கப்பட முடியாது. ஆனால் நானாக என் தலையில் மண்ணை அள்ளிப் போட்டுக் கொண்டது தானே! கண்ணை ஒரேயடியாக மறைச்சு விட்டதால் விதி யென்று ஒன்று இருக்கிறது என்று நம்பத்தான் வேண்டி யிருக்கிறது. நடப்பது நடந்தே தீரும். வாழ்க்கையின் போக்கில் ஒரு தவிர்க்க முடியாத தர்க்கரீதி இயங்குகிறது. அதன் காரண காரியங்களை இங்கேயே இப்பவே தேடினால் கிடைப்பதில்லை. எங்கோ, எப்பவோ எதனோடோ முடிச்சுப் போட்டுக் கொண்டிருக்கிறது. இதனாலேயே முற்பிறவி உண்டென்றும் நம்பும் படியுமிருக்கிறது.

கிட்டப் பழகி சாயம் வெளுத்துப் போயும் ஒரு குழந்தை யையும் பெற்றுவிட்டேன். இவன் வாய்க்காவிட்டால் என் திசை எப்படியோ திரும்பியிருக்கும்.

தலையை உதறிக் கொண்டு அடுப்பில் பண்டத்தைக் கிளறினாள். அடிப்பிடிச்சுப் போச்சோ? புதுசாப் பண்ணனுமோ?

மனுஷன் என்னத்தைச் சாப்பிடறான்? இந்தக் கொறிப்புக்கு ஒரு சமையல், ஒரு பரிமாறல், குடித்தனம் நடத்துதல் என்று வேறு! ஒரு நாளைப் பார்த்தாற்போல், பொறிச்ச குழம்பு, தெளிவு ரஸம், மசியல், எரிச்சலா வரது. அதே புடலை, சௌ சௌ, கீரையை விட்டால் வேறு கதியில்லையா? கத்திரிக்காய்கூட மத்திமம்தான். கிழங்கு பக்கம் தலை வெச்சுப் படுக்காதே. மாற்றிக்கூட சமைக்க முடியாது. அவர் அனுமதித்து விட்டாலும் தனக்கு ஒரு சமையல் என்று இரட்டைச் சமையலுக்கு உடம்பு வணங்கவில்லை. வீட்டுக்குப் போய் அவனுக்கு வேறே பொங்கியாகணும்.

ஒருநாள் கூடத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கையில் கேட்டுவிட்டாள். "மாமா, உங்களுக்கு மனுஷாள் இல்லையா. பிள்ளைகள், பெண்கள்?"

"ஏன் இல்லாமல்?"

"அப்ப இந்த வயசிலே, இந்த உடம்பிலே என் சமையலை நம்பிண்டு நீங்கள் ஏன்—"

"ஏன் உனக்கு அலுத்துப் போச்சா?"

"ஐயோ அதுக்கில்லே மாமா! எனக்குப் பிழைப்பைத் தந்திண்டிருக்கேள். அதை நானாக் கெடுத்துப்பேனா? உங்களுடைய நலத்துக்குத்தான் கேட்டேன்."

"இருக்கா அவாளவாள் இடத்துலே சௌக்யமா—" உடனேயே தன்னை ஸ்தாபித்துக் கொள்ளும் அவசரத்துடன், "ஆனால் நான் அவர்களை நம்பியில்லை. என் பென்ஷனே எனக்கு தலைக்கு மேல வெள்ளம்—"

*"மா—மி?" நாக்கு நுனிக்கு வந்துவிட்ட கேள்வியை அப்படியே கடித்து விழுங்கினாள். 'அந்தக் கேள்வி உன் பேச்சுப் பிரதேசமல்ல.' உள்ளுணர்வு எச்சரித்தது.*

*அவர் முக இறுக்கமும், உள் சுருங்கலும் மேல் பேச்சுக்கு வழியில்லாமல் தடுத்துவிட்டன.*

*விழுங்கிய கேள்வி தொண்டையில் சிக்கிக்கொண்டு அங்கேயே நூல் நூற்றது.*

*மாமி பிள்ளைகளுடன் கட்சி சேர்ந்து விட்டாளா? என்ன அக்ரமம்! இந்த வயஸில் மாமியும் மாமாவும் ஒருவருக்கொருவர் துணையாக சேர்ந்து இருக்க வேண்டாமா? நான் பேசுவது காதல் இல்லை. கட்டை சரிஞ்சு போனபின் காதல் ஏது? நான் நினைப்பது விசுவாசம். ஆனால் என்னை வெச்சுண்டு, மத்தவாளுக்கு உதாரணம் காட்ட எனக்கென்ன வாயிருக்கு!*

*இல்லை அவசியமில்லாத கவலையைப் பட்டிண்டிருக்கேனா? மாமி மாமாவை முந்திண்டுட்டாளா? அவளுக்கு மாத்திரம் வயசாகியிருக்காதா? மடியில் மஞ்சளும் தேங்காயு மான்னு ஏதோ வசனம் பேசறாளே அப்படியும் இவர் பாடு கஷ்டம்தான்.*

*அம்மா போனப்போ எனக்கு விவரம் தெரிஞ்ச வயசானாலும் என்னை வளர்க்க அப்பா எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பார். இப்போ தெரியறது. அவரும் மறு கல்யாணம் பண்ணிக்கல்லே. வயசு கொஞ்சம் தாண்டிப் போச்சுன்னா லும் பெண் கொடுக்க வேண்டியபேர் இருந்தாலும், அப்பா வுக்கு இஷ்டமில்லையோ என்னவோ? என்னதான் I.P.S. ஆனாலும் அடிப்படையில் போலீஸ்காரன் தானே! போலீஸ் காரனை யாருக்கு மனசாரப் பிடிக்கறது? அதனாலும் அப்பா ஒதுங்கியிருக்கலாம். ஆனால் அப்பா பண்ணினது*

தப்போ? இப்போ சந்தேகம் தட்டறது. வீட்டிலேயே பொம்மனாட்டியின் ஹிதமான வாடை போயிடுத்து. தனக்கும் கெடுத்துண்டு எனக்கும் நல்லது பண்ணல்லே. சித்தி ஒருத்தி வந்திருந்தால். எனக்கு ஒரு அத்தாயிருந் திருப்பாள். நான் பெண் என்று அப்பப்போ எனக்கு ஞாபகப்படுத்தியிருப்பாள். அதற்குப் பதிலா தறிகெட்டுப் போயிட்டேன். இப்போ நினைச்சு என்ன பயன்? எது எப்படி யிருந்தால் என்ன, இவரும் நானும் ஏதோ விதத்தில் ஒரே ஓடம். துடுப்பில்லாத ஓடம்.

அப்புறம் அதென்ன இருந்த இடத்தை விட்டு அசை யாமல், ஓயாமல் படிப்போ அல்லது எழுத்தோ? இரண்டை யும் விட்டால் யோசனை? இப்படியே மனிதன் காலத்தைத் தள்ள முடியுமோ? ஆனால் அவர் பொழுது அப்படித்தான் போயிற்று.

ஒரு சமயம் அல்ஸர் காரணம் உடலில் ஈரப்பசை வற்றிப்போய் (dehydration) ஓரிரவு ஆஸ்பத்திரியில் இருந்து drips ஏற்றிக் கொண்டு வந்தார். Ulcer என்றால் இந்த மாதிரிப் பிரச்னைகூட இருக்கா? மனம் பரிதவித்தது. தனக்கு இந்த அவசர நிலை ஏற்பட்டதை அவர் அவளிடம் காட்டிக் கொள்ளவில்லை. அவளாகத்தான் விசாரித்துத் தெரிந்து கொண்டாள். எரிச்சலாக வந்தது. இட்டிலியும் flaskஇல் காப்பியும் கொண்டு வந்திருக்க மாட்டேனா? பக்கத்தில் இருந்திருக்க மாட்டேனா? நானாகவே போயிருக் கலாம். ஏதோ சங்கோஜம் தடுத்தது. 'ஏன் வந்தாய்?' என்று கேட்டுவிட்டால்? தன் சுய கௌரவத்தை இம்மாதிரி யெல்லாம் காப்பாற்றுபவர்கள் நம்ப முடியாதவர்கள். உண்மையில் மனிதத் தன்மையில்லாதவர்கள். அதைவிட ஏதோ உயர்ந்த நிலையை எட்ட ஆசைப்படுகிறார்கள். தனக்கும் பிரயோஜனமில்லை மற்றவர்க்கும் இதமில்லை.

அப்படியும் பரிவு சுரந்தது. பெண் ஜென்மத்துக்கே இயல்பான தாய்மை.

ஒருநாள் சமைக்க வந்தபின் (அபூர்வமாய்) அவர் ஸ்னானத்துக்குப் போயிருந்த சமயத்தில் ஜன்னல் விளிம்பில் அவர் வைத்துவிட்டுப் போயிருந்த அட்டையை (pad) எடுத்துப் பார்த்தாள். என்னதான் எழுதறார்? தான் செய்யும் தவறு அவளுக்குப் புரியவில்லையா? ஆயினும் ஆவலை அடக்க முடியவில்லை. நேரும் போதெல்லாம் நேரங்களைத் திருடிப் படித்தாள்—முத்துப் போன்ற அவ்வெழுத்துக்களே ஈர்த்தன.

தனித் தனித் தாள்கள்.

கடிதங்களாக அமையவில்லை. நாவலோ கதையோ கட்டுரையுமில்லை.

ஒன்றுக்கொன்று கோர்வையற்று, சமயங்களில் முரணாய், அந்தந்த சமயத்துக்குத் தோன்றியபடி எண்ணங் கள், அவைகளை முழுக்கப் புரிந்து கொண்டாள் என்று சொல்வதற்கில்லை. ஆனால் ஏதோ விதத்தில் அவை நெகிழ்த்தின. தனியாக அவைகளில் கவிதையில்லை.

அவர் வரும் அரவத்தை மோப்பமாகவே உணர்ந்து padஐத் திருப்பி வைத்துவிட்டு சமையலறைக்கு ஓடிப் போய் காரியத்தை ஏற்படுத்திக் கொண்டு, தான் படித்ததன் புரியாத சுவை அவளை ஆட்கொள்கையில் திக்குத் தெரியாத காட்டினிலே எனும் சொற்றொடர், மார்க்குலையில் பிறந்து அவளே அதன் கவிதை ஆகும் தருணம் அவளைத் தன்னுள் இழுத்துக் கொண்டதும் இன்ப துக்கம் தொண்டையை அடைத்தது.

இவரும் நானும் ஒரே ஓடம். துடுப்பில்லாத ஓடம்.

இல்லாவிட்டால் என்ன?

எல்லாமே தனிமை ஆகாது. சமுதாயத்துடன் சண்டை போட்டுக் கொண்டேனும் அதன் நடுவே வாழ்வது தனிமை அல்ல.

மௌனம் தனிமை அல்ல. மௌனத்தில் உன்னோடு வாழ்கிறாய்.

To be not wanted. அப்படியும் நம்மைச் சகித்துக் கொண்டு போகிறார்கள் என்பதை உணர்ந்தும் ஏதும் செய்ய இயலாமல் இருக்கிறோமே அதுதான் உண்மையான தனிமை. கூடவே நாளுக்கு நாள் அடுத்து நிமிடத்துக்கு நிமிடம் ஏறுகிறதே வயதின் சுமை, அது தனிமை.

இது ஒரு தவிர்க்க முடியாத நிலைமையானாலும் அதனுடன் சமாதானம் ஆக முடியவில்லை!

சமுதாயம் தன்னைப் பத்ரப்படுத்திக் கொள்ள நட்ட வேலி உறவு. இஷ்டப்பட்ட உறவு, தாக்ஷண்ய உறவு, கட்டாய உறவு என உறவுகளில் பல விதங்கள் சாயங்கள் உள. சாயல்கள் இன்னும் வந்துகொண்டேயிருக்கின்றன. கட்டாய உறவுதான் கடமை. உனக்கு இஷ்டமிருந்தாலும் இல்லாவிடினும் செயல்பட்டாகணும். உறவின் நாமத்தில் சொந்தங்கள் கொண்டாடி ஆகின்றன. ஆனால் உண்மையில் யார் யாருக்கு எது யாருக்குச் சொந்தம்? ஒருவரை ஒருவர் உபயோகிப்பதற்கும் உபயோகப்படுவதற்கும் உண்டாக்கிய பொய்கள்தான் சொந்தங்கள்.

உறவுகள். சமயத்துக்கேற்றவாறு இவை பெயர்கள் எடுக்கும்.

நான் பெற்றுவிட்டதனால் என் பேறுகள் எனக்குச் சொந்தமன்று. அவரவர் தம் விதியைத் தனித்தனி நூற்று அதற்கு வாழ்க்கையென்று பெயர் கொடுத்து அதன்படி அழிய வந்திருக்கிறோம். இந்த உண்மைக்கு கோபம் கொண்டு பயனில்லை. அந்தக் கோபத்துக்கு அர்த்தமில்லை. ஏமாந்தால் அது உன் குற்றமே.

The world belongs to Youth and youth is only as long as it lasts.

நான் பயனுள்ளவரை வேணும். சக்கை பிழிந்ததும் எறியப்படாமல், சக்கை உலர்ந்து உதிர்ந்து போகும்வரை ஸஹித்துக் கொள்ளப் படுகிறேன். இதைவிடச் சிறையும் கொடுமையும் ஏது?

வயல்காடில் இருளில் பரப்பின் மேல் நடந்து செல்கையில், அதோ தூர விளக்கு வெளிச்சம் 'மினுக் மினுக்'. இதோ கிட்டதான் என எதிர்வருபவனும் தைரியம் சொல்லிக்கொண்டே போகிறான். ஆனால் நடக்க நடக்க எட்ட எட்ட வெளிச்சம் சிரிக்கிறது. நான் இருக்கும் இடமும் தெரியாமல், போகும் இடமும் தெரியாமல் இதற்குத் தான் வந்தேனா ஏ மனோ நீயேனும் சொல்லேண்டி!

எத்தனை வயதானாலும் மரணம் இப்பவும் பயமாய்த்தானிருக்கிறது. வயதின் சுமை

இருக்கவும் அலுப்பாயிருக்கிறது. எந்தப் பிடிப்புமில்லை.

பிறக்கையில் எப்படி இங்கு வந்தேன்—அறிய முடியவில்லை. அப்போது நான் ஒரு உயிர்ப் பொறி. நினைக்க மனம் இல்லை. மாற்றி வீறிடலும், உணவும், தூக்கமும் என இந்த சுழற்சியில் என்று மனம் மலர்ந்ததோ? இன்று வரை இது மீளா வியப்புத்தான்.

சாவு அத்தனை அப்பாவித்தனமாயிருக் குமா? இப்போது எல்லாம் மனம் தவிர வேறு இல்லை. என் மனம் முற்றியிருக்கிறது. இதோ போகிறேன். போய்க் கொண்டிருக் கிறேன். போய்விட்டேன். எங்கு போனேன்? அதுதான் கேள்வி.

ஸ்மரணை தப்பித் தன் கடைசியிரக்கச் செயலாய் ஆட்கொள்ளுமா?

உயிர்நிலைக்கப்பால் என்னை அணைக்க என்ன காத்துக்கொண்டிருக்கிறது?

சாவுக்கும் உயிருக்கும் இடைவிளிம்பில் நிற்கும் வேளை மிக்க நெருங்கிவிட்டது. இனி இப்பவோ எப்பவோ? கடைசி மூச்சுக்குத் திண்டாடும் வேளை அந்த ஒரே மூச்சு அதுவே தான் எனக்கு எல்லாம். அச்சமயம் என் கடைசி நினைவாக அதில் நர்த்தனமாட வருவாயா? உன்னில் என் கடைசி மூச்சை இழந்து மூலப் பிரக்ஞையில் புகுந்து விடுவேனோ? சொல்லுடி மனோ...நம்மிடை யில் சொல் ஏது? நீ உணர்த்துவதுதான் பாஷை.

இல்லை, பூர்வ ஜென்மாவின் தொடர்பு என்பது இலாமல், கற்பூரம், மெழுகுவர்த்தி எரிவதுபோல, என்னையே நான் தின்று கொண்டு அத்துடன் அவிந்துவிடு கிறேனோ? Every begining is fresh, A new life and one by itself unto the last breath?

இந்த logicபடி மனோ நீ இருக்கிறாயா அல்ல அறவேயில்லையா?

இந்தத் தர்க்க ரீதியில், இதுகாறும் இருக்கும் கோவில், குளம், அதனதன் ஐதீகம், மஹாத் மியம் பிராரத்த கர்மா. வினை விதித்தவன் வினையறுப்பான், an eye for an eye, a tooth for a tooth. மறுபிறவி. இந்த நம்பிக்கைகள், கோட்பாடுகள், I am a vengeful God (Jehova தன்னைப்பற்றி சொல்லிக் கொள்வது) இவை; இவை போன்ற மற்ற விஷயங்களின் உண்மை நிலையென்ன? இதிகாச புராணங் களை மானுடத்தின் சரித்திரத்தில் சேர்த்து விட்டாலும்—இல்லை அவையும் உள்ளடக் கியே—இவையெல்லாம் மனிதன் மனிதனை ஆள்வதற்கு, தொன்றுதொட்டு வளர்த்த பயமுறுத்தல் விதிகளா? Man rules man by fear. அதற்குக் காலங்காலமாய் வளர்ந்து இன்னும் வளர்ந்து கொண்டேயிருக்கும் விரிவான கோலம்! ஆண்டவனே நீ ஒன்றிருந்தால் என்னிடமிருந்தே என்னைக் காப்பாற்று.

எனக்குத் திகைப்பூட்டுவது யாதெனில் மனோ இத்தனை நாள் கழித்து இப்போது

எங்கே முளைத்தாய்? சாகும் வேளை நெருங்குகையில் பழைய நினைவுகள் பவனி வரும் என்று சொல்வார்கள். அதைச் சேர்ந்ததா உன் தோற்றம்?

நாம் பார்த்துக்கொண்ட கடுகளவு நேரமும் ஒரு தடவை—ஒரே தடவை; முதலும் கடைசி யும் அதுவே. ஊரிலிருந்து ரயிலில் வந்து இறங்கி பெண் வீட்டாரால் எற்பாடாகி யிருந்த vanஇல் விடிகாலையின் பொன் வெய்யிலில் நாங்கள் என் கலியாணத்துக்கு மண்டபத்தை நோக்கி விரைந்து கொண் டிருக்கையில்—அன்றிரவு ஜான வாஸம்—நீ உன் வீட்டு வாசலில் கோலமிட்டுக் கொண் டிருந்தவள்—பெரிய கோலம் அதன் நடுவில் நீ—தற்செயலாக நிமிர்கையில் நம் கண்கள் சந்தித்தன. உடனேயே கார் தெருமுனை திரும்பிவிட்டது.

நாம் பார்த்துக் கொண்டு, நம் விழிகள் கேள்வியில் பேசிக்கொண்டன. அத்தோடு சரி. அப்புறம் நான் இன்னமும் உன்னைப் பார்க்கப் போகிறேன்.

நான் கலியாண மாப்பிள்ளை என்று உனக்குத் தெரிந்திருக்கும். நான் உன்னைக் கலியாணத்தில் பார்க்கா விட்டாலும் நீ உள்ளூர்தானே!

பிறகு உன்னை நினைக்க நேரமில்லை. ப்ர மேயமுமில்லை. எனக்குத்தான் பாரு காத் திருக்கிறாளே. அவளைக் கரம் பிடிக்கத்

தானே அவ்வளவு தூரத்திலிருந்து வந்திருக் கேன்!

எனக்கு வாய்த்தவளைப் பற்றி சும்மா சொல்லக்கூடாது. அவள் தன்மையில் இன்றைய மதிப்பீட்டில் 60% தேறி விடுவாள். படு சுத்தம். தினம் இரண்டு குளியல். உடை மாற்றலும் அவ்விதமே. சமையல் வெகு நேர்த்தி. அஞ்சு பெற்றும் கட்டுத் தளர வில்லை. கூந்தல் நரையில்லை. படா சுறு சுறுப்பு. நகை நட்டுமேல் அதிக ஆசை யென்று சொல்ல முடியாது. T.V., புதுப்புது ரவிக்கை இவை இரண்டும் அலுக்கவே அலுக்காது. வம்பு தும்புக்குப் போகமாட் டாள். மனைவி என்றால் இதற்குமேல் என்ன வேண்டும்? இப்போது கொஞ்சம் எதிர்த்துப் பேசுகிறாள். பொதுவாகவே அதிகம் ஒட்ட மாட்டாள். 'இன்னிக்கு செத் தால் நாளைக்கு பத்து' இது அவள் வார்த்தைகள்தான்; கொள்கையும்கூட. நடந்தது நடந்தாச்சு—ஊம் அடுத்தது என்ன? வாழ்க்கையை மேல் ஓட்ட அப்படியும் ஒரு ஆள் வேண்டித்தான் இருக்கிறது.

அன்று நான் வயிற்று வலியில் துடித்துக் கொண்டிருக்கிறேன். எதிரே பீரோக் கண் ணாடியில் புது ரவிக்கையில் தன் தோளைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டு நாளன்னிக்கு ஆவணி அவிட்டம் போளி தட்டியாகணும். எட்டாநாள் கோகுலாஷ்டமி உங்களுக்காகப் பண்டிகையைக் குறைக்க

*முடியுமா? ஒரு தடவை தட்டினால் மூணு தடவை தட்டும். நான் எதைப்பற்றியும் ஒண்ணுமே பேசவில்லை. சரி சரி, பாரு வைப் பற்றி இத்தோடு விட்டுவிடுவோம்.*

*மனோ—1—கற்பு எண். ஒரு தடவை ஒரே தடவை முதல் தடவை. முதலும் கடைசியும் அதுவே. அதில் ஏதோ தத்துவம், மகிமை இருக்கத்தான் இருக்கிறது. நாம் இனி எங்கே சந்திக்கப் போகிறோம்? சந்திக்கவும் வேண் டாம். ஏன் மனோ உனக்கு மட்டும் வயசாகி யிருக்காதா? கலியாணம், கார்த்தி, குழந்தை குட்டி, பேரன், பேத்தி என்று பெருகி உன் தோற்றமும் மாறியிருக்க மாட்டாயா? அவர்கள் நடுவே சீர்குலைகிறாயோ சீர் பெருகுகிறாயோ? இல்லை உன் வேளை வந்து உன்னை எடுத்துக்கொண்டு போய் விட்டதோ?*

*மனோ, நம் சந்திப்பு மறுபடி இலாத அதன் ஒன்றினால் ஒரு பவித்ரத்தைப் பெற்று விட்டது. எல்லாம் நான் நினைத்துக் கொள் வதுதான். உனக்கு அப்படித் தோன்று கிறதோ இல்லையோ? உனக்கும் என் நினைப்பு இருக்கிறது என்று என்ன நிச்சயம், ஆதாரம், அவசியம்?*

*ஆனால் நீ அத்துடன் அழிந்துவிடவில்லை. அதுதான் அதிசயம். நாள் ஏற ஏற வருடக் கணக்கில் மலையாய் குவிந்து விட்டிருக் கும் நினைவுச் சருகுகளினடியில் பொறி புதைந்து' புகைச்சல்கூடத் தெரியாமல்*

எரிந்து கொண்டிருந்திருக்கிறாய். தீசலின் வாசனைகூடத் தெரியவில்லை. என் சருகுகள் அத்தனை மெத்தா மனோ? நீதான் அதுகளைப் படிப்படியாகத் தின்று கொண்டிருந்திருக்கிறாய். நான்தான் சுரணை கெட்டவன். சம்சாரத்தில் மாட்டிக் கொண்டால் அப்படித்தான் ஆகிவிடுகிறோம்.

பின்பு ஒருநாள் எதிர்பாரா சமயத்தில்—

ஏதோ வியாஜ்யத்தில் பெட்டியில் பழங் குப்பைகளைக் கிளறிக் கொண்டிருக்கையில் என் திருமணப் பத்திரிகை—பாரு இம்மாதிரி பழைய தஸ்தாவேஜிகளைச் சேகரிப்பதில் கெட்டிக்காரி. காணாமற்போன பொருள் களை, பேப்பர்களைக் கண்டுபிடித்துக் கொடுப்பதில் அவளுக்குத் தனி ராசி உண்டு. 'இதோ கண்ணெதிரே இருந் துண்டே...' என்று முகத்துக்கெதிரே ஆட்டுகையில் எனக்கு அசடு வழியும்.

திருமணப்பத்திரிகை தட்டியதும் அதை யொட்டினாற் போன்ற நினைவும் பதிவு களும் எழுந்ததும் நெஞ்சில் குபீர், கோலத் தின் நடுவே நின்றபடி நீ—முகத்தில் சிரிப்பு, உள்ளே மூர்க்கம். விழியெனும் வேல் கொண்டு முதுகில் குத்தி விட்டாயேடி! அப்போதிலிருந்து நெஞ்சம் தஹி தஹி தஹி...

மனோ—இதுகூட நான் எனக்காக உனக்குச் சூட்டிய பேர்தான். மனோன்மணி, மனோ

பாலா, மனோ ரஞ்சிதா—எது வேணுமானா லும் இருந்துகொள்.

மனோ, இப்போது உன்னால் ஒன்று புரிகிறது. மனித வாழ்வு முற்றிலும் வியர்த்த மில்லை. அழகிய எண்ணங்களை எண்ணி இங்கு விட்டுச்செல்ல வந்திருக்கிறோம். அவை பூத்ததற்கு ஏற்றவாறு மணங்கமழ்ந்து கொண்டிருக்கும், பூ வாடி வதங்கி உதிர்ந்து விட்டாலும் மணம் மட்டும் கொஞ்ச காலம் தங்கி நீடிக்கும். அழகிய எண்ணங்கள் வாழ்வின் நிர்மால்யம் இதற்கு நீ லாயக் கில்லையானால் உன் நரகத்தில் வீழ்ந்து நாசமாப்போ. மனோ, இதுதானே உன் தீர்ப்பு?

மனோ, நீ அழகா இல்லையா என்று எனக்குத் தெரிய அன்று நேரமில்லே. ஆனால் நீ அழகிய எண்ணம், அதை வைத்துக் கொண்டு ஒவ்வொரு கல்லாய்க் கட்டடம் எழுப்புகிறேன்.

மனோ, எனக்கு உன்மேல் நிச்சயமாய்க் காதல் இல்லை, அறி...ஆனால் அன்று கோலத்தின் நடுவே நின்றபடி அந்த poseஇல், நீ உன் யௌவ்வனத்தில் என் நினைவில் அப்படியே உறைந்து போனாய். நான் நாளுக்கு நாள் வயதாகி உன் நிர் மாலியமாகிக் கொண்டிருக்கிறேன். இது என்ன நியாயம். என்ன பயன். உனக்குத் தான் வெளிச்சம். உனக்குச் சித்து விளை

யாட்டு, எனக்குச் சித்ரவதை. The world belongs to Youth.

இன்னமும் என்னென்னவோ எவ்வளவோ எழுதியிருந்தார். ஆனால் அவைகளை விழுங்க நேரமுமில்லை. சந்தர்ப்பமும் வாய்க்கவில்லை. ஆனால் தன்னால் படிக்க முடிந்ததைப் படித்தவரை நினைவிலேயே மாற்றி மாற்றி அடுக்கி ஒருவாறு தனக்குத் தோன்றியபடி கோர்வைப் படுத்துவதே ஒரு adventure ஆக இருந்தது. அப்படிச் செய்து அது கொண்டு வந்து விட்ட முடிவுக்கு வந்து அடங்கியதும் பூமியின் ரேகை ஒன்றைத் துருவத்துக்குத் துருவம் முழுக்கப் பிரயாணம் வந்தாற்போல் ஒரு அமைதி கண்டாள். இப்போது அவள் கணவன் மீதுகூடக் கசப்பு தெரியவில்லை. அவரவர் வந்த வழி இதுதான் பூமியின் இசை.

இந்த நிச்சயம் நீடிக்காது. தெரியும். ஆனால் கிடைத்தது கிடைத்தவரை. இதுவும் வாழ்க்கைத் தத்துவத்தைச் சேர்ந்தது தான்.

அடுத்த நாள் வேலைக்குப் போனபோது அவர் எதிரே கணிசமாக ஒரு காயிதக் குவியல் இருந்தது. கூடவே நெருப்புச் சட்டி. ஒவ்வொரு தாளாய்த் தீக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். பொசுங்கல் நெடியில் அவளுக்குக் கமிறிற்று.

"என்ன இது. உங்கள் எழுத்துப்போல் இருக்கே!"

அவர் பதில் பேசவில்லை. அவர் முகம் அழுது தெளிந்தாற்போல், மாரிக்காலத்து மதியெனச் சோபை இழந்து...

"ஏன் எரிக்கிறீர்கள்?"

"ஆம், எதனால்தான் என்ன பயன்?"

அவளுக்குப் பகீரென்றது.

"அடப்பாவி, நானாவது வெச்சிண்டிருந்திருப்பேனே!"– வார்த்தைகள் கொட்டிவிட்டன. உடனேயே பதறிப்போய், "மன்னிச்சுடுங்கோ, என்னவோ உளறிட்டேன்."

அவர் அதற்கும் பதில் பேசவில்லை. தன் காரியத்தில் முனைந்திருந்தார்.

அன்று பிற்பகல் சமையலறையில் பற்றுத் தேய்த்துக் கொண்டிருந்தாள். ஏதோ மெட்டை முனகியவண்ணம் மனம் குதூகலத்திலிருந்தது.

அழகிய எண்ணங்கள் வாழ்வின் நிர்மால்யம். வதங்க வதங்க மணம் கூடுதல்—மார்புள் பொங்கலின் எழுச்சியில், மாமாவை 'அப்பா' என்று அழைத்துப் பார்த்துக் கொள்ளணும்போல் ஆவலாய், ஆசையாய், சந்தோஷமாயிருந்தது.

மோப்பம் போன்ற ஒரு விலங்கு அறிவு எச்சரிக்கை செய்து அவளைக் கலைத்தது. சட்டெனத் திரும்பினாள்.

வாசற்படியில் நின்றார். முகத்தில் காங்கை. கண்கள் அவள்மேல் குவிந்திருந்தாலும் அவைகளில் பார்வையில்லை.

அவளிடம் வந்து இரு தோள்களையும் பற்றித் தன் பக்கம் திருப்பினார். அவளுக்கு வெலவெலப்பைவிட வியப்புதான் அதிகம் உணர்ந்தாள்.

அவள் முகத்தில் அவர் கண்கள் தேடின. அவளை அடையாளம் கண்டுகொண்டதும் தணலைத் தொட்டாற் போல் கைகளை உதறி பின்னடைந்தார்.

"Oh God! என்ன தவறு செய்தேன்! இவ்வளவு பெரிய தப்பு! காலம் இடம் இமேஜ் எல்லாம் குழம்பிப் போச்சு. Oh God! Oh God!! என்னை மன்னிச்சுக்கோம்மா! மன்னிச்சுடு!"

தன் அறைக்குள் ஓடிப்போய் கதவைத் தாளிட்டுக் கொண்டு விட்டார்.

அவரை அவள் கடைசியாகப் பார்த்தது அத்தோடு சரி.

'இல்லை மாமா. ஒண்ணும் மோசமில்லை' என்று ஒரு வார்த்தை சொல்லியிருக்கலாமோ? தோன்றவில்லை, வாஸ்தவம். ஆனால் அப்படிச் சொல்லலாமோ? அவ ளுடைய மானம் என்னவாச்சு? எல்லாரையும் போல்தான் இவளும் என்று விகல்பமான எண்ணத்துக்கு இடம் கொடுத்துவிட்டேனானால்? ஒருவேளை அவர்மேல் இருந்த இரக்கத்தில் இணங்கியிருப்பேனோ? பிறகு என் கதி யென்ன? சே! அவருக்கு எந்தக் கெட்ட எண்ணமுமில்லை, எனக்குமில்லை. ஆனால் ஒருவருக்கொருவர் என்னத்தை நிரூபிப்பது? நிரூபிப்பதன் அவசியமே குற்ற உணர்வில் தானே!

தலை சுற்றிற்று. அவர் சாதம் அடுப்பில் தயாரா யிருந்தது. போட்டுக் கொண்டு சாப்பிடட்டும்.

அங்குவிட்டு அகன்றாள்.

நடந்தது இதுதான்.

**ம**றுநாள் ஒரு கடிதம் எழுதினாள்.

"அப்பா நான் தோத்துப் போனேன். உங்களை மன்னிப்புக் கேக்கணுமா? என் தோல்வியை ஒப்புக்கொள் றேனே, அதுவே மன்னிப்புக் கேக்கற மாதிரிதானே! இனி இப்படி நேராது—இனிமேல் நேருவதற்கே என்ன இருக்கு? என் பையனை உருப்படுத்தணும். அதுதான் இனி என் முழு நோக்கமே"

# 5

# பாப்பூ

மணி பத்தைத் தாண்டிவிட்டது. ஆனால் இருவரும் அவரவர் இடத்தை விட்டு நகரவில்லை. சமையல் எப்பவோ ஆறிப்போயிருக்கும். ஆனால் சாப்பிட இருவருக்குமே தோன்றவில்லை. வாழ்க்கையில் ஒரு இடைவெளிக்குப் பின் பசி தன்னை வெளிப்படுத்திக் கொள்வதில்லை. பழக்கத் துக்குப் படிந்ததாய்ப் போய் விடுகிறது. சாப்பிடற வேளையா, சரி, சாப்பிட்டுத் தொலை, காரியத்தை முடி.

பேச்சுக்கூட, கொஞ்ச நேரமாக அவர்களிடையே அடங்கிவிட்டது. சண்டை பூசல் கிடையாது. வாக்குவாதம் அவர்களிடையே அதிகம் நேர்வதுமில்லை.

யோசனை? அதற்கென்ன, முடிவே இல்லை என்கிறோம். அதுகூட தொடர்ந்த கோடியை அடைந்த வுடன், அதை மறித்து, வெறித்த மதிலில் முட்டிக்கொண்டு நின்று விடுகிறது. சற்று நேரம்தான் அப்படி; என்றாலும் யுகக் கணக்கில் அங்கேயே சிக்கிக் கொண்டாற் போன்ற சலிப்பு.

சுவர்க்கடியாரத்தில் வினாடிகள் நொடித்தபடி.

"டொக் டொக்."

—?—

"டொக் டொக்."

இப்போது சந்தேகமேயில்லை. ஆனால் யார் எழுந் திருப்பது?

எழுந்து போய் வாசற்கதவைத் திறந்தாள்.

வாசலுக்கெதிரே கம்ப விளக்கு வழக்கம் போல் 'அவுட்'. நிழலினிருட்டில் உருவக்கோடு பலவீனமாய்த் தெரிந்தது.

"ஸ்வேதாரண்யம் வீடு இதுதானா?" பலஹீனம். ஆனால் மெருகிட்ட உச்சரிப்பு.

"ஆமாம். நீங்கள் யார் என்று சொல்ல?"

"நான் நான்—ஸ்வேதா இருக்கானா?"

"இருக்கார். உள்ளே வாங்கோ."

ஆள் உள் வெளிச்சத்துக்கு வந்து விட்டான். சற்று உயரமாய், மெலிந்த உருவம். க்ஷவரம் செய்யாமல், மயிர் முட்கள் முகத்தில் ஒழுங்கிலாது படர்ந்திருந்தன. என்ன அகலம் நெற்றி! அவள் வியக்கும் வண்ணம், அதன் வரைகோடு பெருந்தன்மையில் உயர்ந்து மேலே அடர்ந்த சுருள் காட்டுக்கு வரை கட்டிற்று. பல நாள் சீவாது சிக்குப் பிடித்த சிகை. ஆடையும் அழுக்காய், கசங்கி அசிரத்தை காட்டிற்று. குளிச்சு எத்தனை நாளாச்சோ, ஸ்வேதாவின் பேரைச் சொல்லிக் கொண்டு கௌரவப் பிச்சையோ? இதற்குள் ஸ்வேதா வந்து விட்டான். வந்தவனைப் பார்த்துச் சற்றுநேரம் திகைத்து நின்றான்.

"யாரு?"

வந்தவன் பேசவில்லை. அந்த விழிகளில் மங்கிய தணல் கங்கிற்று. ஸ்வேதாவின் உள்ளே பாம்பின் வால் சுழல்வது போல் கிளர்ந்தது.

"நீங்கள்—நீங்கள்—நீ—நீ வ்யாஸ் இல்லையோ? யெஸ்,

மை காட், வ்யாஸ் என்னடா?" வந்தவனை அப்படியே இறுகக் கட்டிக் கொண்டான்.

"வஸு, வ்யாஸைத் தெரியல்லியா? ஓ, இல்லை, உனக்குத் தெரிய நியாயமில்லை. நமக்குக் கலியாணமாகும் முன்னரே இவனும் நானும் பிரிஞ்சுட்டோமே! வா, வா வ்யாஸ், என்ன இப்படி ஆயிட்டே?"

கையைப் பற்றி இழுக்கையில், வ்யாஸ் அவன் மேல் கனமாய்ச் சாய்ந்தான்.

"அடேடே! என்ன ஆச்சு?"

"சாப்பிட்டு மூணு நாள்" வந்தவனின் பேச்சு மூச்சாய் ஒடுங்கிப் போனது.

"மை காட்!" ஸ்வேதா, நண்பனைத் தாங்கிக் கொண்டு போய் ஸோபாவில் கிடத்தினான்.

"வஸு! ஏதேனும் ட்ரிங்க் கொண்டு வா!"

"லைமா? நல்லது. லேசாய் உப்புப் போடு. அதான் தென்பு தரும். வ்யாஸ் குடி—மெல்ல மெல்ல. மெதுவா—ஸிப், பரவாயில்லே."

வ்யாஸின் கண்களில் ஒளி ஊறுவது தெரிந்தது. எழுந்திருக்க முயன்றான்.

"அவசரமேயில்லை. படுத்துக்கோ. வஸு, மோருஞ் சாதம், ரெண்டு தம்ளர் கணக்கில் மையாக் கரைச்சு, திப்பி யைப் பிழிஞ்சு எரிஞ்சுட்டுக் கொண்டு வாயேன். பட்டினி கிடந்த உடம்புக்குக் கரைச்ச மோருஞ்சாதத்துக்கு மிஞ்சின ஔஷதமில்லை, அமிர்தமுமில்லை."

அதைக் குடித்த சற்று நேரத்துக்கெல்லாம் விருந்தாளி யின் விழிகள் செருகின. அவனுடைய அயர்ந்த தூக்கத்தை இருவரும் பார்த்துக் கொண்டு நின்றனர்.

"வஸு, வ்யாஸ் எப்படிப்பட்டவன் தெரியுமா? சொக்கரப்பொன், ஏன் இப்படி ஆனான், தெரியல்லியே! சரி நாளைக்குப் பார்த்துக்கலாம். வா, சாப்பிடப் போவோம்."

வஸுதாவுக்குத் தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டாள். தூக்க மாத்திரை போட்டுக்க வேண்டியதுதான். ஆனால் இப்பவே மணி ஒண்ணுக்கு மேலாச்சு. இனிமேல் போட்டு, எப்போ மாத்திரை பிடிச்சு எப்போ தூக்கம் வரது? அப்படியே வந்தாலும் காலையில் அடிச்சுப் போட்ட மாதிரி ஆயிடும்.

ஏதோ உந்தலில் சட்டென எழுந்து ஹாலுக்கு வந்தாள். விருந்தாளி எப்படியிருக்கான்?

ஸோபாவில் மல்லாந்து கட்டையாய்க் கிடந்தான். பக்கத்தில் போய்ப் பார்த்தாள். பகீரென்றது.

"ஸ்வேதா!" இல்லை—அடக்கிக் கொண்டாள். இன்னும் கிட்ட வந்து நோக்கினாள். நைட் பல்பின் நீலத்தில் மார்பின் லேசான மிதப்பல்—மூச்சுத் தானே? தூக்கத்தில் ஏதோ குழந்தைத்தனம்—அபலை நிலை; எடுத்து அடைத்துக் கொள்ளணும் போல்—கூடவே அவனைப் பார்க்க அச்சமா யிருந்தது. இது விலங்குத் தூக்கம்; இந்த அயர்வுக்கடியில் ஒரு விழிப்பு காவல் காப்பதுபோல்......

அரைக் கண்மீது ரப்பைகள் சுருண்டன.

ஏதோ முனகிக் கொண்டு புரண்டான். அதற்கு மேல் அவளுக்கு பயமாயிருந்தது. மீண்டாள்.

பக்கத்தில் உறங்கும் ஸ்வேதாவைச் சிந்தித்தாள். ஸ்வேதா பக்கத்தில் படுத்திருப்பதே ஒரு கேலிக்கூத்து! ரியலி ஹேண்ட்ஸம் மேன். ஆம், வந்திருக்கும் விருந்தாளியை விட ஸ்வேதாவும் தூக்க மாத்திரைக்காரன்தான். ஒருவருக்

கொருவர் தெரியாதென்று ஒருவரையொருவர் ஏமாற்றிக் கொள்வதாக நினைத்துக் கொண்டிருக்கும் நெடுநாளைய பழக்கம்.

அவளுடைய முழங்கை வளைவில் நெற்றிப் பொட்டு கொதித்தது. தூக்கம் போல் ஏமாற்றும் கண் எரிச்சலின் மயக்கத்தில் இரண்டு பிஞ்சுக் கைகள் கழுத்தைக் கட்டிக் கொண்டு காதோரம் "ஆன்ட்டி!" என்று கேட்டது. "பாப்பூ!" எதிர்க்குரல் வாய்விட்டே வந்து விட்டது. இது நினைப்பின் ஏமாற்று—உடனேயே தெரிந்துவிட்டது. பாலைவனத்தில் தவிப்பவனுக்கு நீரோடையும் சோலையும் கானல் தெரியு மாமே!

எதிர் வீட்டார் குடித்தனம் பெயர்ந்த ஒரு வாரமாய் இது மாதிரி பிரமை சற்று அடிக்கடி நேர்ந்து கொண்டிருக் கிறது. கவனம் மாற, பதில் குடித்தனம் இன்னும் வரவில்லை. கவனம் மாறுமோ?

வந்து நான்கு மாதங்கள்தான் இருந்தார்கள். கணவன், மனைவி இருவருமே உத்யோகம். அவளுக்கு வங்கியில். சொந்த வீடு கட்டியாறது, வங்கிக் கடனில். "வீடு தயா ரானதும் போயிடுவோம்." தயாராகி விட்டது. போய் விட்டார்கள், பழுக்கக் காய்ச்சிய குழந்தை நினைவை அவள் நெஞ்சில் உழுதுவிட்டு. ஒரொரு சமயம் இந்த புதுத்தனிமை பைத்தியமே பிடிச்சுடும் போலிருக்கு.

"வீட்டுக்கு வாங்கோ மாமி!" விலாசம் கொடுத்து, கிருஹப்ரவேசத்துக்கு அழைத்து விட்டுத்தான் போனார்கள். ஆனால் அவள் போகல்லே. பயம், பாப்பூவின் நினைப்புக்கு. இப்பவே தப்பிக்க வழியில்லை. போனால் அப்புறம் அடிமை தான். பாப்பூ போதைக்கு, இப்பவே நெஞ்சில் உதிரம் கொட்றது. போய் வளர்த்துக் கொண்டால் ஆறாத புண், புரை கண்டுவிடும். அவளுக்கு மறக்க முடியவில்லை.

ஆனால் அவர்கள் மறந்து விடுவார்கள். குழந்தையும் மறந்து விடுவாள். நாம் பரஸ்பரம் உபயோகப்படுத்தப்படத்தானே இருக்கோம்!

இருந்தாலும் பாப்பூ மாதிரி பாப்பா பார்ப்பது அரிது தான். அது குழந்தையாகப் படவில்லை. ஏதோ அவதாரம். வயதுக்கு மீறின அறிவு. அதே சமயம் வெம்பல் இல்லை. சொப்புப் போன்ற உருவம். ரெண்டு வயசுக்கு எப்படிக் கொழகொழன்னு இருக்கணும்! சிறு கூடாய், தந்த விக்ரஹத் தில் காணும் சிற்ப நுணுக்கங்கள் போன்ற முக, அங்க லக்ஷணங்கள். கட்டை மயிர் செழிப்பாய் வழிந்து, ஃப்ரேம் போட்டாற் போன்ற முகம்.

குடிவந்த அடுத்தநாளே, காலையில் அப்பாவும் பெண்ணும்—அவர் கைவிரலை அவள் பிடித்துக்கொண்டு அவள் வீட்டைத் தாண்டி எங்கோ போய்க் கொண்டிருக்கை யில் காற்று வாக்கில் அவர்கள் பேச்சு மிதந்து வந்தது.

"இது என்ன செடி, டாடி?"

"ஓ, இது இங்கு இருக்கா? இதன் பேர் தொட்டால் சிணுங்கி. பாப்பூ, இப்ப பார் ஒரு வேடிக்கை. இதைத் தொடு. உடனே மூஞ்சியைத் தொங்கிக்கும்."

"கோவிச்சுண்டா?"

"சரி, அப்பிடித்தான் வெச்சுக்கோயேன்! அம்மாவோ நானோ கோவிச்சுண்டா, நீ வெச்சுக்கறையே, அதுமாதிரி! தொட்டுத்தான் பாரேன்!"

கையைத் தூக்கிவிட்ட குழந்தை சற்று யோசித்துவிட்டு "வேண்டாம்பா, அதை டிஸ்டப் பண்ண வேண்டாம், அது தூங்கட்டும்."

அவர்கள் போய்விட்டார்கள், வஸு அசந்து போனாள்.

காலை ஒன்பது மணிவாக்கில் அப்பா, அம்மா, பாப்பா மூவரும் பைக்கில் ஏறிக்கொண்டு போவது ஜன்னல் வழி தெரிகிறது. எங்கே போகிறார்கள்? அவரவர் வேலை பார்க்கிற இடத்துக்குத்தான். குழந்தை? அதுக்குள்ளேயும் பள்ளிக்கூடமா? இப்ப என்னதான் அக்ரமம் நடக்கல்லே? ரெண்டுபேரும் வேலைக்குப் போறவாளுக்கு செளகர்யமா க்ரச்! இல்லை 'க்ரீச்சா?'—குழந்தைகளை ஒரு இடத்தில் அடைக்கப்போட்டுப் பார்த்துக் கொள்ளும் இடம் இருக்கே! காசைக் கொடுத்தால் இந்த நாள் என்னதான் கிடைக்கல்லே! ஆமா, நான் கூட ஒண்ணு அப்படி ஆரம்பிக்கலாமே! வஸுக்குத் திடீரென்று தோன்றிற்று. எனக்கு காசு வேண்டாம். கச்சிதமாய் ரெண்டு அல்லது மூணு குழந்தைகள், அதற்கு மேல் இந்த வீட்டில் இட வசதி கிடையாது.

—அது கூடாது. ஒரு குழந்தைதான் வேணும். என் பாசம் பத்து குழந்தைகளுக்குப் பங்காக முடியாது, கூடாது. ஒரு குழந்தை, அதன் மேல் குடமாக் கொட்டணும், அம்பாளுக்குப் பால் அபிஷேகம் பண்ற மாதிரி. அதுவும் பெண் குழந்தையாத்தான் இருக்கணும். அம்பாளே குழந்தையா, பாப்பூ மாதிரி. எனக்கும் அம்பாள் கிடைக்க மாட்டாளா? அவளுடைய தூய்மையில் எப்பவுமே அவள் கண்டெடுத்த குழந்தையாய்த்தான் இருக்க முடியும். 'பொன்னிமயச் சாரலிலே பூத்தமலர் மேடையிலே மன்னு சங்கினுள்ளே' கண்டெடுத்த குழந்தையாக ஒரு ஸ்தல புராணம் சொல்கிறது. அவளை ஒரு ரிஷி எடுத்து வளர்த்தாராம். எனக்குத்தான் கொடுத்து வெக்கல்லே. கிடைக்கவாவது மாட்டாளா? அம்மா தாங்க முடியல்லியே!

தலையணையில் முகம் புதைந்தது. அடக்க முயன்ற விக்கல்களும் தேம்பல்களும் அவளை உலுக்கின.

என் நிலைமைக்கு யாரும் ஒண்ணும் பண்ண முடியாது.

முகத்தில் அடித்த வெயில்தான் அவளை எழுப்பிற்று. “அட, இவ்வளவு நாழி ஆயிடுத்தா என்ன? கீழே இறங்கிப் போனாள். ஃபில்டரிலே இறங்கி டிகாக்ஷனும் பாலும் பாதிக்குமேல் காலியாகியிருந்தன. தன் காபியைக் கலந்து கொண்டு, தம்ளருடன் ஹாலுக்கு வந்த போது ஸ்வேதா வும் விருந்தாளியும் பேசிக் கொண்டிருந்தனர். அவளைக் கண்டதும் ஸ்வேதா, “வ்யாஸ், மீட் மை ஒய்ஃப் வஸுதா.”

வ்யாஸ் எழுந்து நின்று கைகூப்பினான். முகக்ஷவரமும் ஸ்னானமும் உடைமாற்றமும் (ஸ்வேதாவுடையது) இத்தனை மாற்றம் தருமா என்ன? ஆனால் இந்த ஆளிடம் ஏதோ சரியில்லை. வரைந்த உருவக் கோடை எச்சிலைத் தொட்டு அழித்த மாதிரி, எப்படியோ கசங்கியிருந்தான். ஒருவிதமான அநிச்சயம், எந்த சாக்கில் கரைந்து காணாமலே போய் விடுவானோ? சோகம் அவனை மேகம் சூழ்ந்திருந்தது.

“வஸு, வ்யாஸும் நானும் காலேஜிலிருந்து நண்பர்கள். வ்யாஸ் இவனுக்கு இட்ட பேர் இல்லை.”—ஸ்வேதா சிரித்தான். “எங்கள் பால்யத்தில் நாராயண் ராவ் வ்யாஸ்னு ஒரு சங்கீத விதூஷக்; படா மவுஸ். அவனுடைய கிராம ஃபோன் ரிக்கார்டுகள் அந்த நாளில் ஹாட் கேக்ஸ். அருமை யான குரல். கொஞ்சம் பெண் கலந்திருக்கும். பிர்க்காவைக் கொட்டுவான் பாரு.” ஸ்வேதா சிலிர்த்துக் கொண்டான். “அடேயப்பா! அத்தனையும் மத்தாப்பு—விதவிதமாய்க் கலர் பூ, நக்ஷத்திரங்கள். இவன் தன் ஸ்வயப் பேரை ‘வ்யாஸ்’னு மாத்திண்டான்னா வ்யாஸ் சங்கீதத்தில் இவனுக்கு எவ்வளவு மோகம் இருக்கணும் பார்.”

புன்னகை புரிந்தாள்; “எனக்கு சங்கீதத்தில் உங்க ரெண்டு பேர் மாதிரி அத்தனை ஈடுபாடு கிடையாது. உங்களுக்கே தெரிஞ்ச விஷயம். கலியாணப் பாட்டோடு சரி. நீங்கள் பெண் பார்க்க வந்தபோது என் பாட்டில்

உங்கள் ஏமாற்றம் உங்கள் முகத்திலேயே தெரிஞ்சு, இந்த வரன் கூடாமல் போயிடுமோன்னு என் வீட்டில் பயந்து போனா, பெருமாள் புண்ணியம், பெரியவாள் பேச்சைத் தட்டாமல் நம் கல்யாணம் நடந்துடுத்து. அதுக்கே தனியா கோவில்லே அங்க ப்ரதஷிணம் பண்ணினேன்."

"வஸூ, வ்யாஸே ப்ரமாதமாய்ப் பாடுவான். குரல் கல்கண்டு. வ்யாஸ், நீ பாடிக் காண்பிக்கணும். எப்போ பாடினாலும் நாங்கள் ரெடி. எப்படியும் நான் ரெடி. கேட்டு எத்தனை நாளாச்சு! இப்பவே ப்ளீஸ், ப்ளீஸ்."

"பாட்டும் சிரிப்பும் என்னிடமிருந்து ஓடிப் போயாச்சு."

ஸ்வேதாவின் உற்சாகம் உள்ளுக்கு வாங்கிற்று. "ஐ ஆம் ஸாரி, வ்யாஸ்."

"என் பேரே எனக்கு இப்போ விஷமாயிருக்கு. நான் கருகிப் போயிட்டேன்."

"ஆமாம் வ்யாஸ், உனக்கு என்னமோ நடந்திருக்கு, என்னது அது?"

"ஜோதி."

இருவரும் காத்திருந்தனர். ஆனால் அதற்கு மேல் வரவில்லை.

ஸ்வேதா, சன்னமாய் "ஜோதி?"

விருந்தாளியின் விழிகள் நிறைந்தன.

"இறந்து போனாளா?"

"இல்லை, விட்டுட்டுப் போயிட்டா."

வஸூ, ஸ்வேதா இருவரும் வாயடைத்துப் போயினர். என்ன பதில் சொல்ல முடியும்? எதைச் சொன்னாலும் அனுதாபம் ஆகாது சரியாயிருக்காது. அவள் செத்துப்

போயிருந்தாலே தேவலை. ஓடிப் போனவளானால் என்றுமே ஆறாத புண்தான். அதுவும் சமீபமாயிருந்தால் பச்சைப்புண்தான்.

ஆனால் ஜோதி யார்? காதலியா? கூட வாழ்ந்தவளா? இந்த உறவுப் பாகுபாடுகள், அவற்றின் நெஞ்சுறுத்தல்கள், ஸ்வேதாவுக்குத் தெரிந்தவரை அவன் நண்பனுக்குக் கிடையாது. அவன் தனிக்காட்டு ராஜா. பெற்றோர், பெரியோர், உற்றோர், சுற்றம் என்று அவனுக்கு அந்த நாளிலேயே கிடையாது. ஏகப்பட்ட சொத்துக்காரன். ஆனால் எது எப்படியிருந்தாலும், தன் உறவுகளில் நாணயமா யிருப்பான் என்று ஸ்வேதாவின் அசைக்க முடியாத நம்பிக்கை. ஸ்வேதாவுக்கு சங்கீதத்தில் இருந்த லயிப்பே அந்தக் கலை, ஞானத்துடன் சேர்ந்த ஆன்மீகமே, சுயக்கட்டுப் பாட்டையும் தற்காப்பையும் தந்தன என்று ஸ்வேதாவுக்கு நிச்சயம்.

“வ்யாஸ், நான் இந்த சமயத்தில், ‘ஸாரி’ சொல்வதைப் போல அபத்தம் வேறில்லை. நாம் ஒருவரையொருவர் பார்த்துப் பதினஞ்சு வருடங்களுக்கு மேல் ஆறது. கடிதத் தொடர்பும் இல்லை. விவரங்களைச் சொல்லி நீதான் எங்களைக் காலக்ரமத்துக்குக் கொண்டு வரணும். ஆனால் அதற்கு அவசரமேயில்லை. நல்லா ரெஸ்ட் எடுத்துக்கோ. எனக்கு நேரமாறது, கிளம்பறேன். ராத்ரி நேரமாத்தான் வருவேன். எனக்காகக் காத்திருக்காதே. வஸு உன்னை கவனித்துக் கொள்வாள்.”

அவனைத் தோளைத் தட்டிவிட்டு வஸுவுக்குத் தலை யசைத்துவிட்டு ஸ்வேதா கிளம்பிவிட்டான். அவன் போன பின்னர், இருவரும் ஒரு நேரம் மௌனமாயிருந்தனர். அவன் பெருமூச்சுடன் எழுந்தான்.

“பிரெக்ஃபாஸ்ட் இன்னும் பதினஞ்சு நிமிஷத்தில் ரெடி ஆயிடும். பூரிபாஜி. நீங்கள் கீழே வரேளா? நான் மேலே கொண்டு வரவா?”

“சிரமப்படாதீர்கள். காலை உணவு பழக்கமில்லே. நேரே மதியம் சாப்பாடு போதும்.”

‘விர்ர்’ரென்று மாடிக்குப் போய்விட்டான்.

அவள் உட்கார்ந்து கொண்டேயிருந்தாள். அப்படி யானால் எதற்குமே அவசரமில்லை.

இந்த ஆளின் நிலைமையைச் சிந்தித்து ஆக வேண்டியது எனக்கென்ன? அது அவா ரெண்டு பேர் பாடு. அவனைப் பற்றி நினைக்கக்கூட எனக்கு இஷ்டமில்லை. அவனை விட இஷ்டமான சப்ஜெக்ட் எனக்கு இருக்கு.

பாப்பூ சீக்கிரமே ஸ்னேகமாயிட்டாள்.

எதிர் வீட்டுக்குக் குடிவந்த ஒரு வாரத்துள் ஒரு மாலை, அவள் அம்மை அவளுக்குச் சாதம் ஊட்டிக் கொண் டிருக்கையில் வஸுவே அவர்களிடம் சென்றாள்.

“குழந்தையை ரொம்ப அழகாப் பெத்திருக்கேள் மாமி. இன்று வியாழன். சுத்திப் போடுங்கோ. என் கண்ணே பட்டுடப் போறது. அத்தோடு படுசுட்டியாயிருக்கும் போல இருக்கு. பேச்சைக் கவனிச்சேன்.”

“நீங்கள்தான் மெச்சிக்கணும். இந்த சோத்தைத் தின்ன என்ன லூட்டி அடிக்கறது பாருங்கோ. ஒவ்வொரு வேளை யும் யுத்தம்தான்.”

“நான் ஊட்டட்டுமா? பாப்பா எங்காத்துக்கு வரயா?”

“உங்காத்துலே பாப்பா இருக்கா?”

“ஏன் நான் இருக்கேனே, உனக்கு மனுஷியாப் படல்லியா?”

"இல்லே ஆன்ட்டீ, அந்தாத்துலே ஜான், ஜோ, லில்லி இருக்கா. நாய்க்குட்டி வேறே இருக்கு?"

"எந்த ஆத்துலே?"

"அதோ அந்தாத்துலே."

சாதாரணமாகவே குழந்தைகள் சுட்டிக் காட்டும் விதத்தில், அது அடுத்த வீடாயிருக்கலாம், அராபிக்கடல் தாண்டியுமிருக்கலாம்.

அவள் அம்மை குறுக்கிட்டு "நாங்கள் ஆபீசுக்குப் போற வழியில் ஒரு தெரிஞ்சவாகிட்ட இவளை விட்டுட்டுப் போறோம்."

"மாமி நான் பாத்துக்கறேனே, ஆசையாயிருக்கு. தனியா யிருக்கேன். பொழுதே போகல்லே (அவள் குரல் லேசா நடுங்கிற்றோ?)." ஆசையின் திணறலில் முற்றுப் புள்ளி யில்லாமல் பேசினாள். "பாப்பா, உனக்கு என்ன வேணு மானாலும் தரேன். சாக்லேட், பிஸ்கட், ஆப்பிள், பொம்மை கீச்கீச்சுன்னு கத்தும். கண் சிமிட்டும்."

"வடுமாங்காயிருக்கா? இவா ஊறுகாய் வாங்கி வெச்சுண்டு தின்கறா. எனக்கு மாட்டாளாம். நான் குழந்தை யாம்."

வஸுவுக்குப் 'பக்'கெனச் சிரிப்பு வந்துவிட்டது. அவள் தாயிடமிருந்து குழந்தையைப் பிடுங்கி இறுக அணைத்துக் கொண்டாள்.

வடுமாங்காய் கடிச்ச மாதிரியே 'சுருக் சுருக்'. பேச்சில் மழலையே இல்லை.

கன்னத்தோடு கன்னம் அழுந்துகையில், அம்மா என்ன சுகம்டீ!

ரொம்ப சுத்தமான குழந்தை, சுபாவத்திலேயே. காரணம்

இல்லாத ஈரம் அவளுக்கு ஆகவேயில்லை. உடனே கையைத் துடைக்காவிடில் ரகளைதான். முதல் சிணுங்கலிலேயே முகம் ஜ்வாலைத்திட்டு. மற்ற சமயங்களில் செக்கச் செவேல் அல்லது பளிங்கு?

இந்த வயசில் குழந்தை எப்படிக் கொழகொழன்னு இருக்கணும், ஏதோ பொம்மை வரைந்தாற்போல் நுட்பமாய், மெல்லியதாய் பெரிய வரையலின் சின்ன ஸ்கேல் போல், அங்கங்களும் அவயவங்களும் தந்தச் செதுக்கலில், பெரிய பொம்பளை மாதிரி.

இவள் நிறம்கூடத் தனி ரகம், ஓவியம் அசையறதா வெச்சுக்குவோம். ஒவ்வொரு அசைவுக்கும் அங்கங்கே ஊட்டியிருக்கும் வண்ண நயங்கள் "டால்" வீசும் போல், அவளிடம் அவள் அறியாமலே ஏதோ 'ட்ரிக்' பேசிற்று. இவளால் நான் கவியாகி விடுவேன் போலிருக்கு. வஸு சிரித்தும் கொண்டாள். சில சமயங்களில் தன்னோடு பேசிக் கொண்டே விளையாடுவதைப் பார்க்க அலுக்கவேயில்லை.

ஆனால் சாப்பிட ரொம்பத்தான் படுத்தினாள். 'காக்கா' காட்டி, 'குருவி' காட்டி அவளை மசிக்க முடியவில்லை. அடம் பிடித்து முன் பிடிக்குப் பின் பிடி துணையாக அவசரமாக ஊட்ட முயன்றால் உடனே குமட்டிற்று.

அவளே சொல்கிறாள்: "ஜான் நல்லா சாப்பிடுவான். ஊட்டாமலே சாப்பிடுவான். ஜோ நல்லா சாப்பிடுவான். லில்லி நன்னா சாப்பிடும். சாப்பிட அலையும். அவள் மம்மி E டபுள் G கொடுப்பாள்."

"உனக்கு?"

"ஐஸே எனக்குப் பிடிக்காது. உவ்வே."

ஆனால் ஊறுகாய், வத்தல்குழம்பு, ரஸவண்டல், கத்திரிக்காய் வதக்கலில், அடி தங்கின மசாலாப் பொடி—

லவுட்டினாள். இவற்றின் துணையில்தான் அவளுக்கு அவள் அம்மை விதித்திருக்கும் பருப்புஞ்சாதம், தெளிவு ரஸம் சாதம், மோருஞ்சாதத்தை உள்ளே தள்ள முடிந்தது. அவள் அம்மைக்குத் தெரிந்தால் என்ன ஆகுமோ? 'சொல் லாதே'ன்னு அவளாவே சொல்லி விடுவாளா? அதுவும் தெரியாது. ஆனால் திருட்டுத்தனத்துக்கு உடந்தையா யிருக்கேன். மாமிக்குச் சொல்லணும், சத்தே விட்டுப் பிடிக்கணும்னு. கல், மண், புளி, காரம் எல்லாம் சேர்ந்துதான் குழந்தை பெரிசாகணும்.

முழுக்க முழுக்கப் பால், மோர், தெளிவு ரஸம், ஃபாரெக்ஸ் மட்டும்னா இவள் மாதிரி வளர்த்தியில்லாமல் தேஞ்சுண்டே போக வேண்டியதுதான். எல்லாம் ஒரு குழந்தை, ஒரே குழந்தை கல்ச்சரின் விளைவு.

"பாப்பா."

"இல்லை, நான் பாப்பூ."

"சரி பாப்பூ, உன் பேர் என்ன? பாப்பூ தானா?"

"என் பேர் சிவஜனனி."

"உம்—புது மாதிரியாயிருக்கே!"

"என் தாத்தா 'ஜனனி'ன்னு கதை எழுதியிருக்கா. நான் சிவராத்திரிலே பொறந்தேன். ரெண்டையும் சேர்த்து சிவ ஜனனின்னு டாடி பேர் வெச்சிருக்கா."

"ஓ, அப்படிப் போறதா கதை!"

"இன்னும் பத்து நாளுலே அப்பாவும் நானும் மெட்றாஸ் போப் போறோமே!"

"தாத்தா மெட்றாஸிலே இருக்காளா?"

தலையைப் பலமா ஆட்டினாள். "தாத்தா பாட்டி

ஸிரிகாந்த், ஷேகர் சித்தப்பா வேறே இருக்கா. அப்புறம் சின்னி அக்கா—ஸிரிகாந்த் யமஹா பைக் வெச்சிருக்கான். அப்பா பஜாஜ் ஸ்கூட்டர்!"

பாப்பாவை இழுத்து அணைத்துக் கொண்டாள். 'வண்டி எல்லாம் கோர்வையா சொல்லத் தெரியறது. குழந்தையேயில்லை, பாட்டிதான்!'

பாப்பூ இருந்தாற் போல் இருந்து, அவள் கன்னத்தில் தன் முகத்தைப் பதித்த மூர்க்கத்தில் பாப்பூ மூக்கு சப்பை ஆயிற்று.

"இது கட்டி முத்தா. மெட்றாஸ் போனதும் தாத்தா வுக்கும் ஸிரிகாந்துக்கும் கொடுப்பேன்."

வஸு மூர்ச்சையானாள்.

குழம்பைக் கிளறிக் கொண்டிருந்த கை சட்டென தடைப்பட்டு நின்றது. மேலிருந்து அடிமேல் அடிவைத்துக் கள்ளன் போல் வரும் ஓசை. "ஹம்"மிங். அபாரமான குரல். கையைப் பற்றி இழுப்பது போன்று அடுப்பை மறந்து, மாடிப்படியண்டை வந்து நின்றாள்.

'ஹம்'மிங். நகரும் மேகம் சிதறிக்கிடக்கும் சின்ன மேகச் சிதர்களை விழுங்குவது போல அது அவளை விழுங்கியது. ஓடிப் போனவளைப் பாடுகிறான். ஜோதி. சட்டென ஒரு ஞாபகம் வந்தது. கல்யாணத்துக்குப் பாட்டுக் கற்றுக் கொள்ளும் அந்த நாளில் பாட்டு வாத்தியார் ஒரு கீர்த்தனை சொல்லிக் கொடுத்தார். பாட்டு எப்பவோ அடியோடு மறந்து போயாச்சு. ஆனால் ராகத்தின் பெயர் மட்டும் நினைவில் சிக்கிக் கொண்டது. ஜோதிஸ்வரூபிணி. அவள் பெயர் அதுவாயிருக்குமா? தன் பெயரை மாற்றிக்கொண் டாற் போல அவள் பேரையும் மாற்றினானா, இல்லை இது என் குதர்க்க புத்தியா? அசலாக அவளுக்கும் சங்கீதத்துக்கும்

எவ்வளவு தூரமோ? இல்லை அவள் ஜோதிஸ்வரூபிணியே தானோ? ராகதேவதை. அவள் பாராத பெண்ணுக்கு ராகத்தின் பெயரைச் சூட்டிப் பார்க்கையில் வஸுவுக்கு மெய் சிலிர்த்தது. லேசாகப் பயங்கூடக் கண்டது. எனக்குப் புரியாத ப்ரதேசத்தில் காலை வைக்கிறேன். அபசாரம் நடக்கிறதோ?

கீழேயிருந்தபடியே அவனைச் சாப்பிட அழைத்து அவன் இறங்கி வருகையில் காலையினும் அவன் திடீரென்று மூதாகிவிட்டாற் போல் தோன்றியது. ப்ரமைதான். முகம் அப்படிச் சுண்டிப் போயிருந்தது.

லைலா மஜ்னு, ரோமியோ ஜூலியட், துஷ்யந்தன் சகுந்தலை—இந்தக் காதல் ஜோடிகள் அமர காவியங்களுக்குக் காரணமாயிருக்கலாம். ஆனால் யதார்த்தமே அற்ற விட்டில் பூச்சிகள். அவர்கள் மேல் அவளுக்குச் சினம் மூண்டது. இவனும் தன்னை ஒரு தேவதாஸாகப் பாவித்துக் கொண்டு, தன் சோகத்தை அதையே ஒரு ரஹஸ்ய சுகமாய் அனுபவிக்கிறானோ? உலகம் எப்படியெல்லாம் பாழாய்ப் போய்க் கொண்டிருக்கிறது! எரிச்சலாய் வந்தது. அதுபற்றி அவனிடம் பேச எடுத்த வாயை அடக்கிக் கொண்டாள். அவளுள் ஏதோ எச்சரிக்கை செய்தது.

அவன் அவளுடன் பேசவில்லை. சரியாய்ச் சாப்பிடக் கூட இல்லை. ஏதோ கொறித்துவிட்டு மேலே போய் விட்டான். இதுவரை ஜாக்கிரதையாய் நினைவில் ஒதுக்கி வைத்திருந்த ஜோதி மேல் அவள் கவனம் பின்ன ஆரம்பித்தது.

"விட்டுட்டுப் போயிட்டா" என்றால் என்ன அர்த்தம்? சகஜமாய் ஆண்களுடன் கொட்டமடித்துக் கொண்டு மேலே இடிச்சுப் பேசி சிரிச்சுண்டு, ஆனால் உண்மையில் கல்மிஷமில்லாமல் இந்த நாளில் இந்த மாதிரி ரகத்தில் அவளும் ஒருத்தியா? நான் கொஞ்சம் கட்டுப்பாடில் வளர்ந்தவள்.

இவர்களைப் புரிஞ்சுக்க என்னால் முடியவில்லை. வேண்ட வும் வேண்டாம்.

பேரழகியோ? அவள் கூந்தல், நெற்றிப் புருவங்கள், கண்கள், கன்னங்கள், மோவாய், கழுத்து, தோள்கள் இன்னும் கீழ் என்று உருவத்தை கற்பனையில் வெய்வது ஒரு அர்த்தமில்லாத ஆனால் ஸ்வாரஸ்யமான வெட்டி வேலை.

அழகுக்கு இலக்கணம் வகுப்பது சரியல்ல. அவனவ னுக்கு எவள் ரம்பையாகப் படுகிறாளோ அழகு அத்தோடு சரி. அதற்குமேல் அலசுவதில் அர்த்தமில்லை. ஸ்வேதா அடிக்கடி சொல்வான். பத்து நாட்களுக்கு முன்னால்கூட.

"வஸூ, ஆரோக்யம்தான் அழகு. தினம் ஆண், பெண் என்று எத்தனை வியாதிகளைச் சந்திக்கிறேன், தொட்டுப் பார்க்கிறேன். ஒவ்வொரு சோதனைக்குப் பின் வாஷ்பேஸி னில் கை கழுவுகிறேன். என்ன அழகாயிருந்தால் என்ன, எல்லாம் கரையான் புற்றுக்கள் என்கிற எண்ணம் பற்றிக் கொண்டபின் அதை அலம்பவே முடியல்லியே. ஆரோக்யம் தான் அழகு. இதில் எனக்கு உன்னால் எந்த தொந்தரவும் இல்லை. அதுவே பெரும் அதிர்ஷ்டம். உன்னைப் பெண் பார்க்க வந்த போது முதலில் எனக்கு என்ன தோன்றிற்று தெரியுமா? என்ன 'ஹெல்த்தி'. அணைக்க கைநிறைஞ்சு இருக்கா. நாட்டுக்கட்டை."

அதை நினைக்கையில் வஸூவுக்கு அரும்பிய புன்னகை அடுத்த நொடியே மாறி முகம் உறைந்து போயிற்று. என்ன ப்ரயோஜனம்!

தோசைக்கல்லில் சப்பாத்தி புடைத்துக்கொண்டு விம்முவதைக் கண்டு, வஸூவுக்கு ஏதோ ஞாபகம் வர, ரத்தக் குழுமலில் கன்னங்கள் குறுகுறுத்தன. இந்தத் தடவை

மாவு நல்ல மாவா, இல்லை பிசைந்த வாகா? ரெண்டு சப்பாத்தி, கொஞ்சம் மோருஞ்சாதம். இதுக்கு மிஞ்சின ராச்சாப்பாடு கிடையாது. ராஜ சாப்பாடும் கிடையாது.

இருகைகளிலும் தட்டுக்களை ஏந்திக்கொண்டு, மாடியேறி அறைக் கதவை முழங்காலால் இடித்துத் தள்ளித் திறந்து உள்ளே நுழைகையில் ஸ்வேதா நின்றபடி தன் ஸ்னேகிதனிடம் பேசிக் கொண்டிருந்தான்.

"ஸோ தட் வாஸ் தட். ஒவ்வொருத்தனுக்கும் சுமக்க அவன் சிலுவை இருக்கிறது—வஸ" வாவா, நீயும் இருக்க வேண்டியதுதான். வ்யாஸிடம் நம்மைப் பற்றி சொல்லிக் கொண்டிருந்தேன்."

வஸ"வுக்கு வெதுப்பில் தாடைகள் இறுகின. வந்தவனிடம் என்ன நம்மைப் பற்றி? அவள் கோபத்தை உணர்ந்து ஸ்வேதா "சரி, என்னைப் பற்றி சொல்லிக் கொண்டிருக்கிறேன்." அவளுக்கு கோபம் அதிகரித்தது.

"ஏன், நம் அவமானத்தை இவனிடம் அலம்பியாகணுமா?" வாய்விட்டே வந்து விட்டது.

"வஸ", எங்கள் நட்பு உனக்குத் தெரியாது. தொடர்பில்லாததால் நட்பு இல்லை என்ற அர்த்தமில்லை. தன் கதையை இப்பத்தான் சொல்லி முடித்தான். பதிலுக்கு அவனுக்குச் சமாதானமாகவாவது என்னைப் பற்றிச் சொல்லும்படி ஆகிவிட்டது. வாழ்க்கையே உண்மையில் எதற்காக இருக்கிறது? கண்ணீர் தனித்தனி ஆனாலும் ஒருத்தருக்கொருத்தர் துடைத்துக் கொள்ளத்தானே இருக்கிறோம். ஸோ, வ்யாஸ் எனக்கு நேர்ந்த விபத்து ரொம்ப அபத்தம். ஏன் வஸ" சொன்ன மாதிரி அவமானம் கூட. சுவரில் பெருமாள் படத்தை மாட்ட ஸ்டூல் மேல் ஏறி, இசைகேடாய் பாலன்ஸ் பிசகி, ஸ்டூல் பிரண்டு, நானும் விழுந்தேன். கீழே கண்டான் முண்டான் பெட்டியில் வாயைப் பிளந்தபடி குத்திட்டு நின்ற கத்திரிக்கோல் உள்ளே கழுவேறிவிட்டது. என்னவோ

*எக்கச்சக்கமாகி சிகிச்சையில் கோளாறோ, அஜாக்ரதையோ செப்டிக் ஆகி கணிசமாய் எடுத்துவிடும்படி ஆகிவிட்டது. இத்தனைக்கும் நான் டாக்டர், கைநிறைய—இல்லை கை வழியச் சம்பாதிக்கறேன். என்ன பிரயோஜனம். தாது இருந்தும் நபும்சகன். வேடிக்கை? எப்படி?"*

*ஸ்வேதா சிரித்தான். ஆனால் முயன்ற சிரிப்பு, அதன் உருட்டுகள் ஏறும் தாறுமாய், செயற்கையாய், கட்டியும் முட்டியுமாய் உதிர்ந்தன. ஸ்வேதாவுக்கு வேர்த்துக் கொட்டி யிருந்தது.*

*"வ்யாஸ், வஸுவுக்கு குழந்தைகள்னா ரொம்பப் பிடிக்கும். எட்டு சோதரி சோதரர்களிடையே பிறந்தவள். ஸர்வரக்ஷகத்தின் சிரிப்புணர்வு வினோதமாயில்லை? ஆச்சு, இது நடந்து பத்து வருஷமாறது. வஸுவுக்கு அந்த விஷயத்தில் ரொம்பப் பெருந்தன்மை. வ்யாஸ், நம் பெண்டிர், கோவிலில் வைத்துக் கும்பிட வேண்டியவர்கள். அதனால்தான் அவர்களை, அம்பாள், ஜகன்மாதாவின் ஸ்வரூபம் என்கிறோம். வஸுவின் ஆதரவும் ஆதாரமும் இல்லாவிட்டால் எப்பவோ அதோகதியாகியிருப்பேன். என் சிலுவையையும் சேர்த்து அவள் தாங்குகிறாள்."*

*"சரி, தத்து ஒண்ணு ரெண்டு எடுத்துக்கலாமா? எண்ணம் தோணாமல் இல்லை. உறவிலும் கிடைக்கும், அனாதைக் குழந்தை இல்லங்களும் இருக்கின்றன. ஆனால் இருக்கிற வலி போதாமல், திருகுவலியை விலைக்கு வாங்கிண்ட மாதிரி ஆனால்? மனம் ஏனோ கூசறது. எதிலுமே ரிஸ்க் ஃபேக்டர் இருக்கு. ஆனாலும் தத்து குழந்தை பெத்த குழந்தையாகுமா? இடையே தொப்புள்கொடியைத் துண்டித்துத்தானே தாயையும் சேயையுமே பிரித்தாகிறது. இயற்கையின் நியதியே அப்படி.*

*நாங்கள் நடத்தும் வாழ்க்கை—இது நார்மலா? உஷ்— வஸு, சும்மாயிரு. நான் சொல்வதைச் சொல்லியே*

ஆகணும். உடல் இச்சையை ஆத்ம ப்ரேமையாக உன்னத மாக்கு என்று நீதி நூல்கள், வேதவாக்குகள் போதிக்கின்றன. அது என்ன அவ்வளவு சுலபமா? அது அது அதனதன் வேளையில் தானாகவே கனிவதுதான் நார்மல். நான் டாக்டர். நான் எடுத்துக் கொண்டிருக்கும் ப்ரமாணம், என் தொழில் கடைசி மூச்சுவரை தேக தர்மத்தைக் காப்பாற்று வதுதான். தேக தர்மம் என்பது என்ன? நார்மாலிட்டி. தெய்வீக நிலை—அதை சன்யாசிகள் அப்யஸிக்கட்டும்."

ஸ்வேதா அடங்கினான். அவனுக்கு லேசாய் மூச்சு இரைத்தது. வஸு அவனை அதிசயத்துடன் பார்த்துக் கொண்டிருந்தாள். இந்த ஆவேசத்தில் அவனைப் பார்த்த ஞாபகம் இல்லை. திடீரென்று அவர்களைச் சூழ்ந்து கொண்ட மோனம் விறுவிறுத்தது!

தட்டுக்களில் பண்டங்கள் ஆறிப் போய், சிலிர்ப்பு கண்டுவிட்டன.

திடீரென்று காற்று கிளம்பி ஜன்னல் கதவுகள் படபட வென அடித்துக் கொண்டன. புழுதியை வாரி முகத்தில் இரைத்துக் கண்கள் உறுத்தின. இன்று காலையிலிருந்தே புழுக்கம்தான். ருசியான மண்வாசனை அறையுள் புகுந்தது.

திடீரென மூளையுள் ஒரு வெறிச்சை உணர்ந்தான். மூளையுள் எண்ணங்களை உற்பத்தி செய்து கொண் டிருக்கும் இயந்திரம் திடீரெனத் தோற்றுவிட்டாற் போல், பெருக்கித் துடைத்துவிட்டாற் போல்—மூளையுள் விசால மான கூடம். மண்டை 'கிர்ர்'—பயங் கண்டது. எழுந்து நின்றால் விழுந்து விடுவேன். மூளைக்கு பிராணவாயு பாய வில்லை. இது முடிவு என்பதா? மூளையின் சாவு.

கட்டிலில் படுத்தபடி பார்வை கூரையை வெறித்தது. "ஜோதி" வா வா, உன் கை கொடு. இந்தப் பிலத்திலிருந்து

காப்பாற்று. நோ. அவளைப் பற்றி எண்ணம் தொடர மறுத்தது.

தான் தனியாயில்லே; இருளோடு இருளாய் ஒரு பிரஸன்னம் அறையுள். கதவு மூடுகிற சப்தம். உடல் வெலவெலத்தது. அது ஓடிவந்து அவன் மேல் விழுந்தது. தோள்களை இறுகப் பற்றியது. வளையல்கள் கிலு கிலு.

"ஜோதி!" அரை நினைவில், மீதி அரை பயத்தில் பிதற்றினான்.

"நான் ஜோதியில்லை." காதோரம் வார்த்தைகள் மூச்சாய்ப் பாய்ந்தன. "அவளைப் பற்றி எனக்கு அக்கறையில்லை. நான் பாப்பூவுக்கு வந்திருக்கேன்."

"பாப்பூ?"

"ஆமாம் பாப்பூ. உனக்குப் புரியாது—புரியத் தேவையுமில்லை." திடீரென மழை அறைமேல் இறங்கிற்று. பெரும் தூறல்கள் சாரல்களாய் முகத்தில் சாட்டை பீறின. நிமிஷமாய் அறையின் தரை நனைந்துவிட்டது. கூரை ஒழுகி தடதடவென மண்டை, படுக்கை நனைந்தன.

கோடை மழை. பூமி எத்தனை நாள் தாபத்தில் தவித்துக் கொண்டிருந்ததோ? வேகமாய் உறிஞ்சிக் கொண்டது. திகட்டித் தெறித்து எஞ்சிய மழை வெள்ளத்தில் பூமி குளிர்ந்தது. பூமியின் மண்ணும் மணலும் ஆங்காங்கேயிருந்த கந்தத்துக்கேற்ப, கலங்கலாயும் செவந்தும், ஸ்படிகமாயும் சிற்றருவிகள் ஓடின. பூமிக்கு ஜுரம் விட்டு, வானின்று இறங்கிய ஆசீர்வாதத்தில் குளிர்ந்தது.

> வெளியே மழை. ஆனால் அவர்களுள்
> நிகழ்ந்தது ப்ரளயம்.
> நாமம் இழந்து
> நேமம் இழந்து

*தன்தன் திக்கிழந்து*
*யான் எனும் உணர்விழந்து*
*உருவிழந்து*
*ப்ரளயம் அவரவர் தனித்தனியை*
*அழித்துத்*
*தன்னோடு அடித்துச் செல்கையில்*
*ஒரு சின்ன நீர்க்குமிழி*
*அதனுள் குட்டிப் பாப்பூ*
*பிறந்தமேனியில்*
*கைகாலை ஆட்டியவண்ணம்*
*கக்கடகட சிரித்துக் கொண்டே*
*எதிர்நோக்கி வந்து வந்து—*
*வந்து—வந்து—*

அதற்கு மேல் ஏதும் நினைவில்லை.

நினைவு மீண்டபோது மழை முற்றிலும் விட்டிருந்தது. நிலா காய்ந்து கொண்டிருந்தது பின்நிலா. முக்கால் நிலா.

“**வா,** வா, வ்யாஸ் உனக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன். காபி ஆறிடப் போறது.”

“நான் வரேன் ஸ்வேதா.”

“சரி, இல்லை. அதுவே சரி, வ்யாஸ்.”

வ்யாஸின் பார்வை அவனைத் தாண்டித் தேடுவதை ஸ்வேதா கண்டுகொண்டு,

“அவள் வரமாட்டாள் வ்யாஸ். ஷி இஸ் ரெஸ்டிங். அவளுக்கும் சேர்த்து உனக்குச் செலவு கொடுக்கிறேன்.”

வ்யாஸ் கதவண்டை போய் விட்டான். “வ்யாஸ்!”

வ்யாஸ் திரும்பினான்.

“தாங்க் யூ.”

# 6

# கொலு

அவள் வீடு திரும்பியபோது கதவு திறந்திருந்தது. அவர் உள்ளேயிருந்தார். வழக்கம்போல், ஈஸி சேரில் பேப்பர் பார்த்துக்கொண்டு. காலை வேளையில் தலைப்புகளைத் தவிர, விவரமாய்ப் படிக்க நேரமிருப்பதில்லை.

"எப்போ வந்தேள்? வந்து நேரமாச்சா?"

"என்ன சுண்டல் தண்டலா? ஏது, அமர்க்களமாயிருக்கே அலங்காரம்! Dressed to kill!"

"கொலு இல்லியா? தினப்படி போல் உடுத்திண்டு போமுடியுமா?"

"நல்லாத்தானிருக்கே, நேரே அம்பாளே கொலுப் பார்க்க வந்துட்ட மாதிரி!"

"கேலி பண்ணறேளே!" சந்தோஷம் முகத்தில் சிவப்பு குழுமியது. "No, no. ஏன் கேலி பண்ணனும்? நிஜமாத்தான், You are looking great."

"போன இடத்திலேயும், எல்லாரும் அப்பிடித்தான் சொன்னா. 'மாமி என்ன தேஜஸ்ஸாயிருக்கா பாருடி,'ன்னு." தன்னை மேலிருந்து கீழ் நோட்டம் விட்டுக் கொண்டாள்.

"Yes, வயது உனக்குப் பிரியம் காட்டறது. என்னைப் பார், தலை தேங்காய்த் துருவல் மாதிரி. சொட்டை வேறே

விழுந்துடுத்து. I can't grow old gracefully. உனக்கு இன்னும் ஒரு வெள்ளி மயிர் கூடத் தெரியல்லே."

"அதுக்கென்ன பண்ணறது. அதெல்லாம் குடும்ப ராசி. புருஷாளுக்கு ஆயிரம் கவலைகள், எங்கள் மாதிரியா? காப்பி கொண்டு வரவா?"

"இதென்ன கேள்வி?"

"இல்லே, மணி எட்டுக்கு மேலே ஆச்சே, ஒருவேளை நேரே சாப்பிட்டுட்டு, அப்புறம் குடிப்பேளோன்னு கேட்டேன்."

"அதுக்கென்ன, அப்பவும் ஒரு டோஸ் அடிச்சாப் போச்சு. இதோ பார் பாலா, நாங்கள் காப்பிக்கு என்னிக்கும் அலுக்கமாட்டோம். T.V. விளம்பரத்துலே அந்தப் பெண் ஏமாத்தறதே BRUவை ஃபில்டர் காப்பின்னு, அதையும் குடிச்சு வைப்போம்."

"அப்பிடி ஒரு காப்பி வெறியிருந்தால், தலை நரைக்காமல் என்ன செய்யும்?"

சமையலறைக்குள் சென்றாள். அவர்களிடையே ஒரு சுலபமான ஸ்னேகம் இருந்தது. பேப்பர் தாண்டி அவர் பார்வை, அவள் நடையில் இடையின் மிடுக்கைக் கவனித்துக் கொண்டிருந்தது. உடம்பில் ஒரு கிள்ளு சதைகூட அதிகப் படியில்லை. அவருக்கு லேசாப் பொறாமை. அடுத்துப் பெருமிதம் பொங்கிற்று. சொத்துப் பெருமிதம். இவள் என் மனைவி.

என்றுமே உருவி விட்டாற் போல் ஒரு துடிதுடிப்பு, அந்த உடலில். சோம்பலாயோ அலுப்பாயோ அவளைப் பார்த்ததேயில்லை. சதா எதையேனும் செய்து கொண் டிருப்பாள். இவளைச் சொல்வானேன், இவள் அம்மா யில்லியா. வயது எண்பதை எட்டறது, இன்றும் தானே

சமைச்சுண்டு! தினம் ஒரு கறி, கூட்டு, கீரை, சாம்பார், ரஸம் இல்லாமல் அவளுக்குச் சாப்பிடத் தெரியாது. இத்தனைக்கும் gas, ஸ்டீம் போன்ற வசதிகள் இல்லை. கிராமம்.

ஆனால் இவள் சொல்றாப்போல, சுறுசுறுப்பு, யயாதீயம் எல்லாம் குடும்ப ராசி.

அவருடைய காப்பியை அவரிடம் கொடுத்துவிட்டு, தனக்கும் ஒரு தம்ளருடன், எதிரே நாற்காலியில் உட்கார்ந் தாள்.

"இதென்ன எல்லாப் பொட்டலங்களிலும், சொல்லி வெச்சாப்போல ஒரே கொத்துக்கடலை சுண்டல்? மாறுத லுக்கு ஒரு மொச்சை, நல்லா கரம் மஸாலா சேர்த்து, தேங்காயையும் துருவிக் கொட்டி...?"

"அதுக்கென்ன, வெங்காயம் போட்டா இன்னும் பேஷாயிருக்கும். ஆனால் நவராத்திரி, வெங்காயம் சேர்க்க மாட்டா. இதோ பாருங்கோ ஸார், எல்லார் வீட்டிலும், நவராத்திரின்னு ஒன்பது நாளைக்கும் கொலுன்னு பேரே தவிர, கொலு dayன்னு அழைக்கறது ஒருநாள்தான்னு இப்போ ரொம்ப நாளையப் பழக்கமாப் போச்சு. அன்னிக்கு எல்லாராத்துலேயும் கொத்துக்கடலை சுண்டல்தான். அடுத்த வீட்டில் வேற பண்ணியிருப்பான்னு ஒருத்தரையொருத்தர் ஏமாத்திக்கிறது தன்னையே ஏமாத்திக்கிறது ஒரு பொரு ளாதார ட்ரிக்ஸ்."

"ஏன் பாலா, நீ ஏன் நம்மாத்துலே கொலு வெக்கப் படாது? படியிறக்கி, புதுப்பொம்மைகளா வாங்கி, பெண்டு களை அழைச்சு, தினம் விதவிதமா நைவேத்யம் பண்ணி, அமர்க்களப்படுத்தேன்! I am game for the expenses up to a thou."

"நீங்கள் என்ன தெரிஞ்சுதான் பேசறேளா? இந்த வயசில் நானே போய், 'என் வீட்டுலே கொலு, மஞ்சள் குங்குமம் வாங்கிக்கோங்கோ'ன்னு படிப்படியா ஏறி அழைக்கறதா? அதுக்கெல்லாம் வீட்டிலே கொழந்தைகள் இருக்கணும். உங்களுக்கே தெரியும் கொலு ஏன் வெக்கலலேன்னு."

பேச்சு, 'பொட்'டென அவர்களிடையே சிப்பி போல் மூடிக் கொண்டது. உற்சாகம் குலைந்து, இம்சையான மௌனம் வந்துவிட்டது. பெருமூச்செறிந்து, எழுந்து, பேப்பரை எடுத்துக் கொண்டு மாடிக்குப் போய்விட்டார்.

அவள் உட்கார்ந்த இடத்திலேயே இருந்தாள்.

ஒரு கரப்பான் பூச்சி பறந்தது. சனியன்!

**கொ**லுப்பெட்டி, பரணில்தான் தூங்கறது. அதனுள், இருவத்தி அஞ்சு வருஷமா, பொம்மைகள் உறங்குகின்றன. Sleeping Beauties. கையொடிஞ்சு, காலொடிஞ்சு, தலை போய், அழுக்கும் கறையும் ஏறி, எலிப்புழுக்கை, மக்கல் நாற்றம் வீசிண்டு, ஏதோ கல்வெட்டுக் கண்டுபிடிப்புகள் போல் ஆகியிருக்கும். காற்றாடுவதற்கேனும் அதை யார் எடுத்துப் பார்த்தது? இல்லை, அத்தனையும் தூக்கியே எறிஞ்சுடலாம். எதுக்கு மூடிவெச்சுண்டு இன்னும் காக்கணும்?

அன்னிக்குக் கலசத்துக்கு வெச்ச தேங்காய் உள்பட, கலசத்தின் மேல் சாத்தின அம்பாள் முகப்பு, வெள்ளியில், புன்சிரிப்புடன், அதில்தான் இருக்கும். ஏண்டியம்மா, இருவத்தி அஞ்சு வருஷமா, இன்னமும் சிரிச்சுண்டுதான் இருக்கையா?

இப்ப நினைச்சால்கூட, கோபம் கன்னத்தில் குறுகுறுக்கறது. வெட்டிக் கோபம். நம்ம கர்மாவை நாம் அனுபவிக்

கறதுக்கு, தேங்காயையும், முகப்பையும், பொம்மைகளை யும் கோவிச்சுண்டு என்ன பண்றது? ஆனால் அது தெரிய இருவத்தி அஞ்சு வருஷம் ஆகவேண்டியிருக்கு.

கையில் முகத்தைப் புதைத்துக் கொண்டாள். விரல் நுனிகளடியில், நெற்றி மேட்டில் ஒரு தழும்பு நிரடிற்று. கவியும் மூட்டத்தினின்று தப்ப, மனம் இன்னொரு நினைவுக் குத் தாவிற்று. ஆனால் அதுவும் கொலு சம்பந்தப்பட்டதாவே யிருக்கே! ஆனால் இப்போ சிரிப்பும் வரது.

கலியாணமான புதுசு. குடித்தனம் வெச்ச புதுசு. கலியாணம் போதே, அவளுக்கு மாமியார், மாமனார், நாத்தனார், கொழுந்தன், இக்குப் பிடுங்கல் கிடையாது. அங்கும் ஒரே பிள்ளை. வாலிபத்திலேயே பெற்றோரை இழந்து விட்டார். அவள் அம்மா கெட்டிக்காரி. (அப்பா கொஞ்சம் பூச்சிதான். ஆனால் பொன்வாத்து) அதெல்லாம் ப்ளானாப் பார்த்துத்தான் செஞ்சாள். ஒரே பெண். அதனால் அம்மாவுக்கு ஆத்தோடு மாப்பிளைதான் இஷ்டம். ஆனால் பலிக்கவில்லை. மாப்பிள்ளைக்கு உத்யோகம் வெளியூரில். அப்படியே உள்ளூரில் சேர்ந்து இருந்தால்தான் என்ன? எங்கேயும் அவள் தனிகாட்டு ராஜா—அல்லது ராணியா சரி, அது எப்பிடியானும் கிடக்கட்டும்.

அன்று மஹாளய அமாவாசை. நன்னா நினைவி லிருக்கு. மத்த நாளாயிருந்தால் மறந்திருக்கும். அன்னிக் கென்னவோ சுருக்கவே ஆபீசிலிருந்து வந்துட்டார்.

"ஃப்ளாஸ்கிலே காப்பி ஊத்தி வெச்சிருக்கேன் எடுத்துக் கோங்க."

அவர்களிடையே அது ஒன்றும் புதிதல்ல. வேளை யில்லா வேளையில் காப்பிக் குடியர். கண்ணாடித் தம்ளரில் காப்பியைச் சரித்துக்கொண்டே ("சீப்பிக்

குடிச்சாத்தான் காப்பிக்கு ருஜி.") கூடத்தைச் சுற்றிப் பார்வைவிட்டு "என்ன பாலா கொலு வெக்க ஆரம்பிக் கல்லியா? பொம்மை நீ வேறே கொண்டு வந்திருக்கே முதல் கொலு!"

"நான்தான் கொலு! இன்னிலிருந்து மூணு ராத்திரி!" சிரித்தாள்.

புரியாமல் விழித்தார். அவள் சொன்னது உள்தோய்ந்த தும், புரிந்ததும்—அந்தக் கோவம் உண்மையிலேயே ஆச்சர்ய மாயிருந்தது; பயந்துவிட்டாள்.

"Damn--!" காப்பியுடன் தம்ளரைத் தரையில் வீசிய வேகத்தில், அது சுள் சுள்ளாயுடைந்து ஒரு சில் தெறித்து, அவள் நெற்றியில் பட்டு ரத்தம் மளமள—

"Oh God!"

அவள் மேல் பாய்ந்து அணைத்துக் கொண்டான். கையில் ரத்தத்தை அடைக்க முயன்றான்.

"என்னைத் தொடாதேங்கோ!" கத்தினாள்.

"Shut up! உன் ஆசாரத்தை உடைப்பில் போடு!"

டாக்டரிடம் போய், நல்ல வேளை ஒன்றும் சிக்கல் இல்லை. ஓர் ஊசி, இரண்டு தையல், மூணு நாளைக்குத் தலையில் கட்டு, அப்புறம் ஒரு வாரத்துக்கு நெற்றியில் ப்ளாஸ்திரியுடன் விட்டது. "பாலா, பாலா, என்னை மன்னிச்சுடு! மன்னிச்சுடு!" தவித்துப் போனார். "இதுவே கண்ணில் பட்டிருந்தால் என் கதி?"

"அதுசரி, அதென்ன அப்படி upset ஆயிட்டேள்? என்னவோ நடக்காதது நடந்துட்ட மாதிரி! இப்படி ஒரு கோவம் உங்களிடம் முதல் தடவை இப்பத்தான் பாக்கறேன். என்ன ஆச்சு உங்களுக்கு?"

"தெரியல்லியே!"

"ரெண்டு நாள் நீங்களே சமைக்க வேண்டியிருக்கேன்ற ஆத்திரமா?"

"இதென்ன கலியாணம் ஆறதுக்குமுன் நான் சமைக்காத சமையலா?" முனகினான்.

"ஆபீஸில் டென்ஷனா?"

புரியாமல் கைகளை விரித்தான்.

"இல்லே, வேறேதேனும் எதிர்பார்த்துண்டு வந்து ஏமாந்தேளா?" அவள் ஓரக்கண்ணில் குறும்பு கூத்தாடிற்று.

"தெரியல்லியே! எதுவுமே தெரியல்லியே!" மனுஷன் ஒரே அடியாய்க் குழம்பிப் போயிருந்தார். பார்க்கப் பரிதாப மாயிருந்தார்.

இனி சும்மா நோண்டி தோண்டிக் கேட்பதில் பிரயோசனமில்லை. தெரிஞ்சுதான் என்ன ஆகணும்? ஏதோ உருக்கூட மறந்துபோன பழைய ஏமாற்றம், நெடுநாள் அடக்கி வெச்சிருந்து, சோடாவில் கோலி பிடுங்கிண்ட மாதிரி, இன்னிக்கு நாள் பார்த்துடுத்து. இந்த மனோதத்துவ ஆராய்ச்சியெல்லாம் நம்மால் முடியாதம்மா!

அப்புறம் எல்லாம் சரியாப் போயிடுத்து என்றாலும், உள்ளூர அந்த அச்சம் உறுத்திக்கொண்டேயிருந்தது. க்ஷணச் சித்தம் க்ஷணப்பித்தம் மூர்க்கனிடம் மாட்டிண்டுட்டேனா?

அந்த பயம்தானோ என்னவோ எந்த ஆழத்துக்கு வேர் பாய்ந்து விட்டதோ அல்லது வேறெந்தக் காரணமோ, கலியாணமாகி ஏழு வருடங்களுக்கு அவள் கருத்தரிக்க வில்லை. ஒவ்வொரு தடவையும் கரு சுருங்கினதோ? அப்பிடியும் நினைச்சுக்கலாம் அல்லவா? பிறகு உண்டாகி யும், சுமப்பது ரொம்ப சிரமமாயிருந்தது. அதாவது, சுமக்க

அவள் தயாராயிருந்தாலும், சுமைக்கு மனமில்லை போல், உடம்பைப் படுத்திக் கொண்டேயிருந்தது. மனமில்லாத கரு. பிரசவமும் கெடுபிடிதான். சிஸேரியன்.

ஆனால், குழந்தைப் பேறில், பெற்ற பின்தானே தெரிகிறது, இந்தப் பேறுக்கு இன்னும் எத்தனை வேணு மானாலும் படலாம். குழந்தையா அது? ஏதோ தெய்வப் பிறவி. இப்படி ஓர் அழகா? யார் ஜாடையாவுமில்லை. நாளடைவில், நினைவடியில் புதைந்துபோன எந்த முன்னோனோ?

தலைமயிர் அடையாய் நெற்றியில் விழுந்து, கண்ணை மறைத்தது. கண்கள் நீலக்கடல்கள். பிறந்தவுடன் எல்லாக் குழந்தைகளுமே சிவப்புத்தான். ஆனால் இது முழு ரோஸ். உடனேயே அழைச்சாச்சு. குலாப், என் அருமை குலாபீ!

உடல் ரத்தம் பூராவே அன்பாய் மாறிச் சுரந்த தாய்ப் பாலில் அந்த ஆறு மாதங்களுள் குழந்தை மொழு மொழு. பார்த்தவர் எல்லாரும் வாரிக்கொள்ளும்படி, தாங்கமுடியாத அந்த மொக்கு வாய் மோகனச் சிரிப்பு.

வியாழனும், ஞாயிறும் தவறாது, மாலை தாயின் மடியில், குழந்தையை உட்கார வைத்து, அம்மா சுற்றிப் போடுவாள்.

ஆனால் பிறந்த வீட்டில் உட்கார்ந்துண்டேயிருக்க முடியுமா? மனுஷன் எத்தனை நாள் ஓட்டலிலேயே சாப்பிட்டுண்டு இருப்பார்? அவளைக் குழந்தையுடன் வீட்டில் கொண்டுவந்து விட்டாச்சு. அம்மா ஊர் திரும்பியு மாச்சு. கையோடு நவராத்திரியும் வந்தாச்சு.

பாலாவுக்கு என்றுமே இது மாதிரி விஷயங்களில் ஆசை ஜாஸ்தி. இம்முறை அம்பாளே அவதாரமெடுத் திருக்கா, உத்ஸாகத்துக்குக் கேட்கணுமா?

ஒன்பது படிகளையும் கட்டியிறக்கி, அத்தனைக்கும் பொம்மைகளை வைத்து—திண்டு திண்டாய், கண்டு கண்டாய், பெரிசா, கனமா, அந்தக் காலத்து—(எந்தக் காலத்தோ?) வழிவழியா வந்த பொம்மைகள்—அலங்காரங் கள் பண்ணி—ஆள் உயரம் நிலைக் கண்ணாடி, கலர் பல்பு கள், தோரணங்கள், கிரிக்கெட் மாட்ச், கோயில் குளம்—

("அத்தனையும் நீங்கள் ஒருத்தியேவா, மாமி?")

பாலாவுக்குக் கண் கண்டது கை செய்யும்.

குழந்தைக்கு வேற்று முகமே கிடையாது. இடுப்புக்கு இடுப்பு தாவி, சிரித்து, கொலுவுக்கு வந்தோர் எல்லோர் நெஞ்சையும் அள்ளிக் கொண்டது. "பாலா மாமி, ஒரு அரை மணி நேரம் கொடுங்கோ மாமி, அவரிடம் போய்க் காட்டிட்டு வந்துடறேன். ப்ளீஸ், ப்ளீஸ்! மாமி, மாமி!" அதெல்லாம் முடியுமா? பாலாவுக்கு நெஞ்சு பொங்கிற்று. கொலு அடியில் குழந்தையையும் வைத்து ஆரத்தி எடுத்தாள்.

அஞ்சாம் நாள் ஜன்மத்துக்கும் மறக்க முடியாத நாள்.

கொலுவுக்கடியில் 'பார்க்'கிலிருந்து இரண்டு ஸெலு லாயிடுகளை எடுத்துக் குழந்தை விளையாடிக் கொண்டிருந் தாள். சமையலறையிலிருந்து தீய்ந்த நாற்றம். அடுப்பில் பாலை வெச்சு மறந்துட்டேனே! உள்ளே ஓடினாள். அவசரத் தில் வெறுங்கையால் பிடித்துப் பாத்திரத்தை இறக்குகையில், புறங்கையில் பால் கொட்டிவிட்டது.

"ஐயோ!" துடித்துப் போனாள்.

உடனேயே மாடியே இடிந்து விழுந்தாற்போல், கூடத்தில் பயங்கர சத்தம். தன் வலி மறந்து வெளியே ஓடினாள்.

ஒன்பது படிகளும் அத்தனை பொம்மைகளுடன் சரிந்து—

சத்தம் கேட்டு அக்கம்பக்கத்திலிருந்து ஓடிவந்து விட்டார்கள்.

"என்ன ஆச்சு?"

"ஐயோ என் குழந்தை!" அலறினாள்.

பரபரப்பாய் எல்லாரும் தோண்டி, அந்த நாசத்தினடியில்...

"மாட்டேன்! நான் மாட்டேன்!" அலறிக்கொண்டே வெளியே ஓடினாள். நாலு பேர் அவளை கட்டிப் பிடித்துக் கொண்டார்கள்.

"என்ன மாட்டாய்?" அவளுக்கு மட்டும் அந்தச் சிரிப்புக் கேட்டது. இன்றுவரை துரத்தும் சிரிப்பு.

இப்ப நினைச்சாக்கூட அந்த சத்தம்—செவிகளைப் பொத்திக் கொண்டு தலையை உதறிக் கொண்டாள்.

கொலு சரிஞ்சு இடி வயிற்றில் விழுந்துவிட்டது.

'பாவி, என்னிடமிருந்து வலுவில் பிடுங்கிண்டையே, காப்பாத்தி வெச்சுக்க வக்கிருந்ததா? மறுபடியுமா? உனக்கா? வந்து கேட்டு நிக்கறியா? நிக்காதே, ஓடு, ஓடு!'

இருவத்தி அஞ்சு வருடம் ஓடிண்டிருக்கேன். பாலாவுக்கு மூச்சு இரைத்தது. உடம்பு ஜலகண்டமாய்க் கொட்டிற்று.

கர்ப்ப கோபம் என்ன லேசா?

இப்ப அடிக்கடியே தோணறது. ஒரு மாமியார், மாமனார், நாத்தனார், ஓரகத்தின்னு நாலு பேர் இருக்கிற இடமா வாழ்க்கைப்பட்டிருந்தால் இப்படி ஆயிருக்காதோ? குழந்தையைக் கொலு அடியில் தவழ்ந்து போக விட்டிருக்க மாட்டார்கள். யாரேனும் ஒருத்தர் கூடத்திலிருந்திருப்பர்.

என்ன கொலுப்படிகள்! உளுத்துப் போன பெட்டிகள்,

உடைந்த நாற்காலிகள், ஜாதிக்காய்ப் பலகைகள் எல்லாம் ஒண்ணுக்கொண்ணு முட்டுக் கொடுத்துப் படியெழுப்பி னால், அதுவும் ஒண்டியா—'பாப்ராஸ்'தான். ஒரு எலி உள்ளே ஓடினால் போதும் அடியோடு சரிய சாக்காச்சு.

காலத்தைப் போல் மருத்துவன் இல்லை, வாஸ்தவம் தான். ஆனால் அங்கே ஒரு வேடிக்கை—பின் வேறெப்படிச் சொல்வது? நோய் குணமானாலும் மருந்தின் கசப்பு விடுவ தில்லை; தங்கி விடுகிறது. அது மாற மருந்தில்லை. அல்ல, அதுவேதான் மருந்தோ?

பெருமூச்செறிந்து, எழுந்து போய், ஜன்னல்களைத் திறந்தாள். காற்று 'சில்' என்று மோதி, நெற்றியை ஒற்றியது.

முன் நிலா மறைந்து விட்டது. இருட்டு, ஆங்காங்கே வீடுகளின் அடையாளமாய் 'மினுக் மினுக்'கோடு சரி. 'போஷ்' ஏரியாவில் இதுதான் ட்ரபிள். ஜன நடமாட்டம் சுருக்கவே அடங்கிவிடும். ஆனால் வீட்டுள், இரவைப் பகலாக்கும் வெளிச்சம் போட்டு, கொலு அமர்க்களப்படும். ஆம், பாட்டுச் சத்தம் கூடக் கேக்கறது.

"பிருந்தாவன நிலையே" எங்கிருந்தோ காற்றில் மிதந்து வருகிறது. ரீதி கௌளை. ஊத்துக்காடு கீர்த்தனை. அவளுக்கு அவர் பாட்டில் நாலஞ்சு பாடம் உண்டு. பாட்டு வாத்தியார் வெச்சுப் பாட்டுக் கத்துண்டவளாச்சே!

உடனே இன்னொரு நினைவு வந்து, உடம்பு பரபரத்துப் போச்சு. 'விர்'ரென்று மாடியேறிப் போய், அறையுள் நுழைந்தாள். விளக்கு இல்லை.

"தூங்கிட்டேளா?"

"இல்லியே! ஸ்விட்சைப் போடு."

"வெளிச்சம் வேண்டாம்." கட்டிலண்டை வந்து தரையில் அமர்ந்தாள்.

"உங்களிடம் ஒண்ணு சொல்லணும்."

"சொல்லேன்."

"இது ரொம்ப நாளைக்கு முன் நடந்தது. நமக்குக் கலியாணமான மூணாம் வருஷம் வெச்சுக்கோங்களேன்."

"இதோ பார் பாலா, சினிமா பண்ணாதே. எப்பவோ ஏதோ நடந்ததுக்கு நீ இப்போ பிராயச்சித்தம் பண்ணிக்க வேண்டாம். அதுக்கெல்லாம் நமக்கு வயசு தாண்டியாச்சு."

"அதனாலேதானே இப்ப சொல்றேன்! அப்பவே சொல்லியிருந்தால், நீங்கள் ஏதேனும் கல்மிஷமா எடுத்துண் டிருக்கலாம்." உடனே அவசரமா, "ஆனால் தப்பு ஏதேனும் நேர்ந்துடல்லே."

"அப்போ சொல்லாதே."

"சொல்லித்தான் தீருவேன்."

சிரித்துவிட்டார்.

"இப்ப எனக்கும்தான் வேடிக்கையாயிருக்கு. ஆனால் வேடிக்கையாவுமில்லே. அதில் ஏதோ ஸீரியஸ்னெஸ் ஒளிஞ் சிண்டிருக்கு. உறுத்தறது."

"O.K. Shoot"

"அதுவும் கொலு சம்பந்தப்பட்டதுதான். இன்னிக்கு எனக்குக் 'கொலு' day போல இருக்கு. அப்ப நான் பிறந்தாத் துலே இருந்தேன். நீங்களும் வந்திருந்தேள். ஆயுத பூஜை ரெண்டு நாள், ஞாயிற்றுக்கிழமையும் சேர்ந்து மூணு நாள் சேர்ந்தாப்போல லீவு. ஆனால் கொலு சமயத்திலே நீங்கள் வீட்டில் இல்லை. 'வாக்' போயிட்டேள்.

என் பாட்டு வாத்தியாரும் வந்திருந்தார். ஊரிலிருந்து வந்திருக்கேனே, என்னைப் பார்க்கத்தான்.

ஒருவழியாப் பெண்டுகள் பாடி முடிச்சப்புறம்—காமா

சோமான்னு நாங்கதான் பாடுவோமே, ஒருத்தி ‘கிரி ராஜ ஸுதா தனயா’ கொலையே பண்ணிப்பிட்டா. அம்மா, பாட்டு வாத்தியாரைப் பாடச் சொன்னாள்.

அவர் ஊத்துக்காடு வெங்கட சுப்பய்யர் பாட்டு ஒண்ணை அடி எடுத்தார்.

ஸங்கீதத்தைப் பத்தி உங்களிடம் பேசறது எவ்வளவு அதிகப் பிரசங்கித்தனம்னு எனக்குத் தெரியும். இருந்தாலும் எனக்கு ஆசையாயிருக்கே!

ஊத்துக்காடு ஸாஹித்யங்கள், பெரும்பாலும் பேசறாப் போலவே, சவுக்கத்தில், ஸுலபமா, ஸஹஜமாயிருக்கும். ஏறக் குறைய proseதான். ஆனால் வர்ணத்தின் கடைசி வரிகள், திவ்ய மிடுக்கு அடுக்குகளுடன் ஸொகுஸ்வர ஒய்யாரமா, ஆடி அசைஞ்சு வருமே தவிர, வார்த்தைக்கு வார்த்தை முடுக்கில் மனுஷன் ஏதோ தங்கப் பொடி வெச்சு ஊதி யிருப்பார்.

என்னப் பாட்டு பாடினார்? முழுப்பாட்டும் நினை வில்லை எத்தனை வருஷமாயும். இருங்கோ சொல்றேன் ‘பால் வடியும் முகம் நினைந்து நினைந்து வசமாகுதே கண்ணா’—பாட்டு மறந்தாலும் அதே வார்த்தைகள் ஓசை களின் மதப்பு மிதப்பில் என்னை இழந்தேன்.

ஆகவே, அவர் பல்லவி பாடி முடிச்சதும் பெண்கள் கூட்டத்திலிருந்து அனுபல்லவி எழுந்ததும், அது என் குரல்னு எனக்கு அப்புறம்தான் தெரிஞ்சுது. அவர் ஒரு வரி பாடி, மறு வரி நான் பாட, எல்லாரும் எங்களை ஆச்சர்யத்தோடு பாக்கறா. கதவு மறைவிலிருந்து அம்மா பல்லைக் கடிச்சுண்டு, கண்ணாலும் கையாலும் தந்தி அடிக்கறா. ஆனால் என்னால் ஒண்ணும் செய்ய முடிய வில்லை. ஒரு மஹத்தான விசனம், ஏக்கம், அதன் போதை,

தன்மெத்தான 'கவ்'வில் இரை போல் என்னை இழுத்துச் செல்ல, நானும் அத்துடன், என் மனமார்ந்து போறேன்.

பெண்டுகள் எங்களைப் பார்த்து, தோளுக்குத் தோள் இடிச்சுண்டு, கிசுகிசுத்துண்டு, திருட்டுத்தனமா சிரிக்கறா.

அந்தப் பாட்டு முடிஞ்சதும் அடுத்த பாட்டுக்கு நானே அடியெடுத்துட்டேன் 'அலைபாயுதே கண்ணா!'

ஒரு சின்ன 'கொல்!'

அதுக்குமேல் அம்மாவுக்குப் பொறுக்கல்லே. வெளியே வந்து என்னைக் கரகரன்னு இழுத்துண்டு போயிட்டா.

"என்னடி நெனச்சுண்டிருக்கே? மானம் போறது!" என் கன்னத்தைப் பிடிச்சு இழைக்கறா. நெற்றியில் நெத்தறா. "உன் ஆம்படையான் இங்கு வந்திருந்தால் நம் கதி என்ன ஆறது? உனக்கும் பாட்டு வாத்தியானுக்கும் என்னவோ முடிச்சுன்னு சந்தேகப்பட்டுட்டான்னா, ஆயுசுக்கும் உன் கொள்ளியை என் வயத்தில் கட்டிண்டு நான் வாழணுமா? டீயட் பாடறியா, டீயட்?"

அம்மா கோவத்துலே நான் பயந்து போய், மயக்கம் தெளிஞ்சு போச்சு வெச்சுக்கோங்கோ.

ஆனால் பாட்டின்போது எனக்கு வந்த அந்த ப்ரம்மாண்ட துக்கம்—இப்ப நெனச்சாக்கூட—" தேம்பினாள். "அந்த துக்கம் யாருக்காகவுமில்லே. எதனாலேயுமில்லே. என்ன அது?" அவள் குரல் தவித்தது.

அவர் வார்த்தைகள் தாழ்ந்து, நகநகென, இருளினின்று பிரிந்து வந்து, கதகதப்பாய் அவளை அணைத்தன.

"அதன் பெயர்தான் விசுவப்ரேமை. அந்த சமயத்துக்கு நீ விசுவப்ரேமி ஆகிவிட்டாய். அந்தப் போதுக்கு உனக்கு, நீ பாடும் கண்ணன் மீதும் காதல் இல்லை. உன் பாட்டு

வாத்யார் மேலும் தனிக் காதல் இல்லை. குறிப்பிட்டு யார் மேலும் தனிக்காதல் இல்லை. ஆனால் காதல் மீது காதல் கண்டு விட்டது.''

அசந்து போனாள். "Beautiful" அவள் விழிகள் ஸ்படிகத்தில் பளபளத்தன. அவர் கையைப் பற்றியிழுத்துக் கன்னத்தில் வைத்துக் கொண்டாள்.

"அப்பாடி! நீங்கள் சொன்னது என்னுள் ஏதேதோ சிக்குப் பிரிஞ்ச மாதிரி, மனசே லேசாயிடுத்து. சந்தோஷ மாயிருக்கு. அதனாலேயே வயத்துலே குழி விழுந்தாப்போல பசிக்கிறது. வாங்கோ, சாப்பிடப் போவோம்.''

# 7

# கமலி

*இது 'இந்தியா டுடே'யில் வந்தது. ஆனால் இதன் 'கரு' என்னுடையது அல்ல. எனதருமை நண்பர் சங்கரன் இந்தக் கருத்தை என்னிடம் தந்து நான்தான் எழுதவேண்டுமென்று வற்புறுத்தினார். அவரும் அமரர் ஆகிவிட்டார். சங்கரனுக்கு பிரத்யேகமாக இந்தக் கதையை இந்த இடத்தில் சமர்ப்பிக்கிறேன்.*

"கமலாம்பிகே!" ஜம்பு குருக்கள் துண்டை உதறிப் போட்டுத் திண்ணைமேல் உட்கார்ந்தார்.

பெயரைச் சொல்லிச் சொல்லி, அது மூச்சோடேயே கலந்துபோய், மூச்சும் நாமமும் வேறென்று நினைக்கவே மறந்துபோச்சு.

அம்மன் சன்னதிக்கு வெளியே சுவரை ஒட்டி ஒரு திண்ணை, அதில்தான் அவர் ஒழிந்த நேரங்களில் உட்காருவதும், சமயங்களில் இரவு படுப்பதும் வழக்கம். இன்று (பௌர்ணமி மட்டும்) நடு நிசியில், கர்ப்பக்ருஹத்தில் ஒரு சந்துவழி, சந்திரன் அம்மன் முகத்தை வியாபிக்கும்போது அவள் கண்கள் விழித்தெழுவதுபோல மாயங் காட்டுவதற்குக் காத்திருப்பார். அவருக்கு அது கண்கொளாக் காக்ஷி.

கமலாயதாக்ஷி.

ஏனோ தெரியவில்லை. மனது அலசிப் பிழிந்து

உலாத்தினாப்போல், துல்லியமாய், லேசாய், குளுமை வழிந்து நிறைந்திருந்தது.

கைகளைக் கோர்த்து, தலைக்கு வைத்து மல்லாந்து படுத்தார். கண்ணுக்கு நேரே கூரையில் கல் தாமரை? இதவான மோனம் சூழ்ந்தது.

கோவிலுக்கடுத்தாற் போலேயே சொப்பாட்டம் வீடு. ஒரு சின்ன அறை. அதற்கேற்ற கூடம். இந்த இரண்டு கட்டைகளுக்குப் போதாதா?

அகிலா இரண்டாவது ஜாமத்தில் இருப்பாள். அவளுக்கு இப்போ கொஞ்சம் முடியல்லே. வயசாகல்லியா? இரண்டு பேருக்கும் வயசு வித்தியாசம் அஞ்சுக்குள். உறவு விட்டுப் போகாமல் இருக்க அவளுக்கு அஞ்சு வயசிலேயே போட்ட முடிச்சு. சட்டம் இருந்தாலும் கிராமத்துள் எட்டாது.

ஆனால் புத்ர பாக்யம் இல்லை. விரதங்கள் முழிச்சது தான் மிச்சம். யார்மேல் குத்தம்னு ஆராய விஞ்ஞானம் அந்த அளவுக்கு அப்போது வளரவில்லை. வளர்ந்திருந் தாலும் அதன் உதவியைத் தேடத் தோன்றியிருக்காது. நமக்கு ப்ராப்தி அவ்வளவுதான்; அகிலாண்டேசுவரியின் சித்தம், அதனால் நம் வசத்தில் என்ன இருக்கு?

உறவில் ஒரு பையனை ஸ்வீகாரம் எடுத்துக் கொண்டார்.

பின்னால் தனக்கு வாரிசாயிருப்பான் என்று வரித்த பையன், ஒருநாள், கிழங்காட்டம் பொன் கட்டிய அவருடைய ருத்ராக்ஷ கண்டியை எடுத்துக்கொண்டு ராவோடு ராவாய் மறைந்தவன், போனவன் போயே போனாண்டி ஆனபின் ஆத்திரப்பட்டு, அழுது ஓய்ந்தபின், அகிலா ஒருமுறை கைகொட்டிச் சிரித்துவிட்டு, “இனி உங்களுக்கு நான் குழந்தை. எனக்கு நீங்கள் குழந்தை” என்று தேற்றினபோது,

குருக்களுக்குப் புத்தி தெளிந்தது. ஆனால், இருந்த இடத்தில் தொடரப் பிடிக்கவில்லை. அன்று தென்னாட்டை உதறி வந்ததுதான், இங்கு வந்து நாற்பது வருடங்களுக்கு மேல் ஆகிறது.

இந்தக் கோவில் பெரிசு ஒழிய, ரட்சணையும் போஷணையும் போதாது. இன்னமும்தான். வந்த புதிதில், முதன் முதலாக அம்பாளை ஆள் உயரத்துக்கு, கிழிசல் தோம்பும் பாவாடையில் கண்டதும், வயிறு ஒட்டிக் கொண்டது. இரண்டு கால பூஜை என்று பேர். நாட்டாமைக்காரரிடமிருந்து தினம் இரண்டு படி அரிசி. அதுதான் சாமி நைவேத்யத்துக்கும் அவர் சம்பளத்துக்கும்.

தெய்வத்தின் தீன நிலை ஐம்பு குருக்களுக்குப் பலத்தைத் தந்தது. அல்லது அவருக்கே சமயத்துக்கு முகராசி வந்ததா? பார்க்க வேண்டிய இடங்களில், பார்க்க வேண்டியவர்களைப் பார்த்தார், கெஞ்சினார், அதட்டினார், கொஞ்சினார். முயற்சி ஓரளவுக்குத் திருவினை கண்டது. ஓரளவுக்குத் தான் அம்பாளுக்கு உடுக்கை மாற்ற முடிந்தது!

"கமலாம்பிகே! என் குழந்தே!"

ஆம், குழந்தைதான். மதமதவெனப் பதினாறு வயதுக் குழந்தை. வளர்த்திக்குக் கேட்பானேன்? தினே தினே எத்தனை நீராட்டல், எத்தனையெத்தனை ஸஹஸ்ரநாமங்கள் லக்ஷக்கணக்கில் சேர்ந்து அர்ச்சனையின் ஊட்டம்! சில சமயங்களில் தொங்கும் அகலில் சுடரின் நிழலாட்டத்தில் கல் ஓவியம் கண் திறந்தபடி சிரிப்பில் முன் பற்கள் இரண்டு லேசாய்த் தெரிவது போலும்—பரபரத்து நெருங்கி வந்து உற்றுப் பார்ப்பார். கல்லுக்கு அத்தனை நெகிழ்ச்சி ஸ்தபதியின் வெறும் கைத்திறன் மட்டுமல்ல, ஸ்வயார்ப்பணம். சிற்பி யாரோ? அவன் பேரும் அடையாளமும் தெரியாமல் இருப்ப

தால்தான் அவள் அநாதியாய், அத்தனை ஸௌந்தர்ய வதியாய் விளங்குகிறாள்.

கமலாம்பிகை பற்றி அகிலாவுக்கு குருக்களின் படபடப்பு உண்டோ? யார் கண்டது? வெளியில் தெரிய வில்லை. சுபாவத்திலேயே அவள் கொஞ்சம் கெட்டி. வளவளவென்றிருக்க மாட்டாள். சற்று விரக்தியானவள் கூட கோவிலில், தேவி வழிபாடில் தன் கணவனின் உற்சாக ஈடுபாடுடன் அவள் இழையாவிட்டாலும் அவளுக்கும் பக்தி உண்டு. ஆசாரம் உண்டு.

குருக்கள் தூக்கத்தின் மெத்தான ஆலிங்கனத்தில் புரண்டு படுத்தார். செருகிய இமைகளின் கீற்றில் எட்ட ஒரு நீலப்பொறி தெரிந்தது. அது கிட்டக் கிட்ட நெருங்குகை யிலேயே பெரிதாகிக் கொண்டே வந்து, அந்த ராக்ஷஸச் சுடரின் தண்ணொளி கண் கூசிற்று. கண்ணைக் கசக்கிக் கொண்டு விழித்தபோது பொலபொலெனப் புலரும் வேளை, திண்ணையில் அவர் பக்கத்தில் வெகு நெருக்கமாய், அவர்மேல் இடித்துக்கொண்டு ஒரு உருவம் உட்கார்ந் திருந்தது. பதறி எழுந்தார்.

"நான்தான் அப்பா!" குரலில் ஆண் கார்வை. அவர் தோளைத் தொட்டாள். சிரித்தாள். 'ஏன் பயப்படறேள்?' பாவாடைத் தாவணியில் மதமதவெனப் பதினாறு.

குருக்களுக்கு முகத்தின் அங்கங்கள் துடித்தன. வாயுள் நாக்குத் தடித்தது. இழுத்துவிடுமோ? "நீயா?"

"ஏன் நானாயிருக்கப்படாதா?"

கைகள் கூப்பிக்கொண்டன.

"ஜகன்மாதா, நீ என்னை அப்பா என்று அழைக்கும் விபரீதம் என்ன? அபராதம் ஏதேனும் நேர்ந்துடுத்தா? மன்னிச்சுடு தாயே, மன்னிச்சுடு." கண்கள் துளும்பின.

"உம்—என்ன உளறல்? ஆசைப்பட்டு வந்திருக்கேன்!"

அவர் பார்வை அவரை அறியாமலே கர்ப்பக்ருஹத்துள் சென்றது.

"அங்கே என்ன இருக்கு, கல்தான்!" கைகொட்டிச் சிரித்தாள். "நான் இங்கேன்னா இருக்கேன், அப்பா நீங்கள் வளர்த்த நான், அப்பா, நீங்கதான் சொல்லணும். மனுஷாள் என்னைக் கல்லில் பார்க்கத் தயாராயிருக்காள், ஆனால் உயிரில் பார்க்க ஏன் பயப்படறாள்?" அவர்களுக்கே இஷ்ட மில்லையா?"—அவள் கண்கள் பளபளத்தன. கண்ணீரிலா?

"தேவி, என்னை—எங்களை மன்னிச்சுடு"

"ஸ்ப்!" கூம்பலில் உறைந்துபோன அவர் கைகளைப் பிரித்துவிட்டாள். அவளுடைய உடலின் உற்ற கறுப்பில் உள்ளங்கைகள் செந்தாமரை. வெள்ளை விழியோரங்களில் செந்நரம்புக் கொடி. உதடுகள் வெற்றிலைச் சிவப்பு. புருவ நடுவில் குங்குமம். நெற்றியில் சூர்யோதயம்.

"அப்பா, நான் பிறந்த வீட்டுக்கு வர ஆசைப்படறேன். என்ன முழிக்கறேள்? நான் உங்கள் வீட்டில் வந்து இருக்கப் போறேன். ஒருநாள்தான்"—சுட்டுவிரலைக் காட்டினாள்.

வாயடைத்துப் போனார். உள்ளே சந்தோஷம், பயம் இரண்டும் சேர்ந்த குழப்பம்.

"அப்பா, பொண்ணாப் பிறந்தால் பிறந்தாத்து ஆசை துப்புற விட்டுடாது."

"பாண்டிய ராஜகுமாரி, நீ என்னை கேலி செய்கிறாய்."

"'கமலாம்பிகே, குழந்தே'ன்னு மூச்சுக்கு மூச்சு கூப்பிட்டது யார்?"

"அம்மா, என்னைக் கேட்கணுமா, என்னைக் கேட்காமலே என் வீட்டுக்கு வந்து உட்கார முடியாதா?"

"வாய்ச்சொல் கௌரவம்னு ஒண்ணு இருக்கேப்பா! தவிர, நான் வெகுளி. என் கணவரின் எல்லையற்ற பொறுமையும் உங்களைப் போலோரின் எல்லையற்ற அன்பும் தான் நான் இந்த அளவுக்கு என் இஷ்டத்துக்கு வளரக் காரணம். பொறுமைக் கடல்னா அவர்தான். எனக்கு அது முற்றிலும் பொருந்தாது. நான் வெகுளி, இப்பவும் அவரைக் கேளாமல்தான் வந்திருக்கேன். அவர் தடுக்க வில்லை. உங்கள் விஷயத்தில் தடுக்கமாட்டார். என் குழந்தை களிடம் எப்போதுதான், எப்படித்தான் நான் இருக்கிறது அப்பா?"

அவள் குரல் நடுங்கிற்று. "அப்பா, நீங்கள் எல்லோரும் தெய்வத்தை உங்கள் தன்மையில்தான் படைத்திருக்கிறீர்கள். எனக்கும் ஏக்கம் உண்டு. கண்ணீர் உண்டு. அவருக்கு அதெல்லாம் இல்லை. அவருக்கு உருவமே இல்லை."

சிரித்தாள். "வாங்கோ போகலாம்."

கூனிந்த தலை நிமிராமல், அகிலா கோலத்தில் முனைந் திருந்தாள். பெரிய தாமரை. அடுக்கடுக்கான இதழ்களின் சிக்கலான கோடுகள். விரல்கள் நுனியிலிருந்து கோலமாவு, தீர்மானமான வளைவுகளில் சொரிந்தது.

இந்த வயதிலும் அகிலா நிறம் குன்றவில்லை. அழகா யிருந்தாள். அது, கண்ணைப் பறிக்கும் ஒரு தினுசான வெளிறிச் சிவப்பு. வயதுக்கு மயிர் நரைக்கவில்லை. வங்கிக் கூந்தல், இன்று, எண்ணெய் ஸ்நானத்தில் சற்று புஸ¨ புஸ¨. தாடைகளில், கழுத்தில் இப்பத்தான் சுருக்கங்கள் தெரிய ஆரம்பித்திருக்கின்றன. பட்டுப் புடவையிலிருந்தாள். வெள்ளிக்கிழமை அல்லவா!

கோலத்தின் வெளி ஓரங்களைச் சரிபண்ணிவிட்டு பார்வை திரும்புகையில் பூவின் மையத்தில் இரண்டு

பாதங்கள் நின்றிருக்கக் கண்டாள். கண்கள் மெதுவாய் மேனோக்க...

யாரிந்தப் பொண்ணு? எப்படிக் கோலத்துள் வந்தாள்?

"என் பாதங்களுக்கு அளவெடுத்த மாதிரியே இருக்கே அம்மா!"

அகிலாவின் விழிகள் வட்டங்களாயின. எனக்கு இவள் மேல் ஏன் கோவம் வரல்லே? வந்தவளின் கண்கள் அவள் மேல் குனிந்து சிரிக்கையில் அகிலாவுக்கு என்னவோ பண்ணிற்று. (வயிறு திறந்துகொண்ட மாதிரி என்று சொல்லலாமா) கோலத்தில் சில கோடுகள் அழிந்திருந்தன.

அருகே கைகட்டி நின்ற குருக்கள் மேல் அவள் பார்வை திரும்பியது.

"அகிலா, இவள் நம்மோடு இருக்க வந்திருக்காள்."

அகிலாவின் புருவங்கள் உயர்ந்தன. உடனே சமாதானப் படுத்துகிற மாதிரி, அவர், "இவள் கணவன் வீட்டிலிருந்து வந்திருக்காள்."

"கோவிச்சுண்டா?"

குருக்கள் முகம் மாறிற்று. ஓ. இப்படியும் ஒரு கோணம் இருக்கா?

அவள் சிரித்தாள். "சுமாச்சுமா வந்திருக்கேன். ராத்ரி போயிடுவேன்."

"ராத்ரி என்ன கணக்கு?"

"சூர்யோதயத்திலிருந்து அஸ்தமனம் வரை ஒரு பகலாகுமோன்னோ?"

அகிலாவுக்குப் புரியவில்லை.

"உள்ளே வா கண்ணு—இல்லே சத்தேயிரு, கோலத்தில் நிக்கறே. ஆரத்தி கரைச்சு கொண்டு வரேன்."

அவள் தோளைத் தொட்டபடி, வாசற்படி தாண்டியதும், அவளுக்குக் கழுத்திலிருந்து கால்வரை—"ஜிவ்"—உயிர் வெளியே குதிக்கும்போல் பரபரப்பு, ஆனந்தம், பயம். கையை மார்க்குலையில் அழுத்திக்கொண்டாள்.

"ஏண்டிம்மா குழந்தே, மாப்பிள்ளையைக் கூட அழைச்சுண்டு வரப்படாதோ?"

"அவர் மாப்பிள்ளையாச்சேம்மா. அவர் எப்பவும் மாப்பிள்ளை முறுக்குத்தான். எனக்குப் பிறந்தாத்து எண்ணம் வந்துடுத்து, வந்துட்டேன்."

"குழந்தே, நீ உறவு கொண்டாடச்சே, எனக்கு உன்னைப் பெத்த சந்தோஷமே வரது."

"ஏம்மா, பெத்தால்தான் உறவா? பாவனைதான் உறவு. ரெண்டு பேரும் சேர்ந்து நில்லுங்கோ, நமஸ்காரம் பண்றேன்."

"பண்ணடி கண்ணே, மகராஜியாயிரு."

அவர் கண்கள் பயத்தில் சுழன்றன. தடுக்க முயன்ற கைகளைச் சிரமப்பட்டு, பின்னுக்கு இழுத்துக் கொண்டார்.

நமஸ்கரிப்பில் குனிந்த அவள் முகம் நிமிர்கையில், கூடத்து ஜன்னல் வழி வெயில் பட்டு, முகமே சிவப்பாய் ஏற்றிக்கொண்டது.

ஜ்வாலாமுகி.

அகிலா கண்களைக் கசக்கிக்கொண்டாள். ஊஹூம் ஒன்றுமில்லையே. அந்தப் பெண் எழுந்து நின்றுகொண் டிருந்தாள்: "நீங்கள் இப்படி வாழ்த்தி வாழ்த்தித்தான் நான் வயசுக்குமீறிக் குதிரையா வளர்ந்துட்டேன்." 'ஹூம்'— மூக்கைச் சுருக்கிக்கொண்டாள். "கம்முனு வாசனை! அப்பா பசிக்குது."

அடுப்பு மேடைமீது இறக்கி வைத்திருந்த வெண்கலப் பானையின்மேல் தட்டை எடுத்தவுடன்,

"ஆ, சக்கரைப் பொங்கல்! எனக்கு உசிராச்சே! அம்மா, அத்தனையும் எனக்குத்தானே?"

"ஆமாண்டி செல்லம், உனக்கேதான். வெள்ளிக்கிழமை, பௌர்ணமியாச்சே! நைவேத்தியத்துக்குப் பொங்கல் வெச்சேன். அப்பா ஸ்நானம் பண்ணிண்டிருக்கார். நிமிஷமாகக் கோவில் பூஜை பண்ணிட்டு வந்துடுவா—ஆ—என்னடி பண்ணறே?"

அவள் பொரிக்கப் பொரிக்கப் பொங்கலை விரலால் வழித்து வாயில் கப்பி, விரல்களைச் சப்பினாள்.

'திக்'கென்றது. அகிலா குருக்களைத் தேடிச் சென்றாள். அவர் கிணற்றடியில் ஸந்தியாவந்தனம் பண்ணிக்கொண்டிருந்தார்.

"யார் இந்தப் பெண்? இவளை எங்கே பிடிச்சுண்டு வந்தேள்?"

"என்ன ஆச்சு?"

"நைவேத்யத்தை ருசி பார்த்து, எச்சில் பண்ணி வழிச்சு முழுங்கிண்டிருக்கா."

"ஓ!" குருக்களுக்கு ப்ரமை பிடித்தாற்போல் ஸ்தம்பித்து, உடனே சிரித்துவிட்டார்.

"இதிலே என்ன சிரிக்கக் கண்டுட்டேள்?"

குருக்கள் சமாளித்துக்கொண்டு "இதோ பார் அகிலா பொறுத்துக்கோ. இன்னி சாயங்காலம் வரைக்கும்தான்."

"இதென்ன ரெண்டுபேரும் சாயந்திரத்துக்குக் கண்டம் வெச்சிப் பேசறேள்! அவளை வெள்ளிக்கிழமை அதுவுமா யார் போகச் சொல்றா?"

"அகிலா, அவள் நம் இஷ்டத்திலில்லை. நாம்தான் அவள் இஷ்டத்திலிருக்கிறோம்."

"இதென்ன பாஷை, என்ன புதிர்?"

"சாயந்தரம் வரைக்கும்தான்"—கெஞ்சினார்.

ஒன்றும் புரியவில்லை. பொட்டைத் தேய்த்துக் கொண்டு அகிலா உள்ளே சென்றாள். கூடவே பிடரி குறுகுறுத்தது. பயம்?

அவள் டப்பாக்களைத் திறந்து, உள் பார்த்து மூடிக் கொண்டிருந்தாள்.

"என்னம்மா தேடறே?"

"பசிக்கறதம்மா!"

அகிலாவின் பார்வை அடுப்பு மேடைமேல் சென்று திக்கிட்டது.

"பெண்ணே, உன்பேர் என்ன?"

"கமலா."

"சரி, வா கமலா, இந்த மணைமேல் உட்கார். வெள்ளிக் கிழமை, ஒரு கை எண்ணெய் தலையில் வைக்கறேன். சற்றுப் பொறு, சமையலாயிடும்."

"ஆமாம், எத்தனை நாள் வேணுமானாலும் பட்டினி கிடப்பேன். பசிக்கணும்னு நெனச்சேன்னா தாங்கவே முடியாது. என் பசி ஒருத்தி பசி மட்டுமல்ல. எத்தனையோ பசிகள்."

என்ன உளறுகிறாள்? வெண்கலப் பானை காலி. இன்னுமா பசி? அதென்ன பசி? ஆச்சரியம். கூடவே பயம்.

கூந்தலின் அடர்த்திக்கும் நீளத்துக்கும் எண்ணெய்

பற்றவில்லை. எண்ணெய்க் காப்பில் கருங்காலி சிற்பம் போலப் பளபளத்தாள்.

சுவரில் மாட்டியிருந்த படத்தெதிரே—அவள் நின்றாள்.

அகிலாவின் பட்டுப் புடவையில், கோடாலி முடிச் சிட்டுக் காடாய்ப் படர்ந்த கூந்தல், நெற்றியில் குழைத்துப் பட்டையாயிட்ட விபூதி (அவள் வீட்டுப் பழக்கமாம்) நடுவில் குங்குமம். அசைவற்ற சுடராய்த் தியானத்தில் நின்றாள்.

குத்துவிளக்குச் சுடர் அவளைக் கண்டு அஞ்சினாற் போல் பின்வாங்கி, முதுகு நெளிந்து ஆதரவு கண்டாற் போல நிமிர்ந்து பிதுங்கிற்று. உதடுகள் செதுக்கலில் அசலன மாய், மோவாய் நடுவே குழிவு. அகிலா அதிசயித்து நின்றாள். அறியாமல் கைகள் கூப்பிக் கொண்டன. பார்க்கப் பார்க்க இவளிடம் ஏதேதோ புதுப்புது அழகுகள் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன. அப்படியே கல்லாகிவிட்டாளா? பயம் வந்துவிட்டது. "கமலா! கமலா!" அவள் தோளைத் தொட்டு அசைத்தாள்.

விழிகள் மெல்லத் திறந்து, அவளை அணைத்தன.

அகிலாவுக்கு நெஞ்சு விம்மிற்று. "என்ன அம்மா—?" அவள் அவளை அணைத்துக்கொண்டாள். அகிலா பொட்டென உடைந்துபோனாள். விக்கி விக்கி அழுதாள். இத்தனை நாள், தனக்குத்தானே ஒப்புக்கொள்ளாமல், தன்னுள் சிறை கிடந்த தாய்மையின் தவிப்போ? குருக்கள் இல்லை. கோவிலுக்குப் போயிருந்தார்.

அவர் கோவிலிலிருந்து திரும்பியபோது, அவர் முகம் ஒரு தினுசாக மஞ்சள் பூத்து வெளிறிட்டிருந்தது.

"என்ன ஆச்சு?"—அகிலா பதறிப் போனாள்.

அவர் உதடுகள் நடுங்கின. வாய், ஏதோ சொல்ல முயலும் முயற்சியில் தோற்றன.

*அவள் கண்கள் அவளை நாடின. அகிலாவின் கேள்விக்குப் பதில் அங்கேதான்...கமலா பொட்டெனச் சிரித்தாள். அவள் விழிகள் கூத்தாடின.*

*"ஒண்ணுமில்லேம்மா, அப்பா அனாவசியமா மிரண்டு போயிருக்கார். காரணம் இங்கிருக்க, எங்கேயோ தேடினால்? சரி சரி, ரொம்பப் பசிக்கிறது. அப்பா, சோத்து மூட்டையை அவிழுங்களேன். அம்மா, எனக்கு ஊட்டிவிடறியா...?" சிரித்தாள். பருப்புஞ் சாதத்துலே நெய்யும் சர்க்கரையும் கலந்து, இது போதாது, நிறையப் பிசை. எல்லாருக்கும் சேர்த்துப் பிசை. ஒரே பாத்திரத்தில்."*

*சிரித்தாள். பற்களில் நக்ஷத்ரங்கள் மின்னின. அகிலா கண்ணைக் கசக்கிக்கொண்டாள். ஒண்ணுமில்லியே!*

*அவள் வாயில் கவளத்தைப் போட்டதும் அகிலா ஒரு அசாத்ய பரவசத்தில் ஆழ்ந்தாள். திடீரெனச் சுரப்பில் தன் ரவிக்கை நனைந்ததை உணர்ந்தாள். அவளுக்கு அது ஆச்சர்யமில்லை. ஊட்டக் கேட்டது ஆச்சர்யம் இல்லை. எதுவுமே ஆச்சர்யமில்லை. ஒரே அன்பு வெள்ளத்தில் மூழ்கிப்போனாள்.*

*இப்ப நான் உங்களுக்கு ஊட்டறேன், "ஆ...ஆ...அப்பா, வாயைத் திறவுங்கோ..."*

*ஆ, மதுரமே! ஒரே கலம். எச்சில், தீண்டல், ஆசாரம், பூஜை புனஸ்காரம் என்ன வேண்டிக்கிடக்கு? எல்லாமே ஒரே அன்பு வெள்ளத்தில் அடித்துக்கொண்டு போயின.*

> *முதன் முத்தத்தின் எச்சிலில் ஆரம்பித்து*
> *உயிர் முத்து வைத்த வித்திலிருந்து கடைசியில்*
> *கடைவாயில் வழியும் எச்சில்வரை*

தலைமுறை தலைமுறை எச்சில்
இல்லாவிடில்
இப்புவனமே ஏது?

வந்தவள் சொன்னாளா? நெஞ்சில் தானே தோன்றியதா? ஒரே ஆனந்த மூர்ச்சையில் எந்நேரம் மூழ்கியிருந்தனரோ?

தோட்டத்தில் கிணற்றடியில் பலா மரத்தில், கூட்டில், இரையைத் தாங்கிவரும் தாயைக் கண்டு குஞ்சுகள் ஆர்ப்பரிக்கின்றன.

தூரக் காட்டில் தேன் குருவி பகு சொகுசில் பூவுக்குப் பூ அந்தரத்தில் நின்று தேனை உறிஞ்சுகிறது.

மேகங்களற்ற நிர்ச்சலமான நீலத்தில் வெள்ளித் தாம்பாளம் கண் கூச தகதகக்கிறது. இல்லை, இது அவள் அபய கரத்தில் ஜ்வலிக்கும் மோதிரத்தின் முகப்பு.

நண்பகல் சொக்கல்.

நேரம் முதிர முதிர, அவள் வதங்கலுற்றாள். வேர் கழன்ற இலைபோல் கொஞ்சங் கொஞ்சமாய்த் துவண்டு...

"என்ன குழந்தை ஒருமாதிரி ஆயிட்டே, உடம்பு சரியில்லையா?"

"அவர் நினைப்பு வந்துவிட்டதம்மா."

"என்ன அதுக்குள்ளேயுமா? சாயந்தரம்தான் போப் போவதாச் சொல்லிண்டிருக்கே! வெள்ளிக்கிழமையுமதுவுமா."

"அவர் நினைப்பு வந்துட்டதம்மா. நினைப்பு வந்தால் விடாதம்மா. நொடியும் யுகம் அம்மா."

"நீ என்ன சொல்றேன்னு விளங்கல்லியே!"

"புரியறதுக்கு ஒண்ணுமில்லேம்மா. அவர் பொறுமை கடலினும் பெரிது. கோபம் கடல் பற்றி எரியும்போல். நான் போகணும்."

அகிலாவுக்குப் பயத்தில் உடல் சிலிர்த்தது.

"நீ வந்த அதிசயம் என்ன, போற சுருக்கு என்ன? ரெண்டுமே எனக்கு அப்பாற்பட்டது. சரி வா. பின்னி விடறேன்." இதுமாதிரி சடையைப் பின்ன எத்தனையோ கொடுத்து வெச்சிருக்கணும். இது கூந்தலா, காட்டாறா, பின்னப் பின்னச் சோம்பிக்கொண்டே. தடுமனாய்ப் பாம்பு நீண்டது.

"கமலா, என் பட்டுப் புடவையிலேயே அவரிடம் போ, என் நினைவாயிருக்கட்டும்."

"ஐயையோ அதெல்லாம் வேண்டாம். எப்படி வந்தேனோ அப்படித்தான் போகணும். அவர் அப்படி."

இப்படியும் ஒரு புருஷன். அவன்மேல் இவளுக்கு இத்தனை மோகம்! ஒண்ணும் புரியல்லே. "சரி வா, போகலாம்."

"நீங்கள் வேண்டாம், எப்படிப் போனேனோ அப்படிப் போயிடறேன். அப்பா வேணும்னா கோவில் வரை வரட்டும். அவர் சுவாமி சன்னதியில் இருப்பார்."

அகிலா அவர்களைப் பார்த்துக்கொண்டே நின்றாள். தானே தன்னை விட்டுப்போவது போலிருந்தது.

அப்பாவும் மகளும் இடைவழியில் பேசவில்லை. குருக்கள் நெஞ்சில் ஏதேதோ குழுமிற்று. சொல்லவில்லை.

த்வஜஸ்தம்பத்தண்டை அவரைக் கையமர்த்தினாள். "போயிட்டு வரேனப்பா..."

உள் ப்ரகாரத்துள் ஆவலுடன் ஓடினாள்.

"அப்பா, அப்பா! அவரைக் காணோமே!"—இரண்டு கைகளையும் விரித்தவண்ணம் அவள் கதறுகையில், பிரமிக்கத்தக்க அழகில் பொலிந்தாள்.

ஐயர் எட்டிப் பார்த்தார். கர்ப்பக்ருஹத்தில் லிங்கத்தைக் காணோம்.

'ஆண்டவா ஆண்டவா!' கதறிக்கொண்டே வெளியே ஓடினாள். குருக்களும் கத்திக்கொண்டே தொடர்ந்தார். "இங்கே லிங்கம் இல்லை. அம்மன் சன்னதியில் மத்யானத்திலிருந்தே மூலவர் இல்லை. ஐயோ என்ன செய்வேன்!"

"என்ன செய்வேன்! என்ன செய்வேன்!" அழுது கொண்டே, தன்னை அழுத்திய துக்கத்தைத் திமிறிக் கொண்டு குருக்கள் விழித்தெழுந்தார். உடல் பூரா வேர்வை ஸ்நானம். கண்ணைக் கசக்கிக்கொண்டார். எழுந்து உட்கார்ந்தார். கனவின் பீதி தெளியவில்லை. இருக்கிறாளா? இருந்த இடத்திலிருந்து எட்டிப் பார்த்தார்.

கர்ப்பக்ருஹத்தில், சந்து வழி, சாய்வாட்டில், அவள் முகத்தில் நிலாவின் வியாபகத்தில் சிரித்துக்கொண்டிருந்தாள்.

# 8

# வேண்டப்படாதவர்கள்

வீட்டின் கொல்லைப்புறம் தாண்டி மரங்களும் செடி கொடிகளும் புதர்களும் அடர்ந்தன. பூமிமேல் உதிர்ந்த இலைகளும் சருகுகளும் காலடியில் புதைந்து புதைந்து ஜமக்காளம் விரித்தாற்போல் பரவிக் கிடந்தன.

அந்த இடமெல்லாம் விலையாகி விட்டதாகக் கேள்வி. ஆனால் இன்னும் கட்டிடங்கள் எழும்பவில்லை. இப்போதைக்கு முயற்சி இருப்பதாகவும் தெரியவில்லை.

அவர் ஆபீஸ் போனபின் தன் சாப்பாட்டையும் அடுக்குள் காரியங்களையும் முடித்துக்கொண்டு வாசற் கதவைத் தாளிட்டுவிட்டு, உஷை அனேகமாய் இங்கேதான் பொழுதைக் கழித்துக் கொண்டிருப்பாள். ஒரு மரத்தின் மேல் சாய்ந்தபடி, புட்களின் அரட்டையைக் கேட்டபடி, மெல்லிய காற்றின் மூச்சில் சருகுகள் அசைவதைப் பார்த்துக் கொண்டு இலைகளின் சந்து வழி பாயும் ஒளிக்கதிரில் கண் கூசிக்கொண்டு உட்கார்ந்திருப்பாள். சமயங்களில் மரத்தில் சாய்ந்தபடியே அரைத் தூக்கத்தில் கண் சொக்கி விடுவது முண்டு. பூச்சி பொட்டுக்களைப் பற்றிக் கவலை, விழித்துக் கொண்ட பின்னர்தான். இதுவரை ஏதும் நேராதவரை பயமில்லை.

கோபி எங்கே? நினைப்பு வந்து 'வெடுக்'கென்று விழிப்பு வந்துவிடும். அவன் ஏதேனும் பட்டாம்பூச்சியைத்

துரத்திக்கொண்டு, அல்லது குந்துமணி பொறுக்கிக்கொண்டு, அல்லது இந்த அடவியை ஒட்டினாற்போல் அதோ தெரியும் குன்றைச் சுற்றிக்கொண்டு இங்குதான் எங்கேனும் இருப்பான். காற்று மறுபடியும் முகத்தை வருடிக் கண்கள் சொக்கும். தந்திக் கம்பங்கள் தோப்பின் குறுக்கே சென்று, தாலாட்டு ரீங்கரித்தன. நீர்க்குடம்போல் நினைவோட்டத்தில் சுகமாய் அமிழ்ந்தாள்.

இந்த இடத்திலேயே ரத்தோஷ்ணம்போல் ஒரு கதகதப்பான ஆதரவு இருந்தது. இடத் தாவரத்தின் தண்மை யில் நடுவெய்யிலின் வெம்மை மிருதுவாகி உடலும் மனமும் ஒருவிதமான போதையும் சோம்பலும் கண்டன. வேளா வேளைக்கு யாரேனும் காபியும் உணவும் கொணர்ந்து, இந்த சுகநிலை கலையாமல் ஊட்டிவிட்டால் எப்படியிருக்கும்! ஆனால் நடக்கிற காரியமா? இதோ வெயில் லேசா மஞ்சள் பூக்க ஆரம்பிச்சாச்சு. வேலைக்காரி வந்துடுவா. அடுத்தாற் போல் அவர்.

தோளை யாரோ குலுக்கறா. மனமில்லாத மீட்சியில், விழிகள் கோபத்தில் உறுத்தின. யாரு?

"அக்கா எங்கே?"

"வந்துடுவா. விளையாடப் போ."

"அப்பிடித்தான் தினமும் சொல்றே!" சீற்றத்தில் அவன் கண்கள் நெரிந்தன. "அக்கா எங்கே?" கடைவாயில் எச்சில் வழிந்தது.

அவன் முதுகைத் தடவினாள். "வருவாள், வருவாள்."

அவன் கண்கள் கோபம் மறந்து குழப்பம் கண்டன. மல்லர்களின் தழுவல்போல் அவர்களின் பார்வைகள் ஒன்றுடனொன்று பின்னின.

அவனிடம் அவளுக்கு உள்ளூர அச்சந்தான். இவனைக்

கட்டுப்படுத்த கிருஷ்ணாவால்தான் முடியும். இவனும் அவளுக்குத்தான் படிவான். அதுவும் கிருஷ்ணா போனபின் இவனுடைய லூட்டி தாங்கக் கூடியதாயில்லை.

ஆமாம், கிருஷ்ணா என்னவானாள்? மூணு மாசமா அவளிடமிருந்து கடிதமில்லை. கடைசியாக வந்ததில், உண்டாகியிருப்பதாய் ஏதோ வார்த்தையோடு வார்த்தையா எழுதியிருந்தாள். எத்தனை மாசம், எப்போ உறுதியாச்சு? உறுதியாச்சா? உடம்பை ஏதேனும் பண்ணறதா? இதெல் லாம் பத்தி ஒண்ணும் காணோம். என்னவோ 'மொட்டைத் தாதன் குட்டையில் விழுந்த' மாதிரி ஒரு வரியிலே சேதி சொல்லிட்டா ஆச்சா? அம்மாவுக்குப் பெண் எழுதற மாதிரியாயிருக்கு? தானே அதில் சம்பந்தப்படாத மாதிரி! கூடவே ஒரு வாக்கியம். 'இந்தக் குழந்தை பிறந்தாலும், எனக்கு கோபியைவிட முக்கியமாயிருக்காது.' உஷைக்குக் கீழுதடு ஏளனத்தில் பிதுங்கிற்று. இதுமாதிரி எத்தனை பேரைப் பார்த்தாச்சு! சிசு பூமியில் விழுந்துடட்டும், அப்போன்னா தெரியப் போறது! நான் பார்க்காமல் இருக்கப் போறேனா?

அப்பிடியானால் வளைகாப்பு, பூச்சூடல், சீமந்தம் எதுவும் கிடையாதா? பிரசவத்துக்கேனும் கொண்டு வந்து விடுவாளா? சந்தேகம்தான். மஸ்கட் என்ன கொல்லைப் புறமா? குடும்பமே மஸ்கட்டுக்குச் சம்பாதிக்கப் போயிருக்கு. பெண்டுகளும் உத்தியோகம் பண்ணறாளோ என்னவோ? எல்லாரும் படிச்சவா. நம்ம பெண், வீட்டுக்கு மருமகள்னு கௌரவப் பேரில், வீட்டுக்குச் சமையல்காரி. அப்படிப் பெண் பிடிக்கத்தானே இங்கே வந்திருக்கா. இல்லாட்டா நம்மோடே ஏன் சம்பந்தம் தேடறா?

அத்தோடே கலியாணத்தன்னி ராத்திரியே பிள்ளை வீட்டாருடன் உரசல் வந்துடுத்து. அதுவும் கோபியால்தான்.

அக்காவை மணவறையுள் போகவிடாது, வழக்கம் போல் அவள் பக்கத்தில் தான்தான் படுத்துக்கணும்னு ஒரு நிர்த் தூளி பண்ணியிருக்கான் பாருங்கோ—இப்போ நெனச்சால் கூட சிரிப்பு வரல்லே. அவன் அப்பா கையைக் கூட ஓங்கிட்டார். சம்பந்திப் பிராமணன்தான் தடுத்தார். "குட்டித் தம்பியிருக்கற இடத்துலே இது சகஜம்தானே! பையன் கையில் ஒரு லட்டைக் கொடுத்தால் சரியாப் போயிடுவான். நானே சரிபண்றேன் பாருங்கோ—அம்பி, நீ சமர்த் தோன்னோ! என் கையிலே என்ன இருக்கு பார்!—"

கோபி வீசியெறிந்த லட்டு அவர் முகத்தில் விண்டு, மாமனார் அவன் கண்களில் அந்த வெறியையும், வாயில் வழிந்த ஜொள்ளையும் கண்டு ஸ்தம்பித்துப் போனார்.

போதும் போதாத்துக்கு கிருஷ்ணா: "எல்லாரும் சேர்ந்து குழந்தையை ஏன் படுத்தறேள்? ஏற்கெனவே உடம்பு சரியில்லை" என்றுவிட்டாள்.

"ஓ அப்படியா, Izz that so?" அவர் ஆச்சரியம் அதிகரித்தது. "நந்தா, ஏமாந்துட்டோமாடா? கலியாணத்துக்கு முன் இவா ஃபாமிலி மெடிக்கல் ஹிஸ்டரியையும் செக் பண்ணியிருக்கணுமோ? வகையா மாட்டிண்டுட்டோமோ? ஆமா, அஞ்சு வயசுங்கறா, பையன் பத்து வயசு வளத்தியா யிருக்கான்! இன்னுமா அக்காகிட்ட படுத்துக்கறான்?"

விஷயத்தின் ட்ராக்கை மாற்றிவிட்டது மாப்பிள்ளை யின் சாதுர்யம்தான்.

"என்னப்பா, சின்ன விஷயத்தைப் பெரிசு பண் ணிண்டு, அனாவசியக் கவலைப்பட்டுண்டு? நாமோ பெண்ணை அழைச்சுண்டு போயிடப்போறோம். அவள் தம்பியுமா கூட்டிண்டு போப்போறோம்? watch your B.P., Dad.."

அச்சமயம் அவர்கள் கண்கள் ஒன்றோடு ஒன்று பூட்டிக் கொண்டபோது கிருஷ்ணாவின் பார்வை நன்றி சொரிந்தது. ஆனால் அவன் கண்களில் அவள் சந்தேகமும் சஞ்சலமும் தான் படித்தாள். 'இதோ பார், எது எப்படியோ, இப்போது நான் உன் பக்கம் பேசிட்டேன். இனிமேல் நீதான் ஒத்துழைக் கணும்' என்று அவை கெஞ்சின.

அந்த வாரமே பிள்ளைவீட்டாரை வழியனுப்ப விமானத் துறைமுகத்துக்குப் போகும்போது கோபிக்குத் தூக்க மருந்து கொடுத்துத் தூங்க வைத்து வீட்டை வெளியில் பூட்டிக் கொண்டு போம்படிதான் ஆயிற்று. Highly risky. வேறு வழியில்லை. தலையெழுத்து.

பிள்ளைவீட்டார் தாங்கள் நேரிடையாகக் கடிதப் போக்குவரத்து வைத்துக் கொள்ளவில்லை. ஆனால், கிருஷ்ணாவிடமிருந்து பதினைந்து நாட்களுக்கு ஒருமுறை கடிதம் ஒழுங்காய் வந்து கொண்டிருந்தது. அந்த மட்டுக்கு அவாளுக்குப் பெரிய மனசுதான். இல்லை, மாப்பிள்ளை மனசா?

கடிதங்களில் புக்ககத்தைப் பற்றிக் குறையாகவோ, புகாராகவோ ஏதுமில்லை. பெண் ஜாக்கிரதையாக இருக் கிறாளா அல்லது நன்றாகவே வைத்துக் கொள்கிறார்கள் என்று அர்த்தமா? இல்லை, தன்வீடு என்று ஆனபின், விட்டுக் கொடுக்கவில்லையா? கிருஷ்ணா அப்படிப் பட்டவள்தான். மேலுக்குப் பவ்யம், பணிவுக்கடியில் எப்பவுமே ஒரு திமிர் அவளுக்கு உண்டு. சுபாவம்.

அவளுடைய எல்லாக் கடிதங்களும் கோபியைப் பற்றித் தான் விசாரிக்கும், கவலைப்படும். லேசாய் அங்கு இங்கு தேம்பும்.

ஆனால் மூன்று மாதங்களாகக் கடிதம் இல்லை.

ஆனால், அதுபற்றியும் கவலைப்பட்டுக் கொண்டேயிருக்க முடியாது. நலமோ, கேடோ அவளாவாளுக்கு அவா அவா இடமென்று ஆகிவிட்டது. ஆண்களுக்கு உத்யோகம், பெண்ணுக்குப் புக்ககம். ஆயிரம் திட்டம் போட்டாலும், வாய்ப்பு என்று இரண்டிலுமே இருக்கு. இஷ்டப்பட்டால் விதியென்று சொல்லிக்கோ. இது நம் சமுதாயத்தின் யதார்த்த உண்மை.

உஷை பெருமூச்செறிந்து எழுந்தாள்.

"வாடா கோபி போகலாம்!"

ஆனால், கோபி கண்ணில் படவில்லை.

சரி, வரப்போ வரட்டும்.

வீட்டை நோக்கி நடந்தாள்.

## 2

பையன், எதிரே பாறைமேல் பார்வை பதிந்தபடி, வளைந்து கோணிக் கொண்டிருக்கும் ஒரு வேர்மேல், பையன்களின் சுபாவப்படி, இசைகேடாய் அமர்ந்திருந்தான்.

ஒருமுறை, அக்காவும் தம்பியும் அதை ஏற முயன்று பாதியில் முடியாமல், இறங்க முடிந்ததே புண்ணியம் என்று பூமியில் பாதம் பதிந்த உடனேயே அவனைத் தனியாக ஏறக் கூடாதென்று கிருஷ்ணா கடுமையாய் எச்சரித்திருக்கிறாள்.

இச்சமயம் அவன் எண்ணங்கள் என்ன வடிவம் எடுத்தன என்று அவன் அறியான். அவற்றுக்கு வகுத்த பாதை கிடையாது. கோடுகள், வளைவுகள், நெளிவுகளாய் ஆரம்பித்து ஏதோ ஒரு உருவின் வரைவில் ஒன்று கூடுமோ? பிறகு அந்த உருவுக்கு அசைவு வருமா?

ஒன்று முழு உரு ஆகுமுன்னரே, ஒன்றன்மேல் ஒன்று

தள்ளிக் கொண்டு, கலைந்து குலைந்து உடனேயே மறதியில் உருகிப் போயின. அவை அவனைச் சூழ்ந்து கொண்டு சமயங்களில் அழுத்திய இருள் பயமுறுத்துகையில், எப்ப வும் ஒரு தூர வெளிச்சம் அவனுக்குத் துணை காட்டிற்று. அது என்னமோ, நாமமோ நாமத்தின் ரூபம் அக்காவின் நினைப்போ அந்தப் பெயர் நாக்கில் சுழல்கையில், ருசியில் வாயோரம் எச்சில் வழிந்தது. விழிகள் தனி ஒளியில் விரிந்தன.

கிருஷ்ணா.

## 3

கிருஷ்ணாவுக்கு இருபது வருடங்களுக்குப் பின், இடையில் பேறு இலாது, கருவுற்றதாய் உணர்ந்ததும், உஷை வியப்பும், வெறுப்பும் கோபமுமானாள். சே, இதென்ன விபரீதம்! இப்போ கிருஷ்ணாவுக்குக் கலியாணமாகி யிருந்தால், தான் பாட்டியாகி இருப்பாளே!

கலைக்க முயற்சிகள் பலிக்கவில்லை. வேளை தப்பிப் போச்சோ, அல்லது கரு அத்தனை வலுவோ? அவருக்கு இஷ்டமில்லை. அவர் தெய்வ பக்தி மிக்கவர். சிசுஹத்தி மஹாபாபம்.

"அதனால் என்ன மாமி? வீட்டுக்கு ஒரு ஆண் ஆளப் பிறக்க வேண்டாமா? வம்சம் விருத்தியாக வேண்டாமா?" என்று சொன்னவர் சொன்னாலும், அவர்களே தங்கள் புறங்கைக்குப் பின்னால் ஒளிந்துகொண்டு சிரிக்கவில்லை என்று சொல்ல முடியுமா?

இது இல்லேன்னு ஏங்கினேனா, பிள்ளை வரம் கேட்டேனா? ராமேசுவரம் போனேனா? அதுவும் வயசான பெண்ணை வீட்டில் வெச்சுண்டு! கஷ்டம், கஷ்டம்!

தன்னைத்தான் நொந்துகொள்ள முடியும். யாரிடம் சொல்லிக்க முடியும்? சொல்லிக்கணுமா என்ன, கைப் புண்ணுக்குக் கண்ணாடியா?

அதன் பிறப்பும் 'திடீர்'. இன்னும் இருபது நாளைக்கு முன் எதிர்பார்க்கவில்லை. அடுக்குள்ளில் பாதி சமையலில் வலி கண்டுவிட்டது. படுக்கை அறைக்குள் போக நேர மில்லை, முடியவில்லை. கூடத்திலேயே நேர்ந்து விட்டது. அண்டையில் கூப்பிட அவகாசமில்லை, யாருமில்லை. கிருஷ்ணாவைத் தவிர. பிரசவம் கிருஷ்ணாவின் ஒத்தாசை யோடு தான். அவமானத்தின் மேல் அவமானம். உஷை அழுதுவிட்டாள்.

குழந்தை பெரிதாய், சிவப்பாயிருந்தது. அப்பவே தலைமயிர் காடு. மார்பில் பெரியதாய் மச்சம். அழுகை ராக்ஷஸம்.

நாளடைவில், பார்வை நிலைத்து, குறிப்பாகி அவள் மேல் பதிந்ததும், அதில் ஏதோ குற்றச்சாட்டு அவளுக்குத் தோன்றிற்று. என்னை ஏன் பிறப்பித்தாய்? அப்படித் தோன்ற, தன் மனசுதான் காரணம் என்று தெரிந்தாலும், உஷை அச்சுற்றாள். அதன் நோக்கு, அவள் முதுகின் பின்னாலும் தொடர்வது போல் பிரமை தட்டிற்று.

சுருக்கவே தாய்ப்பாலை நிறுத்தி விட்டாள். முதலில் அன்பு சுரந்தால்தானே, பால் சுரக்கும்! இருப்பதை உண்கையிலும், அவள் உயிரையே உறிஞ்சுவது போன்ற அதன் மூர்க்கத்தில் உஷை இளைக்க ஆரம்பித்து விட்டாள்.

அவளுக்கு அதன்மேல் பாசம் பொங்கி வழியவில்லை. அதெல்லாம் புத்தகத்தில் படிக்கும், சினிமாவில் கேட்கும் டயலாக். அதுமாதிரி பாசம் கிடையாது. பாசம், காதல், தியாகம் இவை நிரந்தரப் பொய்கள். நம்மையே நாம் 'கிச்சு

கிச்சு' மூட்டிக் கொண்டு, பொய்களை ஸ்தாபித்துக் கொள் கிறோம்.

உஷையே ஒரு மாதிரியான ஆசாமி. அவளுடைய இயல்பு இப்படித்தான் என்று கணிப்பதற்குச் சிரமமானவள்.

ஆனால், அவளுக்கு வாழ்க்கையில் சித்தாந்தம் இல்லாமல் இல்லை. எல்லாம் எனக்கே வாழ்க்கையைப் பணயமாய் வாரிக்கொள்ள முடியாது. எப்பவுமே எனக்கு அனுகூலமாய்ச் சீட்டு அமையாது. ஓரளவு விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். எனக்குத் தெரியாதா? ஆனால், விட்டுக் கொடுப்பதற்கு அதனதன் எல்லையைத் தன்னுள் வகுத்திருந்தாள். அதற்கு மேல் No. வானமே இடிஞ்சு விழுந்தாலும் No. சித்திரத்தைவிடச் சுவர்தான் முக்கியம்.

ஆமா, எதனோடேயும். அப்பளத்து மாவு மாதிரி ஏன் ஈஷிக்கணும்! அதில் என்ன அர்த்தம் இருக்கிறது? பார்க்கப் போனால், பின்னால் அலுப்பு, ஏமாற்றம், த்ரோகம், அவஸ்தை என்று நஷ்டம்தான் மிச்சம்.

அவளுள் ஒரு பத்ரப்ரதேசம் இருந்தது. அங்கு யாரும், கணவர்கூட அனுமதியில்லை. Out of Bounds-Prohibited area. அதன் மையத்தின் அமைதியில் வீற்றிருக்கத்தான் ஆசை, சுகம்.

அதனால் சுயநலக்காரி, சோம்பேறி என்று அர்த்தமல்ல. வீட்டை அவ்வப்போது தானே அலம்பி, தானே சுத்தப் படுத்தி, காத்ரெஜிலிருந்து புடவை துணிமணிகளை எடுத்துக் கீழே போட்டு, மறுபடியும் மடித்துப் புதுப்புது விதமாய் அடுக்கி, தான் உண்டு, தன் காரியமுண்டு. முசுடுமல்ல. அதற் காகக் கைகொட்டி, வாய் விட்டுச் சிரிப்பவள் அல்ல. நான் மலிவுப் பண்டம் இல்லை. எனக்கு என் கௌரவம், என் நிறைவு, என் பத்ரம், என் சுத்தம், என் ஒழுங்குப்பாடு உண்டு.

இந்த ஒழுங்குப்பாடுள், இந்தப் பையனின் ப்ரவேசம் அதைக் கலைத்தது மட்டுமல்ல, அவளுடைய தீவையே உலுக்கிற்று. இந்த உலுக்கலை அவள் விரும்பவில்லை. அதனால் குழந்தையுடன் அவளால் ஒட்ட முடியவில்லை. அதற்காகக் குப்பைத் தொட்டியில் போட்டுவிட முடியுமா?

குழந்தை வளர்த்தியாயிருந்தானே தவிர, சுறுசுறுப்பு இல்லை. கண்களில் சூசகையில்லை. பல சமயங்களில் உள்நோக்கி விட்டாற்போல் ஒளி மங்கின. இப்பவே தியானமா? ஜடபரதர், நம்மாழ்வார் மாதிரி அவதாரம் என்று கொள்வதா? சிரிப்பு வந்தது.

பேச்சும் சரியாக வரவில்லை. மழலையாகவே இருந்து விடுவானோ? அப்படியே எல்லாமே மழலையாகி விடு வானோ? ஸ்பெஷலிஸ்ட் எல்லாப் பரீக்ஷைக்குப் பின்: "தனியாகக் கோளாறு ஏதும் தெரியவில்லை. வளர்ச்சி சற்று தாமதமாகிறது. தாமஸப் பிறவி அல்லவா? போகப் போக Normal, ஏன், இந்த மந்தகதியைச் சேர்த்து வைத்து அதி புத்திசாலியே ஆகிவிடலாம். பையனை அனாவசியமாகத் துரிதப்படுத்தாதீர்கள்." இப்பவே டாக்டர்கள் எங்கே தைரியம் சொல்கிறார்கள்? அபிப்ராயம்தான் தெரிவிக் கிறார்கள். ஆனால் நாளுக்கு நாள் ஜடமும் மதமதப்பும்தான் தெரிந்தன. உஷையும் ஒரு முடிவுக்கு வந்து அதனுடன் சமாதானமுமாகி விட்டாள். வேறு வழி?

அவளுடைய கணவன் நல்ல மனுஷன். சாது. கடவுள் தந்ததுடன் சண்டை போட முடியுமா? கலியாணமான புதிதில், ஆபீஸ் விஷயமாய் டில்லிக்குப் போயிருந்த சமயத்தில், பக்கத்தில் மதுரா—பிருந்தாவனுக்குத் தரிசனத் துக்குப் போய், அங்கு ஒரு சாது கொடுத்த கிருஷ்ண விக்ரஹத்துடன் திரும்பி வந்து தீவிர கிருஷ்ண பக்தராகி விட்டார். பக்தியின் தீவிரம் தன் பெயரைக் கிருஷ்ணானந்த்

என்று மாற்றிக் கொண்டார். அதனால்தான் பிறந்தது பெண்ணானாலும் கிருஷ்ணா. ஏன், கிருஷ்ணம்மா என்று பேர் இல்லையா?

உஷையின் பெயரை ராதையென்று மாற்ற முயன்ற போது, அவள் கண்டிப்பாகி, "எனக்குப் பிறந்தகத்தில் வெச்ச பேர் போதும். அதன்படியே விடிவு வரட்டும். இன்னொரு பேரா? No."

பொதுவாக என்ன தெரிகிறது? அணுகுமுறைகள் வெவ்வேறாய் மேலுக்குப் பட்டாலும், சேருமிடம் ஒன்றுதான். அதாவது விலக்க முடியாததை அனுபவி. கடிக்க முடியா விட்டால் முழுங்கு.

கூடவே இன்னொன்று. சுயநலமோ, விதியோ என்ன வேணுமானாலும் அழை. அவனவன் தன் தன் தீவில்தான். John Donne. நீ ஏமாளி, இல்லாட்டி ஏமாத்தறே. Everyman is an Island.

உஷை, B.litt.

கிருஷ்ணா, அம்மா மாதிரி படிக்கவில்லை. அவளுக்குப் படிப்பு ஏறவில்லை. S.S.L.C.யிலேயே ரதம் சாய்ந்து விட்டது. அம்மா மாதிரி அறிவுஜீவியுமில்லை. பாத்திரம், சமையல் என்று வீட்டு வேலை கொடுங்கள். மாங்கு மாங்கென்று செய்து கொண்டிருப்பாள். பெரிய அழகி என்று சொல்ல முடியாவிட்டாலும், கண்கள் அவளுடைய Plus பாயிண்ட். ஆரோக்யமான கட்டு உடல். வயதுக்கு உயரம் கூடுதல். அவளை விட உயரமான ஜாதகன் தேடுவது சிரமமாய்த் தானிருந்தது.

அப்படியும் பெண் பார்க்கும் படலங்கள் நடந்தன.

"பெண் உத்யோகம் பண்றாளா? இல்லையா? பரிசம் வேணா கூடாது. பெண்ணின் உத்யோகம் சீர்வரிசை

ஐட்டமாயிருக்கிற இந்த நாளில், அவாளே எப்படிம்மா குடித்தனம் நடத்துவா?"

"பெண் பாடுவாளா? இல்லையா? அவனுக்குப் பாட்டுன்னா உசிராச்சே! அவனே நன்னாப் பாடுவான். காலை மாலை விளக்கேத்தி ஒரு ஸ்தோத்திரத்துக்குக் கூட வழியில்லையா? நாங்கள் ஆச்சார்ய ஸ்வாமிகள் தரிசனத் துக்குப் போனால், அவர் எங்களைப் பேரைச் சொல்லி அழைக்கும் அளவுக்கு எங்களுக்குப் பழக்கமாச்சே!"

பிறகு, வந்தவன் ஒருவன் அவளைக் கண்ணாலேயே துகிலுரிச்சபோது, கிருஷ்ணா கோபம், வெறுப்பு, பயமாகி விட்டாள். இவன் பாக்கறதைப் பார்த்தால், இவனுக்குப் போது, சமயம், இடம்னு இருக்காது போல இருக்கே! மிருகம், சீ! ஆம்பளைகளே இப்பிடித்தானா?

இன்னும் இரண்டொரு கேஸ்களில், அவளே பரிகசிக்கும்படி ஆகிவிட்டது.

"எங்கிருந்தப்பா இதுகளைப் புடிச்சேள்? நான் நெட்டை தான், ஒப்புக்கறேன். அதுக்காக என் ஆம்படையானை இடுப்பில் தூக்கி வெச்சுண்டு நடமாட முடியுமா?"

இத்தனைக்கும் கிருஷ்ணாவுக்குத் தோஷ ஜாதகமில்லை. ஆனால், நாட்கள் கடந்து சென்றன.

கிருஷ்ணானந்த் பூஜை பண்ணிக் கொண்டிருந்தார்.

உஷை வீட்டில் சாமான்களை, ஃபர்னிச்சரை இடம் மாற்றி மாற்றி அமைத்து அலமாரியில் பொருள்களை விதவிதமாய் அடுக்கிக் கொண்டிருந்தாள்.

கிருஷ்ணா, பாத்திரங்களைப் பற்றுப் போக நன்றாய்ச் சுரண்டிப் பளபளக்கத் தேய்த்துக் கொண்டிருந்தாள்.

எவரையும் பொறுப்பு இல்லை என்று சொல்ல முடியாது.

'தை'கள் வந்து வந்து போய்க் கொண்டிருந்தன.

ஆனால் வழி பிறக்கவில்லை.

எல்லாருக்கும் வயது ஏறிக் கொண்டிருந்தது.

இந்தச் சூழ்நிலையில், தாப பூமியில் கோடை 'மின்' வெள்ளம் (Flash flood) பாய்ந்தாற் போல் குழந்தை வந்து முளைத்ததும், கிருஷ்ணா அப்படியே வாரிக் கொண்டாள். அவளுடைய படுகையே புரண்டது.

தாய் ஆனால்தான் தாய்மை என்று இல்லை. பெண் ணென்றாலே தாய்மைதான் என்று கிருஷ்ணாவிடம் தெரிந்தது. அந்தப் பச்சைப் புழுவின் அசிங்கங்களை அலம்புவது அவளுக்கு அசிங்கமாகப் படவில்லை. கிருஷ்ணாவிடம் அசிங்கமேயில்லை. பார்ப்பவருக்கு சற்று ஆச்சரியமாகக் கூட இருக்கலாம்.

குழந்தையை ஆற அமரக் குளிப்பாட்டி, பளிச்சென்று துவட்டித் துடைத்து, தலைக்குக் கமகமென அகிற் புகை யிட்டு, உடுத்த—வேண்டாம், கன்னத்தோடு கன்னம் வைத்துக் கொள்கையில், கை கொள்ளாமல் சதை வழியும் அந்த உடம்பு தன் மேல் மெத்தென்று அமிழ்ந்துகையில், அந்த சுகத்தில் நெஞ்சு அடைத்தது. கண்கள் சொக்கின. அதுவும் அவளைத்தான் நாடிற்று. அவளிடம் தனி கொக்கரிப்பு, கை கால் உதைப்பு, "Ga ga Goo goo"—அவளும் குழந்தையாகி விட்டாள்.

குழந்தைக் காரியங்களிலிருந்து உஷை சீக்கிரமே விடுதலையானாள். குழந்தை தாயை அடையாளம் கண்டு கொண்டது. தாய் தேவையில்லை. அதற்குத்தான் பெரிய, தன் இஷ்டத்துக்கு ஆட்டி வைக்கும், தானும் சேர்ந்து ஆடும், அலுக்காத பெரிய விளையாட்டுப் பொம்மை கிடைச்சுப் போச்சே!

"தெல்லத் தண்ணாட்டி."

"தண்ணாட்டி இல்லேடா, கண்ணாட்டி."

"தண்ணாட்டி."

கிருஷ்ணா கைகொட்டிச் சிரித்தாள். அவள் சிரிப்பில் பூக் கொட்டிற்று. நக்ஷத்ரங்கள் உதிர்ந்தன. உள்ளே புண் ஆற்றும் தைலம் பொழிந்தது.

நாளடைவில், காடுமில்லை, தோப்புமில்லை எனக் கொல்லைப்புறத்தில் படர்ந்திருக்கும் தாவரத்தின் அடர்த்தியில், அவர்களுக்கு அத்துப்படியில்லாத பொந்து, வளை, கூடு, வேரின் கோணங்கித்தனம், அடிமரத்தின் முடிச்சோ கிடையாது. போதில் பெரும்பால் அவர்களுக்கு அங்குதான் கழிந்தது. அவன் படும் ஆச்சரியங்களில் அவளும் புதிது புதிதாய் விஷயங்கள் கண்டாள்.

சிட்டுகள் பூமியில் தத்தித் தத்தி, புதருக்குப் புதர் பறந்து வம்புகள் நடத்தின. கிளைகளில் மாறி மாறி உட்கார்ந்து, பக்ஷிஜாதிகள் அரட்டையடித்தன. சருகுகள் சில இடங்களில் மிதிக்குக் கணுக்காலாழத்துக்குப் புதைந்து, செல்லமாய்ச் சலசலத்தன.

சமயங்களில் மத்யான மோருஞ்சாதத்தை இங்கே கொண்டு வந்து சாப்பிடுவதுமுண்டு. ஒரே டிபன் டப்பாவிலிருந்து தாங்களும் சாப்பிட்டுக் கொண்டு குருவி, காக்கா, அணிலைக் கூப்பிட்டு அதுகளுக்கும் போட்டுண்டு, அது ஜாலிதான். "கோபி, இதன் பேர்தாண்டா பிக்னிக்!" அவனுக்கு என்ன புரியும்? ஆனால், இது ஒரு சந்தோஷம்னு அவனுடைய சிரிப்பும் விரிந்த கண்களும் சொல்லின.

"கோபி உனக்குப் பல் சத்தே பெரிசுதான். ஆனால் வரிசை. எனக்கும் இருக்கே, அதிலே தித்திப்பல் ஒண்ணு வேறே!"

அவள் பல்லை இளித்துக் காட்டியதும், விழுந்து விழுந்து சிரித்தானே பார்க்கணும். அப்பிடிச் சிரிக்க என்ன இருக்கு? சிரிப்பாகவே ஆகிவிட்டான். He become laughter itself. ஓ, அந்த அளவுக்கு அவளிடம் இங்கிலீஷ் இருந்தது, அல்ல வந்தது.

அப்புறம் இன்னொரு விளையாட்டு, "நீ என்னைக் கண்கொட்டாமல் பாப்பியாம், நானும் உன்னைப் பாப்பேன். யார் முன்னாலே கண் சிமிட்டிட்டாளோ, அவா தோத்துட்டான்னு அர்த்தம். சரி, ஜூட்!"

ஆனால், அவனால் கண்ணைக் கொட்டாமல் அவளை விட அதிக நேரம் இருக்க முடிந்தது. ஒரு நேரத்துக்குப் பிறகு, அருண்டு போய்விட்டாள். "கண்ணைக் கொட்டுடா!" தவித்தாள். அவன் கன்னங்களைப் பிடித்து உலுக்கினாள். கண்களைச் சாவகாசமாக மூடித் திறந்து, சத்தமில்லா அவள் சிரிப்பைக் கண்டபின்தான் மூச்சு வந்தது.

ஒரு சமயம் அந்த விளையாட்டு இல்லாமலே, அவனைக் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்தாள். இருந்தாற் போலிருந்து விழியோரங்களினின்று ஸ்படிகம் புறப்பட்டுக் கன்னங்களில் வழிந்தது. புரியாத துக்கத்தில், அவனுக்குக் கீழுதடு பிதுங்கிற்று. மௌனமாய் விரல்களில் அவள் கண்ணீரைத் துடைக்க முயன்றான்.

"கோபி, உன் பேர் கிருஷ்ணா, என் பேர் கோபியா இருந்திருக்கணும்."

புரிந்தமாதிரி தலையை ஆட்டினான். அக்கா அழாமல் இருந்தால் சரி.

"பாவம், உனக்கென்ன புரியப் போறது!" கண்ணீரிலும் சோகமான புன்னகையில் அவள் உதடுகள் லேசாய் வளைந்தன.

"ஆனால் ஒரு நாள் நாம் பிரிஞ்சு போயிடுவோம். பிரிஞ்சுதான் ஆகணும். ஆனால் இப்போ, கோபி நான் மதுராவுக்குப் போயிடுவேன். கிருஷ்ணா, நீ பிருந்தாவனத் தில் தங்கி விடுவாய். அன்னிக்கு மதுராவுக்குப் போன கிருஷ்ணன் திரும்பல்லே. இன்னிக்கு கோபி என் மதுரை யிலிருந்து நானும் திரும்ப மாட்டேன். அப்பிடியே என்னிக் கானும் நான் திரும்பினாலும் நமக்குப் பிருந்தாவனம் இருக்காது. பிருந்தாவனம் போனது போனதுதான்."

விக்கி விக்கி மாரே வெடித்துவிடும் போல் அழுதாள்.

மௌனமாய் அவள் தோள் மேல் கைவைத்து, உடனேயே அவள் கழுத்தைக் கட்டிக் கொண்டான்.

கிருஷ்ணா கண்ணைத் துடைத்துக் கொண்டாள். சிரித்தாள். "கோபி, நாம் ரெண்டு பேரும் வேண்டப்படாத வர்கள், தெரியுமா? அதனால்தான் உனக்கு நான், எனக்கு நீ. பாத்தியா, அழுகை போச்சு, சிரிப்பு வந்தது டும் டும்."

இருவர் சிரிப்பும் கலந்தது.

அவர்கள் உலகம் அப்பாவி உலகம். அங்கே அசம்பாவிதத்துக்கே இடம் கிடையாது. அபத்தம்கூட அற்புத மாகி விடும்.

ஒரு சமயம், காலையின் பொன் வெயிலில் தகதகத்துக் கொண்டு அவர்களை வட்டமிட்ட ஒரு தட்டாரப் பூச்சியைப் பிடித்து அதன் இறக்கையைப் பிய்த்தான். அதிர்ந்து போய் அவன் கையினின்று பிடுங்கினாள். அது துவண்டு அவன் கையினின்று விழுந்ததும், தன்னை அறியாது அவனை அறைந்தாள். குழம்பிப் போய் அவன் நின்ற பரிதாபம் தாங்க முடியவில்லை. அவனைக் கட்டிக் கொண்டு அழுதாள். அவனுக்குப் புரியவில்லை.

பிறகு ஒரு நாள்—

காலையிலிருந்தே வானம் மூட்டம். லேசாய்ச் 'சில்'கூட. மரத்தடியில் உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்தனர்; இல்லை, பேசிக் கொண்டிருந்தாள். வழக்கம் போல் ஒருதலை சம்பாஷணை. புரிந்ததோயில்லையோ, கண் கொட்டாமல், மௌனமாய், அவளையே பார்த்துக் கொண்டு, அவன் முழுக் கவனமே அவளுக்கு வடிகால்.

இருந்தாற் போலிருந்து ஓசைகள் அடங்கி விட்டாற் போல் உணர்வு. ஏன்? யாரேனும் வராளா? சுற்றும் முற்றும் பார்த்தாள். யாருமில்லை. ஆனால், அவர்கள் தனியா யில்லை. மரத்தின் பின்னால் புதரின் பின்னால் ஒளிஞ் சுண்டு யாரேனும், ஏதேனும்—? ஆனால் பயமாயில்லை. ஒரு 'த்ரில்'. இடமே ஏதோ வகையில் சிலிர்த்திருந்தது. காலடியில் சருகுகள், மரத்தில் இலைகளின் சலசலப்பில் ஏதோ எதிர்பார்ப்பு. யாரை? யாருடைய வருகையைத் தெரிவிக்க முயன்றன?

யாரது? என் மணாளனா? ஏற்கனவே, எங்கேயோ எனக்காகப் பிறந்து, ஆனால் இன்னும் நான் காணாமல், ஆனால் இங்கே இப்போ திடீர்னு பிரசன்னமாகி என் கை பிடித்து, நான் வீட்டுக்குப் போய்ச் சொல்லிக் கொள்ளக் கூட அனுமதிக்காமல், இப்படியே என்னைத் தன்னுடன் அழைத்துச் செல்லப் போறாரா? மார்க்கூடுள் தங்கக் குருவி தவித்தது. அழுத்திப் பிடித்துக் கொண்டாள். விவரிக்க வொணா ஒரு ஸன்னிதான பயம், பரபரப்பு.

திடீரென மேகங்களைக் கிழித்துக் கொண்டு சூரியன் புறப்பட்டான். நேரமே அந்த வெளிச்சத்தில் குளிந்து, வான், பூமி, செடி, கொடி, புதர்கள் எல்லாவற்றுக்குமே முகம் துடைத்த 'பளிச்'சில் ஏதோ திருவிழாவுக்குத் தயாராகி விட்டாற்போல். பார்வைக்குப்பட்ட எல்லாமே ஒரு புதுப் 'பெரிசி'ல், 'பளிச்'சில் தெரிந்தன.

இரண்டு வண்ணாத்திப்பூச்சிகள் ஒட்டி, நாலு இறக்கைப் பூச்சியாய்ப் புதருக்குப் புதர் பறந்தன. பூக்களிலிருந்து அவற்றின் யக்ஷர்கள் எட்டிப் பார்த்தார்கள். மரங்களின் தேவதைகள் அஞ்சலியில் நின்றனர்.

அந்த மஹாபுருஷன்—எவனுடைய செளந்தர்யத்தின், செளர்யத்தின், கருணையின் உருவகமாக நாங்கள், எங்கள் கற்பனையில், அவரவர் மணாளனின் உருவைமுடை கிறோமோ—அவர் வந்து விட்டாரா? பின்னாலிருந்து யாரோ தோளைத் தொட்டாற் போலிருந்தது. கலசம் பொங்கிய ஆனந்தத்தில் மூர்ச்சையானாள். கண்களில் தாரை தாரை யாய் வழிந்தது. நினைவு மீண்ட போது எல்லாம் பழைய நிலையில்தானிருந்தன. அவளுடைய தருணம் வந்து போய் விட்டது.

ஒருநாள் பையனைக் காணோம். உஷைக்கு மூணு மணிக்குத்தான் நினைப்பே வந்தது. கிருஷ்ணா போனபின் அவனுக்கே கால் நீண்டு விட்டது. "எங்கேடா?" கேட்டால் பதில் கிடையாது. அழுத்தம். அக்கம்பக்கத்தில் அவன் வயதுக்குச் சினேகிதமில்லை. அதன் சுபாவத்துக்கு யார் நண்பர் இருப்பர்? இன்னிக்கு வந்தால் கவனிக்கிறபடி கவனிச்சுட வேண்டியதுதான். போனால் போறதுன்னு விட்டால் தலைக்கு மேலே ஏர்றது மூர்க்கம், திருப்பிக் கை மிஞ்சிடுத்துன்னா? பயம்தான். ஆனால், இப்பிடியே விட்டுட முடியாதே! சரி வரட்டும். சாக்கடைத் தண்ணிக்குப் போக்கிடம் ஏது?

இருள் இறங்கிப் போச்சு. உஷைக்கு வயிற்றுள் குதிரைக் குட்டி உதைக்க ஆரம்பித்துவிட்டது. பின்புறத்தில் ஏதேனும் மரத்தடியில் படுத்துத் தூங்கிட்டானா இல்லை, வேறே ஏதேனும்—நினைக்கவே பயந்தாள். அவர் ஆபீசிலிருந்து வந்ததும் அக்கம் பக்கத்து ஓரிருவர் ஒத்தாசையுடன்

டார்ச்சுடன் காடு முழுவதும் சுத்திச் சுத்தி வந்ததுதான் மிச்சம். போலீசில் எழுதி வைக்கணுமா? நினைப்பே பகீரென்றது.

"நாளைக்குப் பார்க்கலாம். பரமாத்மா கைவிட மாட்டான். அவனே குழந்தையாயிருந்தவனாச்சே!"

பூஜையறையில் கிருஷ்ண விக்ரஹத்தைக் கணவனும் மனைவியும் சேர்ந்து நமஸ்கரிக்கையில், அடக்கிக் கொண்ட அழுகையில், மோவாய் நடுங்கிற்று. காணாமல் போன குழந்தை மேல், இதுவரை மறைந்திருந்து, புதிதாய்க் கண்ட கனிவில் நெஞ்சு நெகிழ்ந்தது. ஏதேதோ பச்சாத்தாபங்கள் நெஞ்சை அமுக்கின.

தூக்கம் வரவில்லை. படுக்கையில் புரண்டாள். ஜன்னலுக்கு வெளியே குன்றின் முக்கு தெரிகிறது. முதன் முறையாக கண்ணுக்கு அது கோவர்த்தன கிரியாகப் படுகிறது. எந்த மொத்தாகாரத்துக்கும் ஒரு உக்கிரம் உண்டு. இன்று அது அவளைத் தாக்கிற்று.

எல்லை கிடந்த கிழத்தில், இடையிடையே சதை மாதிரி மடிப்புவிட்டுக் கொண்டு, படுத்துவிட்டு எழுந்து நிற்க முடியாத பிரம்மாண்டமான மிருகம் போல், இந்த இடத்தைக் காலம் காலமாய்க் காத்து வருகிறாய். என் குழந்தை எங்கே? உனக்குத்தான் தெரியும். நீதான் காப்பாத்தணும்.

இன்று அதன் உச்சியில் கிரீடம் வேய்ந்தாற் போல் நக்ஷத்ரங்கள் குடலை கவிழ்ந்திருக்கின்றன.

கொல்லைக் கதவைத் தட்டறாளா? ஆமா. சத்தம் திடமாகவே கேட்கறதே! படிகளை ஓடியிறங்கிப் போய்த் திறந்தாள். பிரார்த்தனை பேசி விட்டது. நெஞ்சிலிருந்து தேம்பல் கேவிற்று. அப்படியே வாரி அணைத்துக் கொண்டு கூடத்துக்கு வந்து விளக்கைப் போட்டாள்.

குழந்தை முகம், உடம்பு அங்குமிங்கும் சிராய்ப்புகளும் சதை கிழிந்து, ஒரே ரத்த விளாறு.

"பாவி, என்ன ஆச்சு?" வயிறு ஒட்டிக் கொண்டது.

"அக்கா அங்கே இருக்கா." குன்றின் உச்சியைச் சுட்டிக் காட்டினான். அவன் கண்கள் ஒளி வீசின.

"என்னடா உளர்றே?"

"நிஜம்மா. நான் மேலே ஏறிப் பாத்தேனே. அங்கே நின்னுண்டிருக்கா. என்னைப் பாத்ததும் "போ போ, இங்கே வரக்கூடாதுன்னு என்னைக் கீழே போக இறக்கி விட்டுட்டுப் போயிட்டா, அக்காவை நீ அங்கே ஒளிச்சு வெச்சிருக்கே."

மறுநாள் தபாலில் கடிதம் வந்ததும், நாலு மூலையிலும் கறுப்பு மசி தடவி, பிரிக்கையில் கைகள் நடுங்கினாலும், படித்ததும் விழிகளில் அனல் அருவி புறப்பட்டாலும் அவளுக்கு அப்படியொன்றும் அதிர்ச்சியாயில்லை. முதல் நாளே கோபிதான் சேதி சொல்லிட்டானே!

"பாவிகள்! தந்தி, கேபிள், டெலிபோன் ஏதும் அவாளுக்குத் தோணல்லியா?"

"தோணியிருந்தால் நீ போயிருப்பியா?" என்று புத்தி திருப்பிக் கேட்டதும் அவளிடம் பதில் இல்லை.

# 9

# சூரம்சம்ஹாரம்

*"ஏறுமயி லேறிவிளை யாடுமுகமொன்றே!"*

*"சபாஷ்!"*

*"மாறுபடு சூரரை வதைத்தமுகமொன்றே!"*

*"சபாஷ்!"*

*"கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுகமொன்றே!"*

*"சபாஷ்!"*

*"குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகமொன்றே!"*

*"சபாஷ்!"*

*"சூரனே, சூரனைப் புறங்காட்டும் சுப்ரமண்ய தீரனே!"*

*"சபாஷ்!"*

*ஜல்! ஜல்!! ஜல்!!! ஜல்!!!!*

எட்டுப் பேருக்கும் கடைசியில் முற்றுப்புள்ளி வைத்தாற் போன்ற அச்சிறுவனின் குரலோசையும். காற்சிலம்போசையும்தான் தூக்கி நின்றது.

உண்ணாமலை, பிள்ளையார் கோவில் சந்து முனையில், பெற்ற மனம் குளிர்ந்து பொங்கி வழிய, கையில் மதுரைச் செம்பை ஏந்திய வண்ணம், ஊர்கோலத்தின் வருகையை எதிர்ப்பார்த்து நின்றாள். அவள் நாட்டம் பிள்ளையை விட்டுப் பிரிந்திலது.

இடுப்பிலிருந்து முழங்கால் வரையில், சற்று இறுக லாகவே தைத்த பட்டு நிஜார், இடுப்பில் சதங்கை, கால்களில் சிலம்பு, தலையில்—முன்னால் சரிகைப் பட்டை தெரியக் கட்டிய—சிவப்புத் தலைப்பாகை. காதில் இரத்தச் சொட்டுகள் போன்ற கடுக்கன். மைதீட்டி விசாலித்த கண்கள். நெற்றியில் ஜவ்வாதுப் பொட்டு. மார்பில் பூணூல் (எத்தனை வடமோ?). அதன் மேல் இரு பக்கமும் குறுக்கே தரித்த காஞ்சீபுரத்து விசிறி மடிப்பு சரிகை அங்கவஸ்திரம். அவரவர் கழுத்தில், அவரவர் தாய்மாரின் நகையோ, தாரமாரின் நகையோ. ஒவ்வொருவர் கையிலும், உயரத் தூக்கி எதிரே பிடித்த உருவிய கத்தி. அதன் நுனியில் சொருகியதோர் எலுமிச்சம் பழம். முன்னால் கொட்டு முழக்கு; பின்னால் கோவில் குடை—இத்தகைய சின்னங்களுடன், ஊர்வலத்தில் ஒருவர், குமரேச சதகத்திலிருந்தோ, திருப்புகழிலிருந்தோ, அல்லது ஸ்வய கவியாகவோ பாட, ஒவ்வொரு அடிக்கும், "சபாஷ்! சபாஷ்!" என்று நெஞ்சு நரம்பு புடைக்கக் கத்திக் கொண்டு வரும் அந்நவ வீரரின் காட்சி மிகவும் உணர்ச்சி நிறைந்தே யிருந்தது.

ஊர்வலம் பிள்ளையார் கோயில் சந்து முனை திரும்பிற்று. உண்ணாமலை, கண் ஜாடையும், கை ஜாடையுமா, உடம்பையே ஆட்டி, மைந்தனைச் சைகை செய்து அழைத்தாள். சக்தி வேல், தாயின் சேஷ்டைகளைக் கண்டு, சற்றுச் சலிப்புடன், ஊர்வலத்தை விட்டுப் பிரிந்து, அவளிடம் வந்தான்.

"என்னாம்மா?"

"ஏண்டா கொயந்தே, காலெல்லாம் நோவ நோவ, தெருவெல்லாம் சுத்தறையே, களைச்சுப் பூடுவியேன்னுட்டு, காப்பித் தண்ணி காய்ச்சிக் கொண்ணாந்திருக்கேன். இந்தா குடி!" என்று செம்பை நீட்டினாள்.

அவன் கண்களில் அலட்சியமும் கோபமும் ஒருங்கே எழும்பின.

"இதுக்குத்தான் கூப்பிட்டியா? சம்மாரமும், அதுவுமா? பச்சைத் தண்ணி கூட வாயிலே வார்க்கக் கூடாதுன்னு இருக்கச்சே, ஒன்னே யாரு காப்பித் தண்ணி யெடுத்தாரச் சொன்னது? போம்மா, வேலையில்லே!" என்று முறைத்து விட்டுப் போய் ஊர்வலத்துடன் கலந்து கொண்டான்.

"ஏண்டா சக்திவேல், ஒங்கம்மா என்னாத்துக்குக் கூப்பிட்டாங்க?" என்றான் அவன் பக்கத்தில் நின்ற வீரன்.

"காப்பித் தண்ணியாம், அவங்களுக்கு வேறே வேலை யில்லே!"

"அடப் பாவி, விட்டுட்டு வந்துட்டியா! என்னைக் கூப்பிட்டிருந்தா, நானாவது குடிச்சிருப்பேனே. கத்தற கத்தலுக்குத் தொண்டையாவது நனையுமே!" என்று சின்னாண்டி வருத்தப்பட்டான்.

சக்திவேல், வெறுப்புடன் அவனை ஒருமுறை பார்த்து விட்டு, வாய் பேசாமல், காலை இன்னும் கொஞ்சம் விசிறிப் போட்டு நடந்தான்.

பத்து வயது இன்னும் பூரணமாக நிரம்பவில்லை. அவன் மண்டையில் இப்பொழுதே 'ஒரே ஒரு ஊர்லேருந்து' என்று ஆரம்பிக்கும் பழைய பாட்டன் கதையிலிருந்து 'அகோ வாரும் பிள்ளாய்' என்று ஆரம்பிக்கும் புராணிகர் பிரசங்கக் கதை வரையில் நிரம்பியிருந்தது. தன் விரதத் திற்குப் பங்கமில்லாமல் தப்பித்துக் கொண்டதில் பரம சந்தோஷம். பெரியவருடன் பெரியவனாய் விட்டதாய் அவனுள் எண்ணம். இறுமாப்புடன் மேல் நடந்தான்.

இரு மருங்கிலும் கூட்டம். முன்னால் தீவட்டிகள் ஜ்வலித்துக் கொண்டு சென்றன. மைதூர், அவைகளுக்கு

எண்ணெய் ஊற்றிக் கொண்டிருந்தான். ஒரு கையில் எண்ணெய்ச் சட்டியை ஏந்திக் கொண்டு, இன்னொரு கையில் கந்தையை வைத்துக் கொண்டு, எண்ணெயைப் பந்தங்களின் மேல் பிழிந்தான். அவனைக் கண்டதும் சக்திவேலின் மூக்கு, வெறுப்பால் சற்று சுருங்கியது.

மைதூர் நல்ல தேகவளம் படைத்திருந்தான். தீவட்டி ஜ்வாலை அவனைச் சுற்றி ஆடும்பொழுது, அவன் மார்பிலும், புஜங்களிலும், முதுகிலும் கரணை கரணை யாய் நரம்புகள் விம்மிப் புடைத்தெழுந்து, அவன் தேக வன்மையை எடுத்துக் காட்டின. வியர்வையும் எண்ணெ யும் ஒழுகும் அவன் கருந்தேகம், தீவட்டி வெளிச்சத்தில் கருங்காலி போல் மின்னியது. சுருட்டை சுருட்டையாய்த் தலைமயிர், நெற்றி முன் வந்து விழுந்தது. அவனைச் சுற்றிக் கள் நாற்றம் வீசியது.

அவனைப் பற்றிய கதைகள் அனேகம். கலாட்டா, சண்டை நடக்கும் இடங்களில் அவனை முன்னால் காணலாம். சிலம்பமாடுவான். தீவட்டிக் கொட்டடி யடிப்பான். அவன் பெயரைக் கேட்டாலே, ஊரிலிருக்கும் பெண்களும் குழந்தைகளும் நடுங்குவார்கள். இப்பொழுது கூட, பந்தத்தைச் சரியாய்த் திருப்பிக் காட்டவில்லையென்று தீவட்டி பிடிப்பவர்களை அவன் கர்ஜிக்கும் வசை காது கொண்டு கேட்கக் கூடியதல்ல.

மைதூரைப் பார்த்தாலே ராக்ஷஸன் மாதிரியிருந்தது...

தெய்வயானை, தெருத் திண்ணைத் தூணைக் கட்டிக் கொண்டு, அவள் வீட்டு வாசலில் நின்றாள். கருவண்டை யொத்த அவள் கண்களும், குழந்தை வாயும், ஆச்சரியத்தால் மலர்ந்திருந்தன. அவள் கண்கள், முகத்திற்கு முகம் பதிந்து, பெயர்ந்து சென்றன.

அவளைக் கண்டதும் சக்திவேலின் தலையும் முதுகும் அவனையறியாமல் நிமிர்ந்தன. நடையின் முடுக்கும் அதிகரித்தது.

"இருக்கட்டும், அன்னிக்கு 'டூ' விட்டாளல்ல? இன்னிக்கு என்ன பண்ணுவ?"

இவ்வெண்ணம் அவன் மனசில் தோன்றிய அக்கணமே, அவள் கண்கள் அவன் கண்களைச் சந்தித்தன. கண்களும் வாயும் புன்னகை பூத்தன. கை வளையல்கள் சற்று கிலுகிலுத்தன. அவள் ஜாதிக்கே சொந்தமான சாஹஸ குணங்கள் இப்பொழுதுதான் பிறக்க ஆரம்பித்திருக்கும் இச் சிறு வயதில், அவள் வெகு அற்புதமாக விளங்கினாள். அவள் சிரித்த சிரிப்பு, முன்னாலேயே இவனுக்கும் அவளுக்கும் அவர்கள் பெற்றோர் போட்ட முடிப்பை இறுக்கியது போன்றிருந்தது.

கத்தியை இன்னும் சற்று உயரத் தூக்கிப் பிடித்து, விறைப்பாய் நடந்தான்.

"சபாஷ்!"

காலை முதல் பட்டினி. பசி வயிற்றைக் கிள்ளியது. ஆனால் அவன் மனத் தீவிரம் குறைந்தபாடில்லை.

கோவில் கோபுர வாசலண்டை வந்து நின்றனர். கூட்டம், கணத்திற்குக் கணம், அதிகரிக்க ஆரம்பித்தது. சம்ஹார வேளை நெருங்கி விட்டது.

"உஷ்... ஷ்... ஷ்..."

நாலைந்து அவுட்டு வாணங்கள் ஒரே சமயத்தில் ஆகாயத்தில் கிளம்பி வெடித்து, பச்சையும் சிவப்புமாக நக்ஷத்திரங்கள் உதிர்ந்தன. குடைகள் கவிந்தன. ஒரேயடி யாய்க் கரகோஷம், கூட்டத்தின் கோஷம். பகவான் கோபுர

வாசலைக் கடந்து நாலுகால் மண்டபத்தில் வந்து நின்றார். அவரைத் தரிசித்ததும், அவனுள் இதுவரை தூங்கிக் கொண் டிருந்ததோர் பெருங் கடல் திடீரென்று விசையுடன் பொங்கி யெழுந்தது போன்றிருந்தது. கூட்டத்திலொரு கிழவர், "ஊம்... ஆவட்டும்... சாமியாரைப் போய்ச் சேவிங்க... நேரமாவுது..." என்று இரைந்தார்.

ஒன்பதின்மரும் கற்களும் மண்ணும் நிறைந்த தெருவில் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து நின்றனர். சக்திவேலின் அங்க வஸ்திரம் சற்று சரிந்து விழுந்தது. அதைச் சரிப்படுத்திக் கொண்டான். அவன் குழந்தை மனம், அவன் கண்களின் வழி வெளிப்பட்டு, பகவானிடம் கலந்தது.

"யாரோ தெற்குச் சீமை ஆசாமியாம்! இதுக்குன்னு 'பெஷலா' தருவிச்சாங்களாம்! சாத்துப்படி நடக்கரப்போ, உள்ளே தலைகாட்ட முடியல்லே. பொத்திப் பொத்தி வச்சிக்கினாங்களே, அம்மாடி! இதேப் பாத்தியா?"

ஆயக்காலிட்டுப் பகவானை நிறுத்தி விட்டனர்.

அன்று எவன் அலங்கரித்தானோ, அவன் தன் பூரண சாமர்த்தியத்தையும் காட்டியிருந்தான். ஆறு முகங்கள்; யுத்த கோலம்; ஒரு காலை மண்டியிட்டு வில்லைக் கையில் கொடுத்து அதில் வேலைத் தொடுத்து விட்டிருந்தான். அது புறப்பட வேண்டியதுதான் பாக்கி.

"அமரரிடரும் அவுணர் உடலும் மடிய விருகை வடிவேலா!"

"சபாஷ்!"

சக்திவேலின் பொட்டிடித்தது. விறுவிறு வென்று ஒன்பது பேரும் சுவாமியைப் பிரதட்சணம் செய்து, கீழே விழுந்து, நமஸ்கரித்து விட்டு, சூரனின் மர விக்ரஹம் நிறுத்தி

வைத்திருக்கும் திக்கு நோக்கி நடையும் ஓட்டமுமாய்ச் சென்றனர்.

"அடே பசங்களா! சண்டை கிண்டை போடாதீங்க. ஆளுக்கொரு தலை!"

அவனுக்கொன்றும் காதில் விழவில்லை. அவன் கண் கண்டது கைக் கத்தியின் பளபளப்புத்தான்; காது கேட்டது, வீராவேசத்துடன் தன் நெஞ்சிலிருந்து குமுறிக் கொண்டு வரும், 'சபாஷ்! சபாஷ்!' சப்தந்தான்.

"கடல் சுவற வேல் விட்ட கார்த்திகேயனே!"

"சபாஷ்!"

வீரர்களுள் மூத்தவன், ஓடோடியும் சென்று, சூரன் தலையை வெகு லாவகமாய், அப்படியே கத்தியால் கொந்தியெடுத்தது வெகு அழகாயிருந்தது. அப்படியே, மற்றைய எட்டுப் பேர்களும் பின் தொடர, பகவான் சன்னதிக்கு ஒரே ஓட்டம்.

"அவுணர் குலம் அழிய வந்த ஆறுமுக தேவா!"

"சபாஷ்!"

"தேவர் சிறை மீளவந்த தேவதேவா!"

"சபாஷ்!"

'ஜல ஜல ஜல'வென இடுப்புச் சதங்கையும் காற்சிலம்பும் குலுங்கின.

"சபாஷ்!"

சுவாமியைப் பிரதட்சணம் செய்து அவர் சன்னதியில் அத் தலையைச் சமர்ப்பிப்பது போன்று கீழே வைத்து நமஸ்கரித்தனர். உடனே கற்பூர ஹாரத்தி. சக்திவேலின் உடல் பரபரத்தது. உடனே மறுபடியும் உயரத் தூக்கிப் பிடித்த

கத்தியும் 'சபாஷ்! சபாஷ்!' என்ற வீர கோஷமுமாய் ஒரே ஓட்டம். உடனே இன்னொரு வீரனின் முறை.

யானைத் தலை (மைதூர்தான், சூரன் பின்னால் நின்று கொண்டு, ஒவ்வொரு தலையாய் மாட்டியது)

ஆட்டுத் தலை

குதிரைத் தலை

மாட்டுத் தலை

சிங்க முகம்—ஒவ்வொரு தலையாய்க் கழன்றன.

"அடியே, இந்த உண்ணாமலை மவன் மூஞ்சியைப் பாத்தியாடி! சொரம் அடிக்கிறாப்போல இருக்குதே, கண்ணு மூஞ்சியும் செவசெவன்னு!"

ஆனால் அவனுக்கடிக்கும் ஜுரத்தைக் கண்டவர் யார்? அவனுள் கொந்தளிக்கும் கடல் தண்ணீர் எல்லாம் திரண்டு உருண்டு ஒரு பெரும் அலையாகிக் கொண்டிருந்தது. சூரன் உடலிலிருந்து பிரியும் ஒவ்வொரு தலைக்கும், அவ்வலை ஒரு காத உயரம் உயர்ந்தது—சங்கடமும், சந்தோஷமும் சகிக்க முடியவில்லை.

கடைசீத் தலை! அவன் முறை! தன் மாயமெல்லாம் மறைந்து, மயிலும் சேவலுமாய் ஆவதன் முன் சூரன் கடைசி முறையாக, ஸ்வய உருவம் தோன்றும் தலை!

கீழே விழுந்து நமஸ்கரித்து எழுந்தான்.

கற்பூர ஹாரத்தி!

கற்பூர ஜ்வாலையில், பகவான் சார்த்தியிருந்த வைரப் பதக்கங்கள் விட்டுவிட்டு மின்னின. கிரீடங்கள் மின்னின. கையில் பிடித்த வில் மின்னியது. வில்லின் நுனியில் ஆடும் சிறுமணி மின்னியது. அதில் தொடுத்து விட்டிருந்த வேல் மின்னியது.

"கொடிய சூரன் உயிர் குடிக்க வந்த கூர்வேல்!"

"சபாஷ்!"

பகவானின் நெற்றித் திலகம் மின்னியது.

"கதிர்வேல்!"

"சபாஷ்!"

பகவான் கண்கள் உயிருடன் மின்னின. கருணையுடன் சக்திவேலை நோக்கின. சக்திவேலின் மார்பு விம்மியது. அவர் தன் நோக்கின் வழியே, அவனுள் தன் சக்தியைச் செலுத்தியதை அவன் ஸ்பரிசித்தான்.

"மணிவேல்!"

"சபாஷ்!"

"மாணிக்கவேல்!" ஆகர்ண பரியந்தம் நாணை இழுத்தார்.

"சபாஷ்!"

"சக்திவேல்!" வேல் வில்லை விட்டுப் பிரிந்தது. சக்தி வேல் சக்தி வேலானான்.

"சபாஷ்!"

சக்திவேல் யுத்த களத்தில் பாய்ந்து விட்டான். அவனுள் எழும்பிய அப்பெரு அலை கரையெல்லாம் தகர்த்துத் தூக்கி யெறிந்தது.

கூட்டத்தின் பெருங்கோஷமெல்லாம் அவனுக்கு யுத்த கோஷமாய் விட்டது.

"இப்படியாக அந்த சூரபதுமனுக்கும் பால சுப்ரமண்யப் பெருமானுக்கும் நடந்த அந்த மகாயுத்தத்திலே, கவந்தங்கள் ஆடின. கழுகுகள் வட்டமிட்டன. இரத்தம் ஆறாய்ப் பெருகிற்று. அஸ்திர சஸ்திரங்கள் மழையாய்ப் பொழிந்தன.

சரக்கூடு சூரியனை மறைத்தது. சற்குரு சாமிக்கு ஜே!" என்று புராணிகர் பிரசங்கித்த காட்சியெல்லாம் அவன் இப் பொழுது பிரத்தியக்ஷமாகக் கண்டான். அவனே பாடிக் கொண்டு கிளம்பினான்.

"மாயமலை பிளந்த மணிவேல்!"

"சபாஷ்!"

"சிங்கனைச் சிதைத்த செவ்வேல்!"

"சபாஷ்!"

"மாமரமது பிளந்த மணிவேல்!"

"சபாஷ்!"

"சனன மரண மறுத்திடும் சக்தி வேல்!"

"சபாஷ்!"

"சக்திவேல்!"

"சபாஷ்!"

சக்திவேல் பறந்தான். அவன் கால் கீழ்ப்பட்டதாக அவனுக்குத் தெரியவில்லை.

மைசூர் பல்லை இளித்தான். "ஓஹோ, நம்ப சின்னத் துரை வராரோ? என்று பரிகசித்து, வேண்டுமென்று குறும்பாக, சூரன் கழுத்தின் மேல் கடைசித் தலையை மாட்டுவதற்குப் பதிலாகத் தன் தலையைச், சூரன் கழுத்தின் மேல் நீட்டிக் கொக்கரித்தான்.

"இப்படியாக, பகவானானவர் வேலாயுதத்தை மந்திரித்து விட்டவுடன், அந்த வேலாயுதமானது, திகுதிகு வென்று திக்குகளையெல்லாம் எரித்துக் கொண்டு, கடகட வென்று அண்டங்களெல்லாம் ஆட, திடுதிடுவென்று அஷ்ட கஜங்கள் பயந்து ஓட, கரகரவென்று சுழன்று கொண்டு..."

*"மாயமது அறுத்திடும் மெய்ஞ்ஞான வேல்!"*

*"சபாஷ்!"*

*"சூரனுயிர் கொள்ளை கொள் பரிசுத்த வேல்!"*

*"சபாஷ்!"*

யாருக்கும் இன்னதான் நடக்கப் போகின்றது என்று தெரியவில்லை. கண்ணிமைத்து, கண் திறப்பதன் முன், மைசூர் தலை மண்ணில் புரண்டது. அவனுக்குத்தான் எப்படி அவ்வுடல் வன்மை வந்ததோ? அவ் வெண்ணெய் வெட்டும் கத்திக்குத்தான் எப்படி அவ்வளவு கூர்வந்ததோ தெரியவில்லை.

"ஹோ ஓ ஓ!"

ஒரே கோஷம், தேவர்களின் ஜயகோஷம், சூர சம்ஹாரம் ஆய்விட்டது.

*"குக்குடக் கொடி கொண்ட மயில் வாஹா!"*

*"சபாஷ்!"*

அவனையுமறியாமல் மேலடிகள் அவன் வாயை விட்டுக் கிளம்பின.

*"வெஞ்சூர் உயிர் களைந்து, குஞ்சரியை வேட்ட வேல்முருகா!"*

*"சபாஷ்!"*

பதினாயிரம் கைகள் அவனை ஒரே சமயத்தில் பிடித்து அமுக்கியது போன்றிருந்தது. மூச்சுத் திணறியது. அவனை லேசில் கட்டிப்பிடிக்க முடியவில்லை. பயங்கரமும் திக் பிரமையும் நிறைந்த ஒரே கூச்சல். ஒரே கலவரம்.

"உண்ணாமலை மகனுக்குப் பைத்தியம் பிடிச்சுகிச்சு!"

அவன் கண்கள் கொழுந்து விட்டெரிந்தன.

"குறவள்ளி சேர் குன்றனைய தோளா!"

"சபாஷ்!"

அவனைத் தூக்கி அறையில் எறிந்து கதவை இறுக்கி மூடி வெளியே பூட்டினர்.

வெளியில் கூச்சலும், கலவரமும், சத்தமும் வர்ணிக்க சாத்தியமில்லை!

சக்திவேலுக்கு, ஆச்சரியத்தால், கண்கள் சற்று மலர்ந்தன. 'சூரனைக் கொன்ற பிறகுகூட, தேவர்கள் இன்னும் முறையிடுவானேன்!' அவனுக்குப் புரியவில்லை.

# 10

# திலோ

தாக்குதலுக்குப் பயந்து மக்கள், கடலோரப் பகுதி களிலிருந்து நாட்டின் உட்புறத்துக்கு ஓடினார்கள். கோட்டை யில் பீரங்கிகள் கடல் முகம் திரும்பித் தயாரில் நின்றன. ஆகாயங்களில் ராப்பகலாய் விமான ரோந்து. கப்பல் கப்பலாய்த் துருப்புகள் இறங்கி நடமாடின. வாயடைப்பு. அவசரச் சட்டங்கள். உன் நண்பனே சத்துருவாய் இருக்கக் கூடும். யாரையும் நம்பாதே. ஏன், நீயே அவனாய் இருக்கக் கூடாது?

பட்டணம் 'வெறிச்'. எதிரும் புதிருமாய்க் காலி வீடு களின் வரிசைகளினிடையே தெருத் தெருவாய், ஓர் ஆசாமி கூடக் கண்ணுக்குப் படாமல், மணிக்கணக்கில், தன்னந்தனி யாய் நடந்து செல்லலாம். உன்னைக் கண்டு நீயே பயந்து போவாய். சென்னைக்குச் சாவுக் களை வந்துவிட்டது.

பகலே இப்படி ஆயின், இரவு ஏன் வருகிறது? ஆனால் இரவுக்கும் பகலுக்கும் வித்தியாசம் ஒன்றும் தெளிவா யில்லை. பகலில் சில பயங்கள் பார்வைக்குத் தெரிகின்றன. இரவில் கண்ணுக்கும் புலப்படா... பயங்கள். பயம், பயம், பயம்... மயம்... மயம்... மயம்... பயத்தைத் தொட்டுவிடலாம் போன்ற பரிமாணத்தில் பிரம்மாண்ட சிலிர்ப்பு கண்டது.

ஆகாயத்திலிருந்து மின்னல்கள் விழுந்தாற்போல, பூமி யில் அந்தப் பள்ளங்கள் (trenches) பாளம் பாளமாய்த்

தோன்றின. பரந்த வெளிகளில், 'பார்க்குகளில், பெரிய கட்டடங்களின் பின் புறங்களில், மறைவின் அணைப்பு இல்லாத இடங்களில், இந்தப் பள்ளங்கள் ஏறக்குறைய ஆள் உயரத்துக்கும் மேல், மார்பகலத்துக்குத் தோண்டப்பட்டு உள்பக்கம் செங்கல் சுவர்கள் எழுப்பி, இரண்டு மூன்று Zகள் அல்ல Mகள் கோர்த்தாற் போல், வங்கி வங்கியாகக் கோணிக்கொண்டு, கோணங்கள், சிமிட்டிப் பூச்சில் கன கூர்ப்பாய், தோன்றிய புதிதில் சற்று வேடிக்கையாய், ஏன், அழகாய்க்கூட விளங்கின. அபாயச் சங்கு ஊளையிட ஆரம் பித்ததுமே, மக்கள் ஓடி வந்து இந்தப் பள்ளங்களில் பதுங்கிக் கொள்ள வேண்டும். இதற்கு ஜனங்களைப் பழக்கவே விமானத்தாக்குதல் பாதுகாப்புப் படையினரின் ஏற்பாடுகள், பிரசாரங்கள், ஒத்திகைகள், அத்துகள், அமல்கள் நடந்தன.

ஆனால் அசல் தாக்குதல் நேராதவரை, ஜனங்களுக்குக் குளிர்விட்டுப் போனதும், இந்தப் பள்ளங்களை வேறு காரியங்களுக்கும் பயன்படுத்தினர். ஆகாயமே கூரையென வாழும் ப்ளாட்ஃபாரம் மக்கள், இந்தப் பள்ளங்களில் கழித்துக் கொப்புளித்து, தோய்த்துக் குளித்துச் சமைத்து, குடித்தனமே நடத்தினர். என்னதான் பாரா போட்டாலும் அவர்களைத் தடுக்க முடியவில்லை. நாளடைவில், காவல் காரனே, இந்தப் பள்ளம் வாழ் மக்களிடமிருந்து, அவர்கள் சுட்ட தோசை, இட்லி, இடியாப்பம், காய்ச்சினது சாயாவோ, சாராயமோ, லஞ்சமாவோ, உபசரிப்பாவோ, காசுக்கோ வாங்கிச் சாப்பிட்டான்.

இது தவிர இரவு வேளைகளில், அவைக்கே உரித்தான வேறு பிழைப்புகள் விழித்துக் கொள்கின்றன. அ—ஹெம்— அவைகளுக்கு இந்தப் பள்ளங்கள் சௌகர்யமாயிருந்தன.

இரண்டாவது உலக யுத்தம் போது, சென்னை பூண்ட போர்க் கோலத்தின் பூணாரம் இது.

மாலைச் சூரியன், அழுத களையில், மொட்டை மாடி களினிடையே விழுந்து கொண்டிருந்தான்.

என்னைத் 'திலோ'ன்னு அளைப்பாங்க. நொம்ப நாளைக்கு அப்படின்னா என்னான்னு தெரியாது. லச்சுமி, முனியம்மா, காத்தாயி, ராஜாத்தி, ரேணுகா என்கற மாதிரி பளகின பேராயில்லேன்னு தெரியதுகண்டி; அறிஞ்சுக்க அக்கறையுமில்லே.

அப்புறம் ஒரு நாள் பேரம் ஒண்ணு என்னைப் பேர் கேட்டது. எல்லாமே பேர் கேக்குதா? வந்தோமா, வேலைய முடிச்சோமா, மூஞ்சிலே முக்காடு போத்திக்கிட்டு ஓடினோ மான்ன அவசரத்துலே தானே வருதுங்க! எங்கே விட்டேன்? ஆ, பேர் கெட்டுது. "திலோ? ஓ திலோத்தமையா? அட, பேருக்கேத்தாப்பிலே தான் இருக்கே. என்ன முளிக்கறே? ரம்பை, திலோத்தமை கேட்டதில்லேயா?"

ரம்பை கேட்டிருக்கேன். 'அட பார்றா இவளை! ரம்பைன்னு நெனப்போ?'ன்னு ஒத்தரையொத்தர் ஏசிப்போம்.

"திலோத்தமை ரம்பையை விட அழகு. அவளுக்குத் தனிக்கதையே இருக்கு. சரிசரி, கதைக்கிப்போ நேரமில்லே."

அட, சொல்லாட்டிப் போயேன். கதை வேணும்னா, மூணுமணியாட்டத்துக்குப் போறேன். ஆனா, ஆறுமணிக்குத் திரும்பிடணும். தொழிலுக்குத் தயார் ஆவணுமில்லே, சீவி, முடிச்சிசிங்காரிச்சு—

ஆனா ஒண்ணு. என் பேர் என்னென்னு தெரிஞ்சிக் கிட்டப்புறம் நான் கொஞ்சம் ஜிலுக்குக் கூடத்தான். அப்பப்போ கைக் கண்ணாடிலே பார்த்துப்பேன். புருவத் துலே மை இன்னும் கறுப்பா தீட்டிக்கிட்டேன். உதட்டுலே சிவப்பு கூட பூசிக்கிட்டேன். உம், இப்ப பேட்டை சக்களத்

திங்க என்னண்டை என்ன செஞ்சுக்க முடியும்? கண்ணாடி தான் சொல்லுதே!

என்னய்யா சிரிக்கிறே? இப்பத்தான் பல் விளுந்து, மயிர் உதிர்ந்து போச்சி. பவிஷு அளிஞ்சுப் போச்சு. ஏன்ய்யா, யுத்தம் வந்துபோய் அம்பது வருஷம் ஆவப்போவுது, இல்லே ஆயிடிச்சா? அன்னி மாதிரியே இருக்க முடியுமா? உனக்கும் தான்—பொக்கை வாயிலே ஜொள்ளு கொட்டுது. ஆனா, ஆசைதான் விடல்லே. இல்லே?

உனக்கே இப்படியிருக்குமே, அப்போத்தி ஆண்களுக்கு எப்படியிருக்கும்! அவங்க நாட்டையும் வீட்டையும் விட்டுட்டு இந்த ஜோல்ஜருங்க வந்தாலும் வந்தாங்க, நான் பேப்பர் படிக்கல்லே ரேடியோ கேக்கல்லே—ஆன எனக்கே தெரிஞ்சி போச்சு—குண்டு விளாமலே நாடு நாசமாப் போச்சு. வந்து மேஞ்சுட்டுக் கொளந்தையைக் கொடுத்துட்டுப் போயிட்டாங்க. இந்த வேண்டாத வினைங்களே என்னா செய்யறது? பெத்து ப்ளாட்ஃபாரத்திலே விட்டுட்டு யார் வீட்டு வாசல் லேனும் வளர்த்துட்டு, இல்லே குப்பைத் தொட்டியிலே கடாசிட்டுப் போ வேண்டியதுதான்! இந்த மாதிரி எத்தினி நானே பார்த்திருக்கேன் தெரியுமா?

'அடிப்போடீ! மஞ்சாக்கயித்துக்குப் பொறந்தது கந்தல் பாயிலே' 'ஆவ் ஆவ்'னு துடிச்சிட்டுக் கிடக்குது. இந்தப் பாலை அதுக்கு ஊட்டினாலும் அது புளைச்சுக்கும். இதைக் கட்டிக்கிட்டு மாரடிக்கச் சொல்றியா? உனக்குப் பாவம் பொங்குதுன்னா நீயே வெச்சு சீராட்டிக்கோயேன்!

அந்தப் பேச்சும் நியாயம் தானே! வவுத்துப் புள்ளையே பாப்பியா? வேணாமிலே முளைச்சதை வளப்பியா? சுமந்து பெத்ததாச்சேன்னு நியாயம் பேசறியா? சிரிப்பு வருது. சுமக்காமலே பெக்க முடியுமாய்யா?

இப்போ பேச்சுக்குச் சொல்றேன். ஆனா நிசமான பேச்சு. யுத்தம் முடிச்சு அப்பனும் ஆயும் தெரியாத புள்ளே ஒண்ணு அஞ்சு வயசுலே ப்ளாட்பார்த்துலே கிட்டுப் புள்ளி ஆடிச்சுன்னா அது என் மவனாக் கூடயிருக்கலாம். பாண்டி யாடினால் என் பொண்ணு, என் மக்கள்னு நெஞ்சுலே நெனைக்கலாம். வெளியே சொல்லிக்க முடியுமா?

யுத்தம் வந்தாலும் வந்தது, பட்டணம் இப்பிடித்தான் சிரிச்சுப் போச்சு. யுத்தப் பொறப்புங்கன்னு ஒரு தனிப் புள்ளைப் பயிரே நாட்டுலே உயிராயிடுச்சு. இந்தப் புள்ளைங்க, கருவிலேயே கலைச்சுது போக, பொறந்தவுடனே செத்தது இல்லே சாவடிச்சது போக மிச்சம் எங்கெங்கே எப்டி எப்டி வளந்தாங்களோ, நல்லபடியா வளந்து உருப்படியா ஆள் ஆனாங்களா, இல்லே கேடிங்களா மாறி ஜெயிலுக்குப் போய்ப் போய் வராங்களா, குத்து கொலையே செஞ்சுட்டுத் தூக்கிலே தொங்கினாங்களா, கொடுத்தவ னுக்கும் தெரியாது பெத்தவளுக்கும் தெரியாது. எங்களுக்கு அந்த நேரத்துக்கு ஒடம்பே வித்ததுதான் தெரியும்.

ஒரு நெனப்புலே ஐயா, மனசு ஐயோன்னுதான் இருக்குது.

ஆனா ஒண்ணு. யுத்தக் கணக்குலே நல்லா சம்பாரிச் சோம். நேரம்தான் பத்தல்லே. தண்ணி தாண்டி வந்தவன் துட்டை எண்ணிப் பாக்கமாட்டான். அள்ளி வீசி எறிஞ் சுட்டுப் போவான். நம்மவன் தான் சாவு கிராக்கி.

சம்பாரிச்சதெல்லாம் சேத்து வெச்சிருந்தால் இப்போ ஒரு குடிசையானும் போட்டு, கலியாணம் கட்டி, கொளந்தே குட்டி பெத்துகிட்டு கௌரவமா வாழலாம். ஆனால் அத்தினியும் பாவப் பணமாச்சே, தக்குமா? இப்போ ஒரு சுருட்டுக்குத் துட்டுக்கு உன்னைக் கேக்கற நிலவரத்துலே இருக்கேன். கொடேன்! ஓ, சுருட்டுப் புடிப்பேனே! இப்போ

நான் பொம்பளையுமில்லே ஆம்புளையுமில்லே, எதுன்னு எனக்கே தெகப்பாயிருக்குது.

மாலைச் சூரியன் அழுத களையில் எட்டப் பெரிய மொட்டை மாடிகளிடையே விழுந்து கொண்டிருந்தான்.

குட்டைப் பிரம்பால் தொடையைத் தட்டிக்கொண்டு பள்ளங்களை நோட்டம் விட்டுக் கொண்டு அவைகளினிடையே அவன் நடந்தான். அவனுடைய ப்ரஸன்னம் இந்தப் பள்ளம் சேரியில் ஒவ்வவில்லை. அவனை அவர்கள் வியப்புடன் பார்த்தனர். தங்களிடையே தோளிடித்துக் கிசுகிசுத்துச் சிரித்துக் கொண்டனர்.

"பொலிமாடு அலையுது பார்!"

நேரே ஸ்திரிப்பெட்டி அடியிலிருந்து புறப்பட்டாற் போல், கஞ்சி விறைப்பில் மிடுக்காயிருந்தான். மொட மொடக் காக்கி யூனிபாரத்தில் பித்தளைப் பொத்தான்கள் 'பாலிஷ்'ஷில் பளபளத்தன. இந்த வெயில் அவனுக்கு ஆகவில்லை. மேல் தோல் வரண்டாற்போல் முகத்தின் கன்றிய செவப்பில் கண்களின் கடல் நீலம் அளாவியது. மாலைதான் என்றாலும் முகத்தில் வேர்வை கொப்புளித்த படி. கைக்குட்டையால் அழுத்தித் துடைக்கத் துடைக்க, முகம் இன்னும் சிவப்பானது. எரிந்தது. கைக்குட்டையை ஒரு தடவை பிழிந்தான்.

திடுக்கென இரண்டு நாய்கள் பயங்கரமாய்ச் சண்டையிட்டுக் கொண்டு, குரைத்துக் கொண்டு அவன் மேல் விழுந்தன. சட்டென எட்ட நகர்ந்து கொண்டான். ஒன்றன் கண் குதறிய பாதியில் அறுந்து தொங்கிற்று. ரத்தத்தைத் தரைமண் திட்டுத் திட்டாய் உறிஞ்சிற்று. வசியத்தில் அவைகளைப் பார்த்துக் கொண்டிருந்தான். ரத்த வசியம்.

கண் இழந்த நாய் ஊளையிட்டுக் கொண்டு ஓடிற்று.

மற்றது உடலை நக்கிக் கொண்டே குரைத்தது. அதுவும் ரத்த விளாறுதான். சற்று எட்டக் கிடந்த எலும்புத் துண்டை நோக்கி ஓடிற்று.

"Oh all this only for this?" அவனுக்குச் சிரிப்பு வந்தது. நகர்ந்தான். நடந்தான்.

"Dogs!"

பள்ளங்களின் அசூயைகளைப் பார்க்கக் கோபம் வந்தது. அருவருப்பாயிருந்தது. மூக்கையும் வாயையும் கைக் குட்டையுள் புதைத்துக் கொண்டு நடந்தான். கண்கள் அலைந்தன.

"Ah!" அவன் கண்கள் ஒளீரிட்டன.

பள்ளத்துள் அவள் நின்று கொண்டிருந்தாள். அவனைப் பார்த்துச் சிரித்தாள். அவளுடைய மேட்டு விழிகள் அழைத்தன. ஆனால் முகத்தில் இத்தனை பவுடரும் உதட்டில் இத்தனை சாயமும் அப்பியிருக்க வேண்டாம். ஆனால் எல்லாவற்றிலும் அதிகப்படிதான் அவர்கள் அறிந்த அலங்காரம்.

பள்ளத்துள் குதித்து வந்து அவள் எதிரே நின்றான்.

புள்ளி நல்லாத்தான் இருக்குது, சர்க்கஸ் புலியாட்டம். ஆனால் அம்மாகிட்ட இப்பத்தான் பால் உண்ண மூஞ்சியா யிருக்குது? ஆனால் அதுபத்தி எனக்கென்ன?

புன்னகை புரிந்தாள். அவனும் இளித்தான். அவள் தோளைத் தொட முயன்றான். அவன் கையை உதறினாள்.

"நோ, நோ, நோ! ரூப்பி, ரூப்பீ!" விரல்களைச் சுண்டிக் காட்டினாள்.

பான்ட் பைக்குள் கைவிட்டு ஒரு நோட்டை எடுத்து நீட்டினான்.

"நோ! நோ!" தலையைப் பலமாய் ஆட்டினாள். இவங்க கிட்ட சமயத்துலே கறந்தாத்தான் உண்டு.

இன்னொரு நோட்டு.

"நோ? நோ?"

சிரித்துக்கொண்டே இரண்டு வெள்ளி ரூபாய்களை அவள் கையுள் திணித்துத் தன் கையை விரித்தான்.

பணத்தை இடுப்பில் சொருகிக் கொண்டாள்.

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு அசட்டுச் சிரிப்பில் நின்றனர். சுற்றுமுற்றும் காலியாத்தானிருந்தது. ஆள் இல்லை. அவங்களுக்குத் தெரியும். புரிஞ்சுக்கிட்டு ஒதுங்கிடுவாங்க. ஒரு புளைப்பு நடக்குதில்லே?

அவள் கையைப் பற்றி இழுத்தான். இப்போது அங்கே ஒரு சொந்தமும் முரட்டுத்தனமும் தெரிந்தன. நேரத்தை விலைக்கு வாங்கியாச்சில்லே?

அவன் கண்கள் கொதித்தன. அவள் தலைமயிரை பற்றித் தன் பக்கமாய் இழுக்க முயன்றான். அங்கு கட்டிய செண்டு மல்லியின் மணமயக்கம் அவனை வெறியனாக் கியது.

அவளுக்குக் கொஞ்சம் பயமாயிருந்தது. அருவருப்பு வேறே. தவளைக் குடலை அறுத்த மாதிரி இதென்ன நிறம்?

அப்போது பின்னாலிருந்து அவன் தோளில் ஒரு கை விழ, திரும்பினான்.

இவன் வந்த சந்தடியே கேட்கவில்லையே! பள்ளத்தில் எப்படி இறங்கினான்? குதித்தால் பூட்ஸ் சத்தம் கேட்கல் லியே?

ஆனால் வந்தவனின் வழி வழி வர்க்கம் அதன்

மூலத்திலிருந்தே நிழலுடன் ஐக்கியமாகப் பழகினவர்கள். காலடியில் கசங்கிய சருகின் காற்றசைவிலேயே அதை மிதித்தது இரையோ, எதிரியோ, அதன் திக்கையும் விவரங் களையுமே படிக்கத் தெரிந்தவர்கள். அரவத்தை அடக்கி ஆள்பவர்கள். கானகத்தின் மோனத்தை, இரவின் நிசப்தத்தை அவை தம்முள் அடக்கிய ரகஸ்யங்களைத் தமக்கு மட்டும் பேச வைப்பவர்கள்.

ஒழுங்கு உடை, கறுப்பு நீலம் கசங்கியிருந்தது. இரும்புக் குண்டு போன்ற உருண்டைத் தலையோடு தலையாய்க் குல்லாய் போன்ற குட்டைப் பொடிச் சுருட்டை மயிர், பெரிய கண்களில் அவன் வந்த இருள் கண்டத்தின் அடவி களின் இருளும் அவைகளில் பதுங்கிய ஆபத்கரமும், இவை யிரண்டையும் மீறி ஓர் அகண்ட சோகமும் கவிந்து விழிகளே அரைக்கண்ணில் சொக்கியிருந்தன. உடல் பூரா விலங்கு லாகவம் சோம்பிற்று.

ஜன்மேதி ஜன்ம நிறப்பகை முகத்தில் சிந்த, இருவரும் எதிர்எதிர் நின்றனர். இடையே இடம் விறுவிறுத்தது.

முதலில் ஆங்கிலேயன்தான் தாக்கினான். நீக்ரோவின் தோளில் பிரம்பால் அடித்தான். உடனே வயிற்றில் ஒரு குத்து விட்டதும் நீக்ரோ வயிற்றைப் பிடித்துக்கொண்டு சுருள்கையிலேயே அவன் முகத்தில் அடுத்தடுத்து இரண்டு குத்துகள். திலோ பயத்தில் உளறியபடி அவர்களிடையே பாய்ந்து பள்ளத்தின் சுவரோரமாய் ஒடுங்கி ஓடிப் போனாள்.

நீக்ரோ தலையை உதறிக்கொண்டான். மூக்கிலிருந்து ஒரு சிவப்பு நூல் புறப்பட்டது. மறுபடியும் வெள்ளையன் கை வீச இடம் கொடாமல் அவனை இரு கைகளாலும் அணைத்தான். நீக்ரோ இரண்டு அங்குலம் கூடவே உயரம்.

அதற்கேற்ப நீண்ட கைகள். அந்தக் கரடி ஆலிங்கனத்தில் வெள்ளையன் திணறினான். சடக்கென மின்னல் வேகத்தில் இரு கைகள் அவன் குரல்வளையில் விழுந்து நெரிக்கத் துவங்கின.

வெள்ளையன் அந்தக் கைகளைப் பிய்க்க முயன்றான். தன் முழங்காலால் நீக்ரோவின் வயிற்றில் இடிக்க முயன் றான். ஆனால் அந்த மரணப்பிடி கிணுங்கவில்லை. அது தனக்கென்றே தனி உயிர் பெற்று விட்டது. கைகளின் வீச்சுக்கோ உடலின் நகர்ச்சிக்கோ, பள்ளத்தின் குறுகல் இருவருக்குமே இடம் கொடுக்கவில்லை.

வெள்ளையனுக்கு விழிகள் பிதுங்கின. வெளிவந்து விடுமோ? பிய்த்துக்கொண்டு வெளிவந்துவிடும் போல், ரத்தம் முகத்தில் சதைக்கடியில் முட்டிற்று. மூச்சு! மூச்சு!! திண்டாடினான்.

தன் முகத்தை, கண்களை, விரல்களுக்குக் கிடைத்த இடத்தில், வெள்ளையன் கைகள், மூழ்குப்பிடியில் பிராண்டின இடங்களில், ரத்தம் பாளம் பாளமாய்க் கசிவதை அந்த வலியை நீக்ரோ உணரவில்லை. அவன் உடல், ஆவி, அகம், புறம் எல்லாம் ஓர் எண்ணம், ஒரே எண்ணத்தின் குறி—கழுத்தின் முறிவின் முனைந்த தருணத் தின் தவமாகி, ஒருவிதமான பரவசத்தில் ஆழ்ந்தான்.

சட்டென்று ஒரு தும்மல் சத்தம்.

நீக்ரோவின் முகம் ஆச்சர்யத்தில் கோணிற்று. பற்கள் இளித்தன. கழுத்தின் மேல் அவன் பிடி தளர்ந்தது. எதிரி மேல் சாய்ந்தபடி, மெதுவாய்ச் சரிந்து, காலடியில் பஸ்பமாய் குமுங்கிப் போனான்.

ஆங்கிலேயனுக்கு மூச்சு இரைத்தது. சிதறுண்ட நினைவு

கூட யுக நேரம் கண்டது. பார்வை நிலையுற்றதும் கையில் ரிவால்வரும், அதன் குழாயினின்று சுருண்ட புகைநூலும் புதிதாயிருந்தன. துப்பாக்கியைப் பான்ட் பையுள் திணித்துக் கொண்டான். தலை மயிருள் கைவிட்டுக் கோதிக் கொண் டான். வேர்வை கொட்டிற்று. பிரம்பு போன இடம் தெரிய வில்லை. அதுபற்றி நினைவுமில்லை. உடல்பூரா, ரணமாய் வலித்தது.

நீக்ரோவின் உடல் மேல் கால் வைத்து ஏறி—இட மில்லை—தாண்டுகையில் கடைசி வலிப்பில் நீக்ரோவின் உடல் புரண்டு நீண்டதும் வெள்ளையனுக்குக் கால் பிசகி இரண்டு கைகளும் பிடிக்கு அந்தரத்தில் துழாவின...பிடரி, பள்ளத்தின் கோணத்தில் பலமாய் மோதிய வேகத்தில் அதன் சிமெண்ட் கூரில் கழுவேறிற்று. கால்கள் தரை யில் படாமல் உடல் தொங்கிற்று. கால்கள் உதைத்துக் கொண்டன.

ஆகாய நீலத்தைக் கட்டாயமாய் மல்லாந்துவிட்ட முகத்தில் மாலைச் சூரியன் கண்களை நேரே பறித்தான். மேலே வேகம் படப் பெருகிக்கொண்டே வரும் அவனுடைய தனியிருளில், மரணாவஸ்தையையும் தாண்டி, பல ஆயிரங் கல் தூரமும் நேரமும் தாண்டிவிட்டு வந்திருக்கும் காதலி யின் முகத்தைக் கடைசி நினைவு, முழு முயற்சியுடன் கூட்ட முயன்றது.

ரேடியோவைத் திருப்பிவிட்ட முழு இரைச்சலில்—

> ***"In the mirror of my eyes***
> ***Lemme feel the see of you***
> ***as you'd be seeing you***
> ***in my eyes!"***

என்கிற பாட்டுக்கு ஏற்ப

*மாற்றான் கட்டித் தழுவிய இறுகலுள்*
*மார்பில் மார்பகம் குழைந்து குலைய*
*தொடைக்கு மேல் ஏறிவிட்ட*
*உள்ளாடையின் ஓரத்து லேஸ்*
*அந்தரங்கங்கள் களவு காட்ட*
*ஜிக் ஜிக் ஜிகு ஜிகு*
*ஜக் ஜக் ஜகு பிகு*
*ஜிட்டர்பக்.*

அவள் ஆடிக் கொண்டிருந்தாள்.

# 11

# மெத்தென்று ஒரு முத்தம்

**கோம**தி ஜன்னலண்டை உட்கார்ந்தபடி, வெளியே மருதாணி மரக்கிளையில் இரண்டு காகங்கள், ஒன்றை யொன்று கொத்திக் கொண்டு சண்டையிடுவதைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

மாலை மஞ்சள் வெய்யில் அவளுடைய பூனை விழி களில் பட்டு, விழிகள் எரி திரிகள் ஆயின. வெய்யில் இன்னும் சற்று நேரத்தில் முகத்தை விட்டு நகர்ந்ததும், அந்த 'ஜாலக்' மாறிவிடும். மனம், அதற்கு மறுசுபாவமாவே போய்விட்ட இறுக்கம் தளர்ந்து, சற்று லேசாவே தற்போது இருந்தது. வானீலத்தில் மேகங்கள் இங்குமங்குமாய்ப் பல வர்ணங்களில் சிறுசிறு குன்றுகள் கட்டியிருந்தன. அவை களும் இன்னும் சற்றுநேரத்தில் இருட்டின் ஒரே மெழுகல் ஆகிவிடும். அவளை அறியாமலே, இடது கை இடது கன்னத்தைத் தடவிக் கொண்டது.

"கோமு, டிபன் சாப்பிடவாயேண்டி, ஆறிப் போறது." அம்மாவின் குரல் அசக்தமாய் கீழிருந்து எட்டிற்று. இது நாலாந் தடவை. மெனக்கெட்டு மாடி அடிக்கு வந்தே கூப்பிடறா. இப்படிப் புலம்பிப் புலம்பி, "எக்கேடு கெட்டுப் போங்கோடி, உங்களோட மல்லாட முடியல்லே. அவளை அட்ரெஸ்ஸே காணோம். இவள் என்னடான்னா

இருந்துண்டே, பதில் கூடச் சொல்ல முடியாமல், அந்த அழும்பே!" என்று அலுத்து அடங்கிவிடுவாள்.

ஆமாம், வீட்டில் அப்பாவைத் தவிர ஆண்பிள்ளை கிடையாது. வீட்டில் தடித்தடியா ரெண்டு பெண்கள் இருக்கறதுக்கு அம்மாவுக்கு எவ்வளவோ ஒத்தாசையா இருக்கலாம். இந்த வயசில், இந்த உடம்பில் வேளைக்கொரு கோளாறுடன் அம்மாவே ஏன் சமைக்கணும்? முறை போட்டுக் கொண்டு நாங்கள் சமைக்கக் கூடாதா? சமையல் ஒண்ணுதானா? சுத்துக் காரியம் இல்லியா? தோட்டத்துக்குத் தண்ணீர் பாய்ச்சலாம். கீதா கடை கண்ணிக்குப் போகலாம். நான் போவது நினைக்க முடியாத காரியம். வேலைக் காரியை அவள் வரும் ஒழுங்குக்கு ஒரு வழியா நிறுத்திட்டுப் பற்றுப் பாத்திரம் தேய்க்கலாம்.

இப்படியெல்லாம் நினைக்கும்போது, நன்னாத்தா னிருக்கு. மனசுக்கு ஒரு சுகம்கூட இருக்கு. ஆனால் எண்ணு வதில் கால் பாகமேனும் செயல்னு வரும்போதுதான் உடலின் வணங்காத்தனம் தெரியறது. மனம் அலுக்கறது. அது கூட இப்போ நின்னு போச்சு. அத்தனையும் அம்மா தலையில்தான்னு விடிஞ்சு போச்சு. ஆனால் அவளும் செய்ய விடமாட்டாள். திட்டிண்டேனும் அவளே செஞ்சுண் டாத்தான் அவளுக்குத் திருப்தி.

நானாவது நினைக்கிறேன். கீதா அதுகூட மாட்டாள். வீட்டில் இல்லாத வேளை போக மிச்சத்துக்கு எப்படித்தான் அலுக்காமல் கண்ணாடி எதிரில் அத்தனை நேரம் உட் காந்துண்டு இருக்க முடியறதோ? அதுவும் அப்பாவை நச்சரிச்சு, அந்த ஆள் உயர பெல்ஜியம் வீட்டுக்கு வந்ததி லிருந்து. அதை, அந்த அறையையே அவளே மானியம் எடுத்துக் கொண்டுவிட்டாள். அதன் எதிரே நின்னுண்டு அப்படித் திரும்பிப் பார்த்துக்கறதும், இப்படி இடுப்பை

வளைக்கறதும், புருவத்தை நெரிக்கறதும், உதட்டைக் கோணிக்கறதும்—அவள் சேஷ்டைகள் அவளுக்குத்தான் ப்ரீதி.

ஒருமுறை, அதுபற்றி அவளிடம் சொன்னபோது, 'நீ இருக்கற லக்ஷணத்துக்கு உனக்கு அசூயை வேறேயா?' என்று விட்டாள். துடிச்சுப் போயிட்டேன். அம்பு என்பது இதுதானா? கத்தியை விடக் கொடுமையாயிருக்கே! என் மௌனமான வேதனையைப் பார்த்து அவளே பயந்துட்டா. 'உன்னை நான் அப்படிச் சொல்லியிருக்கப்படாதோடி?' என்று ஆயிரம் கேட்டுண்டாலும், அவளுடன் அந்த ஓர் அனுபவம் போதும்னு ஆயிடுத்து. அவள் வழிக்கே போவதில்லை. அழகு படைச்சவாளுக்கே நாக்கில் நரம்பு இருக்காதோ? ஆனால் அவளைக் குற்றம் சொல்ல நான் யார்?

ஆனால் கோமதி, சிலையடித்த மாதிரி இப்போது உட்கார்ந்திருந்த நிலையில் அவள் அழகு கடைந்தெடுத்த சாஸ்திரியமாகவே (classic) இருந்தது. நூல் பிடித்த மாதிரி, அந்த நெற்றிக் கோடின் வளைவும், செதுக்கிய மூக்கும் உதடுகளும் சற்றுக்கூரிய மோவாயும்—அந்த முகமே மேகத்தினின்று பிதுங்கியது போன்று, கூந்தலின் அடர்ந்த இருட்டும்—அறை உள்ளே நுழைந்தவர் பிரமித்துப் போவர். ஒவ்வொரு புகைப்படக்காரனுக்கும் ஆனந்தம் அந்த profile.

மாடி ஏறிவரும் சப்தம். யார்? அப்பாதான்.

"என்னப்பா, இன்னிக்கு சுருக்க?"

சொக்காயைக் கழற்றி மாட்டிவிட்டு, பக்கத்து நாற்காலியில் உட்கார்ந்தார்.

"லேசாத் தலைவலி. கேட்டுண்டு வந்துட்டேன். நீ எப்படி இருக்கே?"

"எனக்கென்ன கேடு?"

கோமதியின் பார்வை, அப்பா மேல் கனிவுடன் தங்கிற்று. அப்பாவோடு இருக்கும்போது தன் இதயச் சுவர்களில் 'டால்' அடிக்கிற மாதிரி தோன்றும். அதன் ஆறுதலை வேறெப்படிச் சொல்வதென்று தெரியவில்லை. அப்பா கிடைக்க, அம்மா கொடுத்து வெச்சிருக்கணும். எனக்கும் அகமுடையான் அப்பா மாதிரி கிடைக்க மாட்டானா என்று அவள் எண்ணியதுண்டு. பிள்ளையார் தன் அம்மா மாதிரி பெண்டாட்டிக்குக் காத்துண்டு தெருத் தெருவா உட்கார்ந்துண்டில்லையா? அது போல, நான் தெருத்தெருவா நிக்க முடியுமா! நின்னாலும் எனக்குக் கிடைப்பானா?

"என்ன கண் தளும்பறது. வாய் புன்னகை பூக்கறது. அதென்ன காம்பினேஷன்?"

"இல்லேப்பா நெனச்சுண்டேன். உங்களுக்குக் கோவமே வராதா?"

"கோவமா, அதென்ன வீசை என்ன விலை?"

"வீசை?"

"ஓ, அது எங்கள் காலத்து எடை. சரி கிலோ என்ன விலை?"

அம்மா காப்பியுடன் வந்து, மேஜை மீது வைத்துவிட்டு, அவளை முறைத்துவிட்டுச் சென்றாள்.

அப்பா, கொஞ்சம் டபராவில் ஊற்றி அவளிடம் கொடுத்தார். இது அவர்களிடையே நித்தியப்படி சடங்காவே ஆகிவிட்டது. அப்பா அவளுக்குத் 'தோஸ்து!' அப்பா தன் காப்பியைப் பருகிக் கொண்டே—

"கோபத்தை வெச்சுண்டு என்னம்மா பண்றது? அதுவும் இந்த வயசில்? ஆனால் இப்பத்தான் கோபம் அதிகமா வரது. எல்லாம் கையாலாகாத்தனம்தான். தோள் கொடுக்கப்

புள்ளையிருக்கானா? இந்தக் காலத்துப் பசங்க தோள் தூக்கத்தான் காத்திருக்கான்கள். எல்லாத்துக்கும் கொடுப் பனை வேணும்.

இப்படி நமுட்டு விஷமமா, அத்தோடு லேசா விசனமும் விரக்தியும் குழைந்திருந்தால் அப்பா 'மூடு'லே இருக்கார்னு அர்த்தம்.

மருதாணிக் கிளைக்கப்பால் சிந்தித்துக்கொண்டு, அப்பா தனக்குத்தானே போல்—

"தன்னை அறையப் போகும் சிலுவையை யேசுநாதர் தாங்கிச் சென்றது, என் மனசை மிக்க ஈர்த்த சம்பவம். நாளுக்கு நாள் அதன் தாத்பர்யம் விரிய விரிய, ஆச்சர்யமா யிருக்கிறது. அவனவனுக்கு அவனுடைய சிலுவை. ஏன் உன் சிலுவையை நீ தாங்கிண்டு இல்லையா?" அவர் கண்கள் அவள் மேல் பால் சுரந்தன. "கோமு, உன்னைப் பத்தி நான் என்ன நெனச்சிண்டிருக்கேன்னு தெரியுமா? வேண்டாம். சொன்னால் சென்டிமெண்டலாக் கொழ கொழத்துப் போயிடும். உன் சிலுவை மஹத்தானது. சரி, கீதா எங்கே?"

கையை விரித்தாள். உண்மையிலேயே அவளுக்கு என்ன தெரியும்?

யோசனையில் ஆழ்ந்தார். "கீதா கண்ணில் படும்படி, வீட்டுள் இன்னும் கொஞ்சம் இருந்தால் நல்லது. நீ சற்று வெளியே போனால் நல்லது. சூரிய வெளிச்சம் மேலே பட வேண்டாமா?"

"சூரிய வெளிச்சம் என்மேல் படாமலா இருக்கேன்? அதான் தோட்டம் இருக்கேப்பா?"

"You fool! நான் இந்தச் சூரியனைச் சொல்லல்லே. சரி, சந்தியாவந்தனம் பண்ணனும்."

அப்பா கீழே போய் வெகு நேரமாயும், கோமதி நிலை கலையாமல் உட்கார்ந்திருந்தாள்.

மருதாணிக் கிளையில் அணில்கள் ஓடிப் பிடித்து விளையாடின. அவை உச்சரித்த சப்தங்கள் 'கிண் கிண்' என இனிய உலோக ஓசையில் தெறித்தன. ஆகாயத்தில் ஒரு பறவைக் கூட்டம் அணிவகுத்துச் சென்றது. அறையுள், சுவர்களின் உயரங்களில், கூரை விட்டத்தில் மின்விசிறி மேல், இருள் பந்துகள் தேங்க ஆரம்பித்துவிட்டன.

'குபீர்' என ஏதோ மலர் மணம். மாலை மலர்ந்த பூ. மனம் லேசான போதையில் அமிழ்ந்தது. அதன் சோம்பிய ஓட்டத்தில் அவள் ஒரு காயிதக் கப்பலாய், அடிவாரத்தில் தவழ்ந்த அலைக்கு அலை ஏதேதோ எண்ணங்களை ஏற்றிக் கொண்டு மிதந்தாள். கோமதி சுகானுபவத்தில் ஆழ்ந்தாள்.

அப்பா மஹான். இந்த வயதிலும் பொழுதை வீணாக்க வில்லை. சர்க்காரிலிருந்து ஓய்வு பெற்ற பின்னும் ஒரு மர வியாபாரியிடம் கணக்குப் பார்க்கிறார். நாள், கிழமை நல்லது பொல்லாது கிடையாது. பிழிந்து எடுக்கிறான். வேலைக்குப் போகாமல் முடியாது. குடும்பம் நடத்தப் போதாது. குதிராட்டம் இரண்டு பெண்கள் இருக்கோமே!

அவளுக்கு வேலைக்குப் போக ஆசைதான். ஆனால் யார் கொடுப்பார்? வேணும்னா பீடி சுற்றலாம். சிரிப்பு வந்தது. அதற்கும் அவள் தயார்தான். விடமாட்டாளே! படிப்பு எட்டாம் வகுப்புடன் நின்று விட்டது. சக மாணவி களின் கொடுமை, அனுதாபம்—அந்த அனுதாபத்துக்குக் கொடுமையையே தாங்கிக்கலாம்—புறங்கைக்குப் பின்னால் மறைத்த சிரிப்பு—அவளை ஒதுக்கல்—தாக்குப் பிடிக்க முடிய வில்லை. பள்ளி நின்றுவிட்டாள். இப்ப நினைத்துப் பார்க்கையில், பாதிக்கு மேல் தானாக நினைத்துக் கொண்ட தாத்தான் தெரியறது. ஆனால் தாழ்வு மனப்பான்மை

ஆழமாக வேரோடி விட்டது. இனி அதைத் தகர்க்க முடியாது.

கொஞ்ச நாளாவே, ஏதோ ஒன்று அவளைத் தன்னுள் இழுத்துக் கொண்டிருப்பதாக உணர்வு. நாளுக்கு இம்மி, அந்த உறையுள் புதைந்து, கடைசியில் ஒருநாள் அது என்மேல் மூடிவிடும். மார்பில் ஏதோ கல்லாய் கனத்தது. ஆனால் உடல் கோளாறு இல்லை, நிச்சயம்.

மனப்பாரம்.

கீதா, +2வை எட்டிப் பிடித்திருந்தாள். அவள் பார்வையாயிருப்பதற்கு நிச்சயமா வேலை கிடைக்கும். ஆஹா ஓஹோன்னு இல்லாட்டாலும் கிடைக்கும். ஆனால் போக மாட்டாளே! அவளுக்கு எங்கே நேரம்? அவளைச் சுற்றித் தான் ஈக்கூட்டம் ஒன்று மொய்த்துக் கொண்டிருக்கிறதே! பெண் ஈக்களையும் சேர்த்துத்தான்.

"கீதா, நீ பண்றது ஒண்ணும் நன்னாயில்லே. நெருப்போடு விளையாடறே!"

"இதென்னம்மா, நீ ஒருத்தியே போதும் போல இருக்கே! இவாளை நான் வரச் சொன்னேனா, என்னையே சுத்திண்டிருக்கச் சொன்னேனா?"

"ஓஹோ! உன் இமைகள் படபடக்கறதும், கன்னம் சிரிக்கிறது, விரல்கள் திடீர் திடீர் கோத்துக்கறதும், அபிநயம் காட்டறதும், பூமியைக் கால் தட்டறதும்—நீ இன்னு வாய் திறந்து முத்து மொழியணுமா 'வாங்கோ வாங்கோ'ன்னு!"

"அம்மாவைப் பாரேன்!" கீதா தட்டாமாலை சுற்றிச் சந்தோஷத்தில் கொக்கரித்தாள். "இதனால் என் கற்பு எரிஞ்சு போயிடுத்தா அம்மா?"

"மூடு வாயை!"

கீதா சற்றுப் பின்வாங்கினாள். அம்மாவுக்கு இத்தனை கோபம் வந்து அவளே பார்த்ததில்லை. "கற்புன்னா உனக்கு அத்தனை கிள்ளுக்கீரையாப் போச்சா? அதைப் பத்தி உனக்கு என்னடி தெரியும்?"

"தெரிஞ்சுதான் பேசறேன். என்னைக் காப்பாற்றிக் கொள்ள எனக்குத் தெரியும். இது பட்டணம் அம்மா, கிராமம் இல்லை. கிராமமோ வம்புக் கூடமோ! அங்கேதான் எதுக்கும் யார் மேலும் சந்தேகம். அந்த பாஷையைத்தான் நீ பேசறே."

கோமதி கீதாவை நம்பினாள். ஆம், கீதாவுக்குத் தன்னைக் காப்பாத்திக்கத் தெரியும். ஆமா, கீதாவுக்கு எதிலுமே ஆழமான பற்று கிடையாது. அவளுக்கு எல்லாமே பொழுதுபோக்கு. மனசை பொம்மை மாதிரிக் கீழே போட்டு உடைத்துவிடுவாள். எதுவுமே don't care. நன்னா உடுத்தணும், நன்னா சுத்தணும். அரட்டை அடிக்கணும். எல்லாரையும் பயன்படுத்திக்கணும். தர்பார் நடத்தணும். ஆமாம், கீதா சொன்னமாதிரி இது பட்டணம்.

"Hullo Madras!"

"Hullo கீதா!"

"ஹாய், வினோத்!"

வினோத், விக்ரம், விகாஸ், என்ன வினோதமான பெயர்கள். மாலைப் பொழுதுக்கென்று 'ஹாய், ஹூய், யா, யாச்—' இப்படி ஒரு பாஷை எனின் சரளமாய் அதில் கீதா நீந்துகிறாள்! கீதா பாராட்டுக்குரியவள்தான். பருவத்தின் அனுகூலங்கள் அவளிடம் செறிந்திருக்கின்றன. அதை அவள் உணர்ந்து, அவைகளை நன்கு பயன்படுத்துகிறாள். வாழ்க்கையை அனுபவிக்கிறாள். அனுபவிக்க அவளுக்கு த்ராணியிருக்கு. எனக்கு இல்லையென்றால் அவளைப்

பார்த்துப் பொறாமைப்படுவதில் என்ன அர்த்தம்? ஆம், அப்பட்டமாய், அம்மணமாப் பார்த்தால் பொறாமை யில்லாமல் பின் என்ன? அம்மணம் என்ற சொல் மனதில் தோன்றினதும், வெட்கத்தில் கன்னங்கள் குறுகுறுத்தன. இடது கன்னத்தைத் தடவிக் கொண்டாள்.

ஒருநாள். நள்ளிரவில் விழித்துக் கொண்டாள். அம்மா வும் அப்பாவும் பேசிண்டிருக்கா. (கண்ணாடி அறை கீதாவின் சயனக்ரஹம்.)

"இதோ பாருங்கோ எனக்குத் தூக்கமே ஒரு மாஸமா யில்லை. கீதாவைப் பத்தி வயத்தில் நெருப்பைக் கட்டிண் டிருக்கேன். ஒரு கட்டுக்கும் அடங்க மாட்டேங்கறா. எங்களுக் கிடையே பகையே வந்தாச்சு."

"அலமு, நீ அவளை நம்பணும். உலகத்தை நம்பணும். நீ நினைக்கிற மாதிரி உலகம் அத்தனை கெட்டதில்லை."

"நீங்கள் நம்பிண்டிருங்கோ. உங்கள் தலையில் நீங்களே கை வெச்சுண்டு ஒரு நாள் பஸ்மாசூரம் ஆறப்போத்தான் உங்களுக்குத் தெரியப் போறது. அவளைக் கையைப் புடிச்சு யாரிடமேனும் கொடுத்துட்டாத்தான் எனக்கு நிம்மதி. அங்கே எக்கேடு கெட்டுப் போகட்டும், தாலியே கவசம்னு."

"இப்போ என்ன உன் எண்ணம் நன்னாயிருக்கா?" அப்பா சிரித்தார். "அங்கே குடி கெட்டாலும் நீ தப்பிச்சுக் கணும்."

"ஆமா, அப்படித்தான் வெச்சுக்கோங்களேன்! என் கேள்விக்கென்ன பதில் சொல்றேள்?"

"என்ன கேள்வி?"

"அவளுக்கு சீக்கிரம் கல்யாணம் முடிச்சாகணும்."

"என்ன பேத்தறே, அவளுக்கு முன்னாலே ஒருத்தி யிருக்காளே!"

தயக்கம். உடனே அம்மா: "அவளைப் பத்தி என்ன சொல்லச் சொல்றேன்? அவள் அவ்வளவுதான்."

"என்னடி சொல்றே?" அப்பாவின் குரல் வெகுண் டெழுந்தது.

"இதோ பாருங்கோ. நம்மையே இன்னும் ஏமாத்திண் டிருக்க வேண்டாம். கோமதியே இப்போ தன்னைப் பத்தித் தெரிஞ்சுண்டிருப்பாள். இந்தமாதிரி கல்யாணமே ஆகாதவா, கன்னியாவே காலமாயிடறவாளை—இவாள் விஷ்ணுக்கு நாச்சியார்னு பொம்மனாட்டிகளுக்குள் ஒரு சொல் உண்டு. ஆண்டாள் மாதிரின்னு வெச்சுக்கோங்களேன்."

"கொடூரமாப் பேசாதேடீ, அவளைப் படைச்சவன், அவளுக்கென்று ஒருத்தனையும் படைசிச்சிருப்பான்."

"நீங்கள் இப்படியே நம்பிண்டிருங்கோ. கூடவே 'கல்லினுள் தேரைக்கும்' பாட்டைப் பாடிண்டிருங்கோ."

பேச்சு சட்டென்று அடங்கிவிட்டது. அம்மா திரும்பிப் படுத்துத் தூங்கிவிட்டது, அப்பா இரு கைகளாலும் தலை யைத் தாங்கிக் கொண்டு உட்கார்ந்திருப்பது, மனக் கண்முன் வந்து நின்றது.

இப்பவே போய், "அப்பா, நீங்கள் எனக்குப் பிள்ளை பார்க்க வேண்டாம். கீதா கல்யாணம் நடக்கட்டும்," என்று சொல்லிவிடலாமா? அவர்கள் பேச்சை அவள் கேட்டு விட்டது தெரிஞ்சிடும். அவாளுக்கு உடனே முகமில்லாமல் போவதைப் பார்ப்பதில் என்ன சந்தோஷம்?

அனுபவி, அனுபவி மௌனமாய் அனுபவி.

ஒருசமயம் கிராமத்தில், பாட்டியாத்துக்குப் போயிருந் தப்போ—

வீட்டுக்கெதிரே குட்டி மைதானம். அதில் ஓர் ஆலமரம்.

விழுதுகள் தொங்கின. ஓரிரண்டு பூமியில் ஊன்றியும் விட்டன. ஒரு கோடைமழை. அதன் மேல் மின்னல் விழும் போது பார்த்துவிட்டாள். கிளை விழுந்த ராக்ஷஸத் தீக்கோடு வெட்டினதும், மரம் பற்றிக்கொண்டு இரண்டாய்ப் பிளந்து, ஒரு பகுதி எரிந்தபடியே சாய்ந்தது. கம்பீர சோகம். ஒரு விபரீத கவித்வம். மின்னல் என்றால் லேசா? இந்திராஸ்த்ரம் அல்லவா? வீழ்ச்சி என்றால் இப்படித்தான் வீழ்தல் வேண்டும். என்ன பேத்தறேன்?

அந்த ராக்ஷஸக் கொழுந்தும் புகைமண்டலமும் வானளாவின. ஊரே வேடிக்கை பார்த்தது. அடுத்த நாள் பூரா எரிந்தது. கிளைகளின் சந்துகளில் நெருப்பு சீறிற்று. 'உஷ்' என்று இரைந்தது. அனலில் அவர்கள் வீட்டுச் சுவர்கள் சுட்டன. திண்ணைக் கொதிப்பு உட்கார முடிய வில்லை. உள்ளே ஏதோ ஒன்று பீதி புகைந்தது. இது நல்லதற் கில்லை.

இதுவே இப்படி ஆனால், கண்ணகியின் கோபம் எப்படியிருந்திருக்கும்? கற்பு பற்றியெரிவதென்றால் இது போல்தானிருக்குமா? சீதா சுலபமாகச் சொல்லிவிட்டாள். எப்படிச் சொன்னாள்? வாயில் வந்து விட்டது. அப்படித் தானே?

ஆண்டாள் நாச்சியார் இதுபோல ஜோதியில்தானே கடைசியாகக் கலந்திருப்பாள்? No, அது குளுமையான ஜோதி. ஆனால் தடாதகை ஹோம குண்டத்தில் தானே தோன்றினாள்? பாஞ்சாலியும் அப்படித்தானே? அஞ்சு பேருக்கும் பத்தினி.

"ராமா, இவள் கற்பின் நெருப்பு என்னைத் தஹிக்கிறது. தாங்க முடியவில்லை. இவளைப் பெற்றுக் கொள்," என்றானே அக்னி பகவான், அது என்ன நெருப்பு? இந்தப்

புராணக் கதைகளே சமயத்தில் புரியறதில்லே. நியாயங்கள் ஒண்ணுக்கொண்ணு முரணா—

கோமதி, குருட்டு யோசனைகளிலிருந்து மனமின்றி மீண்டாள்.

இருள் நன்றாவே கனத்து விட்டது. வானத்தில் அங்கு மிங்குமாய்ச் சாம்பல் கலுக்குகள் சில. மருதாணி மரம், மொத்தாகாரமாய் அதன் வடிவக் கோடுகளை மட்டும் விட்டுக் கொண்டிருந்தது. இலைகளினிடைச் சந்தினின்று ஒரு 'மினுக், மினுக்' திருட்டுத்தனமா எட்டிப் பார்த்தது.

"ஏ கோமதி; ஏடி, இப்படி இந்தப் பக்கம் பார். நான் தெரியறேனா?"

"உனக்கென்னடிம்மா, நீ நக்ஷத்ரம், உன் பதவியிலிருந்து கேக்கறே. நான் வெறும் கோமதி."

"நீ அப்படி நினைக்கறே. உண்மையில் நாங்கள் அநாம தேயங்கள். அத்தனையும் இறைஞ்சு கிடக்கும் மணல் கற்கள். நீயானும் கோமதி."

விட்டுத்தள்ளு. இந்த சம்பாஷணையைத் தொடரப் பிடிக்கல்லே. சம்பாஷணையா இது? என் ஆற்றாமை. பெருமூச்செறிந்தாள்.

விளக்கைப் போட எழுந்திருக்க மனமில்லை. இந்த இருளில் சுகம், ஆதரவு. பத்ரம் கமழ்ந்தது.

அறைக்கதவு மெதுவாய்ச் சிறுகச் சிறுக, அதன் 'க்றீச்' கூட அத்தனை அடக்கமாய்...

"கீதா!"

A whisper.

அடிகள் நெருங்கி, நாற்காலிக்குப் பின்னால் நின்றன.

"கீதா, நீ தனியாக் கிடைக்க மாட்டாயான்னு எப்படி ஏங்கிப் போயிட்டேன் தெரியுமா? எனக்கு, எனக்கு மட்டும் நீ. கீதா, என் இதயராணி."

சிரிப்பைக் கோமதி கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டாள்.

"உன்னிடம் என் இதயத்தைத் திறந்து சொல்ல எவ்வளவோ இருக்கிறது. இந்த ஜன்மம் போதாது. அதன் ஆரம்பம் இந்த ஜன்மம் இல்லை—அதற்கும் முன்னால். கீதா!—கீதா!—நான்—நான்—"

சட்டென்று அவள் பின்னாலிருந்து குனிந்து, இடது கன்னத்தில் ஒரு முத்தம் விழுந்தது. வந்தவனுக்கு உடனேயே தப்பு தெரிந்துவிட்டது.

"My God!"

ஓடினான்.

மாடிப்படிகளில் அடிகள் தட தட—

கோமதி அவள் இடத்தில் விறைத்துப் போனாள். முத்தம் என்னவோ மொக்கு மாதிரித்தான் மெத்தென்று ஒத்திற்று. ஆனால் கன்னம் தீய்ந்தது. கால் கட்டை விரலிலிருந்து மண்டை உச்சி வரை அந்த மின்தாக்கல் தனக்குத் தானே இல்லாமல் போய்விடுவாள் போல.

எழுந்து விளக்கைப் போட்டாள். கண்ணாடியெதிரில், இடது கன்னத்தைத் தேய்த்துக் கொண்டு நின்றாள். அந்தப் பயங்கர பரவசம் முற்றிலும் தணியவில்லை. ஆனால் வடிய ஆரம்பித்து, உணர்வு படிப்படியாக மீண்டது.

இடது கன்னம் பூரா, தார் ஊற்றினாற்போல், தடித்த மறு. அதில் ஒன்றிரண்டு மயிர்கள் முளைத்திருந்தன.

"பூ! ஒரு முத்தத்தில் என்ன இருக்கிறது? What is in a Kiss?" என்று கீதா சிரித்து ஊதி விடுவாள்.

ஆனால்—

அவளுக்கு ஏழு வருட நித்திரையிலிருந்து எழுந்த இளவரசி மாதிரியிருந்தது. நெஞ்சில் புது ஊற்றுப் பெருக்கெடுத்து, உள் ரணத்தையெல்லாம் ஆற்றிக் கொண்டு பாய்ந்தது!

அப்பா சொன்ன மாதிரி எனக்கு ஒருத்தன் பிறந்திருக்க மாட்டானா? ஒண்ணுமே வேண்டாம், ஒரு குருடனைப் பண்ணிக்கறேன். அது பிறவிக் குருடோ. பின்வந்த குருடோ, ஒருவருக்கொருவர் வாழ்வு தந்து கொண்டிருப்போம். என் கன்னத்தைத் தொட்டுப் பார்த்துத் தெரிந்து கொள்ளட்டும். எப்படியும் கண் பார்த்து, பார்க்கும்போதெல்லாம் படும் கொடுமையைவிடக் குறைஞ்சுதானிருக்கும்.

அன்று பூரா, அடுத்த நாளும், பிறர் என்ன இவளுக்கு என்று வியக்கும்படி, அவள் சந்தோஷமாவே இருந்தாள்.

# 12

# மந்த்ரஸ்தாயி

திடீரென இமைகளுள் ஒளியின் வெள்ளப் பெருக்கில் விழிப்பு வந்ததும், கூடமே ஒரு பெரிய புஷ்பமாக மிருது வான வெளிச்சத்தில் மலர்ந்திருந்தது. சுவரோரமாய் கண்ணன் சைக்கிளுக்கு 'ஸ்டாண்டு' போட்டுக் கொண்டிருந் தான். அவன் வந்ததுகூடத் தெரியாமல், தூக்கம் அசத்தி யிருக்கிறது.

அவனே கதவைத் திறந்து கொண்டு வந்தது ஆச்சரிய மில்லை. அவனிடம் ஒரு சாவியிருந்தது. மறுசாவி மருமகளிடம்.

என்னைப் பார்த்துப் புன்னகை புரிகிறான். கண்ணன் ஒரு வரப்பிரசாதி. இரவு எந்நேரம் விழித்திருந்தாலும், எவ்வளவு ட்யூட்டியிலும், வீட்டிலும் உழைத்தாலும், குடம் குடமாய் தண்ணீர் வெளியிலிருந்து எடுத்தாலும் அவனிடம் களைப்புத் தெரியாது. அப்போதான் குளித்தாற் போல் ஒரு freshness. வயது மட்டும் தாக்குப் பிடிக்கவில்லை. அவனுக்கு மனமே குளித்திருக்கிறது.

ஒற்றை விரலைக் காட்டுகிறான். குல்லாயை மாட்டு கிறான். இங்கு பொல்லாத குளிர். குளிர் நிறைவோ, குறைவோ, கண்ணனின் சிறகணைப்பில் குல்லாய், எங்களிடையே ஒரு சடங்காகவே நிலைத்துவிட்டது.

வாசலுக்குப் போய், மேடு விளிம்பில் நிற்கிறேன்.

இன்னும் சற்று நகர்ந்தேன், பள்ளத்தில் சரிந்தேன். அந்த நினைப்புக்கே உடம்பு உதறல் எடுக்கிறது. ஆனால் கண்ணன் என் தோளைத் தொட்டுக் கொண்டிருக்கிறான். அதன் தைரியமே எனக்குப் போதும். எதற்குமே போதும்.

பழக்க வழக்க நேரங்களில் ஒழுங்கு படிந்தவர்களுக்கு ஒரு சங்கடம். அந்த நேரம் பிசகினால் அவர்கள் பாடு திண்டாட்டம். கண்ணனின் கேலிக்குக் கோபித்துக் கொள்வதில் பயனில்லை. "என்னைப் பாருங்கள். எது எது எப்பெப்போ எப்படி எப்படி வருகிறதோ அது அதற்கு adjust ஆகி விடுவேன்.

வாழ்க்கையே அட்ஜஸ்ட்மெண்டின் தொடர்ச் சங்கிலி தானே! உடல் கூறுகள் மட்டுமல்ல; நேர்மை, நாணயம் இத்யாதி லக்ஷியங்கள், ஆசைகளையும் சேர்த்துத்தான் சொல்கிறேன். எல்லாமே காலப் போக்குக்குக் கட்டுப்பட்டவை தான். நாம் எல்லோருமே சந்தர்ப்பங்கள், சூழ்நிலையின் விளைவுதான். இதற்கு அடுத்து இது என்று கேவலம் பழக்க வழக்கங்கள் நம் தன்மையை நிர்ணயித்து விட்டால், அவைகளின் சக்கரத்தினின்று விடுபடுவதற்கோ, முன்னேற்றத் திற்கோ முற்றுப்புள்ளிதான். முன்னேற்றம் என்பது என்ன? மாற்றம்தான் முன்னேற்றம்."

ஒரு வழியாக நீர் இறங்கியானதும் (அப்பாடி!) என் கால்களில் தண்ணீரை வீசி அடிக்கிறான். நியாயமாய் என் வேலை. ஆனால் அவன் செய்கிறான். எனக்கும் வேண்டியிருக்கிறதோ?

உள்ளே நடத்தி வந்து கட்டிலில் அமர்த்துகிறான். குடிக்கிற பாவனையில் கை விரல்களை மடக்கி, கட்டை விரலை மட்டும் நீட்டிக் காண்பிக்கிறான். ஆம் என்று தலையசைக்கிறேன். அலமாரியிலிருந்து பாலை எடுத்து வந்து அடுப்பில் ஏற்றி விட்டு ரேடியோவை F.M.க்குத் திருப்பு

கிறான். பர்வீன்சுல்தானா உச்சஸ்தாயி பிர்க்கா பீச்சியடிக் கிறது. அந்த நள்ளிரவு வேளையில் நாதகிண்கிணிகள், அவைகளின் தனித்தனி வேகத்தில், கற்கண்டில், இதயத்தின், நெஞ்சின், மூளையின் கண்ணிகளுள் உருண்டோடி, அங்கு மிங்குமாய் புதைந்து கொள்கின்றன.

கண்ணனுக்கு 'ட்ராமா' செய்யப் பிடிக்கும். 'Suspense Suspense!!' "ஒவ்வொரு நிமிடத்திலும் ஒரு எதிர்பாராத வேளை, ரஹஸ்யம் ஒளிந்து கொண்டிருக்கிறது. தக்னுண்டு சாமிக்குத் துக்னுண்டு நாமம். குந்து மணியில் கறுப்புப் புள்ளி. ஆனால் பிள்ளையார் கண்ணில் புதையுங்கள். முழி வந்து விடுகிறது. பாருங்கள். அதுதான் Suspense. You see what I mean? அதுவே தேடல் தத்துவம். நிமிஷத்தைப் பிழிந்தாக வேண்டும் அப்பா!"

அவன் அப்படிச் சொல்கையில் உடம்பில் சருகுகள் துளிர்ப்பது போல் எனக்கு லேசாய்ப் பரபரக்கிறது. அவன் உற்சாகம் ஒரு தொற்று.

அடுப்படியில் ஏதோ திரிசமம் பண்ணிவிட்டு, ஒரு கையில் ஆவி பறக்கும் தம்ளர், மறுகையில் கரண்டியுடன் வருகிறான். தம்ளரை பக்கத்தில் 'ஸ்டூ'லில் வைத்துவிட்டு, என் முகத்தை நிமிர்த்தி, வாயில் கரண்டியில் உள்ளதை விடுகிறான். தாய்ப் பறவையின் பரிவில் அவனுக்கு வாய், மொக்கு திறந்து கொள்கிறது.

ஆ, பால் ஏடு! சர்க்கரையுடன் ஏலக்காய் மணம்! பாஸந்தி செய்வது சிக்கலான சமாச்சாரம். ஆனால் பாஸந்தி என்று நினைத்துக் கொண்டால் இதுவே பாஸந்தி. எனக்குப் பால் என்றால் உயிர். இங்கு பால், கறந்த நாணயத்தில் கிடைக்கிறது.

டாக்டர் கட்டளை:

பாலில் க்ரீம் கூடாது.

வெண்ணெய் எடுத்த மோர்தான் அனுமதி.

எண்ணெய்ப் பண்டங்களை விஷமாய் விலக்குங்கள்.

No வதக்கல்ஸ்

All boiled only.

கண்ணனும் சொல்கிறான். "அப்பா, உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள். உங்கள் உடம்பு உங்களுடையது. என் மேல் பழி வராமல் பார்த்துக் கொள்ளுங்கள்."

ஆனால் அவன்தான் இப்போது பால் ஏடை ஊட்டு கிறான்.

அந்த நாள் ஞாபகம் வருகிறது. அதை மறக்கவே முடியாது.

நான் சுகமாய் சுவரில் சாய்ந்து கொண்டு டி.வி. பார்க்க, தலையணைகளை என் முதுகுக்கு அண்டக் கொடுத்துவிட்டு, மாட்டுப் பெண்ணும் அவனும் சாப்பிடப் போனதும் அந்தச் சமயத்தின் சூழலில், என் மகன், மருமகளின் பிரியத்திலும் பணிவிடையிலும் திளைத்த மனது, உலகத்தில் எதனோடும் சமாதானமாயிருந்த அந்த நேரத்தில்—இது நிலைக்குமா என்று அதன் பரிபூரணத்தில் சந்தேகம் துளிர்த்த அந்தப் பொடி வேளையிலேயே—திடீரென்று மார்புள் இரண்டு இடிகள்—அடுத்தடுத்து இரண்டு சம்மட்டி அடிகள் (என்ன Voltage? அப்பா அதுவே போதும்) நான் கலைந்து குலைந்து கலகலத்துப் போனதுதான் தெரியும்.

"இது heart attack இல்லை. கண்டிஷன் நார்மலாய்த் தான் தெரிகிறது. ECG ஒண்ணும் தப்புக் காட்டல்லே. கொஞ்சம் Slow Beat அவ்வளவுதான். அது பெரிய குத்த மில்லை. ஒருவேளை mild strain... மறுபடியும் வந்தால்

வாங்கோ" ('டாக்டர் இது என்ன உங்கள் நல்ல எண்ணமா?' கேட்கவில்லை)

Check-upக்குப் போகும் போதெல்லாம் "எல்லாம் நார்மல்"... டாக்டர் அடித்துச் சொல்லிக் கொண்டே ஐந்து வருடங்களாய் (எச்சரிக்கையாம்!) மாத்திரைகள் விழுங்கிக் கொண்டிருக்கிறேன். இப்பவும் பால் ஏடையும் விழுங்கிக் கொண்டிருக்கிறேன். என்ன ருசி! என்ன ருசி!!

உயிர் மேல் ஆசையெனில், உடலுக்கு மறுக்க வேண்டும். இது அபத்தமான கூற்றாய் இல்லை? உடல் இல்லாமல் உயிர் எப்படி வாழ முடியும்? உயிரற்றுப் போனால், உடல் சிதைக்கன்றி மற்றெதற்கு?

சபலம்தான் உண்மையான ஆட்கொல்லி. மனத்தின் சீரழிவு. ஆனால் அதற்குத்தான் கடைசி வெற்றி. ஆயிரம் பத்தியமிருந்தாலும் சாவிலிருந்து பத்திரம் ஆகிவிட முடியுமா? ஆறிலும் சாவு, நூறிலும் சாவு. பாலேடைத் தின்றே சாகிறேனே!

ஆயுள் என்பதே என்ன, க்ஷணம் க்ஷணமாய் க்ஷணத் தின் நீட்டல்தானே! ஆகவே உன் க்ஷணத்தை வாழ் எனும் கண்ணனின் தத்துவம் பித்து, பொறுப்பற்றது என்று சொல்வதற்குண்டோ?

பாலைக் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பருகி அனுபவித்துக் கொண்டே, கண்ணனின் நடமாட்டத்தைக் கவனிக்கிறேன். மேஜை அண்டை உட்கார்ந்து கடிதங்கள் எழுதிக் கொண் டிருக்கிறான். அவனுக்கு நிறைய நண்பர்கள். ஆகவே நிறையக் கடிதங்கள். அப்புறம் புத்தகங்கள் படிப்பான். அப்புறம் பசிக்கும் மூலைப் பழையதைப் பிழிந்து கலத்தில் வைத்துக் கொண்டு தின்பான். அவனுக்கு விட்டுவிட்டு அடிக்கடி பசிவேளை. அகாலங்கள் அவனைப் பாதிப்ப தில்லை.

“நீங்கள் கவலைப்படாதேங்கோ அப்பா, தொணப்பா தேங்கோ. கொஞ்ச நாள் இருந்துவிட்டு, ஊருக்குப் போயிடப் போறேன். என் ரொட்டீன்—இப்படியே எனக்கு வருடக் கணக்கில் பழகிப் போச்சு. நீங்கள் தூங்குங்கோ நிம்மதியா” ரேடியோவின் சத்தத்தைக் குறைக்கிறான்.

பர்வீன் ஸுல்தானா மாறி இப்போ வயலின் இசை ஹிந்துஸ்தானிதான். எஃகுத் தந்தியில் ஏதேதோ ஜாலம் நடக்கிறது. உடல் நரம்புகளில் பாய்ந்து—மார்பில், தோள் களில், நெஞ்சுக் குழியில் எனப் படிப்படியாய் என்னை ஆட்கொள்கிறது. ‘தடால்’ என்று ‘gut’க்கு விழுகிறது. அங்கே யானையின், சிங்கத்தின் கம்பீரநடை கேட்கிறது. இலைகளும் மட்டைகளும் சலசலக்கின்றன. வாசிப்பது யார்? கேட்கத் தோன்றவில்லை. கேட்டால் கண்ணனுக்கு என்ன தெரியும்? அறிய அவசியமுமில்லை. கார்வைகள் என் மேல் வேயும் போதையில் விழிகள் செருகுகின்றன. யதார்த்தமுமில்லை. கனவுமில்லை. இரண்டுக்கும் இடை விளிம்பு நிலை.

“மந்த்ரஸ்தாயி” தந்த இந்த மயக்கத்தில் என் உடம்பே ஒரு தந்தி வாத்யம். எங்கு தொட்டாலும் அங்கு ஒரு ஸ்வரம் தெறிக்கிறது. உதிர்கிறது. அர்ச்சனைப் பூவாய்க் காணிக்கை யில் சுழல்கிறது. அம்மா, அப்பா, எல்லாம் உனக்கே, உனதே.

என் இதயம் நாதத்தின் ஊற்றுப் பெருக்கு. சிற்றலைகள் கசிந்து பேரலைகளாகி பெரும் அலைகள் ஒன்றிய வீழ்ச்சி யில் ஸ்நானம் செய்கிறேன். திளைக்கிறேன், துளைகிறேன், துல்லியமாகிறேன்.

பின்னாலிருந்து யாரோ தோளைத் தொட்ட மாதிரி. சிரிப்பு, திரும்புகிறேன்.

நீர் வீழ்ச்சியின் படுதாவைத் தள்ளிக் கொண்டு வெளிப் படுகிறாள். அந்த அசாத்யமான கூந்தல், ஸ்நானத்தில்

அடையாய் கனத்துப் பிரிபிரியாய் அவன் மானங்களை மறைக்கிறது. தானாகவே மூடிக்கொள்ள அவள் முற்பட வில்லை. அந்த உணர்வேயில்லை. அப்படியொன்றும் அழகில்லை. ஆனால் அந்த உடம்பில் ததும்பிய ஆரோக்கியமே அவளுடைய பிரகாசமாய் ஒளிர்கின்றது.

பிறந்த மேனியில் அவளைப் பார்க்க எனக்கு விகல்ப மாயில்லை. ஸர்வ இயல்பாயிருந்தாள். என் ஆண் உக்ரம் விழித்ததேயன்றி என்னைத் தாக்கவில்லை. அந்த விழிப்புக் கூட ஏதோ உண்மைக்கருகே என்னைக் கொண்டு செல்லும் சதையுரிப்புத்தான்.

சிரித்தவள், நீர்வீழ்ச்சித் திரைக்குப் பின்னால் ஒளிந்து கொண்டாள். அதனுள் நுழைந்து போய்த் தேடியும் கிடைக்க வில்லை. நீரோடு கரைந்து போய் விட்டாளா? அவள் சிரிப்பு மட்டும் உட்செவியில் ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதென்ன சிரிப்பு? "என்னைப் பார், என் அழகைப் பார்" என்று கேலியா?

இதற்கு முன் இவளை எங்கேனும் பார்த்திருக்கிறேனா? அதெப்படிச் சாத்தியம்? ஆனால் அப்படித் தோன்றக் காரணம் என்ன? இது ஏதோ கனவுக் கலக்கம் என்று இந்த அரைத் தூக்கத்திலேயே தெரிகிறதே! ஆனால் உள்ளுணர்வு ஏற்க மறுக்கிறது. இது எப்பவோ கண்ட நினைவு முகம். மனசாட்சி உறுத்துகிறது. இங்கு மனசாட்சி எங்கே வந்தது? அது என்னை இழுக்க என்ன குற்றம் செய்து விட்டேன்?

காலப்போக்கின் பின்னோக்கிய தூரத்தில், ஞாபகம் என்னதான் மங்கிப் போனாலும் சம்பவத்தின் ஆதாரம் இல்லாமல் நினைவு கூற முடியாது என்று ஒரு வாதம் இருக்கிறது. அந்த ரீதியில், கற்பனை என்பதேயில்லை. எல்லாமே நேர்ந்தது—நிகழ், எதிர் என்ற காலத்தின் சீட்டுக் குலுக்கல்தான். ஆகவே இவள் யார்? இந்த அளவுக்கு இவள்

என் நெஞ்சைத் துருவ, நான் விழித்துக் கொண்டிருக் கிறேனா, தூங்குகிறேனா?

தூக்கத்தில் காணும் கனாப் பொழுதில் மனிதன் அவன் ஆயுசை அதன் முழு விவரங்களுடன் வாழ்ந்து விட முடியும் என்று மனோதத்விகள், கனவு விற்பன்னர்கள் கூறுகிறார் கள்.

இந்த நினைப்பின் அடிக்கோலாய், என் உடம்பு ஒரு தந்தி வாத்யம். அதன் நரம்புகளினூடே நினைவு, மந்த்ர ஸ்தாயியில் இயங்குகிறது. ஆழங்களுக்குத் தன்னோடு என்னை இழுத்துச் செல்கிறது. ராவணனின் ஸாம கானம்.

ஸாம கான வினோத லோலினி.

என் கல்லூரி நாட்களில் ஒரு விடுமுறை. என் தாத்தா பாட்டியுடன் தங்குவதற்குக் கிராமத்துக்குச் சென்றிருந்தேன்.

ஸ்டேஷனிலிருந்து, வயல்களின் வரப்பு வழி விரையும் வழியில் தாமரைக் குளம். அதைத் தாண்டாமல் ஊர் போய்ச் சேர முடியாது. உச்சி வெயிலில் முகம் எரிந்தது. உடனே தண்ணீரின் நினைப்பில், முகம் கழுவிக் கொள்ளத் தோன்றி விட்டது. குளக்கரை மேட்டுக்கு ஏறினேன்.

நடுக்குளத்தில் ஒருத்தி குளித்துக் கொண்டிருந்தாள். அந்த வேளைக்கு யாரும் வர மாட்டார்கள் என்கிற தைரியம் தான். புடவையைச் சுருட்டி, தோய்க்கிற கல்லில் மேல் வைத்திருந்தது. அவளைப் பார்த்த 'திடீரி'ல் திகைத்துப் போய் நின்றேன். வான், கிண்ணம் போல், தண்ணீரின் மேல் கவிந்து—பேர்தான் தாமரைக்குளம். ஒரு தாமரை யில்லை—அந்த வெயிலுக்கும், வேளையின் தனிமைக்கும் அவள் நிலையில், சூழலுடன் இழைந்து போயிருந்தாள். எல்லாமே சேர்ந்து கானல் ஓவியம் போல்.

*கரிய மேனியாள். என்னிலும் வயதினாள். ஆனால் வயஸானவள் இல்லை.*

*என்னைப் பார்த்து விட்டாள். கன்னங்களில் நாவல் பழச் சிவப்பு குழுமியிருக்கும். யூகம்தான். இந்தத் தூரத்தில் என்ன தெரியும், அவள் சங்கடம் தவிர? அமிழ்ந்து கொள்ளத் தண்ணீரில் ஆழமில்லை. தோய்க்கிற கல் மேல் புடவை தூரத்தில் இருக்கிறது. எட்டிப் பிடிக்கிற மாதிரி யில்லை. ஓடி ஒளிஞ்சுக்கிட கரையோரம் செடியோ புதரோ யில்லை. என்னதான் செய்வாள்? அவள் பாடு சங்கடம் தான்.*

*ஆனால் சமாளித்துக் கொண்டு விட்டாள். ஒரு சிரிப்பு சிரிச்சாளே பார்க்கணும்! மிரண்டு போனேன். "என்னடா கேடு கெட்டவனே, மானம் கெட்டவனே! பொம்புளேங்க, நாங்க சமையறோமோ இல்லியோ, எங்களைப் பார்த்தா இவங்க சமைஞ்சுடறாங்க" என்றெல்லாம் திட்டவில்லை. ஆனால் அந்தச் சிரிப்பு என்னைக் கன்னத்தில் அறைந்தது. ஓடினேன். துரத்திற்று. ஓ, சிரிப்பே ஆடையாகப் பயன் படுமோ? ஆடையா, ஆயுதமுமா?*

*அப்புறம் கிராமத்தில், தினமும் ஒருமுறையேனும் என்முன் அவள் வாய்த்தாள். விடிகாலை பால் குவளை யுடன், அல்லது முற்பகல் தலைமேல் கூடையில் தயிர்ச்சட்டி யுடன், இடையர் தெருவா?—அல்ல பிற்பகல் மளிகைக் கடையிலோ. அவளைக் கடந்து நான் விரைகையில், அவள் விழிகளில் குறும்பு கூத்தாடும். உடனே பின்னாலிருந்து வெடிக்கும் சிரிப்பு. தலைகுனிந்தபடி, ஓட்டமாய் நடையைக் கட்டுவேன்.*

*ஒரோரு சமயம். அவள் சிநேகிதி யாரோடும் இருந்தால், அவள் தோளையிடித்து என்னைக் கண்ணால் காட்டி, இருவரும் 'கிசுகிசு'. உடனே அந்தப் பீறிட்ட சிரிப்பு.*

ஓடுவேன். என்னை வலுச்சண்டைக்கிழுக்கத் துடிக்கிறாள். ஏதேனும் பழியை என் மேல் சுமத்தி வம்பில் மாட்டி விட்டால், என்ன செய்வேன்? அவளுக்குச் சரியாய்ப் பேச எனக்குத் 'தில்' கிடையாது. அப்படி எதிர் வாதாடினாலும் எடுபடாது. இது போன்ற சமாச்சாரத்தில் அவள் கட்சி தூக்குமா? நானா?

அவளைக் குளத்தில் பார்த்ததிலிருந்து, பிறகும் காண நேர்ந்த சமயங்களிலிருந்து வடிகட்டின சத்தாய் அந்தச் சிரிப்புத்தான் நிற்கிறது. அதன் எதிரொலியினின்று நான் இன்னமும் மீண்ட பாடில்லை. இத்தனை நாள், தூரம் கடந்தும் இந்த வீச்சா? தான் தெரியாது. குரல் மட்டும் ஒலிக்கும் பறவை. ராட்சஸி.

வயதுக் கோளாறு இவள் மேல் காதலாகி விட்டேனா? Hate-Love உறவு? சிரிப்பால், சிரித்தவளுடன் ஒருவேளை காதல் நேரிடலாம். ஆனால் சிரிப்புடனேயே காதல்? அதுவும் இந்தச் சிரிப்புடன்?

இதில் ஒரு அகம்பாவம், அலட்சியம். கேலி, பயமுறுத்தல், எல்லாம் ஒருங்கே த்வனிக்கின்றன. கூடவே ஒரு வசியம், மர்ம தத்வம்? பையா, இந்தச் சிரிப்புள் மீறிப் படிக்கிறாய். The romanticism in you!

ஒன்று அடித்துச் சொல்வேன். அவளை நிர்வாணமாய்ப் பார்த்ததனால் எனக்கு அவள் மேல் எந்த விகாரமும் ஏற்பட வில்லை. அந்தச் சமயத்துக்கு அவள் நிர்வாணம் இயல்பாய்த் தானிருந்தது. நிர்வாணி என்று பெயரிட்டே அழைக்கலாம்.

நான் பட்டணத்துக்குத் திரும்ப தயாரான முதனாள், பாட்டி திடீரென இறந்து போனாள்; தாம்பூலம் மாரில் அடைத்து. இத்தனைக்கும் இடித்த தாம்பூலம்தான். ஆனால் அவளுக்கு வேளை வந்துவிட்டது. வாசலில் கூடிவிட்ட

கும்பலில் அவளும் இருந்தாள். முகத்தில் இரங்கல், அனு தாபம் மாதிரி தெரியவில்லை. லேசான முறுவலிப்போ? சே, எனக்கு ஏன் இப்படி புத்தி கோஷிக்கிறது?

பின்னர் நான் கிராமத்துக்குப் போக நேரவில்லை. அவளுடைய முகமும் பயமும் நினைவில் எங்கோ புதை யுண்டு போயின.

காலகட்டம் வினோதமான சமாச்சாரம். அதன் பின்னோக்கின வீச்சில், விஷயங்களின் பரிணாமங்கள் எப்படி எப்படியோ மாறுகின்றன. சம்பவங்கள், மதிப்பீடுகள், எடைகள் அவையவைகளுக்குரிய குழிகளில் விழுந்து விடுகின்றன. சின்னதாயிருந்தது, பெரிதாகி, பெரிது அற்ப மாகி விடுகிறது. இத்துடன் மந்த்ரஸ்தாயியின் 'மாஜிக்'கையும் சேர்த்துக் கொள். தம்பி, அது தனியல்ல; உன் ஸ்தாயி.

வயலின் இசை மாறி, இப்போ "ஸோ ஜா ராஜகுமாரி."

ஸைய்கலின் குரலை golden voice என்கிறார்கள். அப்படி ஒன்றும் இனிமையில் அவனை நான் சேர்க்க மாட்டேன். எப்பவுமே அவன் மந்த்ரஸ்தாயிதான். ஆனால் அங்கு அவன் தொடும் ஆழங்கள், பாடகனே நினைக்காத ஆழங்கள்—நாதத்தின் படுகையிலேயே புரள்கிறான். மாந்தர் செவிபட மேலே வராது, அங்கேயே அவைகளின் தனிமை யில், கற்பில் நீந்தும் நாதபிந்துக்களுடன் அந்தக் குரலும் பிந்துக்களைச் சொரிகிறது. ஏதேதோ அனுமானங்கள், அந்த ஆழங்களிலிருந்து முகடுகள் காட்டுகின்றன. பிடி எட்டாமல் வழுக்குகிறது. ப்ரக்ஞை ப்ரதக்ஷணம் வருகிறது. நேர்ந்த சம்பவங்கள், இழைத்த காரியங்கள், தம் தம் மணிகளை இழந்த பதர்களாய் வெற்றியில் அலைகின்றன.

கல்யாணம் செய்து கொள்கிறோம். வாழ்க்கை பூரா முதலிரவாகுமா? முதலிரவே நீ ஆயுசாய் எதிர்பார்த்து,

பூஜை செய்தபடி இருக்கிறதோ? அன்றே எத்தனைக் கண்ணுரிப்பு, கலக்கங்கள்...கலக்கங்கள் மாறின அளவுகள், அளவு கோல்கள்; உன் வாழ்வுக்கும் நீ சமாதானமாக வேண்டிய வேறுபாடுகள்? அன்று தலைகாட்டினவை, அவைகளின் வேளை வந்ததும் முழு சொரூபத்தில் தலை விரித்தாடுகின்றன.

குழந்தைகள் பிறக்கின்றன. பிறந்தவை பெரிசாகின்றன. ஆக ஆக அவைகளுக்குப் பெற்றோர் மேல் சகப்பு. பெற்றவர் களுக்குக் குழந்தைகள் மீது ஏமாற்றம். "நம் உடம்பையே பார்த்துக் கொள்ளுங்கள், அஞ்சு விரலும் ஒண்ணா யிருக்கோ?" என்று சமாதானம் வேறே. புளித்துப் போன பழமொழி (ஆனால் வாழ்க்கையில் பழமொழிகள் இல்லா விட்டால் தொலைந்தோம்!)

முதுகில் குத்து விழுந்த பின்தான், பிறவியுடன் கொண்டு வந்திருந்த கத்தியை, கையுள் இத்தனை நாள் எவ்வாறு ஒளித்து வைத்திருந்தான் என்கிற கேள்வியின் கொக்கி, மரணத்தில் மங்கிக் கொண்டிருக்கும் பார்வையை அடைக்கிறது.

ராமா! ராமா!!

அவனை ஏன் அழைக்கிறாய்? நீ ஏமாந்த நேரத்தை நொந்து கொள். உண்மையை முகத்துடன் முகம், விழியோடு விழி நோக்கத் தைரியமின்றி, வியாக்யானங்களுள் ஒளிந்து கொள்வதே வாழ்க்கை முறையாகிவிட்டது.

இரவு சுமார் எட்டுக்குக் கிட்ட.

அன்றை எப்போது நினைத்தாலும் இப்பத்தான் நேர்வது போல, உள்ளமும் உடலும் வெலவெலத்துச் செயலிழந்து விடுகின்றன. அன்று மிச்ச நாள் பாழ்.

வீட்டை நோக்கி, கிருஷ்ணகிரி ரோட்டில் விரைந்து

கொண்டிருக்கிறேன். இன்று நிச்சயமாய்க் கண்ணன் காய்ச்சப் போகிறான். "முதலில் வெளியில் கிளம்ப யார் அனுமதி தந்தது?" என்று ஆரம்பித்து, "உங்கள் வஸ்தாத்தன மெல்லாம் இங்கேதான் காண்பிக்கணுமா? ஆமா, உங்கள் உத்தேசம்தான் என்ன? வந்த இடத்தில் என் மேல் ஒரு அபாண்டத்தைச் சுமத்திட்டுத்தான் போவோமே என்றா?" என்று இன்னும் எங்கெங்கோ போய்க் கொண்டிருப்பான். பாசத்துக்கு முதல் பலி மரியாதை. என் சமாதானங்கள் செல்லாது. எனக்குத் தெரியும்.

பட்டணத்தில் கடிதம் மூலம் பரிச்சயம் ஆன ஒரு ரசிகனைக் காண வாணியம்பாடிக்குப் போய், அவன் வீட்டில் இல்லாத ஏமாற்றத்துடன் திரும்பி வரும் வழியில் பஸ் பிரேக் டௌன். 'சரி இன்னும் இரண்டு மைல்தானே'— வழியில் யாரோ சொன்னது—ஆனால் நடக்க நடக்க, தூரம் மைல் மைலாய் நீண்டு கொண்டே போகிறது. கால் மணி நேரத்துக்கு ஒரு பஸ் பறக்கும் இந்த ரோட்டில், பழியாய் ஒரு மணி நேரமாய் ஓசூர் நோக்கி ஒரு பஸ் கூடக் காணோம்.

சட்டென என்னை உராய்ந்தாற் போல் ஒரு ஸ்கூட்டர் 'பிரேக்' போட்டு நின்றது.

"ஏறுங்க ஸார் போகலாம்."

திகைத்து நின்றேன்.

"கண்ணன் அப்பாதானே நீங்க, ஏறுங்க!"

"ஆமா, என்னை எப்...ப...டி?" என்று குழம்பினேன்.

"உங்களை நல்லாத் தெரியும் ஸார்—பத்திரிகைகளில் உங்கள் போட்டோ பார்த்திருக்கேன். கண்ணனும் நானும் ஒரே ஆபீஸ். இந்த நடையில் எப்போ வீடு போய்ச் சேருவீங்க?—சரியா அட்ஜஸ்ட் ஆயிட்டிங்களா? கிளம்ப லாமா."

ஜாக்கிரதையாக ஓட்டினான். குட்டையான மெலிந்த உருவம். முன் மண்டையில் லேசாகிக் கொண்டிருந்த தலை மயிரை ஜாக்கிரதையாக ஒட்டி வாரியும், பிரிகள் காற்றில் அலைந்தன.

ஒருமுறை முகம் என் பக்கம் திரும்பியபோது அதில் புத்திசாலித்தனம் குறுகுறுப்பது கண்டேன்.

"ஆபீஸில் இன்னிக்கு லேட் ஆயிடுச்சி. ஒரு ஃபைலை முடிக்க வேண்டிய அவசரம். அதனால்தான் இன்னிக்கு உங்களைச் சந்திக்க முடிஞ்சது" வாய்விட்டுச் சிரிப்பு. "நானே மிஸஸ்ஸை அளைச்சுக்கிட்டு வீட்டுக்கு வரத்தா னிருந்தேன். அடுத்த வாரம் பிறந்த வீட்டுக்குப் பிரசவத் துக்குப் போவுது. கண்ணன் நிறைய உங்களைப் பத்திச் சொல்லியிருக்கான். நாங்கள் நிறையப் பேசுவோம். ஸார், நான்கூட எழுதறேன்" மறுபடி சிரிப்பு. அதில் இப்போது லஜ்ஜை. "ரெண்டு தடவை ஸெக்கண்டு ப்ரைஸ் கிடைச் சிருக்கு. இதை உங்க கிட்டே சொல்றதுக்கே என்னவோ மாதிரியிருக்கு—ஸார், உங்களுக்குப் போட்டியான்னு சிரிச்சுக் கறீங்களோ என்னவோ? ஸார், இப்பவே சொல்லிடறேன். என் மிச்ச ஆயுசு பூரா எழுதினாலும் நான் உங்கள் எழுத்தின் ஓரம் கூட எட்ட முடியாது. எனக்கு நல்லாத் தெரியும். அதுக்கெல்லாம் ஆசைப்படறதே தப்பு."

வண்டி வழுக்கிக் கொண்டு போயிற்று. நல்லா ஓட்டத் தெரிஞ்சவன். வேக வெறியில்லை. பொறுப்பும் எச்சரிக்கை யும் தெரிகின்றன.

கண்ணனுக்கும் இவனுக்கும் சில விஷயங்களில் சாயை ஒன்றாயிருக்குமோ? பேச்சில் வசீகரம். இவனிடம் சாயைகள் கூட. கண்ணன் சொல்லியிருக்கிறான். குறுக்குப் பரீட்சைகள் ஏதேதோ தேறியிருக்கிறானாம். முன்னேற்றமே முனைப் பாய்த் திட்டமிட்ட பரீட்சைகள், தொடர்புகள், ஆடம்பரங்கள்

அனாவசியச் செலவுகள் தவிர்த்த வாழ்க்கை. சிக்கனம். ஆனால் கஞ்சத்தனம் கிடையாது.

"ஆனால் உங்கள் எழுத்தை எல்லாமே புரிஞ்சுக் கிட்டேன்னு சொல்ல முடியாது. சிலது எங்களுக்கு இப்போதைக்கு இல்லேன்னே தோணுது. நாளாக ஆக ஒருவேளை புரியுமோ என்னவோ?"—சிரிப்பு. "படிச்சவுடனே கிடைக்காத எழுத்தை எழுதணுமா? என்கிற கட்சியைச் சேர்ந்தவன் நான். தப்பா நெனைக்காதீங்க. நினைச்சுக்க மாட்டீங்க. உங்களோடு என்ன வேணுமானாலும் பேச லாம்னு கண்ணன் சொல்லியிருக்கான்."

வாழைப்பழத்தில் ஊசியேற்றுகிறான்.

"ஆனால் அதையும் நீங்களே சொல்லிட்டீங்க: 'அவரவர் பூத்ததுக்குத் தக்கப்படி' பக்கா defence ஸார் அது! ஏன், ஒரு பேட்டியிலோ, முகவுரையிலோ, இன்னும் வெளிச்சமாவே எழுதினதெல்லாம் புரிஞ்சேதான் ஆவணு மான்னு கேக்கறீங்க. நல்ல daring ஸார் உங்களுக்கு... எங்கள் கேள்வியையே பதிலாய் எங்கள் மேலேயே தூக்கிப் போட நீங்களே!" மறுபடியும் சிரிப்பு. நானும் சிரிக்கிறேன்.

"ஆனால் ஒண்ணு ஸார். எங்களுக்கு இதுதான் ஆச்சரியம். இந்த வயசுலேயும் எழுதிட்டிருக்கிறது. ஒண்ணு இதிலிருந்து புரியுது. எழுத்துக்கு வயசு கிடையாது. ரிடையர் மென்ட் கிடையாது. அப்படி நினைக்கிறதுலே எங்களைப் போலவங்களுக்கு ஏதோ தெம்பாயிருக்கு. எங்களுக்குப் பேர் பண்ண இன்னும் சான்ஸ் இருக்கு இல்லையா?"

அவன் திடீரென 'பைக்'கை முறுக்கின வேகத்தில் டயர்கள் 'க்றீஈஈச்'. நான் அவன் மேல் சாய்ந்தேன்.

எங்கள் எதிரே ஒரு கார் எங்களைக் கடந்து பறந்தது. அதனின்று ஒரு சிரிப்பு எங்கள் மேல் மோதிற்று.

"பார்த்தீங்களா ஸார்? Wrong side... அவங்களுக்கே நல்லாத் தெரியும். நம்ம என்ன செய்ய முடியறது? பணம் படைச்சவங்க என்ன வேணும்னாலும் செய்யலாம். எப்படி யானும் இருக்கலாம்."

என் கவனம் அவன் பேச்சில் முழுக்க இல்லை. அந்தச் சிரிப்பு—உடம்பில் ரத்தத்தைச் சுண்ட வைத்து, வயிற்றைக் கலக்கும் சிரிப்பு.

அடுத்து அல்ல, அந்தக் கணமே அல்ல அப்படி எண்ண, எண்ணுவதற்குத் தோன்றக் கூட நேரமில்லை—எதிரே ரோட்டின் சரிவினின்று அந்த மொத்தாகாரம் எங்கள் முன், எங்கள் மேல் ஒன்றையொன்று விலக்க இரண்டுக்குமே நேரமில்லை. இடமுமில்லை, முடியவும் முடியாது.

நான் என்னவானேன்? எனக்கு முன்னால் என் உயிர் 'வெல்லம்' பேசிவிட்டது. 'பைக்'கிலிருந்து தாவி விட்டேன். என்னால் முடிந்திருக்காது. உயிர் 'வெல்லத்தினால்'தான் முடிந்திருக்கும். ரோட்டின் பக்கவாட்டுப் பள்ளத்தில் விழுந்து சரிந்து உருண்டேன். கால் கட்டை விரல் திரும்பிக் கொண்டது. ஆனால் அப்போ தெரியாது.

யதார்த்தத்தைப் பிட்டுக் காண்பிக்கிறேன் என்று கோரத்தை அடுக்கடுக்காய் விவரிக்கும் எழுத்து பெரிய எழுத்து ஆகி விடாது. அந்த எழுத்துக்கும் அது விவரிக்கும் சம்பவத்துக்கும் அனுமானமில்லை. எப்படியும் அது என் வழி அன்று.

'பைக்' துவையலாகியிருந்தது. ஓட்டியவன் நிலைமையை யூகித்துக் கொள்ளுங்கள். சிதர்கள் கூட முழுமையில் சேர்க்க முடியவில்லை. போஸ்ட் மார்ட்டம் என்று எதை வைத்துக் கொண்டு செய்தார்களோ?

விதிமுறைப்படி நடக்க வேண்டியவையெல்லாம் நடந்தேறிய பின் இருப்பதை வைத்துக் கொண்டு உருக்கூட்டி, சாமர்த்தியமாய், இரக்கத்துடன் மனிதாபிமானத்துடன், சிரத்தையுடன் தைத்திருந்தார்கள் என்றே சொல்ல வேண்டும். வெள்ளைத் துணியில் இறுகச் சுற்றி விட்டார்கள்.

உடலுடன் வண்டியில் நான், கண்ணன், இன்னும் நெருங்கிய நண்பர்கள் இருவர் போனோம். முன்கூட்டியே வீட்டில் இருந்தவர்களுக்குச் சேதி போய், தயாராக்கியிருந்தது. காத்திருந்தார்கள்.

அவன் மனைவி மாடியிலிருந்து இறங்கி வந்தாள். அழுது, முகம் வீங்கி அப்படியெல்லாமில்லை. துயரத்தை அதற்குரிய கெளரவத்துடன் தாங்கிக் கொண்டிருந்தாள். அவளே குழந்தை முகமாய்த்தானிருந்தாள். குழந்தை வயிற்றில் குழந்தை! ஆண்டவனே, இப்படியெல்லாம் ஒரு விளையாட்டா?

முகத்தை மூடியிருந்த துணியைத் தள்ளிக் காண்பித்ததும், அவள் பார்த்துவிட்டு,

"இது பாவாயில்லே. பாவா முகம் சிரிச்ச முகம்."

அவ்வளவுதான். சொல்லிவிட்டு மேலே ஏறிப் போய் விட்டாள்.

கணவன் மரணத்தை ஏற்க மறுக்கிறாள். ஆனால் கணவனுடைய நினைவு முகத்தை ஸ்தாபிக்க முயல்கிறாள்.

நினைவு முகம் நித்திய முகம்.

குற்ற உணர்வு சில இரவுகளில் எழுப்பி விடுகிறது. நாங்கள் சந்திக்காமலே இருந்திருந்தால் இந்த விபத்து நேர்ந்திருக்காதோ? அவர் பாட்டுக்கு நேரத்துக்குப் பத்திரமாய் வீடு போய்ச் சேர்ந்திருப்பாரோ? நான் குதித்து

விட்டேன். அவரால் முடியாதா? எனக்காகத் தயங்கினாரா? அந்தப் பொடி நேரத் தயக்கம். அவர் விதியை முடிக்கப் போய் விட்டதே? அப்போ நான் காரணமா?

என் அந்திமக் காலத்தில் நினைவையே மாறாத புண்ணில் தீய்த்து விட்டதொரு சம்பவத்தை என் கடைசி வேளையுடன் சுமந்து செல்வது என் சிலுவையா? நல்ல ஜன்மமா, சின்ன உயிர், அதன் முழு வாழ்வு இருந்திருந்தால், எத்தனையோ பேருக்குப் பயன்பட்டிருக்கும் பிறவி. இதெல் லாம் உனக்குக் கிடையாதா? இல்லையேல் ஏன் பிறப்பித் தாய்? சுற்றியிருப்பவருக்கு ஆசை காட்டி ஏமாற்றவா? சாவே இதனால்தான் உன்னோடு எப்பவுமே சமாதானம் ஆக முடியாது.

மண்டை கொதிக்கிறது.

காருள் இருந்தது யார் என்று பார்க்க முடியா விட்டாலும் அந்தச் சிரிப்பை வைத்துச் சொல்கிறேன், அதற்குரியவளைச் சந்தித்திருக்கிறேன். முப்பது, முப்பத்தி ஐந்து வருடங்களுக்கு முன் நான் என் உத்தியோகம், வயது, உடல் செழிப்பில் இருந்தபோது—

—எங்கோ 'காம்ப்'பிலிருந்து ரயிலில் வீடு திரும்பிக் கொண்டிருக்கிறேன். விடிந்தால் 'சென்ட்ரல்'.

ஒரு ஸ்டேஷனில் வண்டி நின்று புறப்பட்டு விட்ட பின், ஒரு ஜோடி அவசரமாய் மூட்டை முடிச்சுடன் முண்டி யடித்துக் கொண்டு ஏறிற்று. பின்னாலிருந்து போர்ட்டர் அவர்களை உள்ளே தள்ளித் திணித்தான்.

எனக்கு எரிச்சலாய் வந்தது. இரவெல்லாம் இடம் எனக்கு மட்டும் என்று நினைத்திருந்தேன்.

என்னைப் பார்த்து விட்டாள். அவள் கண்கள் விரிந்தன. "அட நீங்களா?" அப்படியே மூட்டை முடிச்சு

களைப் போட்டபடி, என்னை இடித்துக் கொண்டு அருகே உட்கார்ந்து விட்டாள். என் கூச்சம் அவளுக்கு அக்கறையில்லை. ஆனால் எனக்கும் என் வெறுப்பினூடேயே ஒரு அல்ப சந்தோஷம்—ஸ்பரிச சபலம்தான்—அடித்துக் கொண்டதை மறுப்பதற்கில்லை.

அட, இடைச்சிக்கு முதல் வகுப்பு ஏறும்படி வாழ்வா? ஆனால் கேட்க நான் யார்? கொண்டவன் பாக்கியம். அவன் எதிர்சீட்டில் சரிந்து கிடந்தான். காங்கையடிக்கும் கண்கள் என் மேல் ஊன்ற முயன்றன.

"அவரைக் கண்டுக்காதீங்க."

"ஏன் ஜுரமா, தண்ணியா?"

"ஐயோ அப்படியிருந்தால்தான் தேவலையே! அதை ஏன் கேக்கறீங்க? போதை மருந்து. ஊசிலே ஏத்திக்கிறது. எவ்வளவோ சொல்லியும், தடுத்தும் பார்த்தாச்சு. அது அவ்வளவுதான். இனிமே பூட்ட கேஸ்!"

எனக்கு மார்பு சில்லிட்டது...ஒடுக்கிக் கொண்டேன். இத்தனை குரூரமா? தனக்கு இன்னும் சௌகரியமாய் என்னை நெருக்கினாள்.

"ஆமா, அன்னிக்குக் குளத்தில் என்னைப் பார்த்து அப்பிடி மிரண்டுட்டே? உன் மூஞ்சியை நெனச்சு நெனச்சுப் பார்த்து, சிரிச்சுச் சிரிச்சு எனக்கு இன்னமும் மாளல்லே. அதுவே ஒரு வியாதியா ஆயிடுச்சு. ஓ, இவர் கிட்டேயும் சொன்னேன். இவரும் சிரிக்கிறார். ஆனா இவரு உன் பக்கம் தான். பாவம் விவரம் தெரியாத வயசு. ரொம்ப மிரண்டிருப்பான் என்கிறாரு. ஆனால் இன்னும் நீ அப்படியே சொல்லிக்கிட்டிருக்க முடியுமா? கல்யாணம் கட்டி, கொளந்தே குட்டி பெத்து, இப்ப எல்லா விவரமும் தெரிஞ்சிருக்குமே!" முழங்கையால் விலாவில் இடித்தாள். வலித்தது.

"உன் புருஷனைக் கவனி. மூஞ்சி வெளிருதே. வாந்தி வருதோ என்னவோ?"

"ஆமா—" தூள் கொட்டினாள். "அதுக்கு வேறென்ன வேலை? இதோ பாரு, வாழறதுக்கு உடம்பு, வழிகாட்ட புத்தின்னு ஆண்டவன் கொடுத்தனுப்பிச்சிருக்கான். அதன் படி நடக்காட்டி தன் வாந்தியிலே தானே முளுவிச் சாவ வேண்டியதுதான்!"

என்ன பேசுகிறாள்? தத்துவமா, விரக்தியா, கஷ்டத்தில் அலுத்துப் போன ஜீவன்...இடைச்சி பேச்சா இது?

ரயில் மெதுவாக நகர ஆரம்பித்தது. ஸ்டேஷன் வருகிறதா? இல்லை, சிக்னல் தகராறா? அவள் பேராசை என்னைப் பூரா வருடியது. முகம் மிக்க அருகாமையில் வந்து விட்டது. அனல் மூச்சு என் முகத்தை எரித்தது. விழிகள் பச்சையாக மாறி விட்டனவா? அவைகளின் தனி ஒளி என்னை உறிஞ்சுவது போல எனக்கு உடல் 'ஜிவ்'விட்டது. வெலவெலத்துப் போனேன். அவைகள் ரயில் ஜன்னலின் இரு பக்கங்களில் ஊன்றிக் கொள்ள நடுவே மாட்டிக் கொண்டேன். பயத்தில் திணறினேன். மூச்சுப் பிடித்து, என்னைத் தடுத்துக் கொண்டிருந்த கையை உதறி ஓடிப் போய் கதவைத் திறந்து, ரயில் இன்னும் நகர்ச்சியிலிருக்கையிலேயே குதித்து விட்டேன். கைப்பெட்டியை ஸீட்டில் விட்டு விட்டது கூட ஞாபகமில்லை. உடல் ரத்தத்தைச் சுண்டி, குடலைக் குழப்பும் அந்தச் சிரிப்பின் துரத்தலினின்று ஓடினேன்.

ஓடி ஓடி, சட்டைப் பையில் இருந்த சில்லறையில்— ஏதோ பஸ், நடை, பிச்சை, சவாரி, என்று ஓட்டமாய், வெற்று வயிறுடன், பிற்பகலோ, மாலையோ, விளக்கு வைத்தோ எதுவுமே நினைவில்லை. எப்படியோ வீடு போய்ச் சேர்ந்து

உடுப்புக் கூடக் களையாமல் நேரே படுக்கையில் விழுந்தவன் தான்—

மஞ்சள்காமாலை.

மஞ்சள்காமாலை என்றால், படுக்கை மஞ்சள், தலையணை மஞ்சள், உடுத்திய ஆடை மஞ்சள், கண் மஞ்சள், கால் கட்டைவிரல் வரையிலிருந்து தலை மயிர்க்கால் வரை மஞ்சள், பார்வை எல்லாமே மஞ்சள் குளிப்பாட்டு. குரலே மாறிவிட்டது. எந்த நிமிடம், பீங்கான் 'சில்'லாய்ச் சுக்கலாகி விடுமோ? களைப்பா? அம்மாடி, அது போன்ற சோர்வை நான் பிறரிடம் கூடக் கண்டதில்லை. நினைப்பும் மூச்சும் இழையோடுவது எனக்கே தெரிகிறது. விழிக்க முடியா இமைகளுக்கடியில், ஸன்னமான பார்வைக் கீற்றில், கவலை தோய்ந்த முகங்கள் தெரிந்து மங்கின. தண்ணீரின் அடியிலிருந்து வருவன போல் விசும்பல்கள்.

"அம்மா, உடம்பில் நீர் வெச்சுடுத்தே, பார்த்தேளா?"

"நம் கையில் என்னம்மா இருக்கு? அவளிடம் சரணாகதியைத் தவிர நமக்கு என்ன தெரியும், நம்மால் என்ன முடியும்? அவள் கைவிட மாட்டாள், அவள் என்ன சத்தியம் மறந்தவளா?" அம்மா பாடுகிறாள். இந்த வயசிலும் குழல் போன்ற குரல்.

பெற்ற வயிறின் மஹிமை.

அகமுடையாளின் விரத பலம்.

குழந்தைகளின் பாசம்—வேளை அறவில்லை.

எல்லாம் சேர்ந்து முதலை வாயிலிருந்து மீண்டேன்.

மறுபிறவி.

மீள மூணு மாசம். தேற ஆறு மாசம். தனியார் நிறுவனமாயிருந்ததால், முதலாளிக்கு இரக்க மனசு இருந்ததால்—

தூரத்து உறவு கூட. வேலை காத்திருந்தது. ஆனால் உடம்பில் பழைய தென்பு, பலம் வரவில்லை. வரவேயில்லை.

'வெடுக்'கென்று விழிப்பு வந்ததே என்னைத் திடீரென்று சூழ்ந்து கொண்ட நிசப்தம்தான். காரணம்? சுற்றும் முற்றும் பார்க்கிறேன். கண்ணன் மேஜை மேல் கைகளினிடையே கவிழ்ந்த தலையுடன் தூங்குகிறான். ரேடியோவில் வைத்திருந்த அலை ஓய்ந்து விட்டது போலும். லேசாய் 'கர்ர்புர்'

திடீரென்று பயமாயிருக்கிறது. வெளியிலிருந்து யாரேனும்?—இல்லையே, உள்ளே கதவு தாழிட்டுத்தானே யிருக்கிறது. ஆனால் நான் தனியாயில்லை. யாரும் தென்படவுமில்லை. பயமாயிருக்கிறது. என்னைச் சூழ்ந்த நிசப்தம் உண்மையில் அது இல்லை. தன்னுள்ளிருந்து எனக்கு ஏதோ தெரிவிக்கத் தவிக்கிறது. நரம்புக்கு நரம்பு ஏதோ தந்தி பறக்கிறது. பயமாயிருக்கு.

"கண்ணா!" உரக்கவே கூப்பிடுகிறேன். பதில் இல்லை. அப்படி இருக்க மாட்டானே! எழுந்து போய் அவன் காதண்டை கத்துகிறேன். "கண்ணா! கண்ணா!" புரண்டு கூடக் கொடுக்கவில்லை. லேசாய்க் குறட்டை. பாவம், அசதி. எனக்குப் பயம் அதிகரிக்கிறது. அவன் தோளைப் பிடித்து உலுக்குகிறேன். ஊஹூம். என் தொடல் அவன்மேல் பதிய வில்லை.

தற்செயலாய் என் பார்வை என் படுக்கை மேல் செல்கிறது. அங்கு ஆழ்ந்து உறங்கிக் கொண்டிருக்கிறேன். இதென்ன அதிசயம்? கனா இன்னும் ஓயவில்லையா? கனாக்குள் கனவா? இப்படியும் ஒரு நிலையா?

இப்போது அவளைப் பார்க்கிறேன். கட்டிலண்டை நின்று கொண்டிருக்கிறாள். பிறந்த மேனியில் வரை

கோடாய்த் தெரிகிறாள். புன்னகையில் கருணை பொழிந்து கொண்டு அமானுஷ்ய அழகில் மிளிர்கிறாள்.

என் தோளைத் தொட்டுத் தன் பக்கம் இழுக்கிறாள். வரைந்த கோடு உதடுகளின் அசைவில் சொற்களைப் படிக்கிறேன். படிக்க வருகிறது.

நான் ஸத்யை

நான் நிர்வாணி

நான் வ்யாபகி

நான் நித்யை

நான் மரணி

அவள் கைகள் என் கழுத்தில் விழுந்து ஆலிங்கனத்தில் இறுகுகின்றன. அவள் மார்பின் மெத்தில் உருகுகிறேன். கரைகிறேன், எனக்கில்லாமல் போய் விடுகிறேன்.

# 13

# ஆத்மன்

மனிதன்தான் தெய்வமாகிறான்.

தெய்வம் என்பது ஒரு சித்தி நிலை.

தான் இல்லாத, முடியாத தன்னிடம் இலக்கணங் களை, சிறப்புகளைத் தான் விருப்பப்பட்ட ஒரு உருவத்தில், இடத்தில் ஆவாஹனம் செய்து, அதைத் தரிசனமாக்கப் பாடுபடுவது மனித இயல்பு.

கூடவே தெய்வத்திடம் தான் விரும்பிய பலன்களை எதிர்பார்ப்பதும் மனித இயல்பு.

ஆனால் தெய்வீகம் தெய்வத்தைக் காட்டிலும் பெரிது. தெய்வீகம் தெய்வத்தின் அம்சங்களைக் குறிப்பிடுகிறது. தெய்வத்தின் உருவை, உருவின் எல்லைகளைக் கடந்தது.

மானுடம் தெய்வீகத்தைக் காட்டிலும் உயர்ந்தது.

தெய்வத்திடம் காணாத ஒரு சிறப்பு மானுடத்துக்கு உண்டு. அதுதான் ப்ரயத்னம்.

தடுக்கியோ விழுந்தோ விடாது எழுந்து ஜாண் ஏறினால் முழம் சறுக்கினாலும் சறுக்கட்டும் நான் விட மாட்டேன். நினைத்ததை சாதித்தே தீருவேன் என்னும் தீவிரம்.

இது அரக்கர்களிடமும் உண்டு. இருக்கட்டும். இந்த

*சந்தர்ப்பத்தில் அவர்கள் வழிகெட்டுப் போய் அழிந்து போவதுடன் எனக்குச் சம்பந்தமில்லை. தீவிரத்துடன் மட்டுமே சம்பந்தம்.*

*மானுடத்தில் இன்னொரு விசேஷம்.*

*பரஸ்பரம்*

*உனக்கு நான். எனக்கு நீ.*

*இத்துள் எத்தனையோ அம்சங்கள் அடங்கும்.*

*தியாகம், தன்னம்பிக்கை, பொறுப்பு, விடாமுயற்சி, அன்பு, ஆதரவு... சொல்லிக்கொண்டே போகலாம். நானின் பிம்பம். விஸ்தரிப்பு 'நீ' என்கிறேன்.*

*ஜன்மேதி ஜன்மம் என ஜீவனின் கடையலில் படிப் படியான பக்குவநிலையை அடைந்துவிட்ட பிறவிகளில் மேற்கூறிய அம்சங்கள், அவைகளின் இத்யாதிகள் தனித்தனி யாகவோ கூடுதலாகவோ பரிமளிப்பதைப் பார்க்கிறோம். அந்த நோக்கில் தன்னம்பிக்கையின் அவதாரமாக இதோ பகவான் ராமகிருஷ்ணரைப் பாருங்கள். அல்லது நான் பார்க்கிறேன்.*

*பகவான் ராமகிருஷ்ணர் மானுடத்தின் சித்தி.*

*மானுடத்தின் சித்தியே முத்தி நிலை.*

*முத்தி என்பது என்ன? விடுதலை.*

*எதனின்று விடுதலை? பிறகு அதற்கு வருவோம். அதை முற்றிலும் விளக்க முடியாது. என்னால் முடியவே முடியாது.*

*ஆனால் ஒன்று சொல்வேன். மனிதன்தான் தெய்வ மாகிறான் என்ற கணிப்புக்கு என் எழுத்தைப் பயில்வதன் வழி, எப்பவோ வந்து விட்டேன். அந்த முடிவை மாற்றிக் கொள்ளும்படி எனக்கு இதுவரை எதுவும் நேரவில்லை.*

கதாதரர்தான் பகவான் ராமகிருஷ்ணர் ஆனார்.
நரேந்திரர்தான் விவேகானந்தர் ஆனார்.
வெங்கட்ராமன்தான் ரமணமகரிஷி ஆனார்.

இப்படி விவரித்துக் கொண்டே போகலாம்.

பாரதத்தில் அவ்வப்போது அவதாரபுருஷர்களுக்குக் குறைவேயில்லை. இந்த 19/20 நூற்றாண்டிலேயே எவ்வளவு பேரைப் பார்த்துவிட்டோம்.

ராமகிருஷ்ணர், விவேகானந்தர், ரமணமகரிஷி, அரவிந்தர், பாரதி, ஸங்கீத மும்மூர்த்திகள், காந்திஜி, காஞ்சி மஹாப் பெரியவாள், பகவான் ரஜ்நீஷ்... இன்னும் எத்தனை பேர் தாமிருக்குமிடம் கூடத் தெரியக்கூடாது என்று குகை களில், காடுகளில் தவத்தில் ஆழ்ந்திருக்கிறார்களோ!

ஆன்மீகவாதிகளை மட்டும் இங்கு சொல்கிறேன். அறிவியல் மஹான்களிடம் போகவில்லை. ஆனால் அவர் களும் தேடல் தத்துவத்தில் சேர்ந்தவர்கள்தான்.

எங்கிருந்து வந்தோம்?
ஏன் வந்தோம்?
எங்கே போகிறோம்.
நான் யார்?

அம்மா! அம்மா!!

கேள்விகள் எத்தனையோ அத்தனை பதில்கள். பதில்களை பயக்கும் மீண்டும் கேள்விகள். உயிர்த்தாது உண்டானது முதல் காலாந்த காலமாய் தன்னைத்தானே படைத்துக்கொண்டு பஞ்சபூதங்களை நீரில் வாழ்வன, நிலத்தில் வாழ்வன, நீரிலும் நிலத்திலும் வாழ்வன, தாவரம், ஜங்கமம் எனப் படிப்படியாக தடங்கள் உயர்ந்து மனம் படைத்ததால் மனிதன் எனும் பதவிக்கு உயர்வதற்குள்

காலம் எத்தனை வரைகள் தாண்டியிருக்கும்! நினைப்ப தற்கே அசாத்யமாயில்லை? ஆனால் எல்லாவற்றுக்கும் காரண, காரியகர்த்தா உண்டு.

The Wisdom of India, Asia and China எனும் புத்தகத்தில் Lin Yu Tang எழுதுகிறார். 'கடவுள் தன்னை முன்னால் படைத்துக் கொண்டு பிறகு உலகத்தை சிருஷ்டிக்க ஆரம்பித் தார். அவர் கூற்று நம் வேதங்களினின்று எடுத்ததுதான். ஆனால் சொல்லும் வகையில் நான் ஈர்க்கப்பட்டேன். என் வயது அப்போது அப்படி. எங்கிருந்து வாங்கிக் கொண்டால் என்ன? தசாவதாரங்களை நம் புராணங்கள் சொல்ல வில்லையா? The theory of evolution நம் புராணங்களுக்குத் தோள் கொடுக்கிறது.

ஒன்று. ஜீவனின் சரிதையுடன் மனிதன் உண்டான திலிருந்து மானுடத்தின் சரித்திரம் இணைந்து இங்கிருந்து ஆரம்பமாகிறது. நினைக்கவே, சொல்லிக் கொள்ளவே எத்தனை சந்தோஷமாய் இருக்கிறது! நான் மனிதன் உய்ய வும் உய்விக்கவும் என்னைக் கண்டு கொள்ளவும் இவ் வுலகுக்கு வந்திருக்கிறேன். உயிரின் இயக்கம், மனிதப் பிறவி யிலிருந்து அர்த்தம் கொள்ள ஆரம்பித்துவிட்டது

பகவான் ராமகிருஷ்ணரின் உபதேசங்களால் ஈர்க்கப் பட்டு, அவரைப் படித்தவுடன் நான் பக்தனாகிவிடவில்லை. நான் எழுத்தை சாதகம் செய்பவன். இன்னமும்தான். அந்த வழியில் அவருடைய சொல்லின் இலக்கியத்தன்மையில் அசந்து போனேன். அந்த எளிமை, சொல்லாழம் ஊடவே ஓடும் அப்பாவித்தனம், அதே சமயம் விஷய அதிகாரம் மோஹனமந்தாரமாய்க் கவியும் ஒரு விசனம் (எனக்கு வேறெப்படி என்று சொல்லத் தெரியவில்லை) இந்த அம்சங்களை நானும் என் எழுத்தில் கொண்டு வர முடியுமா? இதுதான் என் முதல் கவலையாக எழுந்தது.

ஒரு சக தொழிலாளி என்று கூட அவரை நான் சொல்லிக் கொள்ள முடியாது. சரியாக எழுத்து வாசனைகூட இல்லாத ஆசாமி தான் பிறந்து வளர்ந்த ஊர், சுற்றுப்புற சூழ்நிலை, தக்ஷனேஸ்வரத்தைத் தாண்டி வெளியூர் என்று சென்றது கூட கிடையாது. ஆயினும் முதிர்ந்த அனுபவம் தோய்ந்த உண்மைகள், ஸ்வாரஸ்யமான சம்பவங்கள் எப்படி அந்த வாயினின்று அவ்வளவு அனாயசமாக உதிர்கின்றன? இது விடாமுயற்சி, சாதகம், முன் தயாரிப்பது மட்டும் சாத்ய மாகாது. இதற்குத் தனி அருள் வேண்டும். இவர்கள் சேதி சொல்ல வந்தவர்கள். ஸம்பவாமி யுகே யுகே புருஷர்களைச் சேர்ந்தவர்கள்.

கைகளைக் கோர்த்தவண்ணம் மடியில் வைத்துக் கொண்டு க்ஷவரம் செய்யாத முகத்துடன் நம்மைப் பார்க்கும் நிலையில் உள்ள ராமகிருஷ்ணரின் படத்துக்குத்தான் நாம் அதிகம் பழக்கப்பட்டவர்கள். ஆயினும் உன்னிப்பாய் பாருங்கள். மனிதன் நம்மைப் பார்க்கவில்லை. பார்வை உள் நோக்கில் திரும்பியிருக்கிறது. நான் ஏற்கனவே குறிப்பிட்ட காவிய விசனம், நெற்றியில் காண்கிறேன். அவர் கொணர்ந்திருக்கும்—நம்முடன் பங்கிட்டுக் கொண்டிருக்கும் சேதியுடன்தான் அவர் உறவு.

அல்லது இன்னொரு படம். தன்னை மறந்த ஆனந்தக் கூத்தில் ஆடிக் கொண்டிருக்கிறார். அதே தாடி, அதே குழந்தை முகம், அதில் அவர் கண்டு கொண்டிருக்கும் தரிசனத்தின் மேல் வெறி.

இந்தக் குழந்தைத்தனத்துடன் இத்தனை விவேகத்துடன் ஒரு மனிதன் சாத்யமா என்று நான் அவர் சரித்திரத்துடன் பரிச்சயமானதிலிருந்து இன்னும் வியந்து கொண்டிருக் கிறேன்.

ஹனுமானைப் பற்றியும் எனக்கு இந்த ஆச்சர்யமுண்டு.

ராமாயண ஹாரத்தின் ரத்னகண்டி என்று காவியகர்த்தா ஹனுமானைக் குறிப்பிடுகிறார். தன்னைப் பற்றியே நினைப் பில்லாமல் தன் பராக்ரமத்தையே மறந்துபோய் ராமனுடைய நினைப்பு ஒன்றே மூச்சாய் இப்படி ஒரு ஆள் இருக்க முடியுமா? தன்னில் அத்தனையுமே ராமஸ்மரணைக்கு மாற்றிவிட முடியுமா? ரொம்பவும் இந்த யோசனையில் ஆழ்ந்தால் அப்படி இருக்க முடியும் என்று என்னில் சந்தேகம் தோன்றுகிறது. இன்றைய சந்தேகம் நாளை நிச்சயம் தெளிவு ஆகிவிடும். சந்தேகமே அதனால்தானே! சந்தேகத் திற்குள்ளேயே தெளிவு ஒளிந்து கொண்டிருக்கிறது.

ஆகவே அனுமனுக்கு ராமநாமம் மூச்சானால் ராம கிருஷ்ணருக்கு மாதா! மாதா!!

பைத்தியம் பிடித்து அலைகிறார். Romain Ronald அவரை Mad man of God என்கிறார்.

ராமகிருஷ்ணருடைய அரற்றல் எனக்கு ஓரளவு புரிகிறது. ஏனெனில் என்னைப் பெற்ற பெற்றோரில் நான் பாக்கியம் செய்தவன். என் சின்ன வயதிலிருந்தே பெற் றோர்கள்தான் நடமாடும் தெய்வங்கள் என்று கண்டு கொண்டு விட்டேன். கண்ணெதிரில் இவர்கள் இருக்கையில் நாம் தெய்வம் என்ற ஒன்று தனியாய்த் தேடுவானேன்? என்று இப்பவும் தோன்றுகிறது. எனக்கு 84 வயதிலும் தம் தாயார் உயிருடன் இருக்கும் முதியவர்களைக் கண்டால் எனக்குப் பொறாமை ஏற்படுகிறது. தாயார் இருப்பவர்கள் மஹாபாக்யவான்கள். உடனே என்னை அறியாமலே கைகள் அவர்களுக்குக் கூம்புகின்றன. என் வயதில் நான் தாயாருக்கு ஏங்குவது துராசைதான். எனக்குத் தெரிகிறது. ஆனால் தாயாருடைய தன்மை எங்கே போகும், அதை இட்டு நிரப்ப யாரால் முடியும்?

லலிதா சஹஸ்ரநாமத்தில் முதல் நாமமே ‘ஸ்ரீமாத்ருவே

நம' அந்தப் பேருண்மையை எந்தக் கோணத்திலும் ஆதி சங்கரராலும் மறுக்க முடியாது. அம்பாளை ஸ்தோத்தரிக்கும் ஒரு இடத்தில் சொல்கிறார். "அம்மா ஸ்திரியில் கெட்ட ஸ்த்ரி என்று இருக்கலாம். ஆனால் தாயாரில் கெட்ட தாயார் என்று உண்டோ? இந்தக் கேள்விக்கு தெய்வமும் தோற்றுப் போக வேண்டியதுதான்.

ஆகவே ராமகிருஷ்ண சரிதத்துக்கு மறுபெயர் அன்னை யின் காவியம் என்பேன்.

உயிர் மனிதப் பதவிக்கு வந்தவுடன் (மனம் படைத்தத னால்தானே மனிதன்) சதா—ஏன் தூக்கத்திலும் கூட (கனவு மூலம்) எண்ணிக் கொண்டேதானிருக்கிறது. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணி எண்ணிப் புண்ணானாலும் எண்ணங்கள் ஓய்வதில்லை. மனம் எண்ணம் படைக்கும் கருவி. கங்கோத்ரியிலிருந்து பன்றித் தொழுவம் வரை அதன் வரைக்கு எல்லையே இல்லை. அது ஒரு நிலை.

அந்த மனத்திலிருந்து அறிவு எனும் பகுதிக்கு எண்ணம் உயர்ந்து நல்லதுக்கும் கெட்டதுக்கும் பயனுள்ளதும், அற்றதும், சுத்தத்துக்கும், அசுத்தத்துக்கும் இந்த பேதங்களை அவையவை இடத்தில் இருத்தி அதன்படி வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்ள முயல்கிறது. இடையே சந்தேகங்களுக்கும் தான் பாகுபடுத்தியதையே மறுப்பு களுக்கும் உழற்சிக்கும் ஓய்வில்லை. இந்த நிலை மரணம் வரை நீடித்தாலும் ஆச்சர்யமில்லை. இடையிடையே அற்ப சந்தோஷங்களைத் தாண்டி ஆசைவிட்ட குழப்பத்திலிருந்து விடாப்பிடியாக வழிதேடிக் கொண்டிருந்தால் ஞானம். அடுத்தபடி அதாவது தெளிவு, பக்தி, விக்ரஹ ஆராதனை, பூஜை புனஸ்காரம், விரதம், ஞானத்திற்கு வழிகாட்ட உதவும்.

பக்தி என்பதே என்ன?

விமோசனத்தைத் தேடி எந்த தெய்வத்தையோ (தெய்வ மாய்த்தானிருக்க வேண்டுமென்பதில்லை). அது ஒரு பொருளாயிருக்கலாம். ஸ்தலமாயிருக்கலாம். மனதுக்குப் பிடித்துப் போன ரூபமாகவோ, அரூபமாகவோ, ஆவாஹன மாயிருக்கலாம். அதன்மேல் அளவற்ற ஆர்வம். புரிந்தாலும் புரியப் புரிய ஆசை காட்டி இன்னும் எட்டி எட்டிப் போகும் புரியாத்தன்மை, ஒரு லேசான பயம், கூடவே கொள்ளை அன்பு, சிரத்தை இவையெல்லாம் சேர்ந்து, புத்தியும் உணர்ச்சியும் கலவை. அந்தக் கலவையில் ஒரு அமைதி யும், நம்பிக்கையின் விளிம்பும் தெரியும். நீ எனக்கு கிடைப்பாயோ இல்லையோ, உன்னைவிட்டால் எனக்கு கதியில்லை என்கிற திண்ணமான Statement. இதுவே இந்த சமயத்தின் திருப்தி.

சத்சகவாசம், பக்தி, பஜனை, கூத்தாட்டம் இவை மூலம் வரவழைத்துக் கொள்ளும் உணர்ச்சிப் பெருக்கு நிஜ வெள்ளி மலையே மாறலாம். மனதின் உண்மையைப் பொறுத்தது.

ஞானம் தாண்டி தியானம் நாம் வரித்த லட்சியத்தின் உருவை மனதில் நிலைநிறுத்தி அதையே எண்ணிக் கொண் டிருப்பது. தியான சமயத்தில் வேறு சலனங்களுக்கு இடம் கிடையாது, இடம் கூடாது. தியானம் பழகப் பழக வசத்துக்கு வரக்கூடிய மனப்பழக்கம். தவம் தீவிரமான தன் நினைவே அற்ற தியானம் ஒரு எண்ணம். ஒரே எண்ணத்தை உருவாக்கு வதிலேயே கருத்தும் ஸ்வயார்ப்பணம்.

தவத்தின் விளைவு தரிசனம்.

சுலபமாக சொல்லிவிட்டேன். இது நேர்வதற்கில்லை. ஆயுசுகள் கடக்க வேண்டி வரலாம். ஒரே திருப்பத்தில் நேரலாம். ஜன்மேதி ஜன்மமாய் நான் உழன்று அடைந்திருக் கும் பக்குவம் புஷ்ப்பிக்கலாம். நான் திடீர் எதிர்பாராமல்

என்கிறேன். ஆனால் எத்தனை பிறவிகளாய் இந்த வேளைக்கு காத்திருந்தேன் என்பதை எவ்வாறு அறிவேன். எல்லா வேளைகளும் விதிக்கப்பட்டவை என்றே என் துணிபு. காலத்தை இரவாலும் பகலாலும் அளப்பது இங்கு சாத்தியமில்லை. என் வேளை வரும்போது நான் உய்வேன். இதுதான் மானுடத்தின் குரல்.

தரிசனம் என்பது பார்வையின் நிறைவு.
ப்ரக்ஞை(awarness)யின் .விழிப்பு.

ப்ரக்ஞையின் விழிப்பு அவ்வப்போது நேர்ந்து கொண்டு தானிருக்கிறது.

அதனால் தரிசனத்தில் அகத்தின் ஒளியை அதிக மாகவே காண முடிகிறது.

இத்தனைக்கும் கச்சாப் பொருள் மனம். மனமும் ஓயாமல் மனதிலிருந்து எவ்வளவு தூரம் தனி மனிதனா லேயே வர முடியும். வந்துவிட்டான் என்பதை உணர்வதே தரிசனம்தான். ஆனால் இந்த மனப்பயிற்சியின் பிரயாணம் வெறும் தன் முயற்சியால் மட்டுமே நிகழ்ந்து விடாது. குருவின் வழி நடாத்தல் வேண்டும். கூடவே தெய்வத்தின் அருளும் வேண்டும். அருள் என்றால் என்னவென்று சொல்வது? நம் ஆசைகள், ஆசைகளின் உந்துதல்கள் விடா முயற்சி இத்தனைக்கும் அப்பாற்பட்ட பிரதேசத்தினின்று மனிதப் பாரம்பர்யம் தன் சத்தாய்ச் சிறுகச் சேர்த்த திரண்ட ஆசி என்று சொல்லலாமா? இல்லை. பற்றவில்லை. இத்தனைக்கும் அப்பால் நம்மைக் கணித்துக் கொண்டே யிருக்கும் சக்தியின் அபூர்வமான மனதுக்குக் கூட உணர முடியாது. ஒரு சைகை "நான் இருக்கிறேன் துணை."

அற்ப விஷயம்தான். என்னைப் பற்றி சொல்கிறேன். நான் எழுத்தை சாதகம் செய்யும் ஆரம்ப நாட்களில் இந்தப்

புத்தகத்தைப் படி. அவர் எழுதியிருக்கும் வழியை கவனித் தாயா? காலுக்கடியில் முளைத்திருக்கும் புல்லைப் பார்த் தாயா? ஆகாயத்தை அண்ணாந்து பார். உன்னைச் சுற்றி யிருப்பதைக் கவனி என்று வாழ்க்கை நயத்தையும் சொல் நயத்தையும் உணர்த்த அவ்வப்போது பெரியவர்களும், சின்னவர்களும் ஆனால் விஷயம் தெரிந்தவர்கள் வழி காட்டிப் போனார்கள். அதை அருள் என்பேன். என் அதிர்ஷ்டம் என்றும் சொல்லிக் கொள்ளுங்கள்.

இம்மாதிரி வாய்ப்புகள் கதாதரருக்கும் குறைவில்லை. அன்னை அவருக்கு முதலிலேயே தன்னைக்காட்டி ருசியை ஏற்படுத்திவிட்டாள். அதுவே அவள் அருள்தான். அவர் சாதகம் பூரணிப்பதற்காக அவ்வப்போது தவத்தில் அவர்கள் தனித்தனி வழியில் முதிர்ந்தவர்கள். சொல்லி வைத்தாற் போல் அந்தந்த கட்டத்தின் அடுத்தபடிக்கு அவரைப் பழக்கி வழிகாட்டிவிட்டு, வந்தபடியே போய்விட்டார்கள். அதுவும் அருள்தான். நடக்க வேண்டிய ஒரு சங்கல்பம். அதன் உரிய முறையில் நிறைவேறுவதிலேயே ஒரு சான்னித்யம் இருக்கிறது. ராமகிருஷ்ணர் ஒரு சான்னித்யன். அடிப் படையாக அவர்மேல் நம்பிக்கை அவருக்கு ஆதரவும் கடைசிவரை பிழறாமல் அவர் தன் நிறைவு அடைந்து பாதுகாத்துக் கொண்டிருந்த ராணி ராஸமணி தேவியும், மதுர்பாபுவுமே ராமகிருஷ்ணருக்குக் கிடைத்த அருளின் சான்றுகள்தாம்.

தரிசனம் என்பது என்ன? எப்படி? எப்போது நேர்கிறது? எனக்கு நேர்ந்த ஒரு சம்பவத்தைப் பணிவுடன் சொல்லலாமா?

அப்போது எனக்கு வயது 14. ஒருநாள் இரவுவேளை. சாப்பிட்டுவிட்டு எல்லோரும் உட்கார்ந்து பேசிக் கொண் டிருந்தோம். ராமகிருஷ்ணரைப் பற்றி—பேச்சு எப்படி அந்தப்

பக்கம் திரும்பிற்று தெரியவில்லை. சாதாரணமாக சிற்றப்பா அப்படி எல்லாம் பேசுவதில்லை.

"ராமகிருஷ்ணர் அம்பாளை எப்படிக் கண்டார் தெரியுமா? அவருக்கு முதன் முதலாகத் தெரிந்தது மூக்குத்தி. இருட்டில் திடீரென்று பிதுங்கிக் கொண்டு அது மட்டும் தனி ப்ரகாசமாய்—

சித்தப்பா குரலில் ஏதோ சக்தி வந்துவிட்டது. இல்லாட்டா—இல்லாட்டா—

எனக்கும் சுற்று முற்று நினைவு திடீரென்று அற்றுப் போய் ஏதோ குரல் மட்டும் ஸ்ருதி போல் தூரத்தில் என்னைச் சூழ்ந்த மையிருட்டில் அதோ... ஓ... ஓ... தூ... ஊ... ஊ...ரத்தில் ஒரு க்ளாவர் நீலப்பொறியாய் ஆரம்பித்து கிட்ட நெருங்க அந்த ஒளிவீச்சு பெரிதாகிக் கொண்டே வந்து என்னைத் தன்னுடன் சுருட்டுகையில் என் உடம்பில் ஏதோ ஜிவ்வென்று கிளம்பி மண்டைக்கு கிர்—ர்—ர்—ர்—ர்.

என் கடைசி நினைப்பு அந்த திகுதிகுக்கும் மூக்குத்தி யுடன் மடேரென்று விழுந்துவிட்டேன். முகத்தில் தண்ணீர் தெளித்து எழுப்பினார்கள்.

இதில் என்ன இருக்கிறது என்று கேட்போருமுளர். அது கேட்போரின் உரிமை, அவரவர் தன்மை, பாகுபாடு, சமயத்துடன் ஈடுபாட்டைப் பொறுத்தது.

வயதுக்கு வந்த பின்னரும் சில அபூர்வமான நேரங் களில் இதுமாதிரி அவசங்கள் எனக்கு நேர்ந்திருக்கின்றன. ஆனால் அவைகளைப் பற்றி நான் பேசப் போவதில்லை. முதலில் தற்புகழ்ச்சியாய் தோன்றக்கூடும். திருப்பிச் சொல் வதனாலேயே அவைகளின் நளினம் அலர்ந்துபோம். இம் மாதிரி சமயங்களுக்கெல்லாம் சாக்ஷி சம்மன் கிடையாது. எனக்கு நான்தான் சாக்ஷி. நான்கூட இல்லை. சுயநினைப்

பையே துடைத்துவிட்டுத் தலை தூக்கி நிற்கும் ஸர்வ ப்ரக்ஞையின் வெறும் விளிம்புதான்—தலை தூக்கிக் காண்பிக்கையில் அதன் அழுத்தத்தைத் தாங்க உடம்பு சக்தியற்றுப் போய் விடுகிறது. நானே எனக்கு இல்லாவிட்டா லென்ன? பயமாயிருக்கிறது. கூடவே ஒரு மட்டற்ற மகிழ்ச்சி. இந்த "த்ரில்" மறுபடியும் கிடைக்காதா?

உன்னை உனக்கு லேசாக அடையாளம் காண்பிக் கிறேன். அவ்வளவுதான்.

யார் பேசுகிறது? அந்தப் புன்னகை? அம்மா! அம்மாடி!

அனாஹதத்வனி தனக்குக் கேட்டதாக ராமகிருஷ்ணர் சொல்கிறார்.

ஒலி கேட்காத மந்திரம் என்று அனாஹதத்வனி லலிதா ஸஹஸ்ரநாமத்தில் விளக்கப்படுகிறது (ஸ்வாமி ஸத்யா னந்தா)

ராமகிருஷ்ணர் அம்மா! என்கிறார்.

நான் பொதுவாக 'அவள்' என்று சொல்லிவிட்டுப் போகிறேன்.

இந்த சமயத்தில் ஒன்று சொல்லிக் கொள்ள விரும்பு கிறேன்.

ராமகிருஷ்ணருக்கு அவளின் மூக்குத்தி தெரிந்தது.

ராமகிருஷ்ணருக்கு அனாஹதத்வனி கேட்டது.

சந்திரா தேவிக்கு (ராமகிருஷ்ணரின் தாயார்) சிவனின் கர்ப்பக்ரஹத்திலிருந்த ஒரு ஜோதி தன் வயிற்றுள் புகுவதை உணர்ந்தாள்.

அதேபோல கன்னிமேரியின் வயிற்றுள் ஒளிக்கரண மாகக் கடவுள் புகுந்து இயேசு அவதரித்துக் கன்னிமேரி கன்னி மாதாவானாள்.

நான் ஏற்கனவே சொன்ன மாதிரி அவனவன் நம்புவது. இஷ்டத்தையும் பக்குவத்தையும் பொறுத்தது. நம்பினவருக்கு நடராஜா. நம்பாதவருக்கு யமராஜா என்கிற பழமொழி ஒரு பக்கமிருக்கட்டும்.

இதெல்லாம் நிஜமா பொய்யா என்ற கேள்வி ஒருபுற மிருக்கட்டும்.

கற்பனையா? சரி. அப்படியே இருக்கட்டும்.

தியானத்தில் கற்பனைக்கு இடம் கொடுக்க வேண்டும் என்கிறார் ஆதிசங்கரர்.

உண்மையில் கற்பனை என்பது என்ன? என் எழுத் தனுபவத்திலிருந்து சொல்கிறேன்.

கற்பனை. ஆங்கிலத்தில் Imagination. இந்த சொல்லுக்கு வேர்ச்சொல் Image உருவம். அனுமானத்தில் சில எண் ணங்கள் உருவம் பெறுகின்றன.

எண்ணங்கள் அழகிய எண்ணங்கள்.

அழகில்லாமல் உபாஸனை, வழிபாடு, சடங்குகள் என்ன பயன்.

What is truth? Pontius Pilate கேட்கிறான் (St. John, New Testament)

TRUTH IS BEAUTY - KEATS

What is Beauty?

இதை நிர்ணயிக்க முடியுமோ?

செயலில் அழகு. நடை உடை பாவனைகளில் அழகு.

தொடர்ந்த ஆச்சார சீலத்தினால், காயத்ரி ஜபத்தினால், மௌனத்தினால் தானே முகத்துக்கு ஏறிவிடும் களை இவைகளை நான் உண்மையான அழகு என்பேன்.

எழுத்தின் மூலம் நான் அழகைத் தேடுபவன். நான் செளந்தர்ய உபாசகன் என்று சொல்லிக் கொள்வதில் எனக்கு வெட்கமில்லை. அதற்கே ஆசைப்படுகிறேன். செளந்தர்யம் உனக்குக் கிட்டிவிட்டதா? தெரியாது. அழகிய எண்ணங்களை எண்ணுவதிலேயே ஒரு தனி இன்பம் இருக்கிறது.

விசாரணையில் பைலேட் இயேசுவைக் கேட்கிறான். "நீ யூதர்களின் ராஜாவா?"

இயேசுவின் பதில். "நான் சொல்லவில்லை. நீ சொல் கிறாய்."

இந்தக் கூற்றின் உள்ளர்த்தத்தை நான் இப்படித் தீர்மானிக்கிறேன்.

அவரவர் எப்படி நினைக்கிறார்களோ அப்படித்தான் உண்மை.

அவரவர் பூத்ததற்குத் தக்கபடி.

மீண்டும் கற்பனைக்கு வருகிறேன்.

பின்னால் நிகழப் போவதன் முன் தரிசனம் அனுமானத்தில் உதயமாகிறது. இதைக் கற்பனை என்கிறேன். ராமாயணம், மஹாபாரதம், பாகவதம் (பார்க்கப் போனால் கிருஷ்ண சரித்ரம் பாரதத்தின் பகுதிதான்) போன்ற மஹா காவியங்களில் எது முன் நடந்தது? எது பின் நடந்தது? எது உண்மை? எது பொய்? என்று ஆராயப்புகுவதெல்லாம் வியர்த்தமான காரியம். எங்கே நியாயம்? அநியாயம்? எல்லா வற்றையும் ஒட்டு மொத்தமாக எடுத்துக் கொள்ளவும் சொல்லவில்லை. ஆனால் எல்லாவற்றையும் அல்லது ஒவ்வொரு பாத்திரத்தையும் சாக்ஷிக் கூண்டில் ஏற்றிவிட முடியாது. அது சாத்யமுமில்லை. தவிர அவைகளில் விவரிக்கப்படும் அற்புதங்களின் (miracles) ப்ரமிப்பில்

மனதையிழந்துவிட்டு காவியத்தின் நோக்கத்தில் கவனம் பிசகாது இருத்தல் வேண்டும்.

பல ஆயிர வருடக்கணக்கில் புழக்கத்திலிருக்கும் இந் நூல்களில் பின்னால் இலக்கிய அழகிற்காக என்ன சம்பவங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. எது மெய்யாகவே நிகழ்ந்தன என்று பிரிப்பது சாத்யமில்லை. நான் சொல்வது யாதெனில் காவியத்தின் சம்பவக் கோர்வைக்கு சிதை வில்லாமல் அதன் தருமத்துக்கு ஒவ்வி வந்தால் ஏற்றுக் கொண்டால் என்ன தப்பு? செய்யத்தகாத பாவத்தை செய்து விட்டோமா? என் தாயார் ஒன்று சொல்வார்: "பிடித்தால் சாப்பிடு, பிடிக்காவிட்டால் கடித்து விழுங்கு."

உண்மையின் நியதி அப்படித்தான்.

ரமணமகரிஷி பூத உடலை நீத்த அன்று இரவு நக்ஷத்ரங்களிடையே ஒரு ஜோதி மிதந்து சென்றதாம். இந்தத் தகவலை 'ஹிந்து'வில் நான் படித்தேன்.

அரவிந்தர் உயிர் அடங்கியபின் மூன்று நாட்களுக்கு அவர் தேக காந்தி குறையவேயில்லை.

இதற்குத் தினசரிப் பேப்பர்களைத் தவிர ஆசிரமத்தில் சாக்ஷிகளே இருக்கிறார்கள்.

ஆனால் காலகதியில் இந்த மெய்ச் சம்பவங்களே வதந்தி களாகவும், பிறகு கற்பனையலங்காரங்களாகக் கருதப்பட்டு விடும்.

உண்மையை அளப்பதற்கு என்ன கஜக்கோல் இருக்கிறது?

தாய்க்கு குழந்தை ராமகிருஷ்ணரிடம் எப்படி ஏங்கிற்றோ அதே போல், கண்ணப்பன் சிவன்மேல், தாய்மை யில் தவித்தான். அவனைத் தன் பக்கம் இழுக்க வேண்டு

மென்றோ பெருமான் விலங்கு ரூபத்தில் அவனை வேட்டை காட்டி, நடுவழியில் ஆற்றில் தாகத்திற்கு தண்ணீர் குடிக்க குனிந்து, தலை நிமிர்ந்ததும் அதோ மலைமேல் காளத்தி அப்பர் கண்ணில் பட அவன் ஓடோடி வந்து அவரை அணைத்துக் கொண்டதும் என்னப்ப கண்ணப்ப நில் நில் என்று லிங்கத்தினின்று கரம் புறப்பட்டு மறு கண்ணை அம்பால் தோண்ட ஆரம்பித்துவிட்ட அவன் கரத்தைப் பிடித்துத் தடுத்ததும் எனக்கு இன்னும் புல்லரிக்கும் அழியாத் தருணங்கள். கண்ணப்பனுக்கு மூன்றே நாட்களில் முக்தி. மூன்று நாட்கள் நீ முழு ஆர்வத்துடன் கடவுளைத் தேடினால் உனக்குக் கிடைத்து விடுவார் என்று ராம கிருஷ்ணர் சொன்னது இங்கு குறிப்பிடத்தக்கது.

நித்யத்துவத்தைத் தொட்டபின் வேளை ஏது? காலம் ஏது? சரித்திரம் ஏது? வரலாறு ஏது? இங்கு நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். “அப்போ நீ எண்ணுவதெல்லாம் உண்மை அல்லது உண்மையாக வேண்டுமென்று விரும்பு கிறாயா? அப்படி ஏதும் நான் எண்ணவுமில்லை. சொல்லவு மில்லை. ஆனால் எண்ணாமலிருக்கும் நிலையை நான் அடையவில்லை. வாழ்க்கையின் இகபரங்கள் இன்னும் இயங்கிக் கொண்டிருப்பதற்கு மூன்று காரணிகள் உண்டு என எனக்குப் படுகிறது 1. TRUTH–இது குன்றின் மேலிட்ட தீபமோ அல்லது குஹையில் ஒரு பிறையில் அகலும் திரியு மின்றி அழியாச் சுடராய் உலகைக் காலம் கடந்த சக்தியாக நடத்திக் கொண்டிருக்கிறது. இதைத் தவிர இதன் உண்மை யான தன்மை என்றுமே புரியப் போவதே இல்லை. இதில் தேவர்களிலிருந்து தாவரம், சலனம், அசலனம், தவம், தரிசனம் உண்டு, இல்லை என்னும் எதிர்மறைகள் யாவும் அடங்கிவிட்டன. அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

2. லட்சியம் (ideal) இதில் மனிதனுடைய ஆசைகள்

(உயர்ந்தவை, எட்டக்கூடியவை, முடியாதவை, லோகாதய மானவை, ஆத்மீகமானவை இவைகளும் சேர்ந்துதான், மனிதன் TRUTHல் தன் சக்திக்கேற்றவாறு வகுத்துக் கொண்டு செயலில் சாதிக்க விரும்புகிறான். லட்சியம் சில சமயங்களில் முழுக்கவே கூடலாம் அல்லது ஒரு பகுதியே நிறைவேறலாம். அல்லது துருவ நட்க்ஷத்ரமாகவே நின்று விடலாம். இருந்தாலும் லட்சியத்திற்கு ஒரு வேகம் உண்டு. முயற்சியைத் தூண்டிவிடும் சக்தி.

3 யதார்த்தம் (REALITY) நடப்பதென்ன? இருப்ப தென்ன? முயற்சியின் விளைவு என்ன? செயல்பாடின் விளைவு என்ன? எண்ணியபடி செயல் விளைகிறதா? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் கிடைக்கும் பதில், அதிலிருந்து கிடைக்கும் தெளிவு. இவை எல்லாம் reality யைச் சேர்ந்ததுதான். மூன்று வினைகளும் கரை காணாத சமுத்திரங்கள்.

ஆனால் இவைகள் சோதனைகள் மூலம் ராமகிருஷ்ணர் கரைகண்டு வந்திருக்கிறார் என்பதை மறுக்க முடியாது.

சரி. முக்தி என்பது என்ன?

கேள்வி, பதில், உடைமை மூன்றிலிருந்தும் விடுதலை!

எல்லாம் நானே என்ற சர்வப்ரக்ஞை இது பரமானந்த நிலை என்கிறார்கள். யாரே அறிவர். கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர். ஹம்ஸம் என்பது ஜீவாத்மனைக் குறிப்பது. வேதாந்த மரபு என சுவாமி சித்பவானந்தா குறிப்பிடுகிறார். அப்போது பரமஹம்ஸன் என்பது பெரிய ஜீவாத்மா. அப்பொழுது ராமகிருஷ்ண பரமஹம்ஸர் பரமாத்மாவுடன் கலக்கவில்லை என்ற அர்த்தமில்லை. கலந்த பின்னும் தன்னை அல்லது தான் என்ற மனநிலையை நிறுத்தி வைத்துக் கொண்டிருக்கிறார். ஏன்?

திருவனந்தபுரத்தில் ஒரு சமயம் லக்ஷதீபம் பார்த்தேன். ஒரு அகலிலிருந்து இன்னொரு அகலுக்கு சுடர் ஏற்றி, அப்படி ஒவ்வொரு அகலாய் ஏற்றப்பட்டு பிறகு திரண்ட பேரொளி காட்சி தருகிறது. யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம் என்பதுதான் விஸ்வப்ரேமை. மானுடத்தின் மிகப் பெரிய ரட்சணமாகிய பரஸ்பரம் நிர்விகல்ப சமாதி அடைந்தும் இந்த மானிட லட்சணத்திலிருந்து ராமகிருஷ்ண ரால் விடுபட முடியவில்லை என்று நினைக்கிறேன். விவேகானந்தருக்கு குருவாய் அமைந்ததோடு அல்லாமல் பக்குவநிலையை அடைந்துவிட்ட சில சீடர்களை உய்விக்க, தானே அவர்களிடம் தேடிச் சென்றார். நிஷ்களங்கமான குழந்தைத்தனத்திற்கும் கூடவே தாய்மையின் உச்ச நிலைக்கும் எடுத்துக்காட்டு வேறென்ன வேண்டும்.

எல்லாநானுமாகி எனும் தனித்தன்மை உணர்வதே சர்வப்ரக்ஞையில் ஆனந்தமாகவே இருக்கட்டும். ஆனால் அதைப் பங்கிட்டுக் கொள்வதன் மூலம் தானே அது முழுமை அடையும். இதை ஜீவாத்மாவுக்கும் பரமாத்மா வுக்கும் இடையே உள்ள உறவு எனலாம்.

பரஸ்பரம்—அதன் மந்த்ரம்

அம்மா!

# 14

# ?

*நாம் வேத காலத்துக்குச் செல்கிறோம்.*

*வேத காலத்தைப் பற்றிப் படித்தோ, படித்தவரிடம் கேட்டோ அறியேன்.*

*ஆனால் என்னுள் திடீரென ஜனித்த வித்து, விறுவிறெனப் பெரிதாகி, என்னின்று விடுதலை பெற என்னை வாட்டிக் கொண்டிருக்கும். இக்கதை—கதையென்று எப்படிச் சொல்வேன்?—சமயம் (situation) அதன் வழியே காட்டிய சில அனுமானங்கள்படி, வேத காலம் என்ற பெயரில் அனுமான காலத்துக்குச் செல்வோம்.*

*அனுமானமே கேள்விக்குறிதான். ஆகவே என் மூலம் பின்வருமாறு தன்னை வெளிப்படுத்திக் கொள்ளும் விஷயத்தின் தலைப்பும் (?) தான். ஓம்:—ஆசிரியர்.*

அழுது அழுது பையனுக்கு முகமே வீங்கி விட்டது. அப்படியும் தன்னுடைய திக்குத் தெரியா நிலையில் வெகு அழகாயிருந்தான். இன்னமும் கண்ணீர் பெருகிய வண்ணம் தான். உள்ளே சுரப்பிகள் எவையேனும் உடைப்பெடுத்துக் கொண்டுவிட்டனவோ? சாந்தினி அச்சங்கண்டாள். அவள் கண்கள், கணவரின் கவனத்தைக் கவலையுடன் நாடின.

யக்ஞதேவர் யாககுண்டத்துக் கெதிர், பத்மாஸனத்தில்

வீற்றியபடி, பையன் மேல் தங்கிய அவர் பார்வையில் கருணை வழிந்தது.

அன்றைய ஹோமம் முடிந்து, குண்டத்தில் கங்குகள் நீர்த்துவிட்டன.

"குழந்தாய், இங்கு வா"

பையன் அருகே வந்ததும், ஹோமகுண்டத்திலிருந்து அஸ்தியை எடுத்து அவன் நெற்றி நீட்டுக்கு இட்டார்.

சாந்தினி, பரிவின் பீறல் தாங்கமுடியாமல், அவனை வாரித் தன் மடியில் இருத்திக்கொண்டாள். பையனுக்கு அழுகை புதிதாகப் பீறிட்டது.

"இந்தத் தவப்பிஞ்சுக்குத் தாங்கள் என்னத்தைக் கற்றுத் தரமுடியும்? என்ன இவனுக்கு ஏறும்?"

"இவனுடைய பெற்றோர்கள் குருகுல வாஸத்துக்கு இவனை நம்மிடம் விட்டுச் சென்று விட்டார்கள். இவனுடைய தந்தையும் நானும் பால்ய ஸ்னேகர்கள். எங்கள் விதி எங்களைத் தனித்தனி வழியில் பிரித்து விட்டாலும் எங்கள் நட்பின் கொழுந்து குனியாமல் அப்படியே வீசிக் கொண்டிருக்கிறது. தவிர, சாந்தினி, பையனுக்கு வித்தை ஏறுமா, ஏறாதா என்று கணிக்க நாம் யார்? வயதுடன் புத்தியை அளவுகட்டுவது அறியாமையாகும். அவனறியாமல் ஒரு அணுவும் அசையாது. அவளால் ஆகாதது ஏதுமில்லை. கர்ப்பவாஸத்துள் புகுமுன் இந்த உயிர்த்தாது ஞானப்பாலில் முட்ட முட்ட நீந்தியிருந்தால் யார் கண்டது?"

அவள் அவன் தலையைக் கோதிவிட்டாள். காலை சூர்யனில் அவன் தலைமயிர் தங்க மோதிரக் குவியலாய் மாறிவிட்டது. கண்ணீர் கன்னங்களில் காய ஆரம்பித்து விட்டது. முகத்தோடு முகம் புதைத்து,

"குழந்தே, உன் பேர் என்ன?"

"விஷ்ணுசர்மன்."

"என்ன அழகான பேர்! எத்தனை அழகாகச் சொல்கிறாய்! சரிவா, சாப்பிடப் போவோம்."

அவள் குடிசையுள் அவனை அழைத்துச் செல்கையில், அவர் நோக்கின் கனிவில் சிரம் பக்கமாய்த் தாழ்ந்தது.

யக்ஞதேவர், ரிஷிபதவியை அடையவில்லை. ஆன்ம ஒழுக்கத்தில் பல வருடங்கள் ஆயினும் இயற்ற வேண்டிய யாகங்கள், தவங்கள் இன்னும் எத்தனை எத்தனையோ? ஞானமும் பக்தியும் இருந்தால் மட்டும் போதுமா, அருள் இறங்க வேண்டாமா? அலராத புஷ்பமாய் அருள்பிரஸாதத்துக்கு வேளைக்குப் புவனத்தின் சுற்றல்களையும் ஜன்மாக்களையும் வைத்துக் கணிப்பதோ எதிர்பார்ப்பதோ பாபமேயாகும். அவர் அறிவார். அவனோ, அவளோ, அதுவோ, எதுவாயினும் சரி. ஸர்வாந்தர்யாமியாய அந்த சக்திக்குத் தான் வேளை அறியும். வேளையும் தவறாது.

அவர் கண்கள் சிந்தாத கண்ணீரில் பளபளத்தன. பெரிய மேட்டுவிழிகள்.

* * *

"கூமாரா!"

குரல் கேட்டுப் பையன் திடுக்கிட்டு நிமிர்ந்தான். மூங்கில் புதரினின்று வெளிப்பட்டு ஒரு மான் எதிரே நின்று கொண்டிருந்தது. குட்டியில்லை. ஆனால் முழு வளர்ச்சியை இன்னும் அடையவில்லை.

"ஏன் இங்கு தனியாக உட்கார்ந்து அழுது கொண்டிருக்கிறாய்?"

"என் அப்பனும் அம்மையும் என்னை விட்டுவிட்டுப் போய் விட்டார்கள்."

"புரியவில்லையே! இறந்து விட்டனரா?"

"இல்லை இல்லை!!" அலறினான். "குருவிடம் பாடம் கற்றுக் கொள்ள விட்டுப் போய்விட்டனர்."

"இவ்வளவுதானே! குருகுலவாஸம் முடிந்து அவர்களே வந்து உன்னை அழைத்துப் போகவோ, அல்லது அப்போது நீயே பெரியவனாகிவிடுவாய் அல்லவா!—நீயே அவர்களிடம் போகவோ வாய்ப்பு இருக்கிறதே! என்னைப் பார். எனக்குப் பெற்றோர்களேயில்லை. இறந்தா போய்விட்டேன்? மொழு மொழுவென்று இருக்கிறேனா யில்லையா?"

"உனக்குப் பெற்றோர்கள் ஏன் இல்லை? இறந்து விட்டனரா?"

"இறந்த மாதிரிதான். ஏதோ கண்முன் பூச்சி பறக்கிற மாதிரி ஒரு நினைப்பு இடறி அதுவும் மங்கிக் கொண்டு வருகிறது. எங்கோ குஹையிருள். நான் திடீரென ஒரு தனிமை உணருகிறேன். முக்கி இடறி எழுந்து தத்தித் தத்தி குஹை வாயிலுக்குப் போய்ப் பார்த்தால், அதோ தூஊஊரத்தில் என் தந்தையின் கொம்புக் கிளைகளின் நிழலாட்டம் காலை வெய்யிலில்; கூடவே தாய். உடனே மலைச்சரிவில் மறைந்தும் விட்டனர். பிறகு இன்னமும் அவர்களைப் பார்க்கப் போகிறேன். பார்த்தாலும் அடையாளம் கண்டு கொள்வேனோ அறியேன்."

"இப்படியும் உண்டோ?" அதிசயிப்பில் பையன் அழுகை மறந்தான்.

"ஏன் இருக்கக் கூடாது? ஆனால் நினைக்கிறேன். நான் பிறவி ஊனம். என் வலது பின் தொடை எலும்பு சரிந்திருக் கிறது. ஏனைய மான்களைப் போல் என்னால் ஓடமுடியாது. அதனால் என்னைக் கழித்து விட்டார்கள். என்னைப் போன்ற பிறவிகளை—தனக்கே பயனில்லாதவைகளைக்

காப்பாற்றுவதை விடத் துறந்து விடுவதே மேல். ஆனால் நான் புல்லையும் செடியையும் மேய்ந்து இதுவரை பிழைத்துத்தானிருக்கிறேன். மூங்கில் குருத்துத் தின்பதற்கு ரொம்ப ருசி. ஆனால் கல்லும் மண்ணும் கூட இந்த உடம்புக்கு இனி ஒத்துக் கொள்ளும் என்றே எண்ணுகிறேன். இது எங்கள் வழி. ஆனால் குமாரா! நீ இப்படி ஆசிரமத்தின் எல்லை தாண்டி இங்கெல்லாம் துணையில்லாமல் வர லாகாது. யக்ஞதேவர் எங்களைப் போன்றவர்க்கு ரொம்ப ப்ரியமானவர். உன் பெற்றோர் உன்னை அவரிடம் ஒப்படைத்திருக்கும் பொறுப்பை நீயே சோதிக்கக் கூடாது.''

அது சொல்லிவிட்டு, மெதுவாய்த் தான் வந்த வழியே சரிந்த நடையில் சென்று மூங்கில் புதர்களிடையே மறைந்தது. அதன் குட்டை வால் சும்மாயிருக்க முடியாமல் ஆடிற்று. கொம்பில்லை. பெண்மான்.

அதன் விழிகள் அவனுக்குப் பாமினியை நினைவு மூட்டின. பாமினி அவன் அக்கை.

அவன் சிறியவனே யானாலும் பாமினியின் திருமணம் பற்றி அவன் பெற்றோர்களின் பதைபதைப்பை ஊமைக் கனவாக உணர்வான். இப்பவே அவளுக்குத் திருமணம் ஆகியிருக்க வேண்டும். அல்லது அவளுக்காக நியமிக்கப் பட்டவன் குருகுல வாஸத்தினின்று திரும்புவதற்கு எதிர் பார்த்துக் கொண்டிருத்தல் வேண்டும். ஆனால் அவள் வரன் இன்னும் நியமிக்கப்படவில்லையே!

குருகுல வாஸம் முடிந்தவுடன் முறைப்படி நடை யாகவே நாடு யாத்திரையிலிருந்து திரும்பிவரும் பிரம்மச் சாரிகளைத் தேடிக் கொண்டிருந்தனர். அவர்களில் பெண் ணுக்கு ஜாதகனைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இப்பவே முறை பிழறிப் போனதுதான். மணமுடிந்து பெண் ருதுவாகி, புக்ககம் அடையும்போது வதுக்களிடையே வயது வித்யாசம்,

இருபது இருபத்தியிரண்டுக்குக் குறையாது. நீண்ட காலம் கிரஹஸ்தாசிரமத்தில் இருந்து அதன் தருமங்களாய அதிதி ஆராதனை, மாமனார் மாமியார் வழிபாடு, புத்திரப் பேறு எல்லாம் நடந்தபின் வரணாசிரமம் இருந்து, கடந்து, ஜன்மாவின் கடைசி நிலை காவியைக் கணவன் ஏற்குமுன் மஞ்சளும் குங்குமமும் கலையாமல் கூந்தலில் பூவும், மடியில் தேங்காயும் திரண்டு, அவள் ஜீவன் சுமங்கல்யப்ராப்தி அடைந்துவிடும். ஏதுக்கும் குறைவில்லை. அந்த நாளின் ஆசாரம், வாழ்க்கையின் நெறிமுறை, நேர்மையின் விளை வாகிய உடல், மன ஆரோக்யம் அப்படி.

ஆனால் யாவற்றைக் காட்டிலும், பாமினியின் பெற் றோரை அரித்துக்கொண்டிருந்த திகில், காலகதியில் யுகச் சந்திகளில் நேரப்போகும் வாழ்க்கையின் சீர்குலைவுக்கும் தர்மச்சிதைவுகளுக்கும் ஆன்றோர்கள், தீர்க்கதரிசிகள் இப்பவே எச்சரித்துக் கொண்டிருக்கிறார்கள். அவர் களுடைய முதல் எடுத்துக்காட்டுக்கு, அவமானச் சின்னத் துக்கு நாம் இலக்காகி விடுவோமோ?

அவச்சொல்லுக்கு அப்படி அஞ்சிய காலம் அது.

முதல் நாள் பாடம் துவங்குகிறது.

“மகனே! நான் சொல்வதைத் திரும்பச் சொல்: ‘மாதுர் தேவோ பவ:’”

“மாதுர்தேவோபவ:”

“பிதுர்த் தேவோ பவ:”

“பிதுர்தேவோபவ:”

“குரு தேவோ பவ:”

“குருதேவா! உங்கள் ஸ்தானம் மாதா பிதாவுக்குப் பின்னாலல்லவா வருகிறது.”

"அதைப்பற்றி என்ன ஸந்தேகம்? அன்னையும் பிதாவும் தான் முதல் தெய்வங்கள்."

"அப்படி ஆனால் நான் தங்களிடம் வரவேண்டிய அவசியமே யில்லையே! என் பெற்றோர்களைப் பிரியாமல் அவர்களை வழிபட்டுக் கொண்டு, நான் அவர்களோடேயே இருக்கலாமே!"

"குமாரா! ஒரு ஜன்மாவை உருப்படுத்தி அதன் தர்மத் தில் அதற்கு வழிகாட்ட குரு தேவைப்படுகிறார். இந்தப் பூமியில் நீ தோன்றியதற்குக் காரணம் உன் மாதாபிதா. அவர்கள் இல்லாமல் நீ இல்லை, ஆகையால் அவர்களுக்குத் தெய்வநிலை. நீ எதற்காகப் பூமியில் பிறந்தாயோ அந்தக் கர்மாக்களை உனக்குச் சுட்டிக் காட்டி அவைகளை நீ வஹிக்க ஞானத்தையும் மனோபலத்தையும் குரு போதிப்ப தால் அவருக்குத் தெய்வநிலை."

"ஏன், என் பெற்றோர்கள் எனக்குச் சொல்லிக் கொடுக்க முடியாதா?"

"அவர்களை மீறின விஷயங்களும், நீ கற்றுப் பேண வேணது உள. தவிர புத்ரபாசம், பெற்றோர் பாசம், சிஷ்ய னுடைய மாணவ சிந்தைக்கும், சிரத்தைக்கும், நாளடைவின் தவ நிலைக்கும் குறுக்கீடாகி, அதனால் பாபகிருத்யங்கள் நீங்கள் அறியாமலே நேர ஹேதுவாகும். உனக்கு நேரும் ஸந்தேகங்களை நீ கேட்கலாம். கேட்க வேண்டும். தீர்த்து வைக்கத்தான் குரு இருக்கிறார். அப்படியும் அவரால் தீர்க்க முடியாத சந்தேகங்களைத் தெளிய, தெளிவிக்க அவருடைய ஞானாசிரியனை அவர் நாடுவார். ஞானவிசாரணை அளப் பரியது. ஆழம் அறிய முடியாதது. ஆனால் ஆரம்பத்தில் நம் முன்னோர்கள் காட்டிய வழியில் அவர்கள் நடந்த பாதையில், அவர்கள் மிதித்த சுவடுகளைப் பின்பற்றினால் தான் ஆரம்ப சந்தேகங்கள் தாமே அழிந்து உன்புத்தி

விசாலிக்க வழி பிறக்கும். ஆரம்பத்திலேயே தர்க்கித்தால் புத்தி குயுக்தியில் முடிந்து, பிறவிப்பயன் எட்டிப் போய் விடும். ஸ்வய, உண்மையான விசாரணை ஆரம்பமாகையில் உனக்கே அடையாளம் தெரியும். ஆகவே இப்போது நான் சொல்வதைப் பின்பற்றிச் சொல்வாயாக. மாதுர் தேவோ பவ: பிதுர்த் தேவோ பவ: குருதேவோ பவ:"

பையன் கீழ்ப்படிந்தான். ஆனால் அவன் முழுத்ருப்தி யில் இல்லை.

யக்ஞதேவர் நெற்றி வேர்வையை ஒற்றிக் கொண்டார்.

* * *

"குமாரா! ஆசிரமத்து எல்லை தாண்டி இங்கெல்லாம் துணையில்லாமல் வரலாகாது என்று நான் எச்சரித்தும் நீ இப்படித் தனியாக வருவது முறையாகாது. ஏன் வந்தாய்?"

"நீ வருவாயோ என்கிற ஏக்கம்தான்."

"எனக்குச் சொல்லி அனுப்பித்தால் வரமாட்டேனா?"

"சொல்லி அனுப்ப எனக்கு யார் இருக்கிறார்கள்?"

"உன் குருநாதர் நீ நினைக்கற மாதிரி கருணை இல்லாத வர் அன்று. ரொம்ப இரக்கமும் அனுசரணையும் உள்ளவர்."

"என்னைச் சொல்லிவிட்டு நீ மாத்திரம் உன் இஷ்டத் துக்கு இங்கு நடமாடலாமோ?"

"குமாரா! இதை நன்கு புரிந்துகொள். நீ மனிதப் பிறவி. உலகத்துக்கு உன் பங்கு, உபயோகமாயிருக்கப் பிறந்திருக் கிறாய். அதன் முறை தெரிந்து கொள்ளவே குருகுல வாசத் துக்கு வந்திருக்கிறாய். நாங்கள் அப்படியல்ல. மரணம் எப்போதும் எங்கள் நெருங்கிய உறவு. அதன் மையத்தில் தான் எப்பவும் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். நாங்கள் விடும் மூச்சே, எங்கள் பிழைப்பே அப்படித்தான். எந்த சமயம் வேடன் அம்புக்கு இலக்காவோமோ, எந்த

விலங்குக்கு இறைச்சியோ? இந்த ஆபத்கரம் கண்ணுக்குத் தெரியா இழையில் எங்கள்மேல் எப்போதுமே தொங்கிக் கொண்டிருப்பதால் எங்கள் ஸர்வ குறிக்கோளே, உயிர் இருக்கும் வரை ஒருவினாடிகூட வீணாகாமல் அதை முழுக்க அனுபவித்துவிட வேண்டும். இது தவிர வேறு அறியோம். நான் சொன்னதுக்கு ஏற்ற மாதிரி?"—முன்னும் பின்னும் சூழ்ந்தும் அவசரமாய்ப் பார்த்தது. அதன் மேலுதடு தீவிரமான மோப்பத்தில் சுருங்கிற்று. "வேற்று மிருகத்தின் வாசனை தெரிகிறது. இது நல்ல வாசனை இல்லை. குமாரா இங்கேவிட்டு ஓடி விடு. இதோ நான் ஓடிப்போகிறேன்."

சொல்லி விட்டால் ஆகிவிட்டதா? அவனுக்கு உடல் எல்லாம் உதறிற்று. கால்கள் பூமியுடன் ஒட்டிக் கொண்டு பெயர மறுத்துவிட்டன.

அப்போது அவன் அதனைக் கண்டான். இதுவரை எங்கு மறைந்திருந்தது?

நீளமும் அகலமுமாய், ஆனால் சிக்கனமான அங்கங் களுடன், இவ்வளவு பெரிய உருவை அவன் இதுவரை கண்டதில்லை.

முகம், உடல், வால் உள்பட மஞ்சளில் வரிவரிக் கோடுகள் அதற்கு அழகு செய்தன. மஞ்சள் விழிகள் அரை மங்கலில் ஜ்வலித்தன. வால் சாட்டை சுழன்றது. கிழடுதான். அதன் நடையில் அசாத்ய கம்பீரம் தெரிந்தாலும், கூடவே தளர்ச்சியும் தெரிந்தது.

மான் மின்னலாய்ப் பறந்தது. ஆபத்து கொடுக்கும் தனி பலத்தில், பிறவி ஊனம் மற்ற குறைகளெல்லாம் மறந்து விடும், மறைந்தும் விடுமோ?

ஆனால் புலிக்கு அதன் வேகத்தை அதனாலேயே அடக்க முடியவில்லை. வேகம் அதன் உச்சத்தைத் தொட்ட

தும், கால்கள் பூமியில் பதியாமல் அந்தரத்தில் நீந்தின. மானின் பக்கலிலேயே நீந்திற்று. நீந்திப் பாய்ந்து புலி, அதன் முழு கனத்துடன், கனத்தின் வேகத்துடன் மான்மேல் விழுந்த தும் இருவயிறுகளும் அணைந்தன. புலி, தன் மூர்க்கத்தின் ஆசையில், கோரைப்பற்களை இரையின் கழுத்தில் பதித்த தும், மான் தலைசாய்ந்ததும்...

பையன் கீழே விழுந்து நினைவிழந்தான்.

அவன் கண் திறந்த போது, அரசமரத்தடியில், கயிற்றுக் கட்டிலில் கிடந்தான். யக்ஞதேவர் அருகே அமர்ந்திருக்க, குருமாதா அவன் வாயில் ஜலத்தை ஊற்றிக் கொண்டிருந் தாள்.

"குழந்தாய் மெதுவாக, மெதுவாக. கங்காஜலம் யாவதுக்கும் ஔஷதம்."

மானின் தொங்கிய தலையும் அந்தக் கோரமும், மடை திறந்த நினைப்பில், அடித்துக்கொண்டு வந்ததும், துக்கமும் பயமும் பீறிட்டது.

"மானைப் புலி தின்றுவிட்டது. என் நண்பன் போய் விட்டான்" தேம்பினான்.

"மகனே நீ கண்ட காக்ஷி உனக்கு வந்திருக்க வேண்டாம். நீ ஆசிரமம் தாண்டியிருக்கக் கூடாது."

"என் நண்பனும் அதைத்தான் சொன்னான்."

"ஓ, அது சொல்லிவிட்டதா? நீதான் கேட்கவில்லையா?"

"குருதேவா இனி நான் என்ன செய்வேன்?"

"நாம் என்ன செய்ய முடியும்? ஆசிரமத்தின் திக்கில் ஓடிவந்திருந்தால் ஒருவேளை அது தப்பித்திருக்கலாமோ. எதிர்த் திக்கில் ஓடிற்றோ? அதற்கு விதிமுடிய வேளை வந்து விட்டது."

"அது என்ன விதி? விதி!" பையனுக்குக் குமுறிற்று.

"குமாரா! பிறப்பது, இருப்பது, முடிவது மூன்றும் இயற்கையின் ஏற்பாடு. அதற்கு விதியென்று பெயர். விதியை யாருமே தப்பமுடியாது."

"அப்போ மான் திரும்பிவராதா?"

"வராது."

"ஏன், சுவாமி அதைப் பிழைப்பிக்க முடியாதா?"

"கடவுள் அதனதன் செயலுக்கும், முடிவுக்கும் விதித் திருக்கும் வேலையை மீறி எதுவும் செய்ய மாட்டார். செய்ய முடியாது. மீறினால், மற்றதன் வேளைகள் பாதிக்கப்பட்டு, யாவும் தடம் மாறி உலகுக்கே தீங்கு நேரும்."

"குருதேவா, புரியவில்லை."

"இதோபார், மானின் வாழ்க்கை வீணாகவில்லை. அதன் உடல், புலியின் பசியைத் தீர்த்தது. புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது. அந்தந்த உயிருக்கு அதனதன் உணவு என்று விதித்திருக்கிறது."

"நாம் உயிரைத் தின்கிறோமா?"

"ஏன், நாம் காய், கறி, கனி, கிழங்கு தின்று வயிறு வளர்க்கவில்லையா? தாவரங்களை உண்டே! தாவரங்கள் தாம் வாழ பூமியினின்று தண்ணீரை உறிஞ்சிக் குடிக்க வில்லையா? மண்ணுக்கு இரையாகாதது எதுவுமில்லை. யாவும் கடைசியில் மண்ணோடு மண்ணாய், மண்ணிலே பிறந்து, மண்ணிலே வாழ்ந்து, மண்ணுக்கு எருவாகி, மறுபடியும் மண்ணிலே பிறந்து, சின்ன உயிருக்குப் பெரிய உயிர் என்கிற ஏற்பாடில், என்ன ஆச்சர்யம்!" அவர் கைகள் கூப்பின. மூவரும் மௌனமானார்கள். பிறகு அவன்:

*"யாரும் பசியோடு இல்லாதபடி அப்படி ஒரு வரம் இருக்காதா?"*

*குருதேவர் சிரித்தார். "முடியாது மகனே. கூடவும் கூடாது. பசியே அற்றுப் போனால் வாழ்க்கை அசைவற்றுப் போய்விடும். அப்புறம் உயிருக்கே என்ன வேலை? பசி என்கையில் வயிற்றுப்பசி தவிர என்னென்னவோ வேறு பசிகள் இருக்கின்றன. வயிற்றுப் பசியைவிட உயர்ந்த பசிகள், தேடல் பசிகள். அவைகளை விளக்க உனக்கு இப்போது வயதாகவில்லை. உயிரை வளர்க்க வயிற்றுப்பசி அவசியம். மற்ற பசிகளை வளர்க்க, அவை நிறைய, அதனால் லோகம் க்ஷேமமடைய உயிர் வேண்டும். உயர்ந்த பசிகள். தேடல் பசிகள். எல்லாம் நிறைந்தவன் ஆண்டவனே இன்னமும் தியானத்தில் இருக்கிறான்."*

*"தியானம் என்றால் என்னவென்று தெரியும். தவம். கடவுள் எல்லாம் நிறைந்தவர் தியானத்தில் என்ன தேடு கிறார்?"*

*"தன்னை." அவருக்கு மெய்சிலிர்த்தது.*

*"ஓ!" பையன் முகம் மாறிற்று. "பகவானே தன்னைத் தேடிக் கொண்டிருக்கிறாரானால் அவனவனும் தன்னை அவனேதானே தேடிக்கொள்ள வேண்டும்?" பதிலுக்குக் காத்திருக்கவில்லை.*

*அவன் நெற்றி ஒளிவீசிற்று.*

*"குருதேவா, புரிந்துவிட்டது. என்னைப் புலி விட்டது. அப்பா அம்மா புலி, பாமினி புலி, மானின் புலி, புலியின் புலி இன்னும் என்னென்ன புலிகளோ அத்தனையும் விட்டு என் தேடலுக்கு விடுதலையாகி விட்டேன். விடைபெற்றுக் கொள்கிறேன்.."*

*"குழந்தை, அதற்கும் அருள்வேண்டும். அவசரப் படாதே."*

"அதுவும் சும்மா உட்கார்ந்திருந்தால் வராதே! அதையும் தேடித்தானே போகவேண்டும்! இனி எனக்கு இங்கே வேலையில்லை."

அவனின்று ஒளி கண் கூசிற்று. இடுப்பில் துண்டு தவிர வெறும் கையனாய், ஆசிரமம் தாண்டி, மூங்கில் புதர்களைத் தாண்டி அவன் தூரத்தில் மறையும் வரை கைகூப்பிய வண்ணம் இருவரும் கல்லாய்ச் சமைந்து நின்றனர்.

லோக க்ஷேமார்த்தத்துக்கு சுபகாரியம் தன் செயலில் நிகழ்கையில் போல், திடீரென மழை வந்து பெய்து அவர்களைத் தெப்பலாக்கியது. ஆயினும் அவர்கள் அசையவில்லை.

*இவன் போது துருவ நக்ஷத்ரம் தோன்றிவிட்டதா?*

*எழுத்து பிறந்து விட்டதா?*

*பாடங்கள், உபதேசங்கள், சரித்ரம் முதலியன வாய் வழி, நினைவு எனும் மரபு வழிதானா?*

*எல்லாம்*

**?**

# 15

# நான்

அவனவன் வாழ்க்கை வெறும் தகவல் சேகரிப்பு அல்ல. தான் தான் தனியாக மற்ற உயிர்களினின்று, தன்னைத் தனக்கு இஷ்டமோ இல்லையோ தனி முறையில் இயங்கிக் கொண்டு, புதுப்புது உறவுகளைக் கண்டு கொண்டு ஜன்மா என்கிற அந்தஸ்துக்குத் தன் வழியில் மெருகு சேர்த்துக் கொண்டு தன் வேளை வந்ததும் மடியும், அல்ல மறுபடியும் தோன்ற மறையும் உயிர்த்தாது. இந்த முறையில் வாழ்வின் விவரம் சரித்ர வ்யாபகம் பெறுகிறது. ஆனால் இந்தப் பக்கங்களில் எனக்கு அனுமதித்திருக்கும், அல்லது நான் எடுத்துக் கொண்டிருக்கும் இடவிலாசம், விசாலத்துள் சற்றுக் கணிசமேயான என் ஆயுசின் விவரங்களை முழுக்க வும் திணிக்க இயலாது. ஆகவே ஆங்காங்கே என் வாழ்க்கை யின் திருப்புமுனைகளாக வாய்த்த சம்பவங்களை, சந்திப்பு களை எண்ணச் சிதர்களை, உரசல்களை தருணங்களைத் தொட்டுக்காட்டி, அடுத்த கட்டத்துக்குச் செல்கிறேன். இப்படி யும் ஒரு கண்ணோட்டம், எடைக்கனம், கோர்வை கிடைக்கும் என்கிற எதிர்நோக்கில் இதோ.........

ஆறு அறிவுடன் பிறவியெடுத்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் சரித்ர புருஷன்/சரித்ர ஸ்திரி. மனித பரம்பரையின் சரித்ரத்துக்குத் தன் பங்கைச் சேர்க்க வந்திருக் கிறான்/வந்திருக்கிறாள்.

என் ஸஹ பிறவிகளினின்று நான் வித்யாசமானவன். என் முத்திரையைப் பதித்துவிட்டுச் செல்லவே இங்கு வந்திருக்கிறேன். நான் இல்லாமல் இப்புவனத்துக்கு அதன் முழுமையில்லை, என எண்ணுவது ப்ரக்ஞையின் இயல்பு.

* * *

என் பெற்றோர்கள் எனக்காகத் தவங்கிடந்து, நோன்புகள் நோற்று, அருமையாய்ப் பிறந்தவன் நான்.

* * *

அக்டோபர் 30, 1916இல் பெங்களூரில் பிறந்தேன். நீலம் பூரித்து, சலனமற்ற கட்டையாகத்தான் விழுந்தேனாம். என்னைத் தலைகீழாகப் பிடித்து சப்பையில் இரண்டு அறை அறைந்து ஆட்டின பின்னர்தான் குழந்தை வீறிட்டதாம். அப்படியும் கழுதைப் பாலைப் புகட்டினார்களாம். கழுதைப் பால் நெருப்பு. அத்தனை 'சில்'லில் விழுந்த குழந்தைக்குச் சுயச்சூடு வர அந்த நெருப்பு வேண்டியிருந்ததாம். வெகு நாட்கள் 'கழுதைப் பாலைக் குடிச்சுதாம்; அழுத மூஞ்சி சிரிச்சதாம்,' என்று என்னைக் கேலி பண்ணி மற்ற குழந்தைகள் அழவிட்டுக் கொண்டிருக்கும்.

* * *

மதமதவென்று கொழுக்கட்டையாக வளர்ந்தேனாம். அத்தனையும் தாய்ப்பால். செக்கச் செவேலென்று அப்படி ஒரு சிவப்பு. கன்னங்களுக்கு மேல் கண்கள் பொத்தான்கள். பூனைக்கண்.

என் பழைய சிவப்பு உதிர்ந்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஏன் உதிராது? வயதாகவில்லை? ஆயினும் என்னைப் பற்றித் தனிப்புத்தகம் எழுதியிருக்கும் Dr. Gabrialla Eichinger Ferroluzzi, அதில் என்னை Fair complexioned எனத்

தனிப்பட்ட முறையில் குறிப்பிடும்படி எழுதியிருப்பின் என் நிறத்தின் தன்மையை யூகித்துக் கொள்ளுங்கோளேன்.

* * *

இம்மாதிரிப் பொடி விவரங்கள் இந்த வரலாற்றில் அங்கங்கு தோன்றுகையில் "இந்த மனிதனுக்கு இந்த வயதில் இவ்வளவு தற்பெருமையா?" என்று உங்களுள் கேலி எழக் கூடும். எழட்டுமே. ஆனால் இவை தத்ரூபத்துக்கு முயற்சிக்கும் உண்மை நகாசுகள். சில சமயங்கள் எழுதும் வாகில் தாமாகவே வீழ்ந்து விடுகின்றன. இவைகளுக்கு நான் மன்னிப்புக் கோரப் போவதில்லை.

* * *

நாங்கள் ஏழ்மையான குடும்பம் என்று சொல்லிக் கொள்வதில் நான் பெருமையே படுகிறேன். என் முன்னோர்களும், என் பெற்றோர்களும் பட்டினி பார்த்தவர்கள். நான் அவர்கள் மாதிரி கஷ்டப்படவில்லை. ஆனாலும் வறுமை என்னென்று எனக்கு நன்கு தெரியும்.

* * *

நாட்டின் நிலைமை ஒன்றும் மிக்க மாறிவிடவில்லை. ஸ்வதந்தரம் கிடைத்து ஐம்பது வருடங்களுக்கு மேலாகியும் பட்டினிச் சாவுகளைப் பற்றிச் செய்தி படிக்கிறோம். என்ன சுதந்திரக் கொண்டாட்டம் வேண்டியிருக்கிறது, தலை குனிவதைத் தவிர?

* * *

பத்துப் பாத்திரம் தேய்க்க வரும் வேலைக்காரியின் புருஷனுக்கு சர்க்கரை வியாதி கண்டிருக்கிறது. ஆஸ்பத்திரியிலிருந்து வீட்டுக்கு எடுத்துப் போகச் சொல்லிவிட்டார்கள்.

கேஸ் முற்றிப் போய்விட்டது. அவளுக்கு வேலைக்கு ஒழுங்காய் வரவே முடியவில்லை. என் மனைவிக்கு அவள் வேலை தடைபடுகிறது. அவரவர்க்கு அவரவர் கஷ்டம். ஆம், ஏழைகளுக்கு இம்மாதிரி ராஜ வியாதி ஏன் வருகிறது? அவளுக்கு எவ்வளவு உதவி செய்யும் நிலையில் நானிருக்கிறேன்? பார்க்கப் போனால் நாம் எல்லோரும் உதட்டால் அனுதாபப்படுவதோடு சரிதானே? 'ஆஷாட பூதிகள்'. ஆனால் எப்படியும் மனம் தத்தளிக்கிறது. இது குற்ற உணர்வு.

*　　　*　　　*

ராமாமிருதம். என் பெயரில் மூன்று தலைமுறைகள் வாஸம் வீசுகின்றன. அமிர்தம் அய்யர்; இந்தக் குடும்பத்தின் ஸ்தாபகர் என்பதைத் தவிர அவரைப் பற்றி வேறு தகவல் தெரியாது. முன்னூறு முன்னூற்று ஐம்பது வருடங்கள் ஆகியிருக்குமா?

ராமஸ்வாமி அய்யர். என் பாட்டனார். லால்குடி போர்டு ஸ்கூல் தமிழ்ப் பண்டிதர்.

இவ்விருவருக்குமிடையே எத்தனை அமிர்தமய்யர்கள், ராமஸ்வாமிகள் நிகழ்ந்தனரோ?

என் பெற்றோர்கள் ராமேஸ்வர தரிசனம் பண்ணி நான் பிறந்த அருமை வேறு.

*　　　*　　　*

தாத்தா வரகவி. அவருக்கு பதினைந்து, பதினாறு வயதில், பிள்ளையார் அவர் வாயில் கற்கண்டு போட்டதாய்க் கனாக் கண்டாராம். மறுநாள் காலையிலிருந்து கவிதையாகக் கொட்ட ஆரம்பித்து விட்டதாம். அவர் பாட்டுக்களைப் படித்திருக்கிறேன். அச்சு வெட்கும் முத்து

முத்து எழுத்து. கறுப்பு மசியில் பெரிய நோட்டுக்கில் எழுதி வைத்திருந்தார்.

குலதெய்வத்தை ஒரு சமயம் தோத்தரித்து
ஒரு சமயம் கெஞ்சி
ஒரு சமயம் தாஜா பண்ணி
ஒரு சமயம் அதட்டி
ஒரு சமயம் திட்டி

ஆனால் எப்பவும் அவைகளினூடே ஒரு மூர்க்கமான பரிவுடன் தண்ணொளி வீசிக் கொண்டிருக்கும்.

* * *

லால்குடி எனும் திருத்தவத்துறை பாடல் பெற்ற ஸ்தலம். ஸ்வாமி சப்தரிஷீசன், அம்பாள் ப்ரவர்த்த ஸ்ரீமதி, அல்ல வெறும் ஸ்ரீமதி, தமிழில் பெருந்திரு. பெருந்திருதான் எங்கள் குலதெய்வம். லால்குடியில் வீட்டுக்கு வீடு ஒரு சப்தரிஷிக்கோ, ஒரு ஸ்ரீமதிக்கோ பஞ்சமில்லை.

என் தகப்பனார் பெயர் ஸ்ப்தரிஷீசன்.
அம்மா பெயர் ஸ்ரீமதி.

* * *

முன்னோர் காலத்திலிருந்தே எங்கள் குலதெய்வத்துக்கு தினசரி வாழ்க்கையிலேயே மாறாத பங்கு எப்படியோ உண்டு என்று நான் சொல்லாவிடின் என் எழுத்துக்கே முழுமையில்லை.

* * *

பெருந்திரு மேல் என் மூதாதையரின் வழி வழி மூர்க்கப் பாசம் (பக்தியென்று எப்படிச் சொல்வது, அதைவிட நெருக்கமானது.) அதன் பாதையில், என் முறை வந்ததும்,

என் விதியின் போக்குக்கேற்றவாறு தாய்ப் பாசமாகவும், எழுத்தின் மேல் தீவிரமாய் மாறியதோ என்னவோ! எப்படி யும் அவள்தான், பரம்பரையின் நம்பகமாய், நம்பகத்தின் உருவகமாய் என் எழுத்தில் அங்கங்கு மிளிர்கிறாள்.

என் எழுத்தில் Mysticism மலிந்து கிடப்பதற்கு இந்தப் பரம்பரை வாசனைதான் காரணமாயிருக்கக்கூடும்.

*　　　　*　　　　*

நான் இங்கு இனி, பெருந்திருவைத் தனியாய்க் குறிப்பிடப் போவதில்லை. அவள் என்றுதான் அழைக்கப் போகிறேன். நிம்மதி. அவள் எனில் அம்பாளின் எல்லா ஸ்வரூபங்களுமாவாள். புவனத்தின் ஸகல ஜீவராசிகளை யும் ஆளும் தாய்மைக்கு மறுசொல் ஆவாள். சர்ச்சைகள், சந்தேகங்களுக்கு இடமற்ற அர்ச்சனை புஷ்பம், கூடவே அர்ச்சிக்கும் சன்னிதானமும் அவள்தான். என் எழுத்தின் ரகஸ்யமும் இதுதான். வெளிச்சமும் இதுதான்.

அவள்.

*　　　　*　　　　*

> தாத்தா தன் பதினாலு வயதிலிருந்தே பொடி போடுவார்.
>
> தாத்தா வரித்தகழிபோல் நெட்டையாய், நிமிர்ந்து, ஜ்வாலைச் சிவப்பில் இருப்பார்.
>
> தாத்தாவுக்குத் தன் பதினைந்து ரூபாய் 'சம்பளத் தில்' பெரிய கூட்டு சம்சாரத்தில் சின்ன வீடு உண்டு.
>
> 'தக்னூண்டு சாமிக்குத் துக்குணூண்டு நாமம்.'
>
> தாத்தா இரவு பாலுஞ்சாதம் சாப்பிடுவார்.

*அம்மா எவ்வளவோ ஜாடை காட்டினாலும் நெற்றியில் நெத்தினாலும் நகர மாட்டேன். கலத்திலிருந்து வாய்க்கு ஒவ்வொரு கவளத்தையும் பார்த்துக் கொண்டிருப்பேன், "வயித்தை வலிக்கிறதே, இதுகளைத் தூங்க வைக்கப் படாதா?" என்று திட்டிக் கொண்டே, என் வாயில் இரண்டு ஊட்டுவார். என்ன ருசி! என்ன ருசி!*

*இந்த உச்சிஷ்ட ப்ரஸாதமும் சேர்ந்துதான் என் எழுத்து.*

*　　　　*　　　　*

*பிள்ளைகளுடன் இருக்கப் பட்டிணம் வந்தார். பத்து, பதினைந்து நாட்களுக்கு மேல் தாத்தா தங்கமாட்டார். பெருந்திரு தரிசனம் இல்லாமல், அதற்கு மேல் அவரால் இருக்க முடியாது.*

*　　　　*　　　　*

*அடுத்த வேளை சோற்றுக்கு வழி எங்கே என்று தெரியாது. கால் ரூபாயோ, கால் ஸ்பூன் கடுகோ அடுத்த வீட்டில் கடன் வாங்க ஆணாகட்டும், பெண்டிராகட்டும் படியிறங்க மாட்டார்கள். ஒரு காலை மறுகால் மேல் மடித்துப் போட்டு வயிறு பள்ளமாய்க் குழியும்—ஆனால் அவன் என்ன கிழிச்சுட்டான் இவன் என்ன சாதிச்சுட்டான். அவனைக் கேட்கணுமோ, நம்மையேதான் அவளுக்குக் கொடுத்துட்டோமே, பிச்சை வேறு கேக்கணுமோ? மாட்டேன்.*

*எல்லோரும் ராவணன் கக்ஷி.*

*ஒரு வரட்டு வீறாப்பு.*

*தெய்வத்தையே சேவகனாகப் பாவிக்கும் ஒரு முரட்டு சகஜம்.*

*யதார்த்தத்துடன் ஒட்டாத ஒரு அசட்டு அதீதம்.*

அதே சமயத்தில் பெருந்திரு மேல் அசைக்க முடியாத ஒரு நம்பிக்கை.

இந்த சத்துக்களும் சேர்ந்துதான் ராமாம்ருத ஸாரம், லா.ச.ராவின் 'தேடல் தத்துவம்'.

*　　　*　　　*

ஒரு ஆதாரத்துக்கு இருபது வயது என்று வகுத்துக் கொண்டேனே தவிர, என் பதினாறு, பதினேழு வயதிலேயே எழுதத் தொடங்கி விட்டேன். இங்கிலீஷில் தான் ஆரம்பம். விளையாட்டாய் என் நண்பனும், நானும் ஆளுக்கு ஒரு கதை எழுதுவதென ஆரம்பித்து நான் என்னுடையதை முதலில் முடித்து நோட்டுக்கை தூக்கியெறிந்து மறந்தும் போய்விட்டேன். ஆனால் அவன் அதை எடுத்துக் கொண்டு போய் Short Story என்கிற ஆங்கிலப் பத்திரிகை நடத்திக் கொண்டிருந்த மஞ்சேரி எஸ். ஈஸ்வரனிடம் கொடுத்து விட்டான். அவன் மூலம் அவர் என்னை வரவழைத்து, "கதை நன்றாக இருக்கிறது. என் பத்திரிகையில் வெளி யிடப் போகிறேன். சன்மானம் எதிர்பார்க்காதே. கொஞ்சம் டாகுர் ஜாடை அடிக்கிறது. நல்ல நடை." ஒரு பதினேழு வயது பையனுக்கு முதல்கதையே—வெளிவருகிறது—அதுவும் அத்தனைப் பாராட்டுடன்—என்றால் வேறென்ன வேண்டும்?

ஆனால் இங்கிலீஷில் மார்க்கெட் இல்லை. Short Storyயும் நின்றுவிட்டது. தமிழுக்குத் தாவும் அவசியம் ஏற்பட்டுவிட்டது.

அங்கும் முதல் கதையே அப்போது செத்துப் பிழைத்துக் கொண்டிருந்த மணிக்கொடியில் வந்தது. என் மூன்றாவது கதையுடன் மணிக்கொடியும் மூடிக் கொண்டது. ஆனால் என் கதைப்பாணி, அதன் நடை எல்லாம் சேர்ந்து தமிழ்ச்

சிறுகதையில் ஒரு புதுக்குரலாக, இனம் கண்டு கொள்வோரால் பாராட்டப்பட்டேன்.

*                *                *

ஆங்கிலத்தில் மஞ்சேரி எஸ். ஈஸ்வரன் என்னைக் கண்டுபிடித்ததாகச் சொல்லிக் கொள்வார். அப்படியானால் தமிழுக்கு என்னைத் தி.ஜ.ர. தந்தார். தி.ஜ.ரவைப் பற்றிக் கேள்விப்பட்டவரேனும் இந்நாளில் எத்தனைபேர் இருக்கின்றனர்? கலைமகள் ஆபீஸில் மஞ்சரிப் (Reader's Digest மாதிரி) பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்தார். என்னை எழுத முதுகைத் தட்டிக் கொடுத்தவரே அவர்தான். அதற்கு முன் சக்தி பத்திரிகை ஆசிரியராக இருந்தபோது, 'நீ எதை எழுதியேனும் கொண்டுவாடா நான் போடுகிறேன்.' இப்படி யார் சொல்வார்கள்?

தி.ஜ.ர. என் மானஸ குரு.

யாருக்கும் அவரவர் துறையில் குரு வேண்டும். குருவிடம் தினம் பாடம் கேட்கிறேனா இல்லையோ, தினம் சொல்லிக் கொடுக்க அவரிடம் பாடம் இருக்கிறதோ இல்லையோ, குரு என்கிற சொல்லே துணை. மாதா, பிதா, குரு, ஓம் இந்த இரண்டு அக்ஷர மந்திரங்களுக்கு மிஞ்சின துணையில்லை.

ஏன் தமிழிலேனும் எழுதித்தான் ஆக வேண்டுமா? என்பாடு அப்போது அப்படி. ரூ 5/ ரூ 10/- ஸன்மானமென்கிற பெயரில் அந்தப் பிச்சைக் காசு (அதற்கு எத்தனை முறை போய்த் தலையைச் சொறிய வேண்டும்! "இன்று போய் நாளை வா!") குடும்பத்துக்கு வேணுமே! S.S.L.C. படித்துவிட்டு வேலையுமில்லை. வாரத்துக்கொரு முறையேனும் எழுத வேண்டாமா?'—ஒரு சிற்றப்பா இரைவார்.

எப்படியோ பதினெட்டு இருபது வயதில் ஒரு இடத்தில் தொற்றிக் கொண்டு, பிறகு இடங்கள் மாறி 1941இல் வங்கியில் நிலைத்து 1976இல் பஞ்சாப் நேஷனல் வங்கி தென்காசி கிளை மானேஜராக ஓய்வு பெற்று, என் உத்யோகப் பருவத்தைப் படிப்பதற்கேனும், சுருக்க முடித்துக் கொள்கிறேன். ஆனால், உத்யோகமில்லாமல், என் எழுத்தை மட்டும் நம்பியிருந்தேனெனில் என் மேல் புல் முளைத்திருக்கும். என் நாளில் அப்படி எழுத்தின் மேல் ஆசையால் அதற்கே பலியானவர் உண்டு. எழுத்தின் இந்த மறுபக்கத்தை விஸ்தரித்துக் கொண்டே போக எனக்கு விருப்பமில்லை. பார்த்ததே போதும்.

இப்போது நிலைமை எவ்வளவோ மேல். ஆனால் அதையும் விவரிக்கப் போவதில்லை. நான் உண்டு, குடும்பத்துக்கு என் கடமை என் உத்யோகம். என் தவத்துக்கு என் எழுத்து உண்டு என்று எனக்கு வாய்த்ததிற்கு நான் எவ்வளவோ புண்ணியம் செய்தவன்.

ஆனால் வாசக கவனம் என் மேல் பதிவதற்கு எழுத்துடன் பலநாட்கள் உழன்றேன். விமர்சகர்களின் பார்வை என் மேல் எப்பவும் ப்ரியமாயிருந்தது என்று சொல்வதற்கில்லை. "ராமாமிருதமா? அவருக்கு வக்கிரப் பார்வைன்னா! எதையும் வாசல்வழியாகப் பார்க்க மாட்டாரே! ஜலதாரை வழியாகத்தான் அவருக்குப் பார்க்கத் தெரியும்!"

"அவர் என்ன ஒரே கதையைத் தான் திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார்!"

"ஆமாம் எழுதுவது என்ன புரிகிறது! தலையைப் பிய்த்துக் கொள்ளலாம் போல் வருகிறது!"

"ஏண்டா, குழந்தையையோ உயிரோடு படைத்து

விட்டாய். உருவம் இன்னும் கொஞ்சம் நன்றாக இருக்க முடியாதா?" தி.ஜ.ரவிடம் லேசான நக்கல் உண்டு. அவருடைய விமர்சனம் மிக்க நுட்பமாகத்தானிருக்கும்.

* * *

யார் என்ன வேணுமானாலும் சொல்லிக் கொண்டு போகட்டும். போற்றுவார் போற்றட்டும். தூற்றுவார் தூற்றட்டும். என் எழுத்து எவ்வழி அவ்வழி தான் என் வழி (ரஜினி டயலாக் மாதிரி இல்லை?) நான் யாருக்காவும் எழுதவில்லை. எனக்காகவே எழுதிக் கொள்கிறேன் என்று என் பக்கங்களில், பேட்டிகளில் பன்முறை தெரிவித்திருக்கிறேன்.

ஆனால் நான் அர்ப்பணித்துக் கொண்ட எழுத்தாளன் அல்ல. ஆனால் எதைச் செய்தாலும் நன்றாகச் செய்ய வேண்டும் எனும் ஆர்வமும் அதற்குரிய உழைப்பும் என் இயல்பிலேயே உண்டு. எழுத்தின் வெற்றிக்கு Hemingway மூன்று கட்டாயங்கள் விதிக்கிறான்.

" a bit of inspiration
lot of hard work
a bit of luck."

இருபது வருடங்கள் கெட்டவனுமில்லை;
இருபது வருடங்கள் வாழ்ந்தவனுமில்லை.

லலிதா ஸஹஸ்ர நாமத்தில் "தருண்யை நம" என்று ஒரு நாமாவளி வருகிறது. யானைக்கு முன் மணியோசை போல, சில கதைகள் வெளியான பிறகு கலைமகளில், "யோகம்", "ஜனனி", "பிரளயம்" அடுத்தடுத்து வெளிப்பட்டதும் (வாசகர்களும், விமர்சகர்களும் வெடுக்கென நிமிர்ந்து உட்கார்ந்ததும் லா.ச.ராவுக்கு எழுத்துலகில் தனிப் பிறை கிடைச்சாச்சு.

* * *

இந்தப் பிறை சற்று விநோதமானது. லா.ச.ராவுக்கு முன்னோடி கிடையாது. லா.ச.ராவைப் பின்பற்றவும் முடியாது. லா.ச.ராவிற்குப் பின்னாலும் கிடையாது.

லா.ச.ராவின் விஷயம், வெளியீடு, நடை, சொல்லாட்சி, தனித்வம் லா.ச.ராவோடு போய்விடும்.

காத்திருந்த தவம் பலித்ததம்மா—தவத்துக்கே ஒரு அகந்தை உண்டு.

*　　　　*　　　　*

ஆனால், நான் எழுதியவையெல்லாம் இலக்கியமாகுமா என்று காலம்தான் நிர்ணயிக்க வேண்டும்.

அதைப்பற்றி நான் கவலைப்பட முடியாது. கவலைப் பட்டுத்தான் ஆகவேண்டியது என்ன? சற்று சூழல் மாற மாற (டி.வி. Internet, Jet யுகம், மக்களின் மறதி) எதுவுமே நிலையில்லை என்பதை உணர்கிறோம்.

கடைசியில் இவ்வளவு எழுதினேன். ரஸிகர்கள் இன்றும் வீட்டுக்கு வந்து போயிக் கொண்டுதான் இருக் கின்றனர். ஆனால் என்னத்தைச் சாதித்தோம் என்கிற அசதி தான் தோன்றுகிறது.

அன்றன்று அந்தந்த நிமிஷத்தை நினைவுடன் முழுமை யுடன் வாழ்ந்தாயா? சந்தோஷப்பட்டுக் கொள்.

ஆனால் சாதித்தவரை சாதித்ததுதான் பிறந்ததற்கு.

அவரவர் வழியில் அவரவர் பங்கு.

வாழ்க்கை தன் கப்பத்தை வாங்காது விடாது. ஆகையால் அதை முழுமனதுடன் செய்து அதனிடம் கொடுத்துவிடு.

*　　　　*　　　　*

ஜூலை *1, 1946* எனக்குத் திருமணம் நடந்தது. திருமணம், வாழ்க்கையிலேயே ஒரு பெரிய திருப்புமுனை. எனக்கு நடந்த திருமணத்தைச் சொல்கிறேன். அன்றைய சம்பிரதாயங்களை அடையாளம் தெரியாதபடி இப்போது மாறிவிட்டன, என்று சொல்லிவிட்டு மேலே போகிறேன். உடல் ஆரோக்கியத்துக்கே ஒரு தனி அழகு உண்டு. என் மனைவியாகப் போகிறவள் அதில் நன்கு செழித்திருந்தாள். அதில் எனக்கும் குறைவில்லை.

நாங்கள் ஒற்றுமையான ஜோடி என்று சொல்ல முடியாது. என் அம்மா, அப்பாவையும் சொல்ல முடியாது. முள் முனை ஆடிக் கொண்டேதான் இருக்கும். அப்படித் தான் இருக்க வேண்டும். கணவன் மனைவியினிடையே காதல் சாத்தியமில்லை, கூடாது. காதல் என்பது உண்டு. அது ஒரு தஹிப்பு. உயிருடன் சுட்டெரித்துக் கொண்டே யிருக்கும் தஹிப்பு. மாட்டிக் கொள்ளாதே. ஆனால் அதில் விதியின் சம்பந்தமுண்டு. அதை என்னென்று ஒவ்வொரு வனும் அறிய வேண்டும். ஆனால் அதைப் பட்டவர்க்கும் அதனால் பலனில்லை. அது சிவபெருமானின் நெற்றிக்கண். அதனருள் உன் மேல் பட்டு சுட்டெரிந்து கொண்டேயிரு. It is better to have loved and lost than never to have loved at all.

*　　　　*　　　　*

அனுபவ ரீதியில் காவியங்கள் கவைக்குதவாதவை. ஆனால் உலகின் நடப்புக்கு பரஸ்பர மனித உறவுக்கு அவை அத்யாவசியமானவை. அதனால்தான் உலகில் பாஷைக்குப் பாஷை பக்தி, பிராணி, மனிதன் என்று சஹல ஜீவன் களிலும் காவிய அம்சம் பரிமளிக்கிறது.

*　　　　*　　　　*

ஆண், பெண், சிசு என்கிற திரிமூர்த்தத்தின் அடிப்

படையில்தான் உலகம் இயங்குகிறது. அதன் அடிப்படையில்தான் குடும்பம் என்கிற பல்வேறு உறவுகளின் விஹாசம். இதைத்தான் என் மூதாதையர் வாழ்க்கையின் பல்வேறு வண்ணங்களில் தெய்வம் எனும் முனைப்பில் கண்டனர். அதுவும் ஒரு உறவுதான். என் எழுத்தில் இதனால்தான் இதைப்பற்றி அதிகம் காண்கிறீர்கள். என் மூதாதையர் யாவுமே அதீதமானவர்கள். நான் அவர்களின் சரித்ரீகன் ஆதலால், எழுதுவதற்குத் தனியாக விஷயங்களைத் தேடிக் கொண்டு போகும் தேவை எனக்கு இல்லாமல் போய் விட்டது.

*　　　　*　　　　*

ஆச்சு எங்களுக்குக் கல்யாணம் நடந்து 55 வருடங்களுக்கு மேலாகிவிட்டன. நல்லது பொல்லாது, சண்டையோ பூசலோ, இத்தனை வருடங்களுப் பின் என்ன தெரிகிறது? எது எப்படியோ, இனி உனக்கு நான், எனக்கு நீ. மிஞ்சியது இந்த பரஸ்பரம். இதுவே போதும். இதுவே பேறு.

*　　　　*　　　　*

இந்தக் குடும்பத்தின் ஒரு கட்டத்தில் மரணம் சற்று அதிகமாகப் புகுந்து விளையாடி விட்டது. 'உங்கள் எழுத்தில் சாவைப் பற்றி அதிகம் வருகிறது. இது அனுதாபத்திலா, குற்றமா? எது மனதில் ஆழமாய்ப் பதிகிறதோ அதைப்பற்றித் தானே எழுத முடியும்? இதற்கு வேறு நியாயம், நியதி, சமாதானம் என்று தனி உண்டோ? அதைக் கல்பித்தேனானால், அது என் குற்றம். தெய்வம், விதி என்று புரியாதன மேல் பழிபோட முயற்சி.

உலகில் நீ வாழ, முன்னேற, உனக்குச் சிந்தனையும் அதற்குத் துணை எழுத்து என்றும் கொடுத்திருக்கிறது.

எழுத்து அறிவித்தவன் இறைவனாவான்.

சிந்தனை யார் பிறப்பித்தது என்று இறைவனே இன்னமும் சிந்தித்துக் கொண்டிருக்கிறான்.

அவனன்றி ஓர் அணுவும் அசையாது.

ஸர்வந்தர்யாமி ஆனால் அவன் இன்னமும் சிந்தித்துக் கொண்டிருக்கிறான் எதை? எதற்கு? சிந்திப்பதுக்கென்றே தக்ஷிணாமூர்த்தி ஸ்வரூபத்தில் அவனை உட்கார்த்தியாகி விட்டது. உன் நினைப்புக்கு அவனை எழுப்பக் கையைச் சொடுக்கிவிட்டுப் போங்கள்.

* * *

எழுதுகையில் சந்தோஷமாய்த் தானிருக்கிறது. நான் எழுதும் முறையில் அந்த நேரத்துக்கு எழுதும் விஷயத்தைத் தவிர மற்றவை எனக்கு நினைப்பிருப்பதில்லை. அக்கப் போர்கள், கோபங்கள், குரோதங்கள் நெஞ்சில் அலைவ தில்லை. மனதைக் கெடுப்பதில்லை.

தவமென்பதே என்ன? ஒரு எண்ணம் ஒரே எண்ண மாய் அப்யாசத்தில் அதை மாற்றும் வீர்யத்தில், அதுவே என நிரம்பி வழியும் அதன் ஒருமைப்பாடுதான் தவம். எனக்கு, என்னுடையது என ஒன்றை ஒருமையாக்குவது லேசல்ல.

ஆகவே, எப்படியோ வருடங்கள் உருண்டோ, தத்தியோ, அங்கப்ரதக்ஷணம் பண்ணியோ ஓடிவிட்டன. (இப்படி ஒரு காலத்து நடை. அப்படி ஒன்றும் எட்டின காலமுமில்லை. இன்னமும் உபயோகத்திலிருக்கிறது ஆனால் எனக்குத் தெரியாமலில்லை. குற்றமுள்ள நெஞ்சு கண்ணை மூடிக் கொண்டுவிட்டால் காலம் அஸ்தமித்து விடுமா?) இதோ விளிம்பில் நிற்கிறேன். இனி இப்பவோ, எப்பவோ அந்தண்டை என்னவோ? ஆனால் அறுபத்திஐந்து வருடங் களுக்கு மேலாக எழுதிக் கொண்டிருக்கிறேன். எதற்காக? அவசியமுமில்லை. என் கை எப்போதுமே வேகமில்லை.

நான் மெதுவாக எழுதுபவன். ஆனால் எழுதிக் கொண்டே யிருப்பவன்.

* * *

எழுத என்ன இருக்கிறது? ஸர்வ ஜீவ கர்த்தாவாய சூரியனைத் தாண்டி அறியவோ எழுதவோ என்ன இருக் கிறது? அப்படியும் எழுதுபவர் எழுதிக் கொண்டுதானிருக் கின்றனர். எழுதினதைப் படிப்பதற்கு யாரேனும் ஒருத்தனே னும் இருக்கிறான். அவனும் இல்லாவிடில், ஏற்கனவே சொல்லிவிட்டேனே, எனக்கு நான் இருக்கிறேன்.

* * *

பார்த்ததையே பார்த்து
சாப்பிட்டதையே சாப்பிட்டு
பேசினதையே பேசி
எண்ணியதையே எண்ணி
சே!

* * *

நாம் யாருமே எண்ணங்கள் தாம். எண்ணம் என்று ஜனித்த பிறகு நமக்கு அழிவேயில்லை. அருவத்தில், ஆகாயத் தில், காலநேமியில், ஸ்தூலத்தில் மாட்டிக் கொள்ளும் வரை, காலம், இடம் தாண்டி எந்த நிபந்தனையுமற்று இல்லை, இருக்கிறேன் என்கிற சந்தேகங்கள் கூட அற்று ப்ரக்ஞையின் முழுமையில் சஞ்சரிக்கிறோம். இப்படித் தவிர நம்மைப் பற்றி வேறெப்படியும் நினைக்கத் தோன்றவில்லை அல்லது இப்படியும் நினைக்கக் கூடும் அல்லவா?

* * *

எண்ணங்கள் அழகிய பூக்கள். பூக்கள் நிர்மாலியங் களாகி இதழ்கள் வாடி வதங்கி உதிர்ந்தபின். அவைகள் வாழ்ந்ததன் பலனாய், பயனாய், எஞ்சி கமழும் மணங்கள்.

* * *

என் பையல் பருவம் காஞ்சிபுரத்தருகே அய்யன் பேட்டை என்கிற கிராமத்தில் கழிந்தது. ஆசையுடன் என் நினைப்பில் அதைக் காப்பாற்றி வைத்திருக்கும் கஸ்தூரிப் பெட்டி.

அங்கு என் தகப்பனார் இருபது வருடங்களுக்கு மேல் பள்ளிக்கூட ஹெட்மாஸ்டர். கடைசிப் பத்து வருடங்கள் போஸ்ட் மாஸ்டரும் கூட. ஆகையால் ஏகப்பட்ட மரியாதை. ஆனால் அம்மாமேல் தான் அவர்களுக்குப் பக்தி, பிரியம் எல்லாம். 'ஊருக்கே மகாலச்சுமி வந்திருக்காங்க. இவங்க வந்ததிலிருந்து நம்ம பேட்டைக்கே களை கட்டிப் போச்சு, என்ன மனசு! அவங்க எண்ணம் போலவே அவங்க குடும்பமும் நல்லாயிருக்கணும்."

*　　　*　　　*

"போணிக்கு உங்கிட்டத்தான் வந்திருக்கேன். என்ன வாங்கிட்டியா? அதனாலென்ன கூடையை சும்மாத் தொடு போதும். கூடையைக் காலியாத் தலையில் மாட்டிக்கிட்டு சோத்து வேளைக்கு வீட்டுக்குப் போயிருப்பேன். நான் போய்த்தான் சோத்துப்பானையை அடுப்பிலே ஏத்தணும். என்னவோ இன்னி நிலைமை அப்பிடி, மருமவ இந்தத் தடவை ரொம்பத் தள்ளாமையாயிட்டா. அதென்ன அஞ்சாந் தடவை வாங்கிட்டத்துக்கே அப்பிடி? நானு, என் மாமியார் பன்னென்டு, பதினாறுன்னு பெக்கல்லே! எல்லாரும் காத்திரமாத்தானே இருக்காங்க?"

"நாளைக்கு நீ அழைச்சுண்டு வா. நான் பார்த்து என்னன்னு சொல்றேன்."

"ஆமாம்மா, நீ சொல்றதுதான் ரோசனை: எனக்கு ஏன் தோணல்லே? நீ எங்க படி மிதிச்சாலே பத்தாதா? ஒரு தடவை அதன் வவுத்தை தடவினேன்னா, உசிருக்கு உசிர் வந்துடும்.

*　　　*　　　*

"டேய் முருவா என்னடா பண்றே? ஐயர் வீட்டுக்கு புதுப்பச்சரிசியும், பொங்கப்பானையும் அனுப்பிச்சாமா? கீரைத்தண்டு, அவரைக்காய் புத்தம்புதுசா, அங்கே தானேடா பொங்கலுக்கு எல்லாம் மொதல்லே போவணும்? இந்தத் தடவை தண்டு தொடை தடுமனுக்கு வந்திருக்குது. துவரை நம்ம வயல் வரப்புலே முளைச்சுதுன்னு சொல்லு–"

கள்ளம் கபடு அற்ற மக்கள்.

உழைப்பைத் தவிர வேறு நேரம் அறியாதவர்கள்.

மத்தியானம் மாவு சோறும் பழையதும்.

இரவுதான் ரஜமும் எள்ளுத் துவையலும்.

அம்மா அவர்களுக்கு ஏதேனும் கொடுத்தால், பெண் முன்றானையில், ஆண் மேல் சவுக்கத்தில் ஏந்திக் கொள் வார்.

சாயந்தரம் ஞானமணி சாமியார் கோவிலில் விளக்கு வைக்க எண்ணை ஏந்திப் போவார்.

அவங்க அவங்களுக்கு அவங்க காரியம்னும் வகுக் காமலே வகுப்பட்டுத் தாமாகவே சக்கரங்கள் ஒழுங்காய் உருண்டு போகும்.

காசு காண அரிது. வண்ணான், நாவிதன், உழுவோன், தொழில்காரர் யாவருக்கும் களத்து மேட்டில் வருடாவருடம் அளக்கும் நெல்தான் கூலி.

ஆனால் எல்லோருக்கும் போதுமளவுக்குப் பூமாதேவி வளமாய்க் கொடுத்துக் கொண்டுதானேயிருந்தாள்!

சில்லரை, பையன் என் கண்ணுக்கே தெரிந்ததே!

* * *

அப்பாவுக்கு மருந்திலிருந்து மந்திராலோசனைக்கு அம்மாதான்.

எதையேனும் கொத்திக் கிளறி நட்டுத் தண்ணீர் பாய்ச்சி,

பூவோ காயோ எதையேனும் உருவாக்கிக் கொண் டிருப்பாள். கை சும்மாயிருக்காது. வீட்டில் கொல்லைப்புறம் பெரிசு. ஏன் வீடு முழுக்கவே கொல்லைப்புறம்தான்.

சாயங்காலம் தன் பிரஜைகளைப் பாலிப்பது போல் ஒவ்வொரு செடிக்கும் எதிரே சற்று நேரம் தயங்கி நின்று தாண்டிப் போவாள். அவளைக் கண்டு செடிகள் படபட வென்று அடித்துக் கொள்ளும். அப்பொழுதென்று மாலைக் காற்று கிளம்புமா? இல்லை, அம்மாவுக்கும் செடிகளுக்கு மிடையே ஏதோ பாஷையிருந்தது. தொற்றிக் கொள்ளத் தெரியாமல் தத்தளிக்கும் அவரைக் கொடியைப் பந்தலில் இடம் பண்ணிக் கொடுத்துவிட்டுப் போவாள்.

* * *

அம்மா, செக்கச் செவேலென்று
சற்றுப் பூசினாற் போல்
சற்றுத் தழைந்திருப்பாள்
காமதேனு.

* * *

ஊர் தாண்டி, வாய்க்கால் தாண்டி, பிரும்மாண்டமான மைதானத்தின் மேடு தாழ்வுகளின் வளைவுகள் தாண்டின தும், கண்ணுக்குக் குளுமையாக ஒரே வயல்பச்சைதான். இடையிடையே ஏற்றக் கிணறுகள், வயற்பச்சையுடன் வானீலம் இழைவதே அலுக்காத ப்ரமிப்பு. கதிர்களைக் காலைக் காற்றும், மதியக் காற்றும், மாலைக் காற்றும், ஊடுருவுகையில் பூமி பெருமூச்செறிவது மயிர்க் கூச்செறி யும். ஒன்றும் புரியாது. ஆனால் புரியாமலும் இருக்காது. நான் சின்னப் பையன் தானே! ஏதோ பிரம்மாண்டமான அர்த்தம் என்னை அழுத்துகையில், ஏதோ பெரிய துக்கமும் அதனூடே ஏதோ சிரிப்பின் கிண்கிணியும் தொண்டையை அடைக்கிறது.

"என்ன ராமு, அழுவரே உடனே சிரிக்கறே."

கைகளை விரிக்கிறேன். பேசவரல்லியே!

* * *

நாலு தென்னைகளுக்கு நடுவே ஒரு கிணறு பதுங்கி யிருக்கிறது. அதற்கே இந்த வெய்யில்போல். இதன் தண் ணீரைக் குடித்திருக்கிறேன். கற்கண்டு. முருகன் வானரம் போல் மரத்தில் ஏறி இரண்டு மூன்று இளநீரைப் பறித்துப் போடுகிறான். அவன் கைக்கு எங்கிருந்து கத்தி வந்தது? இங்கேயே சொருகி வைத்திருக்கிறான்கள். ஒருத்தரும் எடுக்க மாட்டான் போலும். சீவிப் பொத்துக் கொடுக்கிறான். இந்த ருசி பட்டணத்தில் எங்கே வரும்?

அதேபோல், நடுவயலில், அப்போதுதான் பறித்துவந்த பச்சை வேர்க்கடலையை வைக்கோலில் பொசுக்கி:

"துண்ணு துண்ணு, இதெல்லாம் உனக்குப் பட்டணத் தில் கிடைக்குமா பாரு!" என்று கேலியும் பிரியமும் சேர்ந்து கலவையில் கேட்பான்.

முருவா, நீ இன்னும் உயிரோடு இருப்பியா? அப்பவே நீ என்னை விட ரெண்டு வயது மூத்தவன். ஆனால் வயசை வெச்சு ஆயுசை அளக்கிறது தப்பு. அப்படியே நீ உயிரோடு இருந்தாலும் நீயும் நானும் இன்னும் எத்தினி நாளிருக்க முடியும்? சித்தரபுத்தன் நம்ம சீட்டை எடுத்தாச்சு, என்னால் நடக்கவே முடியல்லே முருவா! இத்தனைக்கும் வாதம் இல்லே.

* * *

வயல் வரப்புங்களுக்கு இந்தாண்டை மைதானத்துள் சந்தவெளி அம்மன் இருக்கா, அம்மன் என்னவோ சின்னது தான், ஆனால் பவர் ஜாஸ்தி. ஊருக்குக் காவல் தெய்வம். சுத்தி மதில்கட்டி நடுவுலே சூரியனுக்கும் மழைக்கும்

நட்சத்ரத்துக்கும் துறந்து விட்டிருக்கு. அது ஒரு மகாத்மிய மாம்!

என்ன வேடிக்கைன்னா அவளுக்கு எதிரே மதிலுக்கு வெளியே பிரம்மாண்டமா ரெண்டு ராக்ஷஸ சிலைங்க— ஒன்று ஆண், மத்தது பெண். கையில் நெட்டுக்குத்தா கத்தியோட குந்திட்டிருக்குதுங்க. அதுங்க பின்னாலே அதுங்க சைஸுக்கு ஏத்த மாதிரி குதிரைங்க. சந்தளி அம்மனுக்கு வேலைக்காரங்களாம்.

நடுப்பகல்லே அங்கே யாரும் போவ மாட்டாங்களாம். அடிச்சுப் போட்டுடுமாம். ஒத்தன் ரத்தம் கக்கிச் செத்துக் கிடந்தானாம். பூசாரி கூட அவன் பூசையை அவசரமா முடிச்சுகிட்டு வந்துடுவானாம்.

* * *

இந்த மாதிரி நினைவுகள், கற்பனைகள், நம்பிக்கைகள், வயதின் ஒவ்வொரு கட்டத்துக்கும், சோதனைகளுக்கும், சம்பவங்களுக்கும் ஏற்றவாறு அவைகளால் மாற்றி யமைக்கப்பட்ட தெளிவுகள், புதுக்குழப்பங்கள், இன்னும் நான் சொல்ல விட்டவை எல்லாம் சேர்ந்து பிசையலில் உருவானதுதான் லா.ச.ராவின் தமிழ்—ஏன் லா.ச.ராவின் தன்மையே—லா.ச.ராவே.

இவைகளினூடே எங்கள் பெருந்திருப் பாட்டியின் எல்லையற்ற பொறுமையும் கருணையும் எங்களைக் காக்கின்றன. அந்தப் பரம்பரை எண்ணத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

நம்பிக்கைக்கு என்ன பெயர் கொடுத்தால் என்ன? முதலில் நம்பிக்கை என்பது எது என்று திட்டவட்டமாக விரிக்க முடிகிறதோ? ஆனால் அது இல்லாமல் வாழ முடிகிறதோ?

மூன்று வருடங்களுக்கு முன் நடந்த என் சதாபிஷேகத்தி னின்று இரண்டு நினைவுகள் பிதுங்குகின்றன.

ஒன்று:— ஜபித்த குடம் ஜலத்தையும் என் தலை மேல் கொட்டினதும், சேகர் அவசர அவசரமாய் என் தலையைத் துவட்டினது. "இதே சாக்காக அப்பாவுக்கு மண்டைச் சளியோ மார்ச்சளியோ பிடித்துக்கொண்டு விட்டால்? அதனால்தான் எனக்கு இந்தச் சடங்குகளில் நம்பிக்கை யில்லை. ஆனால் நீங்கள் இரண்டுபேரும் எங்கே சொன்ன தைக் கேட்கிறீர்கள்?"

அடுத்து:—

அம்பாள் ஸன்னிதானத்தில் மூன்றாவது தாலியைக் கட்டுவதாகத் தீர்மானம். என் இஷ்டம் அதுதான்.

குடும்பம் ஸன்னிதானத்துக்கெதிரே, கூட்டத்தை ஒழுங்குபடுத்துவதற்காகப் போட்டிருக்கும் கிராதியண்டை குழுமிவிட்டது. இங்கு ஏதோ விசேஷம் நடக்கப்போகிறது என்று நெரிசல் வேறே. கர்ப்பக்ருஹத்தின் அறையிருளில் அவள் உருவத்தில் எல்லைக்கோடுகள் தெரிந்தும் தெரியா ததுமாய்.......

குருக்களுக்கு ஏற்கனவே ஏகப்பட்ட வேலை.

என்னிடம் அவசரமாய் வருகிறார்.

"மாங்கல்ய தாரணத்தை முதல்லே முடிச்சுண்டுடு வோமா, இன்னும் பத்து நிமிஷத்துலே எமகண்டம் வரது. அபிஷேகம், அர்ச்சனைக்கு யமகண்டம், ராகுகாலம் எல்லாம் கிடையாது."

"நீங்கள் சொல்றபடியே."

எழுந்து நிற்கிறேன். மாங்கல்யத்தைச் சரடுடன்—இது வரை அம்மன் பாதத்தில் வைத்திருந்ததை எடுத்து என்னிடம் கொடுக்கிறார்.

கையில் கோவில் மணியை ஆட்டிக்கொண்டு மாங்கல்ய தாரண மந்திரத்தைச் சொல்கிறார். சொல்லி வைத்தாற் போல் நகார், ஆலயமணி, மேளம், ஜாலர் எல்லாம் சேர்ந்து முழங்குகின்றன (குருக்களின் சூழ்ச்சியாகவே இருக்கலாம்— அல்லது சிவன் கோவிலில் தற்செயலாய் பஞ்சமுக தீபாராதனையாகவும் இருக்கலாம்.) உடல் சிலிர்க்கிறது.

ஹைமவதி கொசுவம் வைத்துக் கட்டிக்கொண்டு நறுக் கென்று திகழ்கிறாள். அவள் ஒன்றும் தலைகுனியவில்லை. முகம் ஒன்றும் சிரிப்பில் இல்லை. என்ன புதுமணப் பெண்ணா? அதெல்லாம் இந்த சமயத்துக்குப் பாந்தமாயு மிருக்காது. கண்கள் மட்டும் சற்றுத் தாழ்ந்திருக்கின்றன. ஐம்பத்து ஐந்து வருடங்களின் மணவாழ்க்கையில் அவள் வெற்றியின் ஸான்னியத்தில் ப்ரகாசிக்கிறாள்.

எங்கள் பெண் காயத்ரி, தாலியின் மூன்றாம் முடிச்சை— நாத்தனார் முடிச்சைப் போடுகிறாள்.

அந்த சமயத்தில், அம்பாள், அவளுடைய மர்மப் புன்னகை மாறாமல் இந்த வைபவத்தைப் பார்க்க, ப்ரபை யிலிருந்து இரண்டு அடி முன் நடந்து விட்டாற்போல்

அந்த அரையிருளில் வெளிச்சமாகிறாள். இதெல்லாம் ப்ரமைதான்; பகல் வெளிச்சத்தின் 'ஜாலக்'தான். அப்பவே தெரியல்லியா? ஆனால் சமயத்தின் ரஸவாதமும் கலந்து தானே இருக்கிறது!

காலம், வயது எல்லாம் பொய். வாழ்க்கையில் சமயங்கள் தாம் உண்டு. அவைகளில் தான் வாழ்கிறோம். அவைகளுக்காகத்தான் வாழ்கிறோம்.

என் வாழ்க்கையின் பவனியை இந்தக் கட்டத்திலேயே நிறுத்திக் கொள்ளட்டுமா?

*    *    *

மலர் பிரிண்டர்ஸ் 044-8224803